# புதிய புத்தகங்கள்

1965

சொந்த வெளியீடுகள்

**வானதி பதிப்பகம்**

82/11, பாண்டி பஜார்

தியாகராயநகர் :: சென்னை-17.

போன்: 42810

மகாத்மா காந்தி என்ற தலைப்பில் நேருஜி கூறியுள்ள கீழ் வரும் வார்த்தைகள் என்றும் நமது கவனத்தில் கொள்ள வேண்டியவையாகும் :

'இன்று பல காரணங்களால் உலகில் இந்தியா மிகுந்த மதிப்பைப் பெற்றிருக்கிறது. அதற்கு முதன்மையான காரணம் மகாத்மா காந்தி. நம்மில் பெரும்பாலோர் அவரைப் பின்பற்றக்கூட அருகதையில்லாத அற்ப ஜனங்களாயிருந்த போதிலும், இந்தியா காந்தியைப் பெற்றிருந்தது...நாம் இதைப்பற்றி நம் உள்ளங்களில் தெளிவாயிருக்க வேண்டும்; அதாவது, நாம் எந்த இழிவான முறைகளிலும் இறங்கக் கூடாது, எந்தவிதப் பலாத்கார முறைகளிலும் இறங்கக் கூடாது, எவ்வித நாகரிகக் குறைவான முரட்டு முறைகளிலும் இறங்கக்கூடாது.'

தம்மை இந்தியாவின் பிரதம மந்திரி என்ற, பெருமைக்கும் புகழுக்கும் உரிய பதவிப் பெயரால் அழைப்பதைவிட இந்தியாவின் தலைமை ஊழியன் என்று அழைப்பது அதிகப் பொருத்தமாயிருக்கும் என நேருஜி சொல்லியிருக்கிறார். தன்னடக்கத்தையும், பணிவையும் காட்டிக் கொள்ள வேண்டுமென்ற வெறும் சம்பிரதாய வார்த்தைகளல்ல இவை. சாதாரண மக்களிடையிலும், விவசாயிகளுக்கு மத்தியிலும் அவர் வருந்தியுழைத்ததில் கண்ட இன்பமும், மனநிறைவுமே அவ்வாறு அவரை முதல் தொண்டன் எனத் தம்மைக் கூறிக் கொள்வதில் பெருமை கொள்ளச் செய்கிறது.

நம்மில் எத்தனை பேர்கள் இவ்வாறு நினைக்கிறோம்? கிராமப் பஞ்சாயத்து முதல் ஊர பொது ஸ்தாபனங்கள் வரை உள்ள பதவிகளைக் கடிதமெழுதும் தாள்களில் அச்சிட்டுக் கொள்கிறோம். அப்பதவிகளில்லாத போது, முன்னாள் அப்பதவியை வகித்தவர் எனத் தலைப்பில் போட்டுக் கொள்கிறோம். பதவி மோகத்தால் பல தீமைகள் விளைவதையும் பார்க்கிறோம். அப்பதவிகளுக்குரிய தகுதியோ, ஆற்றலோ, உழைப்போ, எதையும் அதற்குத் தரவேண்டிய விலையாகக் கருதுவதில்லை.

ஜனநாயகத்தைப் பற்றி அவர் எவ்வளவோ சொல்லியிருக்கிறார். இன்றும் நம் நாட்டினர் சுயக்கட்டுப்பாட்டின் அவசியத்தை உணராமலே செயற்படுகின்றனர். தனி மனிதன், மனம்போன போக்குகளிலெல்லாம் நடந்து கொள்ளலாம் என்று, ஜனநாயகத்துக்குப் பொருள் கொள்கிறான். இதனால் அதன் கட்டுக்கோப்பு வலிமையிழந்து சரிந்துவிடும். நேருஜி கூறுகிறார்: 'ஜனநாயகம் தனிமனிதன் வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பை யளிக்கிறது எனலாம். அந்த வாய்ப்பை ஒவ்வொரு மனிதனும் தன் இஷ்டம்போல் திரிவது என்ற அராஜகமாகக் கொள்ள முடியாது. சமூகஸ்தாபனம் எதுவும் அது உலைந்து விழுந்து விடாமல் நிற்பதற்குச் சில ஒழுங்கு முறைகளைப் பெற்றிருக்க வேண்டும்.'

நேருஜியின் சோஷலிஸக் கருத்துக்கள் பல இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன. நாற்பதாண்டுகளுக்கு முன்னரே அவர் சோஷலிஸத் தத்துவங்களை ஆதரித்து வந்திருக்கிறார். 1929-ல் லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் தலைமைப் பிரசங்கத்தில் அவர் கூறியிருப்பதாவது:

'சமுதாய சுதந்தரமும், சோஷலிஸ்ட் முறையில் அமைந்த சமுதாயமும், அரசாங்கமும் இல்லாமல், தேசமோ, தனிமனிதனோ அதிக வளர்ச்சியடைய முடியாது.'

'நான் ஒரு சோஷலிஸ்டு என்பதையும், குடியரசுக் கொள்கையுடையவன் என்பதையும் வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறேன்.'

'உலகம் முழுவதிலும் மனித சமுதாய அமைப்பில் சோஷலிஸத் தத்துவம் படிப்படியாக ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்; அதை எவ்வளவு வேகத்தில் அடையலாம் என்பதிலும், முன்னேறிச் செல்வதற்குரிய வழி முறைகள் என்ன என்பதிலுமே கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. இந்தியா தனது வறுமையையும், ஏற்றத்தாழ்வுகளையும் ஒழிக்க விரும்பினால், அந்த வழியிலேதான் செல்ல வேண்டியிருக்கும். ஆனால் அது அந்த லட்சியத்தைத் தன் மேதைக்குரிய முறையில் அமைத்துக் கொண்டு, தன் சொந்த வழிகளையும் வகுத்துக் கொள்ளும்.'

இதிலிருந்து அவருடைய சோஷலிஸ வழி பிற சோஷலிஸ நாடுகளைக் 'காப்பி'யடிப்பதல்ல என்பதையும், நம் நாட்டின் நிலைமைக்குரிய வகையில் நம் சொந்த வழிகளை வகுத்துக் கொள்ளலாமென்று அவர் கருதிவந்திருக்கிறார் என்பதையும் காண்கிறோம்.

1936-ம் ஆண்டில் லட்சுமணபுரியில் நடைபெற்ற காங்கிரஸ் தலைமையுரையில் அவர் கூறியிருக்கும் சில வாக்கியங்கள் சோஷலிஸ சமுதாய அமைப்பில் அவர் கொண்டிருந்த உறுதியையும் நம்பிக்கையையும் தெற்றென விளக்குகின்றன:

'இந்தியாவில் சோஷலிஸத் துறையில் நான் முன்னணியில் நிற்கவில்லை. நான் பின்னணியில் இருந்தேன் என்று கூடச் சொல்லலாம், நான் வேதனையுடன் படிப்படியாக முன்னேறி வந்தேன். இந்திய மக்களின் வறுமையையும், பெரிய அளவிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தையும், அடிமைத்தனத்தையும் சோஷலிஸத்தைத் தவிர வேறு எந்த வழியிலாவது ஒழிக்க முடியும் என்று எனக்குப் புலப்படவில்லை.'

ஜனநாயகமும் சோஷலிஸமும் இணைந்து செயற்படாதெனவும், இது விசித்திரமான வெறுங் கற்பனையெனவும் சமீபகாலமாக எழுதியும் பேசியும் வரப்படுவதைக் காண்கிறோம். 1936-ம் ஆண்டு, ஜனவரி 17-ல் லோதியன் பிரபுவுக்கு நேருஜி எழுதிய கடிதம் ஒன்றில் அவர் கூறியதை இந்நூலிலிருந்து பின்வருமாறு அறிகிறோம் :

'ஜனநாயக முறைகளின் மூலமே சோஷலிஸத்தை அமைக்க முடியுமென்று தத்துவ பூர்வமாக நான் கருதுகிறேன்; ஆனல் மக்கள் தங்கள் ஜனநாயகக் கருத்துக்களை வெளியிடப் பூரணமான உரிமைகளும், வசதிகளும் வேண்டும்...ஆகவே பெரும்பாலான மக்களின் நல்லெண்ணம் இல்லாமலோ, அல்லது அவர்களுடைய அந்தரங்கமான சம்மதம் இல்லாமலோ, எத்தகைய சோஷலிஸ மாறுதலும் செய்ய முடியாது.'

இந்நாட்களில் காங்கிரஸின் சோஷலிஸத்தைப்பற்றிக் குறை சொல்லுகிறவர்களில் சில அரசியல் பிரமுகர்கள், அக்

காலத்தில் காங்கிரஸில் பிரதான புருஷர்களாக [illegible]ளாகவும், நேருஜியின் சகாக்களாகவும் இருந்திருக்கிறார்கள், அவர்கள், இன்றுதான் நேருஜியிடம் புதிய [illegible]களும், சிந்தனையில் மாறுதல்களும் உருவாகி [illegible] என்பதைக் கண்டுகொண்டு [illegible] செய்து, பொதுமக்களின் மனத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முயலுகின்றனர். அவர்கள் மேற்கொண்டுள்ள [illegible], சரித்திர சம்பவங்களை மூடிமறைத்து இவ்வாறு சொல்லும்படி அவர்களை நிர்ப்பந்தித்து விட்டது என்றுதான் கருத வேண்டியிருக்கிறது.

சோஷலிஸ சமுதாய அமைப்பை நம் நாட்டில் உருவாக்குவதற்கு இவர்கள் சொல்லுவதுபோல் நேருஜி அவசரப்படவில்லை. தக்க தருணம் வரும்வரை நிதானமாகக் காத்திருந்தார் என்பதற்குப் பின்வரும் நிகழ்ச்சியே தக்க சான்றாகும்.

இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு அமைந்த அரசியல் நிர்ணய சபையானது, அரசியல் சாசனத்தில், கீழ் வரும் பீடிகைபற்றி விவாதித்துக் கொண்டிருந்தது:

'சமூக, அரசியல், பொருளாதார அம்சங்களில் சமநீதியையும், சிந்தனை, செயல், நம்பிக்கை, வழிபாடு ஆகியவைகளில் சுதந்தரத்தையும், சமவாய்ப்புகளையும், சமஅந்தஸ்தையும் எல்லா மக்களுக்கும் உறுதிப்படுத்தும் இந்தத் தீர்மானத்தை இந்திய மக்களாகிய நாம் நிறைவேற்றுகிறோம்.'

இதன்மீது பேசிய ஸ்ரீ. அம்பேத்கார் சொன்னதாவது :

'இந்தத் தீர்மானத்தில் உண்மையும் நம்பிக்கையும் வைக்க வேண்டுமானால், சமூக, அரசியல், பொருளாதார நீதியை நடைமுறையில் சாத்தியமாக்குவதற்குத் தேசத்துக்கு வழி செய்யும் வகையில் ஒரு வாசகம் இருக்கவேண்டுமென்று எதிர் பார்க்கிறேன்; சமூக, அரசியல், பொருளாதார நீதியை நிலைபெறச் செய்ய, தொழில்களையும், நிலங்களையும் தேசியமயமாக்குவதற்கு இந்தத் தேசத்தால் முடியும் என்று தெள்ளத் தெளிவாக இந்த வாசகம் குறிப்பிட வேண்டும். சமூக, அரசியல் பொருளாதார, சமநீதியில் நம்பிக்கை கொண்டுள்ள எந்த வருங்கால அரசாங்கமும் சோஷலிஸப் பொருளாதாரத்தின்

அடிப்படையில் அல்லாமல், வேறு எவ்வாறு அதனை அடைய முடியுமென்று எனக்குப் புரியவில்லை.'

அதற்கு நேருஜி சொன்ன சமாதானம் பின்வருமாறு :

'என் விருப்பப்படியே "நாம் சோஷலிஸ சமுதாயத்தை விரும்புகிறோம்" என்பதைக் குறிப்பிட்டால், வேறு சிலவற்றையும் நாம் குறிப்பிட வேண்டியிருக்கும். அதைச் சிலர் ஒப்புக்கொள்ளலாம்; சிலர் ஒப்புக்கொள்ளாமலும் இருக்கலாம். இந்தத் தீர்மானம் சர்ச்சைக்குள்ளாவதை நான் விரும்பவில்லை. ஆகையால், வெறும் வார்த்தைகளையோ, சூத்திரத்தையோ உபயோகிக்காமல், நாம் அடைய விரும்புவதன் சாராம்சத்தை மட்டும் இதில் குறிப்பிட்டிருக்கிறோம்.'

நேருஜியின் சோஷலிஸக் கொள்கை பற்றி அக்காலத்தில் காந்திஜி கொண்டிருந்த கருத்தென்ன வென்பதை இங்கு ஒப்பு நோக்குதல் பொருத்தமாகும் என்று நினைக்கிறேன்.

காங்கிரஸ் கொள்கையைப் பற்றியும், சோஷலிசத்தைக் குறித்தும், பண்டித ஜவாஹர்லால் நேரு கூறியவைகளைப் பற்றியும் குறிப்பிட்டு, 1933, டிசம்பர் 21-ம் தேதியன்று, 'மெட்ராஸ் மெயில்' ஆசிரியர் காந்திஜியிடம் கேட்டபோது, அவர் கூறியதாவது :

'என்னுடைய மனமெல்லாம் எரவாடாவில் இருக்கிறது. ஹரிஜன வேலைக்காக மட்டுமே நான் வெளியே வந்திருக்கிறேன். காங்கிரஸ் நிர்வாகத்தின் கடிவாளங்கள் என்னிடம் இல்லை. அவை ஜவாஹர்லாலின் கைகளிலேயே இருக்கின்றன. எனக்கு அவரிடம் முழுநம்பிக்கை இருக்கிறது. அவர் நல்ல விவேகி; தம்முடைய சகாக்களுக்குப் போதுமான அவகாசம் கொடுக்காமல், காங்கிரஸின் அடிப்படையான கொள்கையிலிருந்து விலகிச் செல்லமாட்டார். மிகவும் நிர்ப்பந்தமான நிலை எதுவும் ஏற்பட்டாலொழிய, தற்போது வகுக்கப்பட்டுள்ள காங்கிரஸ் கொள்கையிலிருந்து அவர் விலகிச் செல்லமாட்டார். சோஷலிஸத்தைப் பற்றி அவர் ஆணித்தரமான கருத்துக்கள் கொண்டிருக்கிறார் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. ஜவாஹர்லால் என்னும் மாபெரும் சக்தியையும்,

அவருடைய குறிக்கோளேயும் புரிந்துகொள்வதற்கு, இதை முதலில் அறிந்து கொள்ளவேண்டும். ருசியப் பொதுவுடைமை அவருடைய குறிக்கோள் அல்ல. அவருடைய குறிக்கோள் இந்திய சோஷலிஸம். இந்த இரண்டின் அடிப்படைகளும் பொதுவானவை என்ருலும், இந்திய சோஷலிஸம் வேறு வகையிலானது. நேருவின் கொள்கை இப்போது உருவாகிக் கொண்டு வருகிறது. இந்தியச் சூழ்நிலைகளுக்கான முறையில் சோஷலிஸத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது ஓர் உருவெடுக்கும் கட்டத்தில் இருக்கிறது. ஒரு கொள்கை என்ற முறையில் சோஷலிஸத்தை எல்லோரும் அறிந்திருக்கிருர்கள். ஆனுல், கலப்படமில்லாத சோஷலிஸம் இந்தியாவின் சூழ்நிலை களில் பல சந்ததிகளுக்கு நிலேத்து நிற்கமுடியுமா என்பது ஒரு கேள்வி. சோஷலிஸத்தைப் பற்றி ஜவாஹர்லாலின் தீர்மான மான கருத்துக்கள் எனக்கு அச்சத்தைக் கொடுக்கவில்லே. அவைகளேக் கண்டு மற்றவர்களும் பயப்படவேண்டியதில்லே. ஜவாஹர்லாலேப் பற்றி நீங்களும் அச்சமடையாதீர்கள்.'

இதுபற்றிக் காந்திஜி பேசியதையும், எழுதியதையும் சான்ருக எடுத்துக் காட்டுவதற்கு எவ்வளவோ ஆதாரங்கள் இருக்கின்றன. அவற்றை இங்கு குறிப்பிடுவதற்கு இம்முன் னுரை இடந்தராதென அஞ்சுகிறேன். ஸ்ரீ மகாதேவ தேசாய் எழுதிய சில வாக்கியங்களுடன் இதை முடிக்கலாம்.

'ஏராளமான புத்தகங்களுடன் ஒருவர் ஒருநாள் அவரிடம் வந்தார். அந்தப் புத்தகங்களே நன்றியுடன் அவர் பெற்றுக் கொண்டார். ஆனுல், அப்புத்தகங்களே எழுதியவராகிய அம் மனிதர், அப்புத்தகங்கள் மிகவும் முக்கியமானவை யென்றும், அவைகளேப் படிப்பதாக நேரு வாக்குறுதியளிக்க வேண்டு மென்றும் வற்புறுத்தியபோது, நேரு சொன்னுர் :

"நீங்கள் உங்களுடைய மதத்தைப் பற்றிச் சொல்கிறீர்கள். நல்லது, நான் சொல்லி விடுகிறேன். என்னுடைய மதம் சோஷலிஸம்தான். எனக்கு வேறு மதம் இல்லே. இந்தியாவின் வறுமையையும் துயரையும் போக்குவதற்கான வழி எதையும் கூருத எந்தப் புத்தகத்தையும் படிக்க எனக்கு நேரம் இல்லே."

தேசபக்தர் ஸ்ரீ. ராமஸ்வாமி அவர்கள் எழுதிய இந்நூல், நமக்கு வழிகாட்டும் நேருஜியின் மணிவாசகங்கள், பலவேறு பிரச்னைகளில் அவருடைய கருத்துக்கள் என்னவென்று தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. இந்நூலைப் பலரும் படித்துப் பயனடைவர் என்பதில் சந்தேகமில்லை. இம் முன்னுரையை எழுதும் வாய்ப்பை எனக்களித்த அன்பர் ப. ராமஸ்வாமி அவர்களுக்கு எனது நன்றி. இத்தகைய நல்ல நூல்களை ஆர்வத்துடன் வெளியிட முன்வரும் வானதிப் பதிப்பகத்தினரின் நன்முயற்சி பாராட்டற்குரியதாகும்.

—ரா. கிருஷ்ணசாமி

465
LOCAL LIBRARY AUTHORITY
BRANCH LIBRARY
KARANKOVIL

# முல்லை

இராமகிருஷ்ண பரமஹம்சருக்கு விவேகானந்தர் வாய்த்தது போல, மகாத்மா காந்திக்கு ஜவாஹர்லால் நேரு வாய்த்திருந்தார். நேருவுக்கு எவ்வளவு வயதாயிருந்தும், அவரை நாம் என்றும் இளைஞராகவே கருதி வந்தோம். அவருடைய கருத்துக்கள் ஆணித்தரமானவை, அவை பல்லாண்டுகளாக அவர் ஆராய்ந்து அறிந்து போற்றி வந்த உண்மைகள். அவை, சமயத்திற்குத் தகுந்தாற் போல, மக்களையோ, மற்றவர்களையோ மகிழ்விப்பதற்காகக் கூறப் பெற்றவை அல்ல. நேரு தமது வாழ்க்கையின் பெரும் பகுதியை நாட்டின் விடுதலைக்காகச் செலவிட்டார். சுதந்தரம் வந்த பின்பு, புதிய இந்தியாவைப் படைக்கும் வேலையை அவர் மேற்கொண்டார்.

அவருடைய கருத்துக்களை அறிந்து, செயற்படுத்தாமல், அவரை மட்டும் புகழ்ந்து போற்றிக் கொண்டிருத்தல் பயனில்லை. இந்தியாவிலுள்ள அளவற்ற வறுமையையும், வேலையின்மையையும் நீக்கி, மக்கள் அனைவரும் இன்ப வாழ்க்கை அடைவதற்கு ஜனநாயகமும், சோஷலிஸமும் இன்றியமையாதவை என்பது அவர் கொள்கை. சமுதாயம் மேல்நிலை அடைவதில், தனிமனிதனின் சுதந்தரத்தையும் பாதுகாக்க வேண்டும் என்பதையும் அவர் வற்புறுத்திக் காட்டியுள்ளார். நாம் ஜனநாயக அரசாங்கத்தைப் பெற்றிருக்கிறோம். சோஷலிஸத்தை அடைவது எப்படி? இதற்கு மூலாதாரமான ஒரே வழி கூட்டுறவு என்று நேரு கருதியுள்ளார். பலாத்காரமில்லாமல், செல்வர்களைப் பலவந்தமாக நசுக்காமல், கூட்டுறவு முறை

பிலேயே ஸோஷலிஸத்தை நிச்சயமாக அடைய முடியுமென்று அவர் விளக்கியுள்ளார், அவர் கருத்துக்களை, அவருடைய சொற்களிலேயே தொகுத்துக் கொடுக்க வேண்டு மென்ற ஆவலே என்னை இந்நூலை எழுதத் தூண்டியது.

கிராமங்களில் பஞ்சாயத்துக்களும், கூட்டுறவு சங்கங்களும், பள்ளிகளும் நல்ல முறையில் இயங்கி வரவேண்டும்; பல கிராமங்கள் சேர்ந்து பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்டங்களில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள், இராஜ்யங்களில் சட்டமன்றங்கள், டில்லியில் பாராளுமன்றம் என்ற முறையில் நம்நாடு வேரிலிருந்து உச்சிவரை உண்மையான ஜனநாயகம் அமைந்திருக்க வேண்டும் என்பது நேருவின் ஆசை. ஆனால் எதிலும் ஆத்திரமும், அவசரமும் கொள்ளக் கூடாதென்றும், மக்களின் ஆதரவுடனேயே நாம் முன்னேற வேண்டு மென்றும், மக்களுக்கும் பயிற்சி யளித்துக் கொண்டே வரவேண்டு மென்றும், அவர் பல இடங்களில் வற்புறுத்தியுள்ளதையும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆறடி உயரமுள்ள கோடிக்கணக்கான மக்களிடையே மலை போன்ற வீரமேதை ஒருவர் இத்தனை காலம் வாழ்ந்து வழிகாட்டி வந்தார். அவருடைய கருத்துக்களின் களஞ்சியம் இந்நூல். இதற்கு உள்ளன்போடு முகவுரை வரைந்து உதவிய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரவர்களுக்கும், இதனைச் சிறந்த முறையில் வெளியிட்டுள்ள வானதி பதிப்பகத்தாருக்கும் என் நன்றி உரித்தாகும்.

ப. ராமஸ்வாமி

# இந்தியா

11650

# 1

# பண்டைய இந்தியா

இந்தியா என்பது என்ன? இந்தக் கேள்வி மாறு மாறி என் மனத்திலே தோன்றுவதுண்டு. நான் (பெரிய சரித்திர) நிபுணரா யில்லாத போதிலும், இந்தியாவின் பழைய வரலாற்றிலும், இக்கால நிலையிலும், இந்தக் கேள்விக்கு நான் விடை தேடிவந்துள்ளேன். பா வரலாற்றின் ஆரம்பக் காலத்தைப் பற்றி நான் அடைந்த ஆச்சரியத்திற்கு அளவில்லை. அழிவில் லாத உண்மைப் பொருளை நாடி வீரியத்தோடும், விடாமுயற்சியோடும், இடைவிடாது, துணிந்து சுயேச்சையாக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த மக்கள் வாழ்ந்த காலம் நமது பழங்காலம். அந்தக் காலத்திலேயே அவர்களுடைய நாகரிகம் நன்முக வளர்ந்து முதிர்ந்திருந்தது. அவர்கள் மற்ற இனத்தார்களுடன் சகிப்புத் தன்மை கொண்டிருந்தார்கள். வாழ்க்கையின் இன்பங்களையும் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டு, அவர்கள் பிரபஞ்சத்திற்கெல்லாம் காரணமான மூலப் பொருளைப் பற்றி ஆராய்ச்சி செய்து தேடிக்கொண்டிருந்தனர். அவர்களுடைய நாட்டமெல்லாம் (ஒரு பிராந்தியம், ஒரு நாடு என்றில்லாமல்) உலகம் அனைத்திற்கும் பொதுவான ஓர் இலட்சியமாக இருந்து வந்தது. சமஸ்கிருதம் என்ற மகோன்னதமான மொழியை உருவாக்கி வளர்த்து, அதன் மூலமும், தங்களுடைய கலை, சிற்பம் முதலியவற்றின் மூலமும் அவர்கள் தங்கள் செய்தியைத் தொலைவிலிருந்த நாடுகளுக்கு அனுப்பி வந்தனர்.

*960—1*

உபநிடதங்களையும், கீதையையும் படைத்ததுடன், அவர்கள் புத்தரையும் பெற்றிருந்தனர்.

—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.

## சமஸ்கிருதம்

உலகில் ஒரு தேச சமூகத்தின் வரலாற்றில் சமஸ்கிருதத்தைப் போல் மூலாதாரமான வளர்ச்சிக்கு உற்ற துணையாயிருந்து விளங்கிய மொழி வேறு எதுவுமில்லை என்று சொல்லலாம். தலைசிறந்த சிந்தனைகள் அதிலே தேக்கி வைக்கப் பெற்றிருக்கின்றன. அதில் மிக உயர்ந்த இலக்கியப் பொக்கிஷங்களும் இருக்கின்றன. இவை மட்டுமின்றி அது இந்தியாவை ஐக்கியப்படுத்திச் சேர்த்து வைக்கும் கருவியாகவும் விளங்கிற்று; நாட்டில் அரசியல் பிரிவுகள் இருந்த போதிலும், மொழியால் அவை ஒன்றியிருந்தன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, ஒவ்வொரு தலைமுறையிலும் வாழ்ந்துவந்த மக்களுடைய வாழ்க்கையில் இராமாயணமும், மகாபாரதமும் நன்ருக ஊறி, அதன் ஊடும் பாவுமாக அமைந்து விட்டன. நமது மக்களினம் புத்தரையும், உபநிடதங்களையும், மாபெரும் இதிகாசங்களையும் மறந்து விட்டால், அது எப்படி யிருக்கும் என்று நான் பல சமயங்களில் எண்ணிப் பார்ப்பதுண்டு. அந் நிலையில் நம் இனம் வேரற்ற மரம் போல் ஆகிவிடும். அது தன் அடிப்படையான பண்புகளை இழந்துவிடும். நெடுங்காலமாக மற்ற இனங்களிடையே நமக்குப் பெருமை தேடித் தந்த அந்தப் பண்பாடுகள் மறைந்து போம். இந்தியா இந்தியாவாக இருக்காது.

—ஷி ஷி.

## மாமூல் சடங்குகள்

நாளடைவில் படிப்படியாகச் சிதைவு ஏற்படத் தொடங்கிற்று. சிந்தனை தேக்கமுற்று, அதன் மேல் பாசி படர்ந்துவிட்டது; இளமையின் வீரியமும் செழுமையும் மாறி, முதுமையின் கரடுமுரடான பான்மை வந்து விட்டது. எதிலும் புகுந்து ஆராய்ச்சி செய்யும் துணிவுக்குப் பதிலாக, உயிரற்ற மாமூல் சடங்குகள் தோன்றி விட்டன. உலகளாவிய பெரும் கண்ணோட்டம் மாறி, குறுகிய சுவர்களுக்குள் அடங்கிய சாதிப் பிரிவினைகள் தோன்றின. இறுக்கமான சமூகப் பழக்கங்களும், சடங்குகளும் நிலைத்துவிட்டன. இந்த நிலையிலும், இந்தியா தன்னிடம் வந்து பாய்ந்த மக்கள் இனங்களாகிய ஆறுகளைத் தன் ஜனசமுத்திரத்தோடு கலந்து கொள்ளும்படி செய்யும் ஆற்றலைப் பெற்றிருந்தது. இளமையிலே தான் வீறுபெற்று விளங்கக் காரணமாயிருந்த சிந்தனைகளையும் அது ஒருகாலும் மறக்கவில்லை.

—டி ஡ி.

* * *

## முஸ்லிம்களும் ஐரோப்பியர்களும்

பின்னால் இஸ்லாத்தின் வருகையாலும், முஸ்லிம்களின் படையெழுச்சிகளாலும் இந்தியா பெரிதும் பாதிக்கப்பட்டது. அடுத்தாற்போல், நாடு பிடிக்கும் மேலைநாட்டு வல்லரசுக் கூட்டத்தினர் தொடர்ந்து வந்தனர். அவர்களுடன் புது மாதிரியான ஓர் ஆதிக்கியமும்; ஒரு புதிய குடியேற்ற நாட்டு முறையும் சேர்ந்து வந்தன; ஐரோப்பாவில் வளர்ந்து வந்த நவீன இயந்திரத் தொழில் நாகரிகமும், புதிய கருத்துக்களும் இந்தியாவுக்கும் வந்து சேர்ந்தன. இந்தச் சகாப்தம், நீண்ட போராட்டத்திற்குப் பின்னால், நாடு

கூர்மையடைந்ததுடன் முடிவுற்றது. இப்பொழுது நாம், பல்லாயிரம் ஆண்டுகளின் பழைய சுமையுடனும், எதிர்காலத்தை உருவாக்குவதற்காக நாம் கொண்டுள்ள பலவகைக் கனவுகளுடனும், தூண்டுதல்களுடனும், எதிர்காலத்தை நோக்கி நிற்கிறோம். மேலே கூறிய பல சகாப்தங்களும் நம்மிடத்திலும், நம் நாட்டிலும் இன்றும் காணக் கிடக்கின்றன.†

—ஜெ. நே.

* * *

## பழமையும் அவசியம்

மாறுதல் அத்தியாவசியம். ஆனால், தொடர்ச்சியும் தேவை. பழமையிலும், இக்காலத்திலும் போட்டுள்ள அடிப்படைகளின் மீதே எதிர்காலத்தை நிர்மாணிக்க வேண்டும். பழமையை உதறித் தள்ளிவிட்டு, அத்துடனுள்ள தொடர்பை முற்றிலும் அறுத்துக் கொண்டால், நாம் (ஊன்றி நிற்க) வேரில்லாமல், பசையில்லாமல், காய்ந்து போய்விடுவோம்.

—ஜெ. நே.

* * *

## வெளித் தொடர்புகள்

இந்தியா செல்வச் செழிப்புள்ள நாடாக இருந்தது. இப்பொழுதும் அப்படியே இருக்கின்றது, அதன் விவசாய வளங்கள் அதிகம், உலோகச் செல்வமும் அதிகம், அதன் மனிதப் பண்பாடும் உயர்வானது;

† வேத காலம், முஸ்லிம்களின் ஆட்சிக் காலம், ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் முதலிய பல சகாப்தங்களின் சின்னங்களும், நிலைமைகளும், நாகரிகங்களும் நாட்டில் இப்பொழுதும் பல இடங்களிலும் இருக்கின்றன.

ஆயினும் அதன் மக்கள் மட்டும் ஏழைகளாக இருக்கின்றனர். இந்தியாவின் செல்வம்தான் வெளி நாட்டார்களில் பல கூட்டத்தினர் இங்கே வருவதற்கு ஆசை காட்டியது.

சரித்திரத்தின் ஆரம்பக் காலம் முதல் ஆசியாவின் மேட்டு நிலங்களிலிருந்து எண்ணற்ற மக்கள் இந்தியாவின் சமவெளிகளுக்கு வந்துள்ளனர்; அவர்களிலே சிலர் வெற்றி வீரர்கள், பலர் குடியேற வந்தவர்களும், யாத்திரிகர்களும், மாணவர்களும் ஆவர். இந்திய வாழ்க்கையும், கலாசாரமும், கலைகளும் அவர்களால் பாதிக்கப்பெற்றன; ஆயினும், எக்காலத்திலும், வந்தவர்களை யெல்லாம் இந்தியா தன் பூர்விக மக்களுடன் இரண்டறக் கலக்கும்படி செய்து கொண்டது. இத்தகைய வெளித் தொடர்புகளால் இந்தியாவும் மாறுதலடைந்து வந்தது. எனினும் அது பெரும்பாலும் தன் பழைய இயல்பை அப்படியே பெற்றிருந்தது. ஆயிரம் ஆறுகளைக் கடல் தனக்குத் திறையாக ஏற்றுக்கொள்வதுபோல, அது வெளியார்களை ஏற்றுக்கொண்டது. இதனால் அடிக்கடி அதற்குச் சலனங்கள் ஏற்பட்டிருப்பினும், கடலின் நீர்மீது புயல்கள் வீசிய போதிலும், கடல் கடலாகவே இருப்பது போல், இந்தியா இந்தியாவாகவே இருந்து வந்தது.

இந்திய நாட்டின் பின்னணியும் ஐக்கியமும் முக்கியமாகக் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டவை. குறுகிய பொருளில் அவைகளை மத சம்பந்தமானவை என்று சொல்ல முடியாது. அந்தக் கலாசாரம் வெளியிலுள்ளவைகளை வெறுத்து ஒதுக்குவதாகவோ, சகிப்புத் தன்மையற்றதாகவோ இருக்கவில்லை; கிடைத்ததை, வரவேற்றுத் தன்னுடையதாக மாற்றிக்கொள்ளும் இயல்பு அதற்கு உண்டு. அதைப் புயல்களால் அசைக்க முடியாது. அந்தக் கலாசாரம், தன் சொந்த,

வலிமை நிலையானது என்பதை உணர்ந்து கொண்டு, மற்றைக் கலாசாரங்களுடன் தாராள மனப்பான்மையுடனும் சகிப்புத் தன்மையுடனும் பழகிவந்தது.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக இந்தியாவின் பழங்காலச் சரித்திரம் முழுதும் அதன் கலாசாரத்தின் அடிப்படையான ஒருமைப்பாட்டையும், ஜீவசக்தியையும், சூழ்நிலைகளுக்கு இசைவாகப் பொருந்திக்கொள்ளும் ஆற்றலையும் எடுத்துக் காட்டுகின்றது. இந்த ஜீவசக்தி இந்தியா (உலகிற்கு) அளிக்கும் செய்தியைக் கலை உருவாகவும், சிந்தனைகளாகவும், சமயமாகவும் தூரக் கீழ்த்திசை நாடுகளுக்கு எடுத்துச் சென்றது; இது மலாசியாவிலும், ஜாவா, சுமத்திரா, ஃபிலிப்பைன், போர்னியோ ஆகிய தீவுகளிலும் பெரிய அளவில் இந்தியக் குடியேற்றங்கள் ஏற்படக் காரணமா யிருந்தது; அந்த நாடுகளிலுள்ள ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய பழம் பெரும் சிற்பச் செல்வங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

—*அமெரிக்கப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை*, **1938.**

# 2

# இன்றைய இந்தியா

---

### தனிப் பெருந் தலைவரும் சூரர்களும்

இன்றைய இந்தியா கழிந்து போன சமீப காலத்திய சரித்திரத்தின் விளைவாக மட்டுமன்றி, நம் நாட்டு வரலாற்றின் ஆயிரக் கணக்கான ஆண்டுகளின் விளைவுமாகும். சிந்தனைகள், அநுபவங்கள், செயல்கள் ஆகியவை ஒன்றின்மேல் ஒன்ருக அடுக்கடுக்காக

அமைந்து நம்மை உருவாக்கியுள்ளன, இன்று நாம் உள்ள நிலை அவைகளின் விளைவேயாகும். என் தலை முறையைச் சேர்ந்தவர்கள் பல நிகழ்ச்சிகளின் சேர்க்கையால் உருவாக்கப் பெற்று, குறித்த நிலையில் இருக்கும்படி உந்தப்பெற்றுள்ளனர், அந்த நிகழ்ச்சிகள் மறுபடி ஏற்பட முடியாதவை. ஒரு பெரிய மனிதர், ஒரு மாபெரும் தலைவருடன் நாங்கள் தொடர்பு கொண்டிருந்தோம், அவர் எங்களை ஆட்டி வைத்தார், எங்கள் வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றினார், வெறுமே உயிர் சுமந்து வாழும் வழக்கமான வாழ்விலிருந்து எங்களை வெளியே வரும்படி செய்தார்; அத்துடன் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளை நாங்கள் கண்ணாரக் கண்டோம், கண்டதுடன், அவைகளிலே பங்கும் கொண்டோம். நாங்கள் சில சமயங்களில் உயர்ந்த மன எழுச்சியையும், உன்னதமான உணர்ச்சிப் பெருக்கையும் அநுபவித்தோம், இவற்றின் பயனாகப் பின்னால் விளையக்கூடிய செயலற்ற தன்மையையும் அநுபவித்தோம்; இனிமேல் கதி மோட்சமில்லை என்றுகூட அவநம்பிக்கை ஏற்பட்டது. நரம்புகளை முறுக்கேற்றிக்கொண்டு தீவிரமான பெருங்காரியங்களில் ஈடுபடும் பொழுது, அதன் விளைவாக, அடுத்தாற்போல் மனத் தளர்ச்சியும் உடல் தளர்ச்சியும் தொடர்ந்து ஏற்படுவது இயற்கை. ஆனால் நாங்கள் அப்படி அயர்ந்து விழுந்து விடவில்லை. நாங்கள் தத்தளித்துக் கொண்டிருந்த காலத்திலும், பற்றிக் கொள்ள ஒரு பெரிய தெப்பம் இருந்தது; அசையாத பாறை போலவும், கலங்கரை விளக்கம் போலவும் விளங்கிய எங்கள் தலைவரே அந்தத் தெப்பம்; அத்தகைய தலைவருடன், எங்களைக் கவர்ச்சி செய்து ஆட்கொண்ட இயக்கமும் எங்களை உற்சாகப்படுத்தி, எங்களிடமிருந்த சிறந்த ஆற்றல்களையெல்லாம் பயன்படுத்திக் கொண்டது. அத்

நகைய சமயங்கள் மிகவும் மகிழ்ச்சியானவைகளாக இல்லாது போயினும், சில நேரங்களில் வேதனை ஏற்பட்ட போதிலும், நாங்கள் சரித்திரத்தோடு சம நடை போட்டுக் கொண்டு முன்னேறுகிறோம் என்றும், நாங்கள் பெரும் பணிகளில் ஈடுபட்டிருக்கிறோம் என்றும் நாங்கள் உணர்ந்து, திருப்தியும் கொண்டோம். சிந்தனையும் செயலும் சேர்ந்து இயங்கி வந்தன, அதனால் பூரணமான வாழ்க்கை வாழ்வதாக நாங்கள் தெம்பு கொண்டிருந்தோம். அந்தக் காலத்தில் எங்களுக்குக் காப்பாக விளங்கியவற்றுள், அரசியல் விஷயங்களிலே கூட நாங்கள் உயர்ந்த லட்சியங்களுடன் நன்னெறியில் செயற்பட்டுக் கொண்டிருந்தோம் என்ற நம்பிக்கையே மிகவும் முக்கியமானது. பொதுவாகப் போராட்டங்களிலே, முக்கியமாகத் தேசியப் போராட்டங்களிலே, தோன்றும் துவேஷம் எங்களிடம் இல்லை, அது எங்களைச் சுட்டு நீறாக்கவில்லை.

எங்கள் முன்னிலையிலும், எங்கள் உள்ளங்களிலும் காந்திஜி எப்பொழுதும் இருந்து கொண்டே யிருந்தார். வேறு பல தலைவர்களும் இருந்தனர், அவர்கள் மற்ற மக்களைவிடப் பெருந்திறல் வாய்ந்த சூரர்கள். மேலும், மாபெரும் இயக்கங்களில் தொடர்பு கொண்டிருந்ததாலும், மாபெரும் தலைவரைப் பெற்றிருந்ததாலும், பெருமையால் உயர்ந்து விளங்கிய எண்ணில் அடங்காத ஆடவர் பெண்டிர்களிடையே நேசமும் பாசமும் நிலவி வந்தன.

—சுதந்திர ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.

* * *

## அபிவிருத்திக்கு அவகாசம் வேண்டும்

இந்தியா பழமையான நாடு, எனினும் இளமையின் துடிப்பும் சுறுசுறுப்பும் அதற்கு உண்டு. பண்டைக் காலங்

களில் எத்தகைய ஜீவ சக்தியுள்ள உணர்ச்சிகள் அதற்கு வல்லமை யளித்தனவோ, அவை இப்பொழுதும் எங்களுக்கு ஊக்கமளிக்கின்றன; மேலும் அதே சமயத்தில் நாங்கள் மேலை நாடுகளிடமிருந்து சமூக, அரசியல் கொள்கைகளையும், விஞ்ஞானத்தையும், தொழில்களுக்குரிய நுண்பொறிகளைப்பற்றியும் ஏராளமாகக் கற்றுக் கொண்டிருக்கிறோம். சமுதாய நலனுக்காக விஞ்ஞானத்தை அதிகமாகப் பயன்படுத்துவது பற்றி நாங்கள் முக்கியமாகக் கற்க வேண்டியவைகளும், செய்ய வேண்டியவைகளும் இருக்கின்றன. நாங்கள் அரசியல் சுதந்தரத்தை அடைந்து விட்டோம், எங்கள் மக்களின் பொருளாதார நிலைமைகளை விரைவிலே அபிவிருத்தி செய்வதும், வறுமையையும், சமூக அநீதிகள், குறைபாடுகளையும் எதிர்த்து இடைவிடாது போரிடுவதும் முக்கியமான வேலையாகும். இந்த வேலைகளை மேற்கொள்ளவும், வெற்றி பெறவும் நாங்கள் உறுதி கொண்டுள்ளோம். எங்களுக்கு உறுதியிருக்கிறது, இயற்கை வசதிகளும் இருக்கின்றன, தேவையான மக்களும் இருக்கின்றனர்; இந்த அமிசங்களை ஒன்றுகத் திரட்டிப் பயன்படுத்துவதே எங்களுடைய உடனடியான வேலை. ஆகவே இந்தக் காரியத்திற்காக, அமைதியாக அபிவிருத்தியடைய எங்களுக்கு அவகாசம் வேண்டும், மற்ற நாடுகளின் ஒத்துழைப்பும் அவசியம்.

—*கனடா பார்லிமெண்டில் நிகழ்த்திய சொற்பொழிவு,*
*24-10-1949.*

* * *

## சாதி ஒரு சாபத்தீடு

இன்றைய இந்தியா நம்பிக்கையும் ஆர்வமும் கலந்தும், வியக்கத்தகுந்த முன்னேற்றங்களும், அதே சம

யத்தில் அயர்வும் கொண்ட ஒரு கலப்பாகக் காட்சி யளிக்கின்றது; ஒரு பக்கம் புத்துயிரின் துடிப்பு, மறு பக்கம் பழமையின் மரணப் பிடியும், மொத்தமாய்ப் பார்த்தால், வளர்ந்து வரும் ஒற்றுமையும், பல பிரி வினைப் போக்குகளும் தென்படுகின்றன. இவற்றோடு மாபெரும் புதிய சக்தியும் பிறந்திருக்கிறது. மக்களின் மனங்களிலும் செயல்களிலும் ஒரு கொந்தளிப்பு காணப்படுகின்றது. மாறிக்கொண்டே யிருக்கும் இந்தக் காட்சியின் நடுவில் வசித்துக் கொண்டிருக்கும் நாம் ஒருவேளை இங்கே நடந்து கொண்டிருப்பவை களை எல்லாம் எப்பொழுதும் முற்றிலும் உணர்ந்து கொள்ள முடிவதில்லை. இந்த நிலைமையை வெளியி லிருந்து காண்பவர்கள் சரியாக மதிப்பிட முடியும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய பழங் காலத் தில் வேரூன்றி நிற்கும் ஒரு நாடும், மக்களும், முற் காலத்தில் மாறுதலை எதிர்த்துத் தடுத்து வந்துள் ளவர்கள், இப்பொழுது உறுதியான நடையுடன் முன் னேறி வருவது ஆச்சரியம்தான். நாம் இந்தியாவில் சரித்திரத்தைப் படைத்து வருகிறோம், ஆனால் அதை நாம் உணரவில்லை.

இந்தத் தலைமுறையினருடைய உழைப்பினாலும் கொந்தளிப்பினாலும் விளையப் போவது என்ன? நாளைய இந்தியா எப்படி யிருக்கும்? இவைகளை நான் சொல்ல இயலாது. நான் என் நம்பிக்கைகளையும் ஆசைகளையும் மட்டுமே தெரிவிக்க முடியும். இந்தியா செல்வமும் பொருள்களும் மிகுதியாகப் பெற்று முன் னேற வேண்டும் என்றும், அதன் ஐந்தாண்டுத் திட்டங் களை நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்றும், அதனு டைய கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்றும் நான் விரும்புவது இயற்கை; மதம் அல்லது சாதி, மொழி அல்லது மாகாணம் பற்

றிய குறுகிய பூசல்கள் முடிவுற வேண்டும், வகுப்பு வேற்றுமை, சாதி வேற்றுமைகள் இல்லாத சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும், அதில் ஒவ்வொருவரும் தம் தகுதிக்கும் திறமைக்கும் தக்கபடி வளர்ச்சிபெற வசதி யிருக்க வேண்டும். முக்கியமாகச் சாதி என்ற சாபத்தீடு ஒழிக்கப்படும் என்று நான் நம்புகிறேன், ஏனெனில், சாதியை அடிப்படையாகக் கொண்டு, ஜன நாயகமோ, சோஷலிஸமோ இருக்க முடியாது.

*—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.*

# 3

# எதிர்கால இந்தியா

## பழம் பெருமை போதாது

**ப**ழம் பெருமைகளைப் பெற்றிருப்பதைப்போல் இலாபகரமாயும் உதவியாயும் உள்ள விஷயம் வேறில்லை; ஆனால் ஒரு தேசிய சமுதாயம் அந்தப் பெருமைகளையே பெரிதாகப் பேசிக்கொண்டு, காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப்போல் அபாய கரமான விஷயம் வேறில்லை. ஒரு சமுதாயம் தன் முன்னோர்களைப் போலத் தானும் நடித்துக் கொண் டிருந்தால் முன்னேற முடியாது; புதிதாக உற்பத்தி செய்யும் ஆற்றலும், புதிதாகக் கண்டுபிடிக்கும் ஆற்ற லும், ஜீவசக்தி ததும்பும் செயலுமே ஒரு சமுதா யத்தை நிறுவுவன.

*—ஸாகோர் பல்கலைக் கழகச் சொற்பொழிவு, 30-10-52.*

* * *

சுதந்தரமான இந்தியா, தன்னிடமுள்ள ஏராள மான வசதிகளுடன், உலகத்திற்கும் மனித சமுதாயத்

திற்கும் மிகுந்த உதவி செய்ய முடியும். எப்பொழுதும் இந்தியா உலகின் போக்கை மிகவும் பாதிக்கக் கூடிய ஆற்றலுள்ளது; அது பெருங் காரியங்களைச் சாதிக்கும்படி விதியே நிர்ணயம் செய்திருக்கிறது. நாம் தாழ்ந்து விழுந்தால் தரை குழியும்படி வீழ்கிறோம், நிமிர்ந்து எழுந்தால், நாம் உலக நாடகத்தில் நமது பகுதியைச் சிறப்புடன் நடிக்கத் தவறுவதில்லை. *

* * *

## என் இலட்சியம்

நான் கனவு காணும் எதிர்கால இந்தியாவில் ஏகாதிபத்திய மோகத்திற்கோ, வகுப்புவாதத்திற்கோ இடமில்லை.

*—இந்திய தேசிய காங்கிரஸ் தலைமையுரை, 1936.*

* * *

## பழமையும் வேண்டும், விஞ்ஞானமும் வேண்டும்

மின்சார உற்பத்தி, அணுச்சக்தி ஆகியவைகளே நவீன யுகத்தின் சின்னங்கள். இந்தியாவில் நியூக்ளியர் விஞ்ஞானமும்†, அணுச்சக்தியும் வளர்ந்து வருவதை நாம் காண்கிறோம், அதே சமயத்தில் இது பசுவின் சாணத்தை மகிமைப்படுத்தும் காலமாகவும் இருக்கிறது. இவ்வாறு இந்த நாட்

---

* இந்தக் குறியிடப்பெற்றவை தொகுப்பு நூல்களிலிருந்து எடுக்கப்பெற்றவை.

† *நியூக்ளியர் விஞ்ஞானம் என்பது அணுவைத் தகர்த்தல், அணுவில் அமைந்துள்ள எலெக்ட்ரான்கள், புரோட்டான்களை மாற்றி அமைத்தல், இந்த மாற்றங்களில் ஏற்படும் அணுச்சக்தியைப் பயன்படுத்தல் முதலியவை பற்றிய ஆராய்ச்சி அறிவு.*

டில் ஒவ்வொரு நூற்றாண்டுக்கும் மாதிரியாக எடுத்துக் காட்டக்கூடிய பிரதேசங்கள் இருக்கின்றன. இவற்றுடன் பல வகையான வேறுபாடுகளும் இருக்கின்றன. ஆனால் இத்தனை வேறுபாடுகளுக்கு நடுவிலும், எத்தனையோ கஷ்ட நஷ்டங்களுக்கு இடையே, பல சகாப்தங்களிலும் நம் மக்கள் ஐக்கியப்பட்டு நிற்கும்படி பிணித்துவந்த ஒற்றுமையும் நிலைத்துள்ளது. நாம் விஞ்ஞான உலகிலும், பொறி நுட்பத் துறையிலும் பாய்ந்து இயற்கையின் சக்திகளை அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் ஆற்றலுக்குரிய அறிவை வளர்த்து ஒன்று சேர்த்துக்கொள்ள முயன்று வருகிறோம். நம்மைத் தடுத்து நிறுத்துபவை வறுமையும், தொழில் உற்பத்திக் குறைவும் மட்டுமல்ல, தொன்று தொட்டே வந்துள்ள நம் கருத்துக்களும், வழக்கங்களும் சேர்ந்து நம்மைப் பின்னுக்கு இழுக்கின்றன. விஞ்ஞானமும், பொறி நுட்பத் துறையும் இல்லாமல், நமக்கு எதிர்காலம் இல்லை. அதே சமயத்தில், நாம் நம் பழமையை ஒதுக்கித் தள்ளினாலும், மறந்து போனாலும், நம் எதிர்காலமும் அதற்குத் தக்கபடி குறுகலாகவும், வெறுமையாகவுமே இருக்கும்.

—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.

* *

## செல்வம் பெருகி ஆன்மா சுருங்கக் கூடாது

விஞ்ஞானம், பொறிஇயல் அறிவு முன்னேற்றத்துடன், ஆன்மீக முன்னேற்றத்தையும் நாம் இணைத்துக் கொண்டுபோக முடியுமா? இன்று வாழ்க்கையில் பிரத்தியட்ச உண்மையாக விளங்கும் விஞ்ஞானத்தை நாம் கைவிட முடியாது. யுகக் கணக்காக இந்தியா போற்றி வந்துள்ள அடிப்படையான தத்துவங்களை

நாம் கைவிடவும் முடியாது. ஆகவே நாம் நம் முழு வலிமையுடனும் வீரியத்துடனும் தொழில் முன்னேற்றப் பாதையில் செல்வோம், ஆனால் சகிப்புத் தன்மை, இரக்கம், ஞானம் ஆகியவை இல்லாவிட்டால், பொருட் செல்வங்கள் சாம்பலும் புழுதியுமாகப் போய் விடும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்வோம். 'சமாதானம் செய்பவர்களே பாக்கியவான்கள்' என்பதையும் நாம் மறக்காமல் போற்றுவோம்.

—*ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.*

## இந்த யாத்திரையில் வெற்றியே அடைவோம் !

நாளைய இந்தியா நாம் இன்றைய உழைப்பினால் உருவாக்குவதுபோல விளங்கும். தொழில்களிலும் பிறவற்றிலும் இந்தியா முன்னேற்றமடையும் என்பதில் எனக்கு ஐயமே கிடையாது; விஞ்ஞானத்திலும் பொறி இயல் அறிவிலும் அது முன்னேறியே தீரும்; நம் மக்களின் வாழ்க்கைத்தரங்கள் உயரும், கல்வி பரவும், சுகாதார நிலைமைகள் மேம்பாடடையும், கலையும் கலாசாரமும் மக்களின் வாழ்க்கையை வளப் படுத்தும். நல்ல மனத்துடனும் உறுதியுடனும் நாம் இந்த யாத்திரையைத் தொடங்கியுள்ளோம், பாதை எவ்வளவு தூரமிருந்த போதிலும், நாம் குறித்த இடத்தை அடைந்தே தீருவோம்.

—டெ. டெ

*  *  *

# மகாத்மா காந்தியும் நானும்

# 4

# மகாத்மா காந்தி

## காந்தியடிகளின் அரிய குணங்கள்

மகாத்மா காந்தியை உங்களில் பெரும்பாலோர் அநேகமாக நெருங்கிப் பார்த்திருக்க மாட்டீர்கள். அவர் அற்புதமான குணங்களைப் பெற்றிருந்தார். இத்தகைய குணங்களில் ஒன்று மற்றொருவரிடம் அமைந்துள்ள நன்மையை வெளிவரச் செய்து பயன் படுத்தல். அந்த நபர் தம்மிடம் எவ்வளவோ தீமையும் பெற்றிருந்தவராக இருப்பார். ஆனால் காந்திஜி அவருடைய நன்மையை மட்டும் கண்டறிந்து, அதையே வற்புறுத்தி வருவார். இதன் பயனாக அந்த மனிதர் நல்லவராகவே இருக்க முயற்சி செய்ய வேண்டியிருக்கும், செய்யாமலிருக்க அவரால் முடியாது. அவர் ஏதாவது தவறு செய்ய நேர்ந்தால் வெட்கமடைவார்.

*புதுடில்லியில் பல்கலைக் கழகங்களின் விழாவில் பேசியது,*
***23-10-1955.***

* * *

எலும்பும் தோலுமாக மெலிந்திருந்த இந்த மனிதரிடம் எவ்விதமான பலாத்காரத்தாலும் உடைக்க முடியாத உருக்கும் இருந்தது. பாறையைப் போன்ற ஏதோ பொருளும் அமைந்திருந்தது.

அவர் இடையை மட்டும் மறைக்கும் துணியும், திறந்த மேனியும், பார்வைக்குச் சாதாரணமான தோற்றமும் கொண்டிருந்த போதிலும், அவரிடம் மன்னர்க்

குரிய ஒரு மாட்சியும், ஏற்றமும் காணப்பெற்றன, அவைகளைக் கண்டு மற்றவர்கள் மனமுவந்து அவருக்குப் பணிந்து செயலாற்றினார்கள்.

மனப்பூர்வமாகவும், வேண்டுமென்றும், அவர் அடக்கத்துடனும் பணிவுடனும் இருந்து வந்தார், எனினும் அவரிடம் பூரணமான ஆற்றலும், அதிகாரமும் இருந்தன, சில சமயங்களில் அவர் அரசரைப் போன்ற அதிகார தோரணையுடன் கட்டளைகள் இடுவார், அவைகளுக்கு மற்றவர்கள் பணிந்தாக வேண்டும்.

அவர் பேசுகிற கூட்டத்தில் ஒருவர் இருந்தாலும் சரி, ஆயிரம் பேர்கள் இருந்தாலும் சரி, அவருடைய கவர்ச்சியும், காந்த சக்தியும் கூட்டத்தை அவர்பால் இழுத்துக் கொண்டுவிடும், ஒவ்வொருவரும் அவரிடம் தனியாக நேருக்கு நேர் நின்று மனம்விட்டுப் பேசியது போன்ற உணர்ச்சியைப் பெறுவர்...மயக்கி வசீகரிக்கும் இந்த முறை பேச்சுத் திறமையாலோ, இனிமையான சொற்றொடர்களின் கவர்ச்சியாலோ ஏற்படுவதன்று. அவருடைய பாஷை சாதாரணமானது, விஷயத்தைத் தெளிவாகத் தெரிவிப்பது, தேவையில்லாத ஒரு சொல்லைக்கூட அதில் காணமுடியாது. அந்த மனிதருடைய அந்தரங்க சுத்தியும், அவருடைய தோற்றத்தின் எழிலுமே ஆட்களைப் பற்றிக் கொண்டன; அவரைப் பார்த்தால், மேற்கொண்டும் அவருள்ளே பேராற்றல் நிறைந்துள்ளது என்று எண்ணத் தோன்றும்.*

* * *

## மகாத்மாவின் புரட்சி முறைகள்

காந்திஜி நம் பாரத ஜாதியின் பெருமை மிக்க பண்டைப் பரம்பரையின் மரபுகளிலும், நிலத்திலும்

பலமாகக் கால்களை ஊன்றிக் கொண்டிருப்பது வழக்கம், அதே சமயத்தில் புரட்சிகரமான வேலைகளையும் நடத்தி வந்தார். காலப் போக்கில் கழிந்து போன பழைய பொருளாதாரக் கொள்கைகளை அவர் ஏற்றுக் கொண்டிருந்ததற்காகவோ, அல்லது பழைய மரபுகளுக்கு ஆக்கமளித்ததற்காகவோ, பிற்போக்கான சக்திகளுக்கு ஊக்கமளித்ததற்காகவோ பலர் அவரைக் குறை கூறினர். ஆனால் பெரிய அளவில் அவர் புரிந்து வந்த அருஞ் செயல்களைப் பரிசீலனை செய்து பார்க்கும் ஒருவர், அவைகளினால் ஏற்படும் புரட்சிகரமான விளைவுகளைக் கண்டு திகைத்துப் போய்விடுவார். அரசியலிலோ, சமூகத் துறையிலோ நிகழ்ந்துள்ள அவருடைய செயல்களை நாம் கவனித்தால், நாம் இந்த உண்மையைக் கண்டு கொள்வது கஷ்டமா யிருக்கிறது; ஏனென்றால் நாம் மோதல், பூசல் முதலிய மேலை நாட்டு மரபுகளில் வளர்ந்து வந்தவர்கள். உண்மையான ஒரு புரட்சி மக்களிடமிருந்தே உண்டாகும் என்றும், மேல் நிலையிலுள்ள சிலரிடமிருந்து உண்டாகாது என்றும், புரட்சி முக்கியமாகச் சமூக சம்பந்தமாகவே தோன்றும் என்றும் அவர் அறிந்திருந்தார். அவருக்கு முன்னால் சமூகச் சீர்திருத்தவாதிகள் பலர் தோன்றியிருந்தனர், அவர்கள் சிறு சிறு மாற்றங்களையே உண்டாக்க முடிந்தது, அல்லது புதிதாக ஒரு தனி வகுப்பை அமைக்க முடிந்தது; ஆனால் காந்திஜி 'இராம ராஜ்யம்' என்று சொல்லிக் கொண்டு, இலட்சக் கணக்கான வீடுகளில் புரட்சியைப் புகும்படி செய்துவிட்டார், இத்தனைக்கும் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை மக்கள் முற்றிலும் உணராத நிலையிலே அவர் சாதிக்க முடிந்தது. அவர் சாதி முறையை முற்றிலும் கண்டிக்க வில்லை. (பிற்காலத்தில் அவர் ஓரளவு கண்டித்துள்ளார்), ஆனால் தாழ்த்தப்பட்டவர்களையும் தீண்டாதவர்களையும் உயர்த்திவிட வேண்டுமென்று அவர்

வற்புறுத்தி வந்ததன் மூலம், அவர் சாதி முறை முழுவதையும் அடிப்படையிலேயே தகர்த்து விட்டார்; இதை அவர் வேண்டுமென்றே செய்தார், இதன் விளைவுகளையும் அவர் அறிந்திருந்தார். அரசியல் வேலையில் அவர் கையாண்ட முறையினால் கோடிக்கணக்கான மக்களுக்கு உயிரூட்டி, அவர்களுடைய அச்சத்தை அகற்றி, அவர்கள் தன்னம்பிக்கையும், தன்மானமும் கொள்ளும்படி செய்தார். உரிமையற்றவர்களையும், வறுமையில் வாடுபவர்களையும் பற்றி அவர் நமக்கு வற்புறுத்திச் சொல்லி, நம்மைச் சமூகநீதி பற்றிச் சிந்திக்கும்படி செய்துவிட்டார். அவர் இவற்றை யெல்லாம் அமைதியாகவும், விருப்பு வெறுப்பில்லாமலும் செய்து வந்தார், பெரும்பாலும் மோதல் ஏற்படாதபடியே முடித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் சத்தியத்தையும், அமைதியான முறைகளையுமே வற்புறுத்தினார். சத்தியம் அவருடைய வாழ்க்கைக்கு ஆதாரமானது, அவருடைய தீவிர நடவடிக்கை யெல்லாம் எப்பொழுதும் உண்மையுடன் தொடர்புள்ளதாகவே இருக்கும். அவர் அவ்வாறு செய்ததில், நம் மக்களுக்குப் பழங்காலத்தில் நம் இனத்திற்கே பெருமை தேடித் தந்த தத்துவங்களை நினைவுறுத்தினார். இவ்வாறு அவர் பழைய அடிப்படைகளின்மீதே தம் கட்டுமானத்தை நிறுவினார், அதே சமயத்தில் கட்டடத்தை எதிர்கால நிலைமைக்கு ஏற்றபடி திருத்தமாக அமைத்தார்...

—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.

* * *

## காந்திஜியின் மரணம்

நண்பர்களே, தோழர்களே, நம்முடைய வாழ்க்கையிலிருந்து ஜோதி மறைந்து விட்டது, எங்கும் இருள் சூழ்ந்து விட்டது. உங்களுக்கு என்ன சொல்ல, எப்ப

டிச் சொல்ல என்பது எனக்குத் தெரியவில்லை. நமது அருமைத் தலைவர், நாம் பாபு என்று அழைத்து வந்தவர், தேசத்தின் தந்தை உயிரோடில்லை. ஒருவேளை நான் அப்படிச் சொல்வது தவறாகும். எனினும் நாம் பல ஆண்டுகளாக அவரைப் பார்த்து வந்தது போல, அவரை மறுபடி நாம் காணமுடியாது. அவரிடம் ஆலோசனை கேட்க நாம் ஓடமாட்டோம், அவரிடமிருந்து ஆறுதல் பெறவும் இனி முடியாது, எனக்கு மட்டுமன்று, இந்த நாட்டின் கோடி கோடியான மக்களுக்கு இது பயங்கரமான அடியாகும். இந்த அடியின் அதிர்ச்சியை நானோ வேறு எவரோ கூறும் ஆலோசனையைக் கொண்டு குறைத்துக் கொள்வதும் கஷ்டமாகும்.

ஜோதி மறைந்து விட்டது என்று நான் சொன்னேன், எனினும் அது தவறு. ஏனெனில் இந்த நாட்டில் ஒளிவீசிக் கொண்டிருந்த அந்த ஜோதி சாதாரண ஜோதியன்று. இந்த நாட்டை இத்தனை ஆண்டுகளாக ஒளி செய்து கொண்டிருந்த அந்த ஜோதி இன்னும் பல்லாண்டுகள் இதை ஒளி செய்து கொண்டிருக்கும், ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் அந்த ஜோதியை இந்த நாட்டில் காணலாம், உலகமும் அதைக் காணும், அது எண்ணற்ற இதயங்களுக்கு ஆறுதலளிக்கும். ஏனெனில் அந்த ஜோதி இன்று ஏற்பட்டதன்று, அது சாகா வரம் பெற்ற நித்தியமான உண்மைகளின் சின்னம், அது நமக்கு நீதியான மார்க்கத்தைக் காட்டி வந்தது, தவறுகளிலிருந்து நம்மை விலக்கிக் காத்தது, இந்தப் பழைய நாட்டை விடுதலையை நோக்கி அழைத்துச் சென்றது.

*—புதுடில்லியிலிருந்து ஒலிபரப்பிய பேச்சு, 30-1-1948.*

* * *

## அவருக்கு அவரே அளவுகோல்

நாம் மனிதர்களைத் தேர்ந்தெடுத்த சொற்களைக் கூறிப் புகழ்கிறோம், மேன்மையை மதிப்பிட்டுச் சொல்லவும் நாம் ஓர் அளவுகோலை வைத்துக் கொள்கிறோம். ஆனால் அவரை நாம் எப்படிப் புகழ்வது, எப்படி மதிப்பிடுவது?—ஏனெனில் அவர் நம் எல்லோரையும் போலச் சாதாரணக் களி மண்ணால் படைக்கப் பெற்றவர் அல்லவே! அவர் தோன்றினார், ஓரளவு நீண்ட காலம் வாழ்ந்தார், புறப்பட்டுச் சென்று விட்டார். இந்தச் சபையில் அவரை நாம் புகழ்ந்து பேசவேண்டும் என்பது அவசியமில்லை, ஏனெனில் சரித்திரத்தில் உயிரோடிருந்த எந்த மனிதரும் அடைந்ததைவிட அதிகப் புகழை அவர் அடைந்துள்ளார். அவர் இறந்த பிறகு இந்த இரண்டு மூன்று நாட்களாக உலகத்தின் வந்தனை அவருக்கு உரித்தாயிற்று; அதற்குக் கூடுதலாக நாம் என்ன சொல்ல முடியும்? அவருடைய குழந்தைகளாயிருந்த நாம், அவருடைய சொந்தப் பிள்ளைகளைவிட நெருங்கிய மக்களாக விளங்கிய நாம், அவரை எவ்வாறு புகழ முடியும்? நாம் அனைவருமே அவருடைய ஆன்மீகக் குழந்தைகளா யிருக்கிறோம், நாம் அந்தப் பெருமைக்குத் தகுதியற்றவர்களாயினும் நாம் அவருடைய மக்களே.

ஒரு பெரும் ஜோதி மறைந்து விட்டது, எந்தக் கதிரவன் நம் வாழ்க்கையை ஒளிசெய்து கொண்டிருந்ததோ அது அஸ்தமித்து விட்டது, நாம் குளிரிலும் இருளிலும் நடுங்குகிறோம். ஆயினும் நாம் இம்மாதிரி ஏங்குவதை அவர் விரும்பியிருக்க மாட்டார். இத்தனை ஆண்டுகளாக நாம் கண்டு வந்த அந்த ஜோதி, தெய்விக நெருப்புடைய அந்த மனிதர், நம்மையும் மாற்றி விட்டார்—இன்று நாம் உள்ள நிலையில், நாம் இத்தனை ஆண்டுகளாக அவரால் உருவாக்கப் பெற்றவர்கள்;

அந்தத் தெய்விக அக்கினியிலிருந்து நாமும் ஒரு பொறியை எடுத்துக் கொண்டுள்ளோம், அது அவர் வகுத்த வழியில் ஓரளவு வேலை செய்யும்படி செய்து நமக்கு வலுவையும் அளித்துள்ளது. பெரிய மனிதர்களுக்கும் மேன்மையுற்றவர்களுக்கும் வெண்கலத்திலும் சலவைக் கல்லிலும் சிலைகள் வைக்கப் பெறுகின்றன, ஆனால் தெய்விக அக்கினியுடைய இந்த மனிதர் தம் வாழ்நாளில் கோடிக்கணக்கான இதயங்களில் எப்படியோ குடிபுகுந்து விட்டார், அதனால் நாம் எல்லோருமே அவர் எதனால் உருவாக்கப் பெற்றிருந்தாரோ அதே பொருளாக ஓரளவுமாறிவிட்டோம், ஆனால் தெய்விகத் தன்மை மட்டும் நம்மிடம் அளவில் குறைந்திருக்கும். இவ்வாறு அவர் இந்தியா முழுதும், அரண்மனைகள் மட்டுமின்றி, குறிப்பிட்ட இடங்கள், சபைகள் மட்டுமின்றி, ஒவ்வொரு கிராமத்திலும், தாழ்த்தப்பட்டவர் குடிசையிலும், கஷ்டப்படுவோர் இடங்களிலும் புகுந்து பரவி நின்றார். கோடிக்கணக்கான இதயங்களில் அவர் வசிக்கிறார், எண்ணற்ற சகாப்தங்கள் அவர் வாழ்ந்து கொண்டே யிருப்பார்.

—*அரசியல் நிர்ணய சபையில் பேசியது*, 2-2-1948.

* * *

## மகாத்மா காந்திக்கு ஜே !

நாம் எத்தனை முறை 'மகாத்மா காந்திக்கு ஜே!' என்று கோஷித்திருக்கிறோம். இப்படிக் கோஷித்ததில் நாம் நம் கடமையை முடித்து விட்டோம் என்று எண்ணிக் கொண்டோம். இந்தக் கோஷத்தைக் கேட்டு அவர் எப்பொழுதும் வருத்தப்பட்டு வந்தார், ஏனெனில் அது வெறும் கோஷம் என்றும், சிந்தனை செய்வதற்கும் செயல் புரிவதற்கும் பதிலாக அது கோஷிக்கப்படுகிறது என்றும் அவர் தெரிந்திருந்தார். 'மகாத்மா

காந்திக்கு ஜே!'—'மகாத்மா காந்திக்கு வெற்றி!'—அவருக்கு நாம் அளிக்க விரும்பிய வெற்றி எது, அவர் அடைய வேண்டிய வெற்றி எது? வாழ்விலும் சாவிலும் அவர் வெற்றி வீரராகவே விளங்கினர். நீங்களும், நானும், இந்த அதிருஷ்டமற்ற நாடுமே வெற்றிக்குப் போராடிக் கொண்டிருக்க வேண்டி யிருக்கிறது.

—ஷெடி ஷெடி

* * *

## தலைசிறந்த இந்தியர்

அவர் ஓர் இந்துவா யிருந்தார், ஓர் இந்தியரா யிருந்தார், பல தலைமுறைகளில் வந்த மக்களிலே தலைசிறந்தவரா யிருந்தார், தாம் இந்துவாகவும் இந்தியராகவும் இருந்ததில் அவர் பெருமை கொண்டிருந்தார்...அவர் மிகுந்த சமயப் பற்றுக் கொண்டிருந்த போதிலும், தாம் விடுதலை வாங்கித் தந்த இந்தத் தேசத்தின் தந்தை என்று அழைக்கப் பெற்ற போதிலும், குறுகிய மதப் பற்றோ, தேசியப் பற்றுக்களோ அவருடைய ஆன்மாவைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கவில்லை. ஆகவே அவர் பெரிய சர்வதேச வாதியாக ஆகிவிட்டார், மானிட சமூகத்தின் அடிப்படையான ஒற்றுமையில் நம்பிக்கை கொண்டிருந்தார், எல்லாச் சமயங்களினுடைய அடிப்படையான ஒற்றுமையை உணர்ந்திருந்தார், மானிட சமூகத்தின் தேவைகளையும் அறிந்திருந்தார், எல்லா இடங்களிலுமிருந்த கோடிக் கணக்கான ஏழைகள், துயரப்படுவோர்களுக்கே முக்கியமாகத் தொண்டு செய்து வந்தார்.

*—புதுடில்லியிலிருந்து ஒலிபரப்பிய பேச்சு, 14-2-48.*

* * *

## மகாத்மாவின் இலட்சியங்கள்

காந்திஜி நமக்கு எடுத்துச் சொன்ன உன்னதமான இலட்சியங்களுக்காகவும் நோக்கங்களுக்காகவும் இந்தியா உழைக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? அப்படியானால், நீங்கள், அவைகளை அநுசரித்துச் சிந்தனை செய்து செயல் புரிய வேண்டும். ஒரு நேரத்தில் தோன்றும் உணர்ச்சியின் வசப்பட்டு வேறு பக்கம் சென்றுவிடக் கூடாது, சொற்ப நன்மைகளைப் பற்றிச் சிந்திக்கக் கூடாது. வகுப்பு வாதமோ, இராஜ்யப் பிரிவினையோ, சமயத் துவேஷமோ, மாகாணப் பித்தோ, வகுப்பு இறுமாப்போ முதலிய எதுவாயிருந்தாலும், தேசத்தைப் பலவீனப் படுத்தும் போக்கை நீங்கள் வேரோடு களைந்துவிட வேண்டும்.

—புதுடில்லியிலிருந்து ஒலிபரப்பிய பேச்சு, 2-10-1948.

* * *

## மகாத்மாவால் வந்த மதிப்பு

இன்று பல காரணங்களால் உலகில் இந்தியா மிகுந்த மதிப்பைப் பெற்றிருக்கிறது. ஆனால் முதன்மையான காரணம் மகாத்மா காந்தி. இந்த அளப்பரும் பெருமையை இந்தியாவுக்கு அளித்தவர் அவர், இந்தப் பெருமை இந்தியாவின் நிலப்படை, கடற் படை அல்லது செல்வத்திற்காக அளிக்கப் பெறவில்லை, ஆனால் மனிதர்களுக்குள்ளே மாபெரும் மனிதராக விளங்கியவர் அரசியல்வாதிகளிடையே இருந்த ஒழுக்கத்தில் உலகின் அற்பத்தனத்தை எடுத்துக் காட்டினார். அதனால் இந்தியா இந்த அந்தஸ்தை அடைந்தது, ஜனங்கள், இந்தியா என்றால், ஒழுக்கமுறையில் அதைச் சிறப்பாக எண்ணினர். அவர்கள் எண்ணியது சரிதான், ஏனெனில் நம்மில் பெரும்பாலோர் அவரைப் பின்பற்

றக்கூட அருகதையில்லாத அற்ப ஜனங்களா யிருந்த போதிலும், இந்தியா காந்தியைப் பெற்றிருந்தது...நாம் இதைப் பற்றி நம் உள்ளங்களில் தெளிவா யிருக்க வேண்டும்; அதாவது, நாம் எந்த இழிவான முறைகளிலும் இறங்கக் கூடாது, எந்தவிதப் பலாத்கார முறைகளிலும் இறங்கக் கூடாது, எவ்வித நாகரிகக் குறைவான முரட்டு முறைகளிலும் இறங்கக் கூடாது.

*—லட்சுமணபுரி பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசியது, 28-1-1949.*

*　　*　　*

# 5

# நான்

---

## நான் இந்தியாவின் முதல் ஊழியன்

என்னை இந்தியாவின் முதல் மந்திரி என்று சொல்லுகின்றனர், என்னை இந்தியாவின் முதல் ஊழியன் என்று அழைப்பது அதிகப் பொருத்தமா யிருக்கும். இந்தச் சகாப்தத்தில் பட்டங்களும் பதவியும் முக்கியமில்லை, தொண்டுதான் முக்கியம்.

*—புதுடில்லி ரேடியோவில் பேசியது, 1-12-1947.*

*　　*　　*

## நானும் ஒரு மனிதன்

நான் ஒரு பிரதம மந்திரியாக மட்டுமன்றி, ஒரு மனிதனாகவும் இருக்கிறேன்.

*—புதுடில்லி 'யுனெஸ்கோ' இந்திய தேசியக் கமிஷன் முன்பு சொற்பொழிவு, 24-3-51.*

*　　*　　*

## எனது கொள்கை

நான் ஒரு சித்தாந்தத்தையோ, மதத்தையோ, பற்றிக் கொண்டிருக்கவில்லை; ஆனால் மனிதர்களிடம் இயற்கையாகவே அமைந்துள்ள ஆன்மீக ஆற்றலில் நான் நம்பிக்கையுள்ளவன்—அதை மதம் என்று சொன்னாலும் சரி, சொல்லாவிட்டாலும் சரி. தனி மனிதனுக்கு இயற்கையிலே அமைந்துள்ள பெருமையில் நம்பிக்கையுள்ளவன் நான். ஒவ்வொரு நபருக்கும் வளர்ச்சிக்குச் சரி சமத்துவமான சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்பதில் நான் நம்பிக்கை வைத்திருப்பவன். மனிதர்களுக்குள் அதிக வேற்றுமைகளில்லாத சமத்துவ சமுதாயம் ஏற்பட வேண்டும் என்ற இலட்சியத்தில் நான் நம்பிக்கையுள்ளவன்—அதை அடைவதில் கஷ்டம் இருக்கக்கூடும். பணக்காரருடைய ஆடம்பர அநாகரிகத்தையும், ஏழைகளுடைய வறுமையையும் நான் வெறுக்கிறேன்.

*—புதுடில்லியில் இந்திய வர்த்தக, கைத்தொழில் சங்கங்களின் பெடரேஷன் கூட்டத்தில் பேசிய பேச்சு, 28-3-60.*

* * *

## என்னை உருவாக்கிய மூவர்

எனது வாழ்க்கையில் அதிகமாகப் பாதித்து என்னை உருவாக்கியவர்களில் நான் நேரில் கண்டு பழகிய மூவர் முதன்மையானவர்: அவர்கள் என் தந்தையார், காந்திஜி, ரவீந்திரநாத தாகூர் ஆகியோர். கடைசியாகக் கூறியுள்ள குருதேவரைவிட முந்திய இருவருமே என்னிடம் அதிக நெருக்க முள்ளவர்கள், ஏனெனில் என் தந்தையாரும் காந்திஜியும் என்னை ஒரு நிலைக்கு ஏற்றபடி தயாரித்து நிறுத்திய பிறகே நான் தாகூரிடம் சம்பந்தம் வைத்துக் கொண்டேன். இருந்த

போதிலும், ரவீந்திரநாதர் என்னை மிகவும் வசப்படுத்திக் கொண்டார். என் தந்தையாரும் ரவீந்திரநாத தாகூரும் ஒரே வருடம், ஒரே மாதம், ஒரே தேதியில் பிறந்தவர்கள் என்பது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய குறிப்பிடத்தக்க விஷயம். இந்த மூவருக்கும் பொதுவான அமிசமாக விளங்கிய விஷயம் தேசிய லட்சியங்களே. ஆனால் காந்திஜி, என் தந்தையார், ரவீந்திரநாதர் ஆகிய மூன்று பேர்களைப் போல் ஒருவருக்கொருவர் வேறுபட்ட மூன்று பேர்களைக் காண்பது அரிது, ஆயினும் அவர்களுடைய சிந்தனையிலும், செயலிலும், ஓரளவு கலைப் பண்பிலும் கூட அளவிறந்த ஒற்றுமையும் நிலவியிருந்தது; கலைப் பண்பு ஒவ்வொரு மனிதரிடமும் ஒரு வகையாக மாறுபட்ட உருவத்தை அடைந்திருக்கும்.

*—அகில இந்திய ரேடியோ உரையாடலில் கூறியது,*
***6-5-1956.***

* * *

## நான் இந்தியத் தேசியத்தின் ஒரு சின்னம்

அரசாங்கத்திற்கு எதிராகச் சில குற்றங்கள் புரிந்ததாக விசாரிக்கப்படும் ஒரு தனி நபர் என்ற முறையில் நான் உங்கள் முன்பு நிற்கிறேன். நீங்கள் அந்த அரசாங்கத்தின் சின்னம். நானும் வெறும் தனி மனிதனாக மட்டும் இருக்கவில்லை : நானும் ஒரு சின்னமாக இருக்கிறேன், இந்த நேரத்தில் நான் இந்தியத் தேசியத்தின் சின்னமாக விளங்குகிறேன், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து விலகி, இந்தியாவுக்குப் பூரண சுதந்தரத்தைப் பெற உறுதி கொண்டவன் நான். நீங்கள் விசாரித்துத் தண்டிக்கப்போவது என்னையல்ல, ஆனால் பல லட்சக்கணக்கான இந்திய மக்களையே தான்; ஆனால் அத்தனை பேர்களையும் தண்டிப்பது

ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தாலும் இயலாத காரியம், உங்கள் முன்பு விசாரணைக்காக நான் நின்று கொண்டிருந்த போதிலும், ஒரு வேளை உலகமாகிய நீதித் தலத்தின் முன்பு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே விசாரணைக்காக நிற்கின்றது என்று சொல்லலாம். வெறும் நீதித்தலங்களைக் காட்டிலும் வல்லமை மிகுந்த பெரிய சக்திகள் இன்று உலகிலே இயங்கி வருகின்றன; சுதந்தரத்திற்காகவும், உணவுக்காகவும், பாது காப்புக்காகவும் கோடிக்கணக்கான மக்களை ஆட்டி வைக்கும் மூலாதாரமான இயற்கைச் சக்திகள் அவர்களைத் தூண்டிக் கொண்டே யிருக்கின்றன, அந்த மக்களே சரித்திரத்தை உருவாக்கி வருகின்றனர். உலகம் மாறிக் கொண்டிருக்கையில் அதற்குத் தக்கபடி பிரிட்டிஷ் அரசாங்கம் தன் போக்கையும் மாற்றிக் கொள்ளத் தவறியதால், அது தோல்வியுற்றது என்று இந்தச் சரித்திரத்தை எழுதும் எதிர்கால ஆசிரியர் குறிப்பிடுவது நியாயமாகும். இதே பலவீனத்தால் வீழ்ந்து விட்ட ஏகாதிபத்தியங்களின் கதியைப் பற்றி அவர் சிந்தனை செய்யக்கூடும், இதை விதி என்று சொல்லவும் கூடும். சில காரணங்கள் தவிர்க்க முடியாத சில முடிவுகளையே உண்டாக்கும். நாம் காரணங்களை அறிவோம்; முடிவுகள் அவைகளைத் தொடர்ந்து வந்தே தீரும்.

இந்த விசாரணையிலோ, இதற்குப் பின்போ, எனக்கு என்ன நேருகின்றது என்பது அற்ப விஷயம். தனி மனிதர்களைப்பற்றி முக்கியமில்லை; அவர்கள் வருவார்கள், போவார்கள், எனக்குக் காலம் வந்தால் நானும் போய்விடுவேன். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் ஏழு முறை என்னை விசாரணைக்குள்ளாக்கித் தண்டித்திருக்கின்றது, என் வாழ்க்கையில் பல ஆண்டுகள் சிறைக்கோட்டங்களுக்கு உள்ளே புதைந்து

விட்டன. எட்டாவது தடவையோ, ஒன்பதாவது தடவையோ, கூடுதலாகச் சில ஆண்டுகள் தண்டனை பெறுவதில் அதிக வித்தியாசம் ஒன்றும் ஏற்பட்டு விடாது.

*—கோரக்பூர் நீதித்தலத்தில் வாக்குமூலம், 3-11-1940.*

*　　　*　　　*

## என் குருவின் போதனை

என் பொது வாழ்க்கையில் சென்ற முப்பது, நாற்பது ஆண்டுகளாக நான் ஏதேனும் அநுபவம் பெற்றிருந்தால், அல்லது நமக்குப் பல விஷயங்களைப் போதித்த குருநாதரிடமிருந்து நான் ஏதேனும் பாடம் கற்றிருந்தால், அது இதுதான்: நேர்மையற்ற சூழ்ச்சி முறை முடிவில் வெற்றியளிப்பதில்லை. தாற்காலிகமாக மட்டும் அதனால் இலாபமிருக்கலாம்.

*—பார்லிமெண்டுச் சொற்பொழிவு, 3-2-1950.*

*　　　*　　　*

## விஞ்ஞான முறை

அரசியல் என்னைப் பொருளாதாரத்தில் கொண்டு போய்ச் சேர்த்தது, அதிலிருந்து, தவிர்க்க முடியாத நிலையில், விஞ்ஞானத்திற்கும், வாழ்க்கை உட்பட மற்றெல்லா விஷயங்களிலும் விஞ்ஞான முறையில் பரிசீலனை செய்வதற்கும் நான் செல்ல நேர்ந்தது.*

*　　　*　　　*

# சுதந்தரமும்
# உரிமைகளும்

## 6

## சுதந்தரம்

---

### சுதந்தரமும் கட்டுப்பாடும்

சுதந்தரத்தைப் பற்றி நான் எவ்வளவு அதிகமாகச் சிந்தனை செய்கிறேனோ, அந்த அளவுக்கு தனியாக வெறும் சுதந்தரம் என்று ஒன்று இல்லை யென்ற முடிவுக்கே வருகிறேன். எப்பொழுதும் சுதந்தரத்தோடு பொறுப்பும் இணை சேர்ந்தே வருகின்றது. ஒரு தேசிய சமூகமானாலும் சரி, தனி மனிதனானாலும் சரி, சுதந்தரம் கடமையையும் எப்பொழுதும் வற்புறுத்துவதாகும்.

—*லோகசபைச் சொற்பொழிவு, 28-1-1957.*

* * *

### அரசியல் சுதந்தரமும் பொருளாதாரச் சுதந்தரமும்

சுதந்தரத்தைப் பற்றி நாம் பேசுகிறோம், ஆனால் இக்காலத்தில் பொருளாதாரச் சுதந்தரம் இல்லாமல், அரசியல் சுதந்தரம் (தனியாக) நம்மை வெகுதூரம் கொண்டு செல்ல முடியாது. உண்மையிலே, பட்டினிகிடக்கும் ஒரு மனிதனுக்கும், வறுமை நிறைந்த ஒரு நாட்டுக்கும் சுதந்தரம் என்பதில் ஒரு பொருளுமில்லை. ஏழைப்பட்ட சமுதாயங்களுக்கோ, நபர்களுக்கோ இந்த உலகில் இடமில்லை.

—*புதுடில்லியில் ரேடியோ பேச்சு, 18-1-1948.*

* * *

### உண்மையான சுதந்தரம்

நாம் கருத்தில் கொண்டுள்ள சுதந்தரம் இந்த நாட்டுக்கு, அந்த நாட்டுக்கு என்றோ, இந்தச் சமுதாயத்திற்கு, அந்தச் சமுதாயத்திற்கு என்றோ ஒதுக்கி வைத்ததில்லை, ஆனால் மானிட சமூகம் முழுவதற்கும் பொதுவானது. உலகப் பொதுமையான இந்தச் சுதந்தரம் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரின் ஆதிக்கியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க முடியாது. சாதாரண மனிதன் எங்கெங்கிருந்தாலும், அவனுக்குச் சுதந்தரம் வேண்டும், அவன் வளர்ச்சிக்குரிய வசதிகள் யாவும் பூரணமாக அமைந்திருக்க வேண்டும்.

*—புதுடில்லி ஆசிய மகாநாட்டில் தொடக்க உரை,*
***23-3-1947.***

### அழகும் கலையும்

சுதந்தர மில்லாத ஒரு நாட்டில் அழகும் கலையும் எப்படிச் செழித்து வளரும்? அவை அடிமை இருளிலும், அடக்குமுறையிலும் வாடிப் போய்விடுகின்றன.*

*          *          *

# 7

## மானிட உரிமைகள்

---

### கொடுமைகள் ஒழிய வேண்டும்

அநேகமாகத் தற்கால வாழ்க்கையில் மிகவும் வியக்கத் தகுந்த விஷயம் விஞ்ஞானமும் பொறி இயல் நுட்ப அறிவும் மூச்சையே திணறவைக்கும் வேகத்தில் வளர்ந்து வருவதுதான். ஆனால் இந்த முன்னேற்ற

மெல்லாம் மானிட சமூகத்தின் பொதுவான நலனை அடைய உதவியாகவும், ஒவ்வொரு தனி மனிதனும் தன் அறிவுக்கு உகந்த முறையில் வளர்ச்சியடைவதற்குப் பூரணமான வாய்ப்புக்களை அளித்தும் வந்தால்தான் அவைகளுக்கு மதிப்புண்டு. 15-ஆண்டுகளுக்கு முன்னால் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் பிரகடனம் செய்து ஏற்றுக்கொண்ட மானிட உரிமைகளின் சாசனம் இந்தக் குறிக்கோளை அடைவதையே இலட்சியமாகக் கொண்டுள்ளது, அதாவது ஜாதி, மத, இன, மொழி வேற்றுமைகளையும், ஆண், பெண் வேற்றுமையையும் பொருட்படுத்தாமல், மானிட உரிமைகளையும், ஜீவாதாரமான சுதந்தரங்களையும் உலகெங்கும் நாளுக்கு நாள் அதிகமாக மதிக்கும்படி செய்வதாகும்.

கொடுமையும், பூசலும், போர்களும் (உலக) வரலாற்றைக் கறைப்படுத்தியுள்ளன என்றால், அதற்கு முக்கியமான காரணம் 'மனிதனுக்கு மனிதன் இழைக்கும் இரக்கமற்ற கொடுமை'யே யாகும்; மற்றவர்களுடைய உரிமைகளையும், கௌரவத்தையும் மதிக்காமல் இழிவுபடுத்துவதேயாகும். நாகரிகத்திற்கே பெரிய களங்கமாக உள்ள இந்தத் தீய சக்திகளை அறவே களைந்துவிட வேண்டுமானால், இன வேறுபாட்டால் ஏற்படும் அகம்பாவமும், அந்நியர்மீது அரசியல் ஆதிக்கியம் செலுத்துவதும், பொருளாதார அநீதியும், ஏற்றத் தாழ்வுகளும் வெளிப்பட்டுத் தோன்றுவதை அகற்ற வேண்டும்; இத் தீய சக்திகள் இப்பொழுது நாகரிகம் முழுவதையுமே அழித்துத் துடைத்துவிடக் கூடிய நிலையில் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன. ஒருவரை யொருவர் பயமுறுத்திக் கொண்டிருப்பதை அடிப்படையாகக் கொண்டு உண்மையான சமாதானத்தை அடைய முடியாது, தனி மனிதர்களின்

உரிமைகளையும் கௌரவத்தையும் பாதுகாக்கக்கூடிய ஒரு சமுதாய அமைப்பை வளர்க்கவும், அதே சமயத்தில் சமூகம் முன்னேற்ற மடையவும், சர்வ தேசங்களுக்கும் இடையில் ஒற்றுமை நிலவவும் ஒத்துழைப்பதன் மூலமாகவே அமைதியை அடைய முடியும்.

—புதுடில்லி, 'மானிட உரிமைகள்' கொண்டாட்டத் தினத்தின் பதினைந்தாவது ஆண்டு விழாவுக்கு அனுப்பிய செய்தி, *10-12-63.*

*　　　*　　　*

# ஜனநாயகம்

# 8

# ஜனநாயகம்

## ஜனநாயகத்தின் பண்புகள்

**நா**ம் நமது யாத்திரையில் துணிந்து முன்னேறிச் செல்லக்கூடிய கட்டத்தை இப்பொழுது அடைந்திருக்கிறோம். நாம் அடைந்துள்ள அநுபவத்தைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும், கிடைக்கின்ற சாதனங்களை யெல்லாம் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும், சேதம் ஏற்படாமலும் தடுக்க வேண்டும். தேசத்தின் மூலதனங்களையும், பொருள்களையும் சேதப்படும்படி நாம் விட முடியாது. ஜனநாயகத்தில் பல நல்ல பண்புகள் உண்டு, ஆனால் நேரத்தையும், ஆற்றலையும் வீணாக்கும் பண்பும் அதனுடன் சேர்ந்தே யிருக்கும். இருந்த போதிலும், பல காரணங்களைக் கருதி, நாம் மற்ற அரசாங்க அமைப்பு முறைகளை விட்டு, ஜனநாயகத்தையே தேர்ந்தெடுக்கிறோம். இதனால் வீணாக விரயமாவதை நாம் தடுக்க முடியாது என்பதில்லை. விரயத்தை நாம் தாங்க முடியாது, ஏனெனில் நாம் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதே அடிப்படையான பிரசினை. 'சயித்தான் நமக்குப் பின்னால் துரத்திக் கொண்டு ஓடி வருகிறான்' என்று சொல்வதுண்டு. இத்தகைய உணர்ச்சியை நீங்கள் பெறவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

*—புதுடில்லியில் சொற்பொழிவு, அக்டோபர் 13, 1954.*

* * *

## பயன்களே முக்கியம்

ஜனநாயகம் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு என்பது எனக்குத் தெரியும். இங்கே நான் பார்லிமெண்டு ஜனநாயக முறை பற்றியே பேசு கிறேன். ஜனநாயக முறையிலேயே வேறு வழிகளும் இருந்த போதிலும் அவை வேருனவை. நாம் பார்லி மெண்டு ஜனநாயக முறையை ஏன் தேர்ந்தெடுத் தோம்? ஏனென்ருல் காலப் போக்கில் அதன்மூலம் தலைசிறந்த பயன்கள் கிடைக்கும் என்பதற்காக. அதன் மூலம் தலைசிறந்த பயன்கள் கிடைக்கவில்லை என்ற முடிவுக்கு நாம் வந்தால், அதை மாற்றிக் கொள் வோம், ஏனெனில் நமக்குப் பயன்களே முக்கிய மானவை.

*—லோக சபையில் சொற்பொழிவு, டிசம்பர் 21, 1954.*

* * *

## ஒரே முறையில் சிந்திக்க வேண்டியதில்லை

பல நலன்களைப் பற்றிக் கவனிக்கையில், அவை ஒன்றுக்கொன்று முரணுயிருந்தால், நாம் எப்படி முடிவு செய்வது? முடிவு செய்ய இரண்டு வழிகளே இருக்கின்றன. ஒரு வழி கட்டாயத்திஞல், பலாத் காரத்திஞல், ஆயுத பலத்திஞல்—அதாவது தடிக் கம்பின் வல்லமையால் முடிவு செய்தல். மற்ற வழி ஜனநாயக வழி, அதாவது கூடிக் கவனித்து, விவா தம் செய்து, கடைசியில் முடிவு செய்து, அந்த வழியை ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ளுதல். இந்தப் பிரசினையையோ (இராஜ்யங்களின் புனரமைப்புப் பிரசினை), அல்லது வேறு எந்தப் பிரசினையையோ, நாம் ஆயுத பலத்தால் முடிவு செய்யப் போவதில்லை என்பது தெரிந்த விஷயம். அது வெறும் கேலிக் கூத்

தாகிவிடும். ஆதலால் எஞ்சியுள்ள மற்ற வழி நமக்குள்ளே விவரமாக விவாதம் செய்து முடிவு செய்தல்— அதுதான் ஜனநாயக முறை. ஜனநாயக முறையில் இந்த விஷயங்கள் முக்கியமானவை: மாறுபட்டுப் பேசுபவர்களுடைய கருத்தைப் புரிந்து கொள்ள முயல வேண்டும், ஓரளவு விட்டுக் கொடுக்கத் தயாரா யிருக்க வேண்டும், இறுதியாகச் செய்யப் பெறும் முடிவு எப்படியிருந்த போதிலும், அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்படி நடைபெறுவிட்டால், நாம் சிதறுண்டு போவோம். இந்தியாவைப் போன்ற ஒரு பெரிய நாட்டில், ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் பலதிறப்பட்ட அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. ஒரே முறையில்தான் சிந்திக்க வேண்டும் என்ற கட்டாயப் பயிற்சியும் நமக்குக் கிடையாது. அந்தப் பயிற்சியே நமக்கு வேண்டாம். ஜனங்கள் தங்கள் மனங்களையும், சிந்தனைகளையும் அபிவிருத்தி செய்துகொண்டு, அவைகளைத் தைரியமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

*—பங்களூரில் சொற்பொழிவு, அக்டோபர் 6, 1955.*

* * *

## ஜனநாயகத்தில் சுதந்தரமும், கடமையும்

ஆனால் பேச்சுச் சுதந்தரம், சிந்தனைச் சுதந்தரங்களை ஜனநாயகம் அளிக்கும் பொழுது, வேறொரு கடமையையும் விதிக்கின்றது. பின்னால், ஒன்றுபட்டுச் செயலில் இறங்கவேண்டும். செய்யப் பெற்ற முடிவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் பிளவுகள் தோன்றிவிடும். இந்தியாவின் சரித்திரம் பற்றி உங்களுக்கு ஓரளவு தெரிந்திருக்கும். சரித்திரத்தில் நீண்ட காலங்களுக்கு நாம் உட்பகையால் மிகவும் பிளவு பட்டும், பிரிவினைக்கு இடம்

கொடுத்தும் வந்தோம், இவற்றின் பயனாக இந்தியா வின் பேராற்றல் உள்நாட்டுச் சண்டையாலும், விவா தங்களாலும், பிரிவினை ஆசைகளாலும் வீணாக்கப் பட்டு வந்தது. உண்மையிலே இந்தியாவின் சரித்தி ரத்திலிருந்து சில படிப்பினைகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். சிந்தனையிலும், செயல் திற னிலும், கலையிலும், இலக்கியத்திலும், இசையிலும், மானிட முயற்சியில் ஒவ்வொரு துறையிலும் நாம் மகா புருடர்களைப் பெற்றிருந்தோம். எனினும் நமக் குள் ஏற்பட்ட பிரிவினை நோக்கத்தாலும், தனி வழி களில் விலகிச் செல்ல வேண்டும் என்ற ஆர்வத்தாலும் இந்தப் பெருமையை யெல்லாம் நாம் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டோம். ஆதலால் நாம் நலிவு அடைந்தோம், அடிக்கடி அடிமைப்பட்டு இங்கு வந்த அந்நியர்களுக்கு ஆட்பட்டிருக்கவும்நேர்ந்தது. இங்கே வந்த அந்நியர்கள் உண்மையில் இந்தியாவை ஜயிக்க வில்லை என்று சொல்வது சரிதான் என்று நான் கருது கிறேன். பிரிட்டிஷார், நம்மைவிட அதிக ஆயுத பலம் பெற்றிருந்த போதிலும், நம்மை வெற்றி கொள்ள வில்லை என்பது உண்மை. இந்தியாவிலிருந்த பிளவு களை அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள். மற்றவர்களும் அதே போலச் செய்து கொண்டார்கள். இந்திய வரலாற்றின் மாபெரும் படிப்பினை இது. ஆத லால் நாம் ஒற்றுமைப்பட்டு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். நமக்குள் எத்தகைய விவாதங்களையும், சொற்போர்களையும் வைத்துக் கொள்ளலாம். ஆனால் நாம் ஜனநாயக முறையில், அமைதியாக, ஒரு முடிவு செய்து விட்டால், அதன்படி நாம் நடந்தாக வேண்டும்.

—டி டி

* *

## வளர்ச்சிக்கு உதவி மக்கள் ஆட்சியே

ஜனநாயக முறையை நாம் உறுதியாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். நாம் அதை ஏன் ஏற்றுக்கொண்டோம்? பல காரணங்களுக்காக அவ்வாறு செய்தோம். ஆராய்ந்து பார்த்தால், முடிவில் அது மனிதர்களும் வளர்ச்சியடைய உதவுகின்றது, சமூகமும் வளர்ச்சியடைய உதவுகின்றது என்று நாம் எண்ணுவதால் அதை நாம் ஏற்றுக் கொண்டோம்; தனி நபரின் சுதந்தரத்திற்கு நாம் மிகவும் மதிப்புக் கொடுக்கிறோம் என்பதாலும் அதை மேற்கொண்டோம். இதை நம் அரசியல் சட்டத்திலேயும் குறிப்பிட்டிருக்கிறோம்; மனிதனுடைய சிருஷ்டிக்கும் ஆற்றலும், அரிய செயல்களை மேற்கொள்ளும் துணிவும் வளரவேண்டும் என்பதற்காக மேற்கொண்டோம். உலகத்திற்குப் பொதுவாகத் தேவையுள்ள பொருள்களை மட்டும் நாம் உற்பத்தி செய்தால் போதாது. உயர்ந்த வாழ்க்கை தரம் நமக்கு வேண்டியது அவசியம் தான், ஆனால் மனிதனின் சிருஷ்டி ஆர்வத்தையும், சிருஷ்டி ஆற்றலையும், செயல் துணிவையும் அதற்காக நாம் வீணாக்க விரும்பவில்லை; பல சகாப்தங்களாக மனிதனுக்கு மேன்மையளித்து வந்த வாழ்க்கையின் இனிய பண்புகளையும் நாம் இழக்கத் தயாராயில்லை. ஜனநாயகம் என்பது வெறும் தேர்தல்களுக்குரிய பிரசினையன்று.

— *இந்தூரில் அ. இ. கா. கமிட்டியில் சொற்பொழிவு, ஜனவரி 4, 1957.*

* * *

## கூடிக் கலத்தலே முக்கியம்

முன் இருந்த அரசாங்கங்கள் தங்களுக்கு அவசியமென்று தோன்றிய முடிவுகளைச் செய்து கொள்ள

முடிந்தது. இப்பொழுது தேசத்திற்குச் சுதந்தரம் வந்துவிட்டது. மேலும், பார்லிமெண்டரி முறையில் அமைந்த அரசாங்கம் அடிக்கடி பார்லிமெண்டுடனும், கட்சிகளுடனும், பிற ஸ்தாபனங்களுடனும் கலந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. ஆதலால் ஒரு பக்கத்தில் அரசாங்கமும், மறுபக்கத்தில் தொழில் ஸ்தாபனங்களோ, வேறு சம்பந்தப்பட்ட நலன்களைக் காத்துக்கொள்ள விரும்புபவர்களோ, தாங்களாகக் கலந்துகொண்டு, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து முடிவு செய்துகொள்ள வேண்டிய பிரசினை யாக இருக்கவில்லை. வேறு நலன்களையும் நாம் கவ னிக்க வேண்டியிருக்கிறது, இறுதியாக இந்திய மக்க ளின் நலனையும் கவனித்தாக வேண்டும், அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டு மௌனமா யிருக்கும் காலம் போய்விட்டது. அவர்களுக்குத் திருப்தியுண் டாகும்படி செய்ய வேண்டும், அவர்களுடைய நோக் கத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும், ஏனெனில் அவர்களுடைய அபிப்பிராயமே முடிவாக நிறைவேற் றப்பட வேண்டும். இந்த நிபந்தனைக்கு உட்பட்டு, எந்த ஜனநாயக அமைப்பிலும், தொழில் சம்பந்தமான விஷயங்களில் அவைகளில் முக்கியமாகத் தொடர்புள்ள தொழிலாளர்களையும், அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வோர்களையும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கலந்து பேசுதல் அவசியம். பேசுதல் இரு கட்சிகளு டன் நில்லாது, மூன்று அல்லது நான்கு கட்சிகளாகும் பொழுது, முடிவு செய்வதற்கோ, அல்லது உடன்பாடு காண்பதற்கோ எளிதா யிருப்பதில்லை என்பது உங்க ளுக்கே தெரியும்.

— கல்கத்தாவில் சொற்பொழிவு, டிசம்பர் 14, 1953

* * *

## மக்களின் நம்பிக்கை அடிப்படையானது

இங்கிலாந்தில் 200-ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கிய மாபெரும் தொழிற் புரட்சி பற்றியும், மனிதவாழ்க்கைக்குரிய நிலைமைகளில் அதனால் ஏற்பட்ட பல பெரிய மாறுதல்களைப் பற்றியும் நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். தொழிற் புரட்சியும், அதைத் தொடர்ந்து நடந்தவற்றையும் போல முந்திய 2,000 ஆண்டுகளில் மனித வாழ்க்கையை மாற்றியமைப்பதற்குரிய ஆற்றல் படைத்த விஷயம் வேறு எதுவுமில்லை. நூற்றுக் கணக்கான உதாரணங்களில் ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்வோம்: போக்குவரத்துச் சாதனங்கள். இவை உலகில் ஆயிரக்கணக்கான வருடங்களாக மாறுதலில்லாமல் ஒரே நிலையிலிருந்து வந்தன. பிறகு தொழிற் புரட்சியுடன் சேர்ந்து ஏதோ ஒன்று வருகின்றது, அதனால் வாழ்க்கையே மாறிவிடுகின்றது. முதலில் நீராவியால் ஓடும் எஞ்சின், புகை வண்டித் தொடர், பிறகு தந்தி, தொலைபேசி, மோட்டார் வாகனம், ஆகாய விமானம், வானொலி, ராடர் முதலியவைகள் வந்துவிட்டன. இவ்வாறு போக்கு வரத்துச் சாதனங்கள் உலகின் போக்கையே மாற்றி விட்டன. இந்த மாறுதல்களை யெல்லாம் இயற்கையாக வந்தவை போல நாம் ஏற்றுக் கொள்கிறோம், ஆயினும் நுணுக்கமான கருவிகள் முதலியவற்றை அமைப்பதிலும், பொருளாதாரத் துறையிலும் மட்டுமின்றி, சமூகத் துறையிலும் சில மாறுதல்களை நாம் எதிர்க்கிறோம். இது மிக வேகமாக மாறுதல் ஏற்படும் காலம் என்பதையும், அரசாங்கங்கள், அல்லது தொழில் தலைவர்கள் முதலிய சிலர் ஒரு நாட்டின் பலதிறப்பட்ட வாழ்க்கையைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளவோ, அதற்கான கட்டளை பிறப்பிக்கவோ கூடிய காலத்தை நாம் தாண்டி வந்துவிட்டோம் என்பதையும் நாம் உணர்ந்து

கொள்ளவேண்டும். நாட்டின் சக்திகளைச் சமநிலைப் படுத்தி ஒருமுகமாகப் பயன்படும்படி செய்ய வேண்டும். ஒரு ஜனநாயக நாட்டில் இத்தகைய சமநிலையை ஏற்படுத்த வேண்டுமானால், நாம் கோடிக் கணக்கான பொது மக்கள் நம்மிடம் நம்பிக்கை கொள்ளும்படி செய்ய வேண்டும். அவர்கள் நம் சமுதாயத்தை இயக்கும் பெரும்பணியில் பங்குடையவர்கள் என்றும், அரசாங்கத்திலும், தொழில்களிலும் பங்காளிகள் என்றும் எண்ணும்படி நாம் உணர்ச்சி உண்டாக்க வேண்டும். இதுதான் ஜனநாயகத்தின் சாரம். ஒவ்வொருவருக்கும் (தேர்தலில்) வாக்களிக்கும் சுதந்தரத்தைக்கொடுத்தலே ஜனநாயகம் என்று ஜனங்கள் எண்ணி யிருப்பது வழக்கம். அது ஒரு பெரும் வளர்ச்சிதான்...... வயது வந்தவர்கள் எல்லோருக்கும் வாக்குரிமை வழங்குவதில், நாம் ஜனங்கள் அரசாங்கங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு உரிமை வழங்குவதுடன், அவைகளை அடக்கியாளவும் உரிமையளிக்கிறோம்......

ஆதலால் நாம் ஜனநாயகத்தை ஏற்று கொள்வதில், அதனால் விளையக்கூடிய விளைவுகளையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். வயது வந்தோர் வாக்குரிமையுடன், அது, பூரண வளர்ச்சியடைந்த, மக்களுக்கு உண்மையான அதிகாரமுள்ள, ஜனநாயகமா யிருக்க வேண்டும். அத்தகைய அரசியல் ஜனநாயகம் அமைந்திருந்தால், நீங்கள் பொருளாதார ஜனநாயகத்தையும் அடைந்தே தீரவேண்டும் என்ற நிலைமை ஏற்படும். அவ்வாறில்லாமல் தப்பித்துக் கொள்ள முடியாது. பூரண அரசியல் ஜனநாயகம் என்பதன் பொருள் பொருளாதார ஜனநாயகமாக வளர்ச்சி யடைதல் என்று பொதுவாகச் சொல்லிவிடலாம்.

—ஷி ஷி

* * *

## திட்டங்கள் இன்றியமையாதவை

நாம் ஒரு ஜனநாயக அமைப்பைப் பெற்றிருக்கிறோம். நாம் அதை மதித்துப் போற்றுகிறோம். நாம் அந்த ஜனநாயக அமைப்புக்கு உட்பட்டு, அதை அநுசரித்து, திட்டம் தயாரிக்கவே தீர்மானிக்கிறோம். யாராவது ஒருவர் வந்து, ஜனநாயக அமைப்பு என்றால் திட்டம் கூடாது என்று சொன்னால், அந்தக் கூற்றை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. திட்டமிடுவதற்கும் நம் அரசியல் அமைப்புக்கும் முரண்பாடு ஏற்பட்டால், நாம் அந்த அமைப்பு எப்படியிருக்க வேண்டும் என்பதுபற்றி ஆராய வேண்டியிருக்கும், ஏனென்றால் நாம் முன்னேறியாக வேண்டும். இந்தக் குழப்பமெல்லாம் ஏன் வருகிறது என்றால், சிலர் ஜனநாயக அமைப்பில் தனிப்பட்டவர்களின் தொழில்களில் அரசாங்கத்தின் தலையீடே இருக்க முடியாது என்று கருதுவதால்தான். இப்படிக் கற்பனை செய்துகொள்ள எவ்விதக் காரணமோ, நியாயமோ கிடையாது. ஜனநாயக அமைப்பில் சர்வாதிகார முறைகளைக் கையாளவோ, ஜனங்கள் விரும்பாததை வலுக்கட்டாயமாக அவர்கள்மீது சுமத்தவோ முடியாது என்பதும் தெரிந்ததே. நாங்கள் அப்படிச் செய்ய மாட்டோம். மக்கள் விரும்புகிற அளவுக்கு அவர்களை அழைத்துச் செல்வோம். அதையும் நமது ஜனநாயக அமைப்புக்கு உட்பட்டுத்தான் செய்வோம்.

தனியார் தொழில்களுக்குத் திட்டமே தேவையில்லை என்று எண்ணுதல் முற்றிலும் தவறு. ஒரு பெரிய தொழிற்சாலையை அமைக்கும்பொழுது, அதன் டைரக்டர்கள் அதில் செய்ய வேண்டிய உற்பத்தியைப் பற்றித் திட்டமிட வேண்டியிருக்கின்றது. 36, அல்லது 37—கோடி மக்களுள்ள இந்தியாவில் தொழில்களை

நிறுவுவதைப் போகிற போக்கில் போகட்டும் என்று விட்டுவிட முடியாது.

—புதுடில்லியில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டி, மே, 31, 1955.

*　　*　　*

## ஏற்றத் தாழ்வுகள் இல்லாத நிலை

சிலர் ஜனநாயகத்தையும் முதலாளித்துவத்தையும் சேர்த்துக் குழப்புகின்றனர். சில முதலாளித்துவ நாடுகளில் ஜனநாயகம் வளர்ச்சியுற்றிருப்பதால், ஜனநாயகம் முதலாளித்துவத்தின் ஒரு பகுதி என்று எண்ணக் கூடாது. அவர்கள் எத்தகைய சோஷலிஸமும் யதேச்சாதிகார முறையில்தான் இருக்குமென்று கற்பனை செய்து கொள்கிறார்கள். கொள்கையளவில் அப்படியில்லை என்று சொல்லிவிடலாம், ஆனால் செயல் முறையில், ஒரு தேசம் எப்படி வளர்ச்சியடைகிறது என்பதைப் பொறுத்து அதைப்பற்றிக் கூற முடியும். ஜனநாயகம் என்பது ஏற்றத் தாழ்வுகளை நீக்குதல் என்றே பொருள்படும். இது தெளிவான விஷயம்.

—புதுடில்லியில் சொற்பொழிவு, ஜனவரி 7, 1956

*　　*　　*

## அரசாங்கம் மக்களுடைய கருத்தின் பிரதிபிம்பம்

ஓர் அரசாங்கம் எல்லாவற்றையும் மக்களைக் கலந்து கொள்ளாமலே முடிவு செய்து கொள்ளலாம் என்று நினைக்கக் கூடாது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஜனநாயக சமுதாயத்தில் அரசாங்கம் என்பது மக்களுடைய அபிப்பிராயத்தின் பிரதிபிம்பம், அது எல்லாக் காலங்களிலும் அவ்வாறு பிரதிபிம்ப

மாகவே இருந்துவர வேண்டும். இல்லாவிட்டால் அது ஆதரவற்றுத் தனியே நிற்க நேரும்.

—புதுடில்லியில் சொற்பொழிவு, ஜூலை 30, 1957.

* * *

## நல்வாழ்வே குறிக்கோள்

ஒரு பேச்சாளர் இப்பொழுது கூறியதுபோல, ஜனநாயகம் ஓர் இலட்சியத்தை அடைவதற்கு வழியே யாகும். நாம் கோரும் இலட்சியம் என்ன? இலட்சியம் தனி மனிதனின் நல்வாழ்க்கை என்று நான் சொல்கிறேன், ஒவ்வொருவரும் இதை ஒப்புக்கொள்ள முடியுமா என்பது எனக்குத் தெரியாது. அது எந்த உருவத்தில் அமையவேண்டும் என்பதைப் பற்றி விவாதம் செய்து முடிவுக்கு வரலாம். ஆனால் நல்வாழ்க்கை என்பதில், மனிதனின் அத்தியாவசியமான பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து மன அமைதி பெறவும், இடைவிடாத கஷ்டங்களிலிருந்து அவன் விடுதலை பெறவும், அவன் தன்னுடைய சிருஷ்டி ஆற்றல்களை அபிவிருத்தி செய்து கொள்ளவும் வசதி இருக்க வேண்டும்.

பார்லிமெண்டரி ஜனநாயகம் சென்ற 150, அல்லது 200 ஆண்டுகளுக்கிடையில் வளர்ந்து வந்த ஒன்று. சமீபக் காலம்வரை இங்கிலாந்தில்கூட வாக்குரிமை குறிப்பிட்ட ஓர் அளவுக்குள்ளேயே இருந்தது. இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் மக்களில் மிகச் சிறுபான்மையோருக்கே வாக்குரிமை இருந்தது. இப்பொழுதுகூட, மிகுந்த முன்னேற்றமுள்ள நாடுகளில், மக்களில் பாதிப் பேர்களாக விளங்கும் பெண்களுக்கு வாக்குரிமை யில்லை. அந்த நாடுகளிலுள்ள

ஜனநாயகம் ஒரு வேளை 'ஆண் ஜனநாயக'மா யிருக்கலாம்.

—*புதுடில்லியில் சொற்பொழிவு, பிப்ரவரி 25, 1956.*

* * *

## மக்களின் பண்பாடும் அவசியம்

பத்தொன்பதாம் நூற்ருண்டில் ஜனநாயகம் குறிப்பிட்ட சில வகுப்பினரிடமிருந்து விரிவாகப் பரவுவதற்குப் பல போராட்டங்கள் அவசியமா யிருந்தன. வாக்குரிமை பரவவே, தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் செல்வம் மிகுந்த மேல் வகுப்பினராக இருப்பது நின்று போயிற்று. சுமாராகச் சென்ற முப்பது ஆண்டுகளுக்கிடையில்தான் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்பது பல நாடுகளில் ஏற்பட்டது. சகலருக்கும் வாக்குரிமை கிடைத்ததனுல் பிரசினைகளைத் தீர்ப்பதில் ஏற்பட்ட பயன்களைப் பற்றிப் பரிசீலனை செய்ய இருபது, முப்பது வருடக் காலம் போதாது. பிரசினைகளைத் தீர்ப்பதற்கு நல்ல அரசாங்க அமைப்பு மட்டுமின்றி, மக்களின் பண்பாடும், கல்வியும், ஒழுக்கமும் அவசியமானவை.

— ஷி ஷி

* * *

## பொருளாதார ஜனநாயகம்

முற்காலத்தில் ஜனநாயகம் என்ருல், ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு என்ற முறையில் அரசியல் ஜனநாயகம் என்றே பொருள் கொள்ளப்பட்டது. வாழ்க்கையில் நலிந்து விழுந்து பட்டினி கிடப்பவனுக்கு வாக்குரிமை மட்டும் பெரிய நன்மையாகிவிட முடியாது. அத்தகைய மனிதன் வாக்குரிமையைவிட

உணவையே அதிகமாய் விரும்புவான். ஆகவே அரசியல் ஜனநாயகம், மேற்கொண்டு படிப்படியாகப் பொருளாதார ஜனநாயகத்தைப் பெறுவதற்கே அதிகமாய்ப் பயன்படும். வாழ்க்கைக்கு வேண்டிய நல்ல விஷயங்கள் நாளுக்கு நாள் அதிக மக்களுக்குக் கிடைக்க வேண்டும், மிகவும் மோசமான ஏற்றத் தாழ்வுகளும் நீக்கப்பட வேண்டும். அரசியல் ஜனநாயகமுள்ள நாடுகளில் அந்தக் காரியம் நடந்து வருகின்றது என்பதில் சந்தேகமில்லை.

— ஷி ஷி

* * *

## மக்கள் தாமே தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளல்

நாம் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். என் சம்பந்தப்பட்ட மட்டில் நான் அதில் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்; ஏனெனில் அது இலட்சியங்களை அடையச் சரியான மார்க்கம் என்று நான் கருதுகிறேன், மேலும் அது அமைதியான வழியுமாகும். இரண்டாவதாக, வேறுவித அரசாங்க அமைப்புக்கள் தனி மனிதன்மீது செலுத்தும் பலவந்தமான கட்டுப்பாடுகளை அது நீக்குகின்றது. அதிகாரத்தைக் கொண்டு ஆண்டு அடக்குவதைத் தனி மனிதன் தானே தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் சுயமான கட்டுப்பாடாக அது மாற்றுகின்றது. சுயமான கட்டுப்பாடு என்பது, சில முடிவுகளை ஒப்புக் கொள்ளாத சிறுபான்மைக் கட்சிக்காரர்களும் முரண்பட்டு நிற்பதைவிட அவைகளை ஏற்றுக் கொள்வதே மேல் என்று எண்ணும்படி செய்யும். முதலில் அவைகளை ஏற்றுக்கொண்டு, பிறகு, அவசியமானால், அவைகளை அமைதியான முறைகளில் மாற்றிக் கொள்ளலாம் என்ற மனப்பான்மையை அது உண்டாக்கும். ஆகவே ஜனநாயகம்

என்பது அமைதியான முறைகளில் பிரசினைகளைத் தீர்த்துக் கொள்ளும் ஒரு முயற்சி என்று நான் பொருள் கொள்கிறேன். அது அமைதியா யில்லாவிட்டால், நான் அதை ஜனநாயகம் என்று ஒப்புக்கொள்ள மாட்டேன். இரண்டாவது காரணத்தை (வெளிக் கட்டுப்பாடுகள் நீக்கப் படுவதை) மேலும் விரிவாக்கிச் சொல்வதானால், ஜனநாயகம் தனி மனிதன் வளர்ச்சி யடைவதற்குரிய வாய்ப்பை அளிக்கின்றது எனலாம். அந்த வாய்ப்பை ஒவ்வொரு மனிதனும் தன் இஷ்டம் போல் திரிவது என்ற அராஜகமாகக் கொள்ள முடியாது. சமூக ஸ்தாபனம் எதுவும் தான் உலைந்து விழுந்து விடாமல் நிற்பதற்குச் சில ஒழுங்கு முறைகளைப் பெற்றிருக்க வேண்டும். அம்முறைகளை வெளியிலிருந்தும் விதிக்கலாம், மக்கள் சுயமாகத் தாமாகவும் விதித்துக் கொள்ளலாம். வெளியிலிருந்து திணிப்பது ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆள்வதாக இருக்கலாம், அல்லது யதேச்சாதிகார ஆட்சி முறையாகவும் இருக்கலாம். முறையான ஜனநாயகத்தில் ஒழுங்கு முறையை மக்கள் தாமாகவே அமைத்துக் கொள்வர். ஒழுங்கு முறை இல்லையென்றால், அங்கே ஜனநாயகமும் இல்லை.

—ஷீ ஷீ

* * *

## எதிர்க்கும் பழக்கம் எளிதில் போகாது

இந்தியாவில் நாம் சில அநுகூலங்களையும் பெற்றிருக்கிறோம், சில பிரதிகூலங்களையும் பெற்றிருக்கிறோம். சென்ற முப்பது, நாற்பது வருடங்களில் மிகவும் புது மாதிரியான இயக்கம் ஒன்றை நடத்தி வந்தோம். பெரும்பாலும் அது அமைதியான இயக்கமா யிருந்த போதிலும், அது புரட்சிகரமான இயக்கமேயாகும்.

புரட்சிகரமான கொள்கையும், அமைதியான முறை களும் சேர்ந்து ஒரு தலைமுறைக் காலத்தில் மக்களின் பண்பாட்டையே மாற்றியமைத்துள்ளன. சுதந்தரம் தொப்பென்று நம் மடியிலே வந்து விழுந்து விட வில்லை. அதற்காக நாம் போராடினோம்; அதற்கேற்ற முறையில் நாம் நமது பண்பை அமைத்துக் கொண் டோம். அதற்காக நாம் பெரும் துன்பத்தையும் சிரமத் தையும் தாங்கவேண்டி யிருந்தது. ஆனால் நான் அறிந்த மட்டில், வேறு எந்த நாட்டையும்விட எளி தான முறையில் இங்கு (ஆட்சி) மாற்றம் ஏற்பட்டது. ஏனெனில் நாம் அமைதியான முறையிலேயே போரா டப் பயிற்சி பெற்றிருந்தோம். போராட்டமும், அதனால் விளையும் துவேஷமும் பின்னால் நம்மைத் தொடர்ந்து வரவில்லை, மாறிய நிலைமைகளுக்குத் தக்கபடி நாம் புற வாழ்க்கையிலும், மனப்பான்மையிலும் மாறிக் கொள்ள முடிந்தது. அதே சமயத்தில், நாம் (ஆட்சி முறையை) எதிர்த்தே பழக்கப்பட்டுப் போயிருந்த தால், நம் மக்கள் எதையும் எதிர்த்தே சிந்தித்தும், செயல் புரிந்தும் வந்த வழக்கத்தை மாற்றுவது எளிதா யிருக்கவில்லை. எல்லா நாடுகளிலும், முக்கிய மாகப் பெரிய புரட்சிகள் நடந்த நாடுகளில், நிலைமை இப்படித்தான் இருந்துள்ளது. சில சமயங்களில், புரட்சி செய்தவர்களே அதற்குப் பலியாகி யிருக்கிறார் கள். எதிர்ப் புரட்சிகளும் நடந்திருக்கின்றன.

— ஷை ஷை.

*   *   *

## மக்களை வைத்தே ஸ்தாபனங்கள்

எல்லாவற்றையும் சேர்த்துச் சொன்னால், பார்லி மெண்டரி ஸ்தாபனங்கள் உட்பட, நம் ஸ்தாபனங்கள் எல்லாம் நாட்டு மக்களின் பண்பு, சிந்தனை, நோக்கங்

கள் ஆகியவற்றிலிருந்தே உருவானவை. மக்களின் பண்போடும், சிந்தனையோடும் எவ்வளவு தூரம் ஒத்திருக்கின்றனவோ அவ்வளவு தூரத்திற்கே இந்த ஸ்தாபனங்கள் வலிமை பெற்று, நீடித்து நிற்க முடியும். இல்லாவிட்டால் அவை சிதறி வீழ்ந்து விடும்.

—டி ஷி

* * *

## திறமை, ஆர்வம் முதலிய பண்புகள் தேவை

பார்லிமெண்டரி ஜனநாயகத்திற்குப் பல குணங்கள் தேவை. முதலில் திறமை வேண்டும். வேலை செய்வதற்கு ஆர்வம் வேண்டும். ஒத்துழைப்பு வேண்டும். தன்னடக்கமும், தானே தனக்கு விதித்துக் கொள்ளும் ஒழுங்கு முறையும் வேண்டும்.

—லோக சபையில் சொற்பொழிவு, மார்ச் 28, 1957.

* * *

## வேகமான மாறுதல்கள் தேவை

மாறுதல் ஏற்படத்தான் வேண்டும்—அந்நிய ஆதிக்கியத்தினால் வேகமான வளர்ச்சிக்குரிய அம்சங்கள் கட்டுப்படுத்தப் பெற்று, அடக்கப்பெற்று, ஒடுக்கப் பெற்றுப் போனதால், இந்தியா போன்ற ஒரு நாட்டில் நெடுங்காலமாக மாறுதலே யில்லாமற் போய் விட்டது; அத்துடன், நாமாக அமைத்துக் கொண்ட பள்ளங்களில் விழுந்து, நம் மனங்களிலும், சமுதாய அமைப்பிலும், பிறவற்றிலும் நெடுங்காலமாக மாறுதலே யில்லாதபடி செய்து விட்டோம்—இத்தகைய நாட்டில் மாறுதல் ஏற்படத்தான் வேண்டும். வெளியார் ஆட்சியால் ஏற்பட்ட தடைகள், சிரமங்களிலிருந்

தும் நாம் நம் ஆன்மாக்களை மீட்டுக் கொள்வதுடன். நாமாக வீழ்ந்துள்ள பள்ளங்களிலிருந்தும் மீட்சி பெற வேண்டும். மீண்டும் முன்னேற்றமடைவதற்கு நாம் மிக வேகமாக மாறுதல்களைச் செய்ய வேண்டியிருக்கின்றது.

—ஷி ஷி

* * *

## பழமையின் தொடர்ச்சியும் தேவை

ஆனால், மாறுதல் அவசியமாயிருப்பது போல, மற்றொரு விஷயமும் முக்கியமாகும்—ஓரளவு தொடர்ச்சியும் அவசியம். மாறுதலும், தொடர்ச்சியும் எப்பொழுதும் சமநிலையில் இருக்க வேண்டும். ஒருநாள்கூட மற்றொரு நாளைப்போல் இருப்பதில்லை. ஒவ்வொரு நாளும் நாம் வளர்ந்து கொண்டிருக்கிறோம். எனினும் நம்மிடம் ஒரு தொடர்ச்சி இருந்து கொண்டேயிருக்கின்றது, ஒரு தேசிய சமூகத்தின் வாழ்க்கையில் இடையறாத தொடர்ச்சி இருந்து வருகின்றது. மாறுதலும் தொடர்பும் சமநிலையில் நிகழ்ந்து வரும் முறையைக் கொண்டுதான் ஒரு தேசம் உறுதியான அடிப்படைகளின்மீது வளர்ச்சி பெற முடியும். தொடர்ச்சி மட்டும் இருந்து, மாறுதல் இல்லாவிட்டால், தேக்கமும் அழிவும் ஏற்படும். தொடர்ச்சி இல்லாமல், மாறுதல் மட்டும் இருந்தால், அது வேரோடு பறிக்கப்பட்டது போலாகும்; மக்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த இடங்களிலுள்ள தொடர்புகளை அறுத்துக் கொண்டால், அவர்களோ, நாடோ நீண்ட காலம் வாழ்ந்திருக்க முடியாது.

—ஷி ஷி

* * *

## அமைதியின் அவசியம்

அமைதியான செயல் முறைகளும், செய்யப்பெற்ற முடிவுகளை அமைதியாக ஏற்றுக் கொள்ளலும், (அவசியமானால்,) அமைதியான முறைகளிலேயே அந்த முடிவுகளை மாற்ற முயற்சித்தலும் பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் இயற்கையாகவே அடங்கியுள்ளன. இல்லாவிட்டால் அது நிச்சமாகப் பார்லிமெண்டரி ஜனநாயகமாகாது. அமைதியை ஏற்படுத்துவதில் மிகுந்த நம்பிக்கை கொண்டு, அதைப்பற்றிப் பேசி வரும் நாம் அமைதியையும், ஜனநாயகத்தையும் நாடுவதும் அமைதியான முறைகளிலேயே நாடவேண்டும், வேறு வழிகளில் அல்ல என்பது முக்கியமான விஷயம்.

—ஷை ஷை

* * *

## மக்களிடம் கலந்து பேசுதல்

ஒரு பார்லிமெண்டோ, அரசாங்கமோ, (ஒவ்வொரு விஷயத்திற்கும்) மக்களைக் கலந்து கொண்டிராமல், தனக்குப் பொருத்தமானது என்று தோன்றும் காரியங்களைச் செய்து வருகின்றது. ஜனநாயகம் பாதுகாக்கப் பெறுகின்றது என்றும், மக்களிடம் கலந்து கொள்ளப்படுகின்றது என்றும், அவர்களுடைய அபிப்பிராயங்கள் மதிக்கப்பெறுகின்றன என்றும் எவ்வளவு காலம் மக்களால் எண்ணப்படுகின்றதோ, அதுவரை எல்லாம் நன்மையாகத்தான் இருக்கும். உண்மையிலேயே அவர்களைக் கலந்து கொள்கிறேமா இல்லையா என்பது வேறு விஷயம். அவர்கள் தங்கள்மீது (தங்கள் சம்மதம் இல்லாமலே) விஷயங்கள் திணிக்கப் பெறுகின்றன என்று எண்ணத் தொடங்கிவிட்டால்தான், முரண்பாடு ஏற்படுகின்றது.

—புதுடில்லியில் சொற்பொழிவு, ஏப்ரல் 6, 1957.

* * *

## செயலைப் போலவே செய்யும் முறையும் முக்கியம்

வாழ்க்கையில் வேறு பல விஷயங்களில் இருப்பது போலவே, ஆட்சி செய்வதிலும், ஒருவர் என்ன செய்கிருர் என்பது மட்டுமல்லாமல், எப்படிச் செய்கிருர் என்பதும் முக்கியமாகும். ஜனநாயகத்தைப் போன்ற ஓர் அமைப்பில், பெருங் கூட்டம் கூட்டமான மக்களுடன் பழகுவதில் இது மிகவும் முக்கியமாகக் கருதத் தக்கது.

—டீ டீ.

*　　*　　*

## எல்லாவற்றையும் தகர்த்தல் ஏற்ற வழியன்று

ஒரு மாதம் விட்டு மறு மாதம் ஏதாவது பலாத்காரமான புரட்சி நடக்கும் நாட்டைப் போலவா நாம் ஆகப் போகிறோம்? அது ஜனநாயகமாகாது, ஜனநாயகத்திற்கு நேர் மாருனது. அது ஒருபுறமிருக்க, திட்டமிட்டு முறையாக முன்னேற்றமடைவதற்கும் அது முற்றுப்புள்ளியாகும். நிதானமான ஜனநாயக முறைகளில், அல்லது பார்லிமெண்டரி வழிகளில் எதையும் வெற்றிபெறச் செய்ய முடியாதென்றும், அமைதியான வழிகளில் எதையும் சாதிக்க முடியாதென்றும், படிப்படியாக முன்னேறி எந்தக் காரியத்தையும் முடிக்க முடியாதென்றும், எல்லாவற்றையும் தகர்த்தெறிந்துவிட்டு, அடியிலிருந்தே அவற்றைப் புதியனவாக அமைக்க வேண்டுமென்றும் சிலர் எண்ணலாம். அப்படியும் சிலர் இருக்கிருர்கள் என்றே நம்புகிறேன். அவர்களுடைய மனப்பான்மை எனக்குப் புரிகின்றது. ஆனால் அத்தகைய மனப்பான்மையை நான் ஆமோதிக்கவில்லை.

—**23-2-56**-ல் லோகசபையில் ஆற்றிய சொற்பொழிவு.

*　　*　　*

## பொருளாதார முன்னேற்றமே உரைகள்

நான் முன்பு (22 ஆண்டுகளுக்கு முன்பு) எழுதியதைத் திரும்ப இங்கே சொல்லுகிறேன் : ஜனநாயகம் பொருளாதார ஜனநாயகமாக மாருமல் வெறும் அரசியல் ஜனநாயகமாக மட்டும் இருந்தால், அது பூரணமான ஜனநாயகமாகாது. பல ஜனங்கள் அரசியல் ஜனநாயகம் என்ற உடைக்குள் மறைந்து கொண்டு மற்ற முன்னேற்றங்களை யெல்லாம் தடுக்க விரும்புகின்றனர். அரசியல் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசும் பொழுது, வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற முறை மேலை நாடுகளிலேகூடச் சமீப காலத்திலேதான் ஏற்பட்டது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அரசியல் ஜனநாயகம் செல்வம் மிகுந்த குறிப்பிட்ட இனத்தார்களுக்கே அநுகூலமானது என்ற வாதம் சிலருக்கு மட்டுமே வாக்குரிமை ஏற்பட்டிருந்த காலத்திற்குப் பொருத்தமா யிருந்தது. ஒரு நாட்டில் சர்வ ஜன வாக்குரிமை இருக்கும் பொழுது, அது அவ்வளவு பொருத்தமான வாதமன்று.

நாம் உண்மையிலே எதிர்நோக்க வேண்டிய பிரசினை பொருளாதாரத் துறையில் நாம் செய்ய நினைக்கும்மாறுதல்களை, ஜனநாயகமுறையில், அமைதியாகச் சாதிக்க முடியுமா, இல்லையா என்பதுதான். அரசியலில் ஜனநாயகம் முறையாக அமலுக்கு வரவில்லையானல், பலாத்காரம் அல்லது புரட்சி மூலமான கட்டாயத்தின் பேரிலேயே மாறுதல் செய்ய முடியும். ஆனல் அமைதியான முறைக்கு இடமிருக்கும் பொழுது, வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை உள்ள இடத்தில், பலாத்காரத்தின் மூலம் மாறுதலை ஏற்படுத்தல் என்பது நகைப்புக்கிடமாகும், முற்றிலும் தவருகும். சிறுபான்மையாயுள்ள ஒரு கூட்டத்தினர்

தங்கள் கருத்தைப் பலாத்காரத்தின் மூலம் பெரும்பான்மையோர் மீது திணிக்கின்றனர் என்றுதான் நான் அதைக் கருதுவேன்; அவர்கள் காரண காரிய விளக்கத்துடன் விவாதம் செய்து, பெரும்பான்மையோருடைய அபிப்பிராயங்களை மாற்ற முடியாமற் போவதால்தான், அந்த முறையைக் கையாள விரும்புகின்றனர். அது நிச்சயமாக ஜனநாயகமாகாது, அது அரசியல் ஜனநாயகமும் இல்லை, பொருளாதார ஜனநாயகமும் இல்லை, வேறு எந்த ஜனநாயகமும் இல்லை. ஆகவே, நமக்கு முன்னுலுள்ள பிரசினை ஜனநாயகத்தைக் காத்து வைத்துக் கொள்வது—இப்பொழுது அரசியல் ஜனநாயகம் நமக்கு இருக்கிறது—அதைப் பொருளாதாரத் துறைக்கும் நாம் விஸ்தரிக்க வேண்டும்.

—*25-2-55ல் லோகசபையில் நிகழ்த்திய சொற்பொழிவு.*

* * *

## தலைசிறந்த முறை

மனிதர்களை ஆள்வதற்குப் பயன்படக்கூடிய பலவிதமான வழிகளில் ஜனநாயகமே தலைசிறந்தது.*

* * *

## வறுமையில் ஜனநாயகம் வாடிவிடும்

எந்த ஜனநாயகமும் பற்றுக்குறை, வறுமை, ஏற்றத்தாழ்வுகளுக்கு இடையில் நெடுநாள் நிலைத்திருக்க முடியாது.

—*நியூயார்க், கொலம்பியா பல்கலைக்கழகச் சொற்பொழிவு, 17-10-49.*

* * *

## மக்களின் ஆதரவு

முடிவாக ஆராய்ந்து பார்த்தால், ஒரு ஜனநாயக அரசாங்கம் மக்களின் நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் கொண்டே செயற்படுகின்றது. அது மக்களை எதிர்த்துக்கொண்டு நெடுந்தூரம் செல்ல முடியாது. பரதேசாதிகார அரசாங்கத்திற்குக்கூட ஓரளவு (மக்களின்) நல்லெண்ணம் தேவை. ஓர் அரசாங்கம் தான் இராணுவம் அல்லது போலீஸ் படையின் வல்லமையைக் கொண்டு ஆட்சி புரிகின்றது. பெரும்பான்மையான மக்களின் கருத்தை அநுசரித்து அது நடந்து வருமானால், அது ஜனநாயக அரசுதான்; அதனால் சிறுபான்மையோரே அது தங்களை அடக்கியாள்வதாக விசனப்பட நேரும்.

—சிகாகோ பல்கலைக் கழகச் சொற்பொழிவு, 27-10-49.

*　　　*　　　*

## அரசாங்கத்தின் வலிமையும் ஆன்மசக்தியின் வலிமையும்

அரசாங்கத்தின் வல்லமைகளைக் கண்டு ஒரு தனி மனிதன் அஞ்சி அடங்க மறுத்தால், அதைப்பற்றி அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்? அது அவனைச் சிறையில் அடைக்கலாம். அவன் அதற்கு அஞ்சவில்லை; அதை வரவேற்கிறான். அவன் சுட்டுத் தள்ளப்படுவதாக வைத்துக் கொள்வோம். அவன் சாவுக்கும் அஞ்சவில்லை. அந்த நிலையில் அரசாங்கம் ஒரு நெருக்கடியான நிலைமையில் சிக்கிக் கொள்கின்றது; அதாவது, மிருந்த வல்லமை பெற்றிருந்த போதிலும், அரசாங்கம் ஒரு தனி மனிதனை உண்மையில் வெல்ல முடிவதில்லை. அது அவனை வதைத்து விடலாம், ஆனால் அவனை வெல்வதில்லை. இது அரசாங்கத்திற்குத்

தோல்வியாகும். நான் மேலே கூறிய ஆதரவு, ஒத்துழைப்பு, இராணுவம், போலீஸ் படை ஆகிய எல்லாவற்றையும் பெற்று விளங்கிய போதிலும், புதிதான ஒரு சக்தியை—மனிதனின் ஆன்ம சக்தியை-எதிர்த்து நிற்க நேருகின்றது, ஆன்ம சக்தி அந்த வல்லமைகளைக் கண்டு அஞ்ச மறுக்கின்றது.

—ஷை ஷை.

* * *

## சுயமான கட்டுப்பாடு

ஜனநாயகத்தைப் பற்றி நீங்கள் நூற்றுக் கணக்கான முறைகளில் வியாக்கியானம் செய்ய முடியும், ஆனால் சமுதாயம் தானே தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்தல் என்பது அந்த வியாக்கியானங்களில் ஒன்றாக இருக்கும் என்பது நிச்சயம்.

*—புதுடில்லியில் அகில இந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள் மகாநாட்டுச் சொற்பொழிவு, 17-9-52.*

* * *

## பெரும்பான்மையோர் கருத்தே சரியானதா?

ஜனநாயகத்தைப் பற்றி நாம் மிக அதிகமாகப் பேசி வருகிறோம், ஆனால் அது இப்போது அமைந்துள்ள உருவமும் தோற்றமும் புதிதான கொள்கையில் அமைந்தவை. பழைய ஜனநாயக முறை பல வழிகளில் (பரவலா யிராமல்) சுருக்கமான அளவிலேயே அமைந்திருந்தது. இப்பொழுது நாம் வயது வந்தவர் அனைவருக்கும் வாக்குரிமையையும், உலகிலேயே மிக அதிகமான வாக்காளர் தொகையையும் பெற்றிருக்கிறோம்.

ஜனநாயகத்தில் எனக்கு அன்பும் மதிப்பும் இருந்த போதிலும், பெரும்பாலான மக்கள் கூறுவதே

எப்பொழுதும் சரியானது என்ற கூற்றை நான் ஒப்புக் கொள்வதற்கில்லை.

—பார்லிமெண்டுச் சொற்பொழிவு, **18-2-53.**

*　　　*　　　*

## தனி மனிதரின் ஆற்றல்களை வளர்ப்பது ஜனநாயகம்

நாம் ஜனநாயக முறையை உறுதியாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஏன் அதை ஏற்றுக் கொண்டிருக் கிறோம்? அதற்குப் பல காரணங்கள் உண்டு. மனிதர் கள் வளர்ச்சியடைய அது உதவுகின்றது, நாம் நமது அரசியல் நிர்ணயத் திட்டத்தில் குறித்துள்ளபடி தனிப் பட்டவரின் சுதந்தரத்தை நாம் முக்கியமானதாகக் கருதுகிறோம், பொதுவாக மனிதனுக்குள்ள சிருஷ்டி சக்தியும், வீரத்துடன் ஆராய்ந்து பார்க்கும் ஆற்ற லும் வளரவேண்டும் என்பதில் நாம் மிகவும் ஆவல் கொண்டிருக்கிறோம் என்பவையெல்லாம் அக்காரணங் களில் சில. உலகில் (அவ்வப்பொழுது) பயன்படக் கூடிய பொருள்களை மட்டும் நாம் உற்பத்தி செய்தால் போதாது. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததா யிருக்க வேண்டும் என்பதை நாம் விரும்பத்தான் செய் கிறோம், ஆனால் மனிதனின் சிருஷ்டி சக்தியையும், சிருஷ்டிக்கும் ஆர்வத்தையும், துணிவுடன் ஆராய்ச்சி செய்யும் ஆர்வத்தையும் அது பாழாக்கிவிடக் கூடாது. ஜனநாயகம் என்பது வெறும் தேர்தல் மட்டுமில்லை.

*　　　*　　　*

—இந்தூரில் அ. இ. கா. கமிட்டியில் சொற்பொழிவு, **4-1-57.**

## ஜனநாயகப் பாதுகாப்பு

இந்த நாட்டில் நாம் ஜனநாயகத்தை ஆதரிக் கிறோம், பூரணமான ஆதிபத்திய உரிமையுள்ள சுதந்

தர இந்தியாவே நமது இலட்சியம். உண்மையான ஜனநாயகத்துக்கு எதிராக உள்ள எதையும் நாம் எதிர்த்தாக வேண்டும்; ஜனநாயகம் என்பதில் அரசியல் ஜனநாயகத்துடன் பொருளாதார ஜனநாயகமும் அடங்கியுள்ளது. இங்கே வேறு எந்தக் கொள்கையையும் புகுத்துவதையோ, நடைமுறைக்குக் கொண்டு வருவதையோ நாம் எதிர்ப்போம்.

*—அரசியல் நிர்ணய சபையில் சொற்பொழிவு, 8-3-48.*

* * *

## போர்கள் ஜனநாயகத்தைத் தளர்த்திவிட்டன

இந்தியாவை நாம் ஜனநாயக முறையிலேயே நிர்மாணிக்க வேண்டியிருக்கிறது. நாம் அவ்வாறு செய்யவே தீர்மானித்திருக்கிறோம்; ஏனெனில் ஜனநாயகமே சமுதாயத்திற்கு மானிடப் பண்பின் தலைசிறந்த பயன்களை அளிக்க முடியும். ஆனால் யுத்தம் ஜனநாயகம் போற்றும் அந்தப் பயன்களையே அழித்து விட்டது. இன்றைய உலகில் ஜனநாயகம் போரில் அடிபட்டு வீழ்ந்ததாக உள்ளது. அது மேற்கொண்டு சரியாக வேலை செய்வதாகத் தெரியவில்லை. சென்ற இரண்டு உலக யுத்தங்களினால் ஏற்பட்ட விபரீதம் இது, இன்னும் ஒரு யுத்தம் ஏற்படுமானால், இதைவிட மோசமான நிலை ஏற்படக்கூடும்.

*—பார்லிமெண்டுச் சொற்பொழிவு, 18-2-53.*

* * *

## சகிப்புத்தன்மை

ஜனநாயகம் என்றால் சகிப்புத் தன்மை என்று பொருள், நம் கருத்தை ஒப்புக்கொள்பவர்களிடம் மட்டுமின்றி, ஒப்புக் கொள்ளாதவர்களிடமும் அதைக் கைக்

கொள்ள வேண்டும். சுதந்தரம் வந்த பிறகு நாம் நடந்துகொள்ளும் முறைகளும் அந்தச் சுதந்தரத்திற்கு ஒத்தபடி மாறவேண்டும்.

—*அரசியல் நிர்ணயசபைச் சொற்பொழிவு, 8-3-48.*

* * *

## தனி மனிதனின் வளர்ச்சி

அரசியல் துறை, அல்லது பொருளாதாரத் துறை, அல்லது வேறு எந்தத் துறையைப் பார்த்தாலும், சொற்ப மாறுபாடுள்ள இரண்டு போக்குகளை நீங்கள் காண்பீர்கள். அதிகாரங்களையெல்லாம் மத்தியில் குவியலாகச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பது ஒரு போக்கு. அரசாங்கமானாலும் சரி, வேறு எதுவானாலும் சரி, நவீன உலகில் மத்தியில் அதிகாரங்கள் குவிவதைத் தவிர்க்க முடியாது. அது மேலான பயன்களைக் கொடுக்கலாம், நிர்வாகத் திறமையும் அதிகரிக்கச் செய்யலாம், இவை போன்ற வேறு நன்மைகளையும் விளைவிக்கலாம்; ஆனாலும் இந்தக் குவியல் முறையில் ஒரு நிலை வரும், அதிலிருந்து திறமை குறையத் தொடங்குமேயன்றிக் கூடாது. வேறொரு போக்கு என்னவென்றால், அது தனி மனிதனின் வளர்ச்சி அல்லது மானிட சுதந்தரமாகும். அதிகாரங்கள் குவியல் முறையில் சேரச் சேர, அந்த அளவுக்குத் தனி நபரின் சுதந்தரம் குறைந்து கொண்டே வரும், இத்தனைக்கும் மொத்தத்தில் நல்ல பயன்களே பெருகியிருக்கும். பரவல் முறையினால் தனி மனிதன் அதிக வளர்ச்சியடைய வசதிகளிருப்பதால், சில ஜனங்கள் அதை அதிகமாக விரும்புகின்றனர். மற்றொரு புறம் பார்த்தால், நமக்கு முன்னேற்றம் வேண்டுமானால், தற்கால வாழ்க்கையில் மிகவும் முக்கியமான சில விஷயங்களை நாம் பரவல் முறையில் பிரிக்க முடியாது. இந்த

நிலையில், இவைகளை யெல்லாம் சமநிலைப்படுத்திக் கொண்டு போக வேண்டும். ஆனால் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம், தனி மனிதனின் வளர்ச்சியையோ, ஒரு கூட்டத்தின் வளர்ச்சியையோ, வெளியே யிருந்து திணிக்க முடியாது என்பதே. மனிதன் ஒரு பூவைப் போலவோ, செடியைப் போலவோ வளர்கிறன், அப்படித்தான் வளர வேண்டும். அதை மேலே தூக்கிவிட முடியாது; வேண்டுமானல் அதற்குத் தண்ணீர் ஊற்றலாம், அதன் வளர்ச்சிக்கு உதவி செய்யலாம்; அதற்கு நல்ல நிலமளிக்கலாம்; அதைவெளியே காற்றுப் படும்படியோ, வெய்யில் படும்படியோ வைக்கலாம். ஆனல் அது தானகவே வளர வேண்டி யிருக்கிறது; பலாத்காரமாக அதை நாம் வளரச் செய்ய முடியாது. நம் மக்களில் பலர் நாம் மேலேயிருந்துகொண்டு போடுகிற உத்தரவினுல் வளர்ச்சியை உண்டாக்க முடியும் என்று கருதுகின்றனர், அது இயலாத காரியம்.

—*புதுடில்லியில் பாசனம், மின்சார மத்திய போர்டுக் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு, 17-11-52.*

* * *

# சோஷலிஸம்

# 9

# சோஷலிஸம்

## சோஷலிஸத்திற்காகவே சுதந்தரம்

அரசியல் சுதந்தரம், விடுதலை, அவசியம் என்பதில் சந்தேகமில்லை, அவை சரியான திசையில் செல்வதற்குரிய வழிகள்தாம்; ஆனால் சமுதாய சுதந்தரமும், சோஷலிஸ்ட் முறையில் அமைந்த சமுதாயமும், அரசாங்கமும் இல்லாமல், தேசமோ, தனி மனிதனோ அதிக வளர்ச்சியடைய முடியாது.*

* * *

## உலகம் முழுதும் சோஷலிஸம் பரவியுள்ளது

நான் ஒரு சோஷலிஸ்டு என்பதையும், குடியரசுக் கொள்கையுடையவன் என்பதையும் வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறேன்.

உலகம் முழுதிலும் மனித சமுதாய அமைப்பில் சோஷலிஸத் தத்துவம் படிப்படியாக ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்; அதை எவ்வளவு வேகத்தில் அடையலாம் என்பதிலும், முன்னேறிச் செல்வதற்குரிய வழி முறைகள் என்ன என்பதிலுமே கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. இந்தியா தனது வறுமையையும், ஏற்றத் தாழ்வுகளையும் ஒழிக்க விரும்பினால், அந்த வழியிலே தான் செல்லவேண்டி யிருக்கும். ஆனால் அது அந்த லட்சியத்தைத் தன் மேதைக்குரிய முறையில் அமைத்

துக் கொண்டு, தன் சொந்த வழிகளையும் வகுத்துக் கொள்ளும்.

நமது பொருளாதாரத் திட்டம் மானிட அமிசத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும், பணத்திற்காக மனிதனைப் பலியிட்டுவிடக் கூடாது. எந்தத் தொழிலாவது தன் உழைப்பாளர்களைப் பட்டினி போடாமல் நடக்க முடியாது என்று இருந்தால், அந்தத் தொழிலை நிறுத்திவிட வேண்டும். நிலத்தில் பாடுபடுபவர்களுக்குப் போதிய உணவு கிடைக்கவில்லை என்றால், அவர்கள் தங்களுக்குரிய முழு அளவு ஊதியத்தைப் பெற முடியாமல் பறிக்கும் இடைத் தரகர்களை நீக்கவேண்டும்.

—*1929, இந்திய தேசிய காங்கிரஸின் தலைமையுரை.*

* * *

## உணர்ச்சியுடன் ஆராய்ச்சியும் வேண்டும்

இந்தியாவில் சோஷலிஸத் துறையில் நான் முன்னணியில் நிற்கவில்லை. நான் பின்னணியில் இருந்தேன் என்று கூடச் சொல்லலாம், நான் வேதனையுடன், படிப்படியாக முன்னேறி வந்தேன், எனக்கு முன்னால் பலர் முன்னேறிச் சென்று தங்கள் வழியெங்கும் புகழொளியைப் பரப்பி யிருந்தனர்......1927, டிசம்பர் மீ நான் ஐரோப்பாவிலிருந்து திரும்பி வருகையில், இந்தியாவில் தெளிவில்லாத ஒரு வகையான சோஷலிஸம் பற்றிய செய்தி பரவியிருந்தது, அதற்கும் முன்பாகத் தனிப்பட்ட சோஷலிஸ்டுகள் பலர் இருந்தனர்......

சோஷலிஸம் வெறும் தருக்க வாதத்தில் மட்டும் முடிவு செய்யக் கூடிய விஷய மன்று. வாழ்க்கையையும், அது சம்பந்தமான பிரசினைகளையும் பற்றி நாம் மனப்பூர்வமாகக் கொள்ளும் கருத்தையும் கொண்டே அதைப்பற்றி முடிவு செய்யவேண்டி யிருக்கும்.

ஒரே ஒரு சாத்தியமான முடிவுக்குத்தான் நாம் வந்து சேருகிறோம்—முதலில் நம் தேசிய எல்லைகளுக்குள் சோஷலிஸ அமைப்பை நிறுவி, நாளடைவில் உலகம் முழுதிலும் அதே அமைப்பை நிறுவி, பொது மக்களின் நன்மைக்கான முறையில் உற்பத்தியையும், விநியோகத்தையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள வேண்டும்.

அரசியல், சமூக ஸ்தாபனங்கள் அத்தகைய மாறுதலுக்குத் தடையாக நின்றால், அவைகளை அகற்றிவிட வேண்டும்......

சோஷலிஸம் உணர்ச்சியைத் தூண்டிக் கவரக் கூடிய ஆற்றலுள்ளது என்பது மட்டும் போதாது. இந்தக் கவர்ச்சியுடன், அறிவுக்குப் பொருத்தமான ஆராய்ச்சியும், பிரத்தியட்ச நிலைமைகளை அடிப்படையாகக் கொண்ட பரிசீலனையும், விவாதமும், நன்மை தின்மைகளைப்பற்றிய விவரமான சோதனையும் அவசியமாகும்.

இந்தியாவில் சோஷலிஸத்தை நிறுவ வேண்டும் என்றால், அது இந்திய நிலைமைகளுக்கு ஏற்ற முறையிலேயே வளர முடியும், இந்த நிலைமைகளை மிக நுணுக்கமாகப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டியது அவசியம்.*

* * *

## ஆதாயத்திற்குப் பதிலாகக் கூட்டுறவும் சேவையும்

உலகின் பிரசினைகளுக்கும், இந்தியாவின் பிரசினைகளுக்கும் ஒரே பரிகாரம் சோஷலிஸத்தில்தான் இருக்கின்றது என்பதை நான் தெளிந்து கொண்டிருக்கிறேன்.

இந்திய மக்களின் வறுமையையும், பெரிய அளவி லுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தையும், அடிமைத் தனத்தையும் சோஷலிஸத்தைத் தவிர வேறு எந்த வழி யிலாவது ஒழிக்க முடியும் என்று எனக்குப் புலப்பட வில்லை. இதற்கு நம் அரசியல், சமூக அமைப்புக்களில் புரட்சிகரமான பெரிய மாறுதல்கள் ஏற்படவேண்டியது அவசியம், நிலத்திலும் தொழிலிலும் உள்ள தனி மனி தர்களின் விசேட உரிமைகளுக்கும் நலன்களுக்கும் முடிவு கட்ட வேண்டும், பழைய ஜமீன்தார்-பண்ணை யார் முறையும், யதேச்சாதிகாரமும் கொண்ட இந்திய சமஸ்தானங்களையும் ஒழிக்க வேண்டும். இதன் பொருள் என்னவென்ருல், சுருக்கமான ஓரளவுக்கு மேலுள்ள தனிச் சொத்துரிமையை ஒழிக்க வேண்டும், இப்பொழுதுள்ள ஆதாயத்தை அடிப்படையாகக் கொண்ட முறையை மாற்றி, அதன் ஸ்தானத்தில் கூட் டுறவு சேவை என்ற மேலான லட்சியத்தை நிறுவ வேண்டும்.

*—1936, இந்திய தேசிய காங்கிரஸின் தலைமையுரை.*

* * *

## எதற்கும் மக்களின் சம்மதம் வேண்டும்

ஜனநாயக முறைகளின் மூலமே சோஷலிஸத்தை அமைக்க முடியுமென்று தத்துவ பூர்வமாக நான் கருதுகிறேன்; ஆனல் மக்கள் தங்கள் ஜனநாயகக் கருத்துக்களை வெளியிடப் பூரணமான உரிமைகளும், வசதிகளும் வேண்டும்...... ஆகவே பெரும்பாலான மக்களின் நல்லெண்ணம் இல்லாமலோ, அல்லது அவர் களுடைய அந்தரங்கமான சம்மதம் இல்லாமலோ, எந்தவித சோஷலிஸ மாறுதலும் செய்ய முடியாது.

*—1938, ஜனவரி 17-ல் லோதியன் பிரபுவுக்கு எழுதிய கடிதம்.*

* * *

## தனி மனிதர் சுதந்தரம் அதிகமாகும்

சோஷலிஸ அமைப்பின் கீழ் தனி மனிதனுக்கு ஏராளமான சுதந்தரம் ஏன் இருக்க முடியாது என்பது எனக்குப் புலப்படவில்லை; இப்போதுள்ள அமைப்பின் கீழே கிடைக்கும் சுதந்தரத்தைக் காட்டிலும் மிக அதிகமாகவே கிடைக்கும். அவன் தன் மனச் சாட்சியின்படி நடக்கவும், மனம்போல் வாழவும், பிரியமான தொழிலைச் செய்யவும், ஒரு கட்டுப்பாட்டிற்குள் அடங்கிச் சொந்தமாகத் தனிச் சொத்து வைத்துக் கொள்ளவும் முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக, பொருளாதாரப் பாதுகாப்பிலிருந்து கிடைக்கும் சுதந்தரமும் அவனுக்கு உண்டு. அத்தகைய சுதந்தரம் இப்பொழுது மிகச் சிலருக்கே கிடைத்திருக்கிறது.*

* * *

## எல்லாம் இந்திய மக்களுக்காகவே

நான் கம்யூனிஸத்திற்கு எதிராக இருக்கவில்லை. நான் சோஷலிஸத்திற்கு எதிராக இருக்கவில்லை. ஒரே விஷயம் என்னவென்றால், நான் இந்தியாவுக்காக இருக்கிறேன், வேறு எவருக்காகவும் அன்று; நான் இந்திய மக்களின் சார்பில் நிற்கிறேன்.

—*26-12-55*-ல் திரிச்சூரில் செய்த சொற்பொழிவு.

* * *

## கம்யூனிஸமும் ஃபாசிஸமும்

ஏதாவது ஒரு வகையான கம்யூனிஸம் அல்லது ஏதாவது ஒரு வகையான ஃபாசிஸம் (யதேச்சாதிகாரமுள்ள சர்வாதிகாரக் குழுவின் ஆட்சி) ஆகிய இந்த இரண்டு அமைப்புக்களில் ஒன்றை ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இன்று உலகத்திற்கு

ஏற்பட்டிருக்கிறது. நான் முன்னதையே—அதாவது கம்யூனிஸத்தையே—முழுதும் ஆதரிக்கிறேன். ∴பாசிஸம் கம்யூனிஸம் இரண்டுக்கும் இடையில் நடுவான பாதை ஒன்று கிடையாது. ஒருவர் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டி யிருக்கின்றது, நான் கம்யூனிஸ்ட் லட்சியத்தைத் தேர்ந்தெடுக்கிறேன்.*

* * *

## பயிற்சி இன்றியமையாதது

நான் சோஷலிஸத்தில் முழு நம்பிக்கையுள்ள ஒரு சோஷலிஸ்டாக இருந்திருக்கிறேன், இப்பொழுதும் இருக்கிறேன்; நான் ஜனநாயகத்திலும் நம்பிக்கையுள்ளவன், அதே சமயத்தில் சென்ற இருபது ஆண்டுகளாகக் காந்திஜீ மிக்க வெற்றியுடன் அனுஷ்டித்து வரும் அமைதியான சாத்வீகச் செயல் முறையையும் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். சாதாரணப் பொது மக்களிடமிருந்தே நமக்கு வலிமை உண்டாகும் என்பது என் நம்பிக்கை, ஆனால் அந்த வலிமையைப் போராட்டத்திற்காகவோ, ஒரு புதிய உலகைப் படைப்பதற்காகவோ பயன்படுத்துவதற்குக் கட்டுப்பாடுள்ள பயிற்சி அவசியம்.

—22-2-39-ல் வெளியிட்ட அறிக்கை.

* * *

## சோவியத் முறையை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும்

நான் சம்பந்தப்பட்ட மட்டில், இந்தியா முழுவதிலும் ஒரு சோஷலிஸ்ட் பொருளாதார முறை அமைந்திருக்க விரும்புகிறேன். சோவியத் அரசாங்க முறையில் இந்தியாவுக்குப் பொருத்தமான சில மாறுதல்

களைச் செய்தால், அது இந்தியாவுக்கு ஏற்றதாகும் என்று நான் எண்ணுகிறேன். இதனால் ரஷ்ய முறையையோ, வழிகளையோ அப்படியே முழுமையாக இங்கே புகுத்த வேண்டும் என்று நான் கருதுவதாக எண்ண வேண்டாம். சோவியத் அமைப்பில் உண்மையான ஜனநாயக அமிசங்களை ஏராளமாகச் சேர்க்க முடியும் என்று நான் எண்ணுகிறேன். ஆனால், தற்காலத்திலும், சமீப எதிர்காலத்திலும், சோவியத் முறையை அப்படியே இந்தியாவில் புகுத்த ஏதாவது முயற்சி செய்தால், பயங்கரமான பூசல்களும், உலைவும் ஏற்படும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.*

* * *

## வகுப்புக்களும் சாதிகளும் ஒழிந்த நிலை

நாம் எதிர்பார்க்கும் சமுதாயப் பாணி சோஷலிஸ சமுதாயப் பாணியாகும். அது வகுப்புக்களும், சாதிகளும் இல்லாத அமைப்பாகும்.

—*21-12-54-ல் பார்லிமெண்டில் நிகழ்த்திய சொற்பொழிவு.*

* * *

## சோஷலிஸம் மனிதப் பண்பை அடக்குவதில்லை, வளர்ப்பது

நான் ஒரு சோஷலிஸ்டா, அல்லது தனிமனித உரிமைக் கொள்கையுடையவனா? இந்த இரண்டு சொற்றொடர்களுக்கும் நிச்சயமான முரண்பாடு இருக்கிறதா? நாம் எல்லோரும் நம்மை ஒரே சொல் அல்லது சொற்றொடரால் விளக்கிக் கூறும் அளவுக்கு, நாம் எல்லாப் பான்மைகளுக்கும் வேற்றுமை தெரியாத அளவுக்கு, ஒரே உருவாகி விளங்கும் மனிதர்களாக இருக்கிறோமா? என்னுடைய மனப்போக்கின்படியும்,

அநுபவத்தின்படியும் நான் தனி மனித உரிமைக் கொள்கையுடையவன் என்று எண்ணுகிறேன், அறிவின் ஆராய்ச்சி மூலம் நான் ஒரு சோஷலிஸ்டாக இருக்கிறேன், இவைகளுக்கெல்லாம் என்ன பொருள் கொண்டாலும் விஷயம் இதுதான். சோஷலிஸம் தனி மனிதப் பண்பை அழிக்கவோ, அடக்கவோ செய்வதில்லை என்று நான் நம்புகிறேன்; உண்மையில் அது எண்ணிலடங்காத தனி மனிதர்களைப் பொருளாதார, கலாசார அடிமைப் பிடிப்பிலிருந்து விடுதலை செய்யும் என்பதனாலேயே நான் அதில் ஆசை கொண்டிருக்கிறேன்.

—*3-4-39-ல் சுபாஷ் சந்திர போஸுக்கு எழுதிய கடிதம்.*

* * *

## பூசலில் எனக்குப் பற்றில்லை

சோஷலிஸ்ட் தத்துவத்தின் அடிப்படையான அமிசங்களை நான் ஏற்றுக் கொண்ட சமயத்தில், அதைப் பற்றி (சோஷலிஸ்ட் முகாமில் ஏற்பட்டு வந்த) பல்வேறு வாதப் பிரதிவாதங்களைப் பற்றி நான் அக்கறை கொள்ளவில்லை. இந்தியாவிலுள்ள இடதுசாரிக் குழுக்கள் வெறும் தத்துவத்தைப் பற்றிய நுணுக்கமான பிரசினைகளைப் பற்றி ஒன்றுக்கொன்று பூசலிட்டுக் கொண்டும், ஒன்றையொன்று கண்டித்துக்கொண்டும், தங்கள் ஆற்றலில் பெரும் பகுதியை வீணாக்கி வருவது எனக்கு அறவே பிடிக்கவில்லை.*

* * *

## எனது நம்பிக்கை

நான் சோஷலிஸத்தை ஆதரிக்கிறேன், இந்தியா சோஷலிஸத்தை ஆதரிக்கும் என்றும் நம்புகிறேன், இந்தியா ஒரு சோஷலிஸ அரசாங்கத்தை நிறுவ

முன்னேறிச் செல்லுமென்றும் நம்புகிறேன், உலகம் முழுதுமே அந்த வழியிலேயே செல்ல வேண்டியிருக்கும் என்றும் நான் நம்புகிறேன்.

—*13-12-46-ல் அரசியல் நிர்ணய சபையில் நிகழ்த்திய சொற்பொழிவு.*

*　　*　　*

## பொதுவான செல்வம்

பிரஜைகளாக வாழ்வதற்கு உண்மையில் ஏற்ற லட்சியம் சோஷலிஸ்ட் லட்சியம், அதாவது கம்யூனிஸ்ட் லட்சியம். இயற்கையில் உண்டாகும் செல்வத்தையும், மனித உழைப்பினுல் உண்டாகும் செல்வத்தையும் பொதுவாக வைத்துக் கொண்டு அநுபவிக்க வேண்டும் என்பதே அதன் பொருள்.

*　　*　　*

## ரஷ்யாவின் பெரிய பரீட்சை

நான் கம்யூனிஸத்திடம் மிகவும் பலமான கவர்ச்சி கொண்டேன்; சரித்திரத்திற்குப் பொருத்தமுள்ளதாயும், விஞ்ஞான முறையிலும் கம்யூனிஸம் ஒன்றே விளக்கம் அளித்திருக்கின்றது என்று நான் எண்ணுகிறேன். ரஷ்யாவில் ஏற்பட்ட பல விஷயங்களை நான் ஆதரிக்கவில்லை. 'கம்யூனிஸ்ட்' என்ற சொல்லுக்குப் பொதுவாகக் கொள்ளப்படும் பொருளில் நான் என்னைச் சேர்த்துக் கொள்ளவுமில்லை. ஆனால் எல்லாவற்றையும் மொத்தமாகச் சேர்த்துப் பார்க்கையில், ரஷ்யாவில் நடந்துள்ள பரீட்சை மிகப் பெரிதாகவே என் மனத்தில் பதிந்துள்ளது.

*　　*　　*

## ஒரே பாதைதான் உண்டு

சோஷலிஸம் எப்படி வரும்? உற்பத்திக் கருவிகளையும், விநியோகத்தையும் முற்றிலும் தேசிய உடைமையாக்குவதால் அது வந்து விடாது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். ஆனால் லாபத்தையும், சொத்துச் சேர்க்கும் ஆசையையும் நீக்காமல், அதை அமைக்க முடியுமா? இப்பொழுதுள்ள முறையிலிருந்து வேறு ஓர் அடிப்படையின்மீது ஒரு புது நாகரிகத்தை அமைக்காமல் முடியுமா? கலாசாரம் முதலிய சில துறைகளில் தனிப்பட்டவர்களுடைய ஊக்கத்திற்கும் உழைப்பிற்கும் மிக அதிகமான வசதி இருக்கக்கூடும். இவைகளெல்லாம் சரியென்றால், உற்பத்திக் கருவிகளையும், விநியோகத்தையும் தேசிய உடைமையாக்குவது இயற்கையாகவே அவசியமாகும். அதைச் செய்து முடிப்பதற்கு இடையில், சில இடங்களில் நாம் தங்கி நிற்க வேண்டியிருக்கும். ஆனால், நாம் ஒரே சமயத்தில், ஒன்றுக்கொன்று முரணும் எதிர்ப்பாயுமுள்ள இரண்டு வழிகளில் சென்று கொண்டிருக்க முடியாது. இரண்டில் ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். சோஷலிஸத்தை லட்சியமாகக் கொண்ட ஒருவருக்கு ஒரே பாதைதான் உண்டு.

* * *

## உற்பத்திப் பெருக்கும் வேலைக்கு வாய்ப்பும்

நாம் எதிர்பார்க்கின்ற சமுதாய அமைப்பு சோஷலிஸப் பாணியிலுள்ளது. அதில் வகுப்புக்களுக்கும், சாதிகளுக்கும் இடமில்லை. காங்கிரஸ் சம்பந்தப்பட்ட வரையில், நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே அது சாதி பேதமற்ற, வகுப்பு வேற்றுமையற்ற சமுதாயமே தனது லட்சியம் என்று கொண்டிருக்கின்றது, அத்

தகைய சமுதாயத்தை சோஷலிஸப் பாணியிலேதான் அடைய முடியும் என்பது தெளிவு. தொழிலைத் தேசிய உடைமையாக்குதல் சோஷலிஸத்திற்கு அவசியம் என்பதால், எல்லாத் தொழில்களையும் தேசிய மயமாக்கிவிட வேண்டும் என்று நீங்கள் எண்ண வேண்டாம் என்று உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். சோஷலிஸப் பாணி வளர வளர, அதிகமான தொழில்களைத் தேசியமயமாக்குதல் அவசியமாகும் என்று நான் கருதுகிறேன், ஆனால் ஒவ்வொன்றையும் தேசிய மயமாக்குதல் முக்கியமானதன்று, நாம் முடிவான பயனைக் குறியாகக் கொள்ள வேண்டும், அதிக உற்பத்தியும், அதிகப் பேர்களுக்கு வேலை கொடுத்தலுமே முக்கியமாகும். நீங்கள் எடுத்துக் கொள்ளும் எந்த நடவடிக்கையாலும் உற்பத்திக்கோ, வேலை வாய்ப்புக்கோ குந்தகம் விளையுமானால், அது சோஷலிஸப் பாணிக்கு உங்களை அழைத்துச் செல்லாது. பணம், பயிற்சியுள்ள தொழிலாளர் தொகை, அநுபவம் ஆகியவை குறைவாயுள்ள இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில், நம்மிடமுள்ள அநுபவத்தையும், பயிற்சியையும், பணத்தையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

*21-12-54ல் லோகசபையில் நிகழ்த்திய சொற்பொழிவு.*

* * *

## முதலில் உற்பத்தி—பிறகுதான் பங்கீடு

சோஷலிஸம் அல்லது கம்யூனிஸத்தை நீங்கள் விரும்பினால், உங்களுடைய செல்வத்தைப் பகிர்ந்து கொள்ள உதவியாகும், ஆனால் இந்தியாவில் பகிர்ந்து கொள்ளக் கூடிய செல்வம் இப்பொழுது இல்லை; பகிர்ந்து கொள்ள வறுமைதான் உளது. அங்கும் இங்குமாக இருக்கக்கூடிய சில பணக்காரர்களுடைய செல்வத்தைப் பிரித்துக் கொடுப்பது என்பது பிரசினை

அன்று. நம் தேசிய வருமானத்தில் அதனால் எவ்வித மாறுதலும் ஏற்பட்டு விடாது. அந்த முறையினால் ஜனங்களுடைய மனப்பான்மைக்கு நன்மை உண்டாகும் என்று வேண்டுமானால் நீங்கள் அதைக் கையாளலாம். ஆனால் செயல் முறையில் இறங்கினால், இந்தியாவில் பிரித்துக் கொள்வதற்கு அதிகமாக ஒன்றுமில்லை, ஏனெனில் நம் நாடு ஏழை நாடாகும். நாம் செல்வத்தை உண்டாக்க வேண்டும், பிறகுதான் அதை நீதியான முறையில் பங்கிட முடியும். செல்வமில்லாமல் நாம் க்ஷேமநல அரசாங்கத்தை எப்படிப் பெற முடியும்? செல்வம் என்றால், தங்கமாயும், வெள்ளியாயுமே இருக்க வேண்டும் என்பதில்லை, பொருள்களும், பொது மக்களுக்கு வசதிகள் செய்யும் ஸ்தாபனங்களும் செல்வங்களே. ஆகவே நமது பொருளாதாரக் கொள்கை ஏராளமான பொருள்களை உற்பத்தி செய்வதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

*1955, ஆவடியில் இந்திய தேசிய காங்கிரஸில் நிகழ்த்திய சொற்பொழிவு.*

* * *

## மக்களுக்குச் சமமான வாய்ப்புக்கள்

நம்முடைய நண்பர்களும், கூட்டாளிகளுமான பலர், மாற்றுக் கட்சிகளில் உள்ளவர்களும் சேர்ந்து, சோஷலிஸம் பற்றிப் பேசுகின்றனர்; அந்தப் பேச்சு விறைப்பாக உள்ளது என்று நான் வினயத்துடன் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. நான் அவர்களைக் குறை சொல்லவில்லை, நாம் சோஷலிஸம் பற்றிச் சொல்வதே முடிவானது என்றும் நான் உரிமை கொண்டாடவும் விரும்பவில்லை. நான் அதைப்பற்றிக் கூறுவது இதுதான்: அது வளர்ந்து வரும் இயல்பும், வேகமாக இயங்கக்கூடிய ஆற்றலுமுள்ள கொள்கை,

அது விறைப்பா யில்லாமல் வளைந்து கொடுக்கக்கூடி யது, ஒவ்வொரு நாட்டிலும் மனித வாழ்க்கையில் நிலைமைகள் மாறுவதற்கு ஏற்றபடி அதுவும் மாறிப் பொருந்திக்கொள்ளக் கூடியது. சோஷலிஸத்தில் பல வகைகள் இருக்க முடியும் என்றும் நான் நம்புகிறேன். உயர்ந்த தொழிற்பெருக்கமுள்ள ஒரு சமூகத்தில், சோஷலிஸம் ஒரு வகையா யிருக்கும். விவசாய நாட்டில், அது சற்று வேறு வகையா யிருக்கும். வெளிநாடுகளின் அநுபவத்தால் நாம் பயனடைய வேண்டும் என்றிருந்த போதிலும், நாம் வேறு ஒரு நாட்டையே ஏன் பின்பற்ற வேண்டும் என்பது எனக்கு விளங்கவில்லை. நான என் நாட்டைத் தொழிற் பெருக்கமுள்ளதாகச் செய்ய விரும்பினுல், அந்தத் தொழிற்பெருக்கத்தை அடைந்து செழிப்புற்ற நாடுகளில் கையாளப் பெற்ற நுட்பமான கருவிகளைப் பற்றித் தெரிந்து கொள்வதுடன், அவைகள் தொழில் மயமாவதற்குக் கைக்கொண்ட முறைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். பிற நாடுகள் செய்தவைகளைப் பின்பற்றுதல் சில சமயங்களில் நன்மையா யிருக்கும், சில சமயங்களில் அவைகளை விலக்குதல் நன்மையா யிருக்கும். சோஷலிஸம் பற்றி விறைப்பான முறையில் நான் விளக்கிச் சொல்ல வேண்டும் என்று கேட்பது ஏன் என்பது எனக்குத் தெரியவில்லை. நான் வேண்டுவதெல்லாம் ஒன்றுதான் : இந்தியாவிலுள்ள தனிப்பட்ட மனிதர்கள் அனைவரும் பிறப்பிலிருந்தே வளர்ச்சியடையச் சமமான வாய்ப்புக்களைப் பெற்றிருக்க வேண்டும், அவரவர் சக்திக்குத் தகுந்த வேலைக்கும் சமத்துவமான வாய்ப்புக்களைப் பெற்றிருக்க வேண்டும்.

*4—1—57ல் இந்தூரில் அ. இ. கா. கமிட்டியில் ஆற்றிய சொற்பொழிவு.*

* * *

## நீண்ட காலம் தேவை

சோஷலிஸத்தைப் பற்றி நிறையப் பேசலாம், ஆனால் நான் ஒரு விஷயத்தைப் பற்றியே வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். முதலாளித்துவ அமைப்பு முழுதும் ஏதாவது ஒரு வகையான செல்வம் ஈட்டும் ஆர்வமுள்ள சமூகத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஓரளவுக்கு, நமக்குள்ள செல்வம் சேர்க்கும் ஆசையே அதற்கும் காரணமாயிருக்கலாம். சோஷலிஸ சமுதாயம் செல்வம் சேர்க்கும் இந்த ஆர்வத்தைக் கைவிட முயற்சி செய்ய வேண்டும், இதற்குப் பதிலாகக் கூட்டுறவை மேற்கொள்ள வேண்டும். இந்த மாற்றத்தை நீங்கள் திடீரென்று சட்டம் இயற்றுவதால் உண்டாக்க முடியாது. மக்களை நீண்ட காலமாகப் பயிற்சி செய்து வர வேண்டும்; இது இல்லாமல் நீங்கள் முற்றிலும் வெற்றியடைய முடியாது. உங்களுடைய மனங்களையும், இதயங்களையும் மாற்றிக் கொள்வது ஒருபுறமிருக்க, உங்களுடைய பொருளாதார அமைப்பை மட்டும் மாற்றியமைப்பதற்கே நாளாகும், அதிலும் சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பதற்கு நெடுங்காலம் வேண்டும். மிக வேகமாக முன்னேறியுள்ள நாடுகளும் நெடுங்காலமாக முயற்சி செய்திருக்கின்றன. தொழில் மயமாக்குவதில் வேகமாகச் சென்ற சோவியத் யூனியன் முப்பத்தைந்து வருட காலமும், அதற்குக் கூடுதலாகவும் முயன்று வந்தது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏறத்தாழக் கம்யூனிஸ்ட் அரசாங்கமாயுள்ள சீனாவிலுள்ள மக்கள் குடியரசின் தலைவரான மா, மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், சீனா ஒரு வகையான சோஷலிஸத்தை அடைய இருபது ஆண்டுகளாகும் என்று சொன்னார். இத்தனைக்கும் அவர்களுடைய அரசாங்கம் சர்வாதிகாரமுள்ளது, ஜனங்களும் கட்டுப்பாடும் சுறுசுறுப்புமுள்ளவர்கள் என்பதையும்

நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தலைவர் மா லட்சியத்தைச் செயலில் செய்து காட்டும் முறையி லேயே பேசினார். இந்தியாவுக்கு சோஷலிஸத்தைக் கொண்டுவர, அதிலும் நாம் மேற்கொண்டுள்ள முறை யில், அதாவது ஜனநாயக முறையில், நீண்ட காலம் பிடிக்கும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

—ஷி ஷி

* * *

## சோஷலிஸமும் வேண்டும், ஜனநாயகமும் வேண்டும்

நமக்கு முன்புள்ள பிரசினை நீதியான, அமைவ யான முறைகளில் ஜனநாயகத்தை சோஷலிஸத்துடன. இணைப்பது எப்படி என்பதுதான். இந்தியா பாக முன்பு வைத்துக் கொண்டுள்ள பிரசினை இது; இது இது கஷ்டமான ஒரு பிரசினை, எனினும் நாம் ஓ எளி நம்பிக்கையுடன் இதை முடித்து வைக்கலாம் ரட்டுத் நான் எண்ணுகிறேன். கஷ்டமான பல விஷ அது நாம் முன்னால் வெற்றியுடன் நிறைவேற்றியே சிந் கிறோம், இதிலும் நாம் ஏன் வெற்றியடைய மாற்றங் என்பதற்குக் காரணமே யில்லை. வற்புறுத்திறைப்புத் கட்டாயத்தினாலோ, நாம் இதை அடைய ஏற்பட்டுக் நாம் மக்களுடைய நல்லெண்ணத்தையும்ப்பான ஒரு பையும் பெற வேண்டும். சர்வாதிகார ஆகும், ஏனெ கூட (மக்களின்) நல்லெண்ணமும், ஒத் ாகச் செய்து லாமல் நிலைத்திருக்க முடியாது, என பாணியிலுள்ள அரசாங்கங்களைப் பற்றிச் சொல்லத்மில்லாத முறை மக்களிடம் விவரங்களைச் சொல்லி என்று பொரு ளுடைய நம்பிக்கையைப் பெற பேற்றி, வெளிநாடு முடைய கஷ்டங்களையும், நம்பிக்ைவில்லாத வழவழப் களையும், நம் தோல்விகளையும் து வருகின்றனர்,

விக்க வேண்டுவதும் அவசியம், அவர்கள் அவைகளைப் புரிந்து கொள்ளச் செய்யவேண்டும்.

—ஷை ஷை

* * *

## நிலைமைகள் நம்மை உந்துகின்றன

நாம் சோஷலிஸ்ட் அமைப்புள்ள சமூகத்தை நோக்கிச் செல்லவேண்டு மென்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்—நமது உறுதியான கொள்கையும் அதுதான். ஏதோ உணர்ச்சி காரணமாக நாம் அதை விரும்பவில்லை, நடைமுறையில் செயல் புரியவே ாம் அதை வேண்டுகிறோம். இன்றைக்குள்ள சமூகப் ரசினைகளை அந்த வழியைத் தவிர வேறு வழியில் ் தீர்த்துக் கொள்ள முடியாது. சோஷலிஸத்தை டயவோ, அல்லது இந்த நாட்டில் வேறு எந்த ந்த நிலையை அடையவோ, நீண்ட காலம் பிடிக் ன்பதை ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கின்ற ர்றே நான் நம்புகிறேன். நாம் விரைவில் அதை து விடுவோம் என்று பொது மக்களை ஏமாற்று பதன்று……

ேவகமாகச் செல்லவேண்டி யிருக்கின்றது, முன்னேற வேண்டும் என்று நாம் ஆசைப் நிலைமைகளும் நம்மை அவ்வாறு செல் ாயப்படுத்துகின்றன. நாம் விரைவில் ிட்டால், விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் றல் வேகமாகச் செல்வதில், நாம் லட்சி ா யிருக்கவேண்டும். நமது குறிக்கோள் றுள்ளது. நாம் செய்யும் ஒவ்வொரு ாாதார முறையில் நமக்கு நன்மையா ரியான முறைகளிலும் அமைந்

* *

4652

## வெறும் தத்துவம் பய[illegible]

நாம் ஒரு சோஷலிஸ்ட் பாணியான சமுதாயத்தை
விரும்புகிறோம் என்று சொல்லுகிறோம், அதை நீங்க
ளும் ஒப்புக்கொள்வதைப் பற்றி எனக்கு மகிழ்ச்சிதான்.
அந்தச் சொற்றொடருக்கு ஒரே வார்த்தையில் சோஷ
லிஸம் என்றுதான் பொருள். அது சோஷலிஸம் அல்
லாத ஏதோ ஒன்று என்று கருத வேண்டாம். சோஷ
லிஸப் பாணி என்பது சோஷலிஸமேயாகும். சோஷ
லிஸப் பாணி, சோஷலிஸ்ட் அமைப்பு, சோஷலிஸம்
ஆகிய சொற்களுக்குள் நுணுக்கமான வேற்றுமைகள்
இருப்பதாகச் சிலர் கற்பனை செய்கின்றனர். அவை
களுக்குள் சிறிதளவு வேற்றுமைகூட இல்லை, அவை
கள் ஒரே சோஷலிஸத்தைத்தான் குறிப்பிடுகின்றன.
ஆனால் அவைகளைப் பற்றிப் பொதுப்படையாக
விளக்க முடியுமே தவிர, அவைகளின் பொருள் இது
தான் என்று வரையறுத்துக் கூறுதல் எவர்க்கும் எளி
தன்று. நாம் இந்தப் பிரச்னையை வெறும் வரட்டுத்
தத்துவக் கண்ணோட்டத்துடன் அணுகவில்லை. அது
நல்லதுதான், வெறும் தத்துவத்தைப் பற்றியே சிந்
தனை செய்து கொண்டிருந்தால், (பின்னால் மாற்றங்
களுக்கும், வளர்ச்சிக்கும் இடமில்லாதபடி) விறைப்புத்
தான் ஏற்படும், உலகில் மாபெரும் மாறுதல் ஏற்பட்டுக்
கொண்டிருக்கும் இந்த நேரத்தில், விறைப்பான ஒரு
நோக்கத்தைக் கொண்டிருத்தல் தீமையாகும், ஏனெ
னில் அது நம்மைச் செயலற்றவர்களாகச் செய்து
விடும். இதனால் நாம் சோஷலிஸப் பாணியிலுள்ள
சமுதாயம் பற்றித் தெளிவில்லாத, உரமில்லாத முறை
யில் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்று பொரு
ளாகாது. இத்தகைய விஷயங்களைப் பற்றி, வெளிநாடு
களைவிட, இந்தியாவில் பலர் தெளிவில்லாத வழவழப்
பான முறையில் சிந்தனை செய்து வருகின்றனர்,

எல்லா விஷயங்களையும் ஏற்றுக் கொள்வதாக வாயால் ஆமோதிப்பதுடன் தங்கள் கடமை முடிந்துவிட்டதாக எண்ணுகின்றனர்.

—*14-4-56-ல் புதுடில்லியில் அகில இந்திய உற்பத்தி யாளர் சங்க மகாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு.*

* * *

## சிந்தனையும் செயலும்

ஆகையால், நாம் ரெட்டுத் தத்துவத்தைப் பிடித்துக் கொண்டிருக்கவில்லை என்று சொல்லும் பொழுது, தெளிவான சிந்தனை செய்யாமல், 'ஆமாம், நல்லது தான்' என்ற முறையில் ஆமோதித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதில்லை. நாம் பிரசினையை மானிடப் பண்பாட்டுக்கு ஏற்ற முறையில் அணுக வேண்டியது அவசியம்; நாம் பொருளாதார நிபுணர்களாயினும், அரசாங்க உத்தியோகஸ்தர்களாயினும், நம்மில் தலை சிறந்தவர்களாக விளங்குபவர்கள்கூட, எந்த வேலையிலும், நாம் மனித சமூகத்திற்காக ஒன்றைச் செய்கிறோம் என்பதை மறந்துவிடுகின்றனர்; நம்முடைய வேலை ஒரு காரியாலயத்திலிருந்து கொண்டு புள்ளி விவரம் சேகரிப்பதன்று. ஆகவே நாம் முற்றிலும் தெளிவாகச் சிந்தனை செய்த பிறகே செயலில் இறங்கவேண்டும், சூழ்நிலைகளின் மாறுதல்களை எப்பொழுதும் கருத்தில் கொள்ள வேண்டும், இதுவரை மனித சமூகம் பெற்றுள்ள அநுபவத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பல நாடுகளிலும் நிலைமைகள் ஒரே மாதிரியாக இல்லை. ஆதலால் ஒரு நாட்டின் அநுபவத்தை அப்படியே முழுதும் ஒருவர் தம் நாட்டிற்காகப் பயன்படுத்த முயல்வது புத்திசாலித்தனமாகாது, அந்த அநுபவம் எந்த அளவுக்குப் பொருந்தும் என்றும் கவனிக்க

வேண்டும். ஒருவர் பிறநாடுகளின் அநுபவத்தைப் பெறக்கூடிய அளவுக்குப் பெற்றுக் கொள்கிறார், ஆனால் தம்முடைய சொந்த அடிப்படைகளையும் வைத்துக் கொள்கிறார், ஏனெனில் நாம் மானிட ஜீவன்களுக்காகவே வேலை செய்கிறோம், மனிதர்களோ ஒருவருக்கொருவர் வேற்றுமையுடையவர்கள். அவர்களுடைய கட்டைவிரல் ரேகைகள்கூட மாறுபட்டிருக்கின்றன, அவர்களுடைய மனங்களோ மேலும் அதிகமாக மாறுபட்டவை.

—டெஷி டெஷி

* * *

## வறுமையைப் பரப்புவது சோஷலிஸமன்று

நமது குறிக்கோள் சோஷலிஸப் பாணியிலுள்ள சமுதாயம் என்று நாம் சொல்லி விட்டோம். இது சம்பந்தமாக சோஷலிஸம் என்றால் துல்லியமாக என்ன பொருள் என்று நான் விளக்க முன்வரவில்லை, ஏனெனில் வெறும் தத்துவத்தைப் பற்றியோ, வளைந்து கொடுக்காத விறைப்பான முறையிலோ, சிந்தனையைச் செலுத்தாமலிருக்க நாம் விரும்புகிறோம். எனது வாழ்க்கையிலேயே உலகம் பெரு மாறுதலை அடைந்துள்ளது, அதனால் விறைப்பான ஒரு சித்தாந்தத்தால் உள்ளத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள நான்விரும்பவில்லை. ஆனால் நாம் 'சோஷலிஸப் பாணி சமுதாயம்' என்று சொல்லும் பொழுது பொதுவாக என்ன பொருளில் சொல்லுகிறோம்? ஒவ்வொருவருக்கும் சமமான வாய்ப்பும், ஒவ்வொருவருக்கும் நல்வாழ்வு வாழச் சந்தர்ப்பமும் கிடைக்கும் சமுதாயம் என்றே பொருள் கொள்கிறோம். நல்வாழ்க்கை என்பதற்குத் தேவையான அளவு வசதிகளைப் பெறுவதற்கு வேண்டிய

பொருள்களை நாம் உற்பத்தி செய்தாலன்றி, நாம் அதை அடைய முடியாது என்பது வெளிப்படை. ஆகையால் நாம் சமத்துவத்தைப் பற்றியும், ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பது பற்றியும் மிகவும் வற்புறுத்த வேண்டியது அவசியம், அத்துடன் சோஷலிஸம் என்பது வறுமையைப் பரப்புவது அன்று என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டியதும் அவசியம். முக்கியமான விஷயம் என்னவென்றால், செல்வமும் பொருளுற்பத்தியும் பெருகியிருக்க வேண்டும் என்பதே.

—23-5-56-ல் லோக சபையில் நிகழ்த்திய சொற்பொழிவு.

*  *  *

## அதிகார வர்க்கம் பெருகத்தான் செய்யும்

ஆட்சி முறையிலும், வாழ்க்கையில் பெரும்பாலான விஷயங்களிலும், ஒருவருடைய செயல் மட்டும் முக்கியமன்று, அதை அவர் எப்படிச் செய்கிறார் என்பதும் முக்கியமாகும். ஜனநாயக முறையின் கீழ் ஏராளமான மக்களின் கூட்டங்களுடன் பழகுவதில், இது மிகவும் முக்கியமாகும்...... இந்தக் காலத்தில் அடக்கி ஆளவேண்டிய அரசாங்கத்தின் போலீஸ் கடமைகள் முதன்மையா யிருக்கவில்லை. ஒவ்வோர் அரசாங்கமும் சமுதாய முறையிலும், பொருளாதார முறையிலும் முன்னேற விரும்புகின்றது. உண்மை என்னவென்றால், பொது ஆட்சிமுறை முழுதுமே ஒரு வகையான அதிகார வர்க்க ஆட்சியே யாகும். சோஷலிஸத்தின் வளர்ச்சி அதிகார வர்க்கத்தின் வளர்ச்சியாகும்.

—6-4-57-ல் புதுடில்லியில் பொது ஆட்சிமுறை பற்றிய இந்தியன் இன்ஸ்டிடியூட்டில் தலைமையுரை.

*  *  *

## பல துறைகளிலும் வளரவேண்டும்

நம் அரசாங்கத்தின் வசமுள்ள குறித்த அளவுள்ள வசதிகளைக் கொண்டு, அரசாங்கத் துறை, தனியார் துறை சம்பந்தமாக நாம் இப்பொழுது செய்ய விரும்புபவைகளை யெல்லாம் செய்துவிட முடியாது என்பது தெளிவு. ஆனால், நம்மால் முடிந்தஅளவு செய்து முடிப்போம். தொழில்களில் தனியார் துறை வேலை செய்யாதபடி நாம் தடை செய்துவிட வேண்டுமென்று சிலர் ஆலோசனை கூறுகின்றனர். அத்தகைய கருத்து சிந்தனைக் குழப்பத்தின் விளைவு என்று நான் எண்ணுகிறேன். அத்தகைய நோக்கத்தை நான் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தியாவில் ஒரு சோஷலிஸ்ட் சமுதாயத்தையே நான் வேண்டுகிறேன். சொந்தத்திற்கே பொருள் சேர்க்கும் ஆர்வமுள்ள சமுதாயக் கட்டுக்கோப்பிலிருந்து வெளியேறவே நான் விரும்புகிறேன். ஆனால் தீர்மானங்களை நிறைவேற்றுவதாலும், கோஷங்களைக் கிளப்புவதாலும் மட்டுமே நான் அதை அடைந்துவிட முடியாது. இந்தியா ஏராளமான மக்களின் ஆதரவுடன் அந்தத் திசை நோக்கிச் செல்லவேண்டும் என்பது என் விருப்பம்.

ஒவ்வொருவருடைய சம்மதத்தையும் கேட்கவேண்டும் என்பது இயலாது. நிலச் சட்டங்கள் இயற்றும் பொழுது, நாம் நிலச் சொந்தக்காரர்களிடம் தனியாகச் சென்று சம்மதம் கேட்பதில்லை. இருந்த போதிலும், நம் நிலச் சட்டங்கள் நிலச் சொந்தக்காரர்களைத் திண்டாடி நிற்கும்படி விட்டுவிடவில்லை. அதாவது, நமது எதிர்கால அமைப்பில் அவர்களுக்கும் இடமளிக்க முயற்சி செய்திருக்கிறோம். உத்தரப் பிரதேசத்தில் பல்லாயிரம் நிலச்சுவான்கள் நிலச் சட்டங்களால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கும்; ஆனால், நாம் அவர்களைப் பகை

வர்களாக ஆக்கிக் கொள்ளவில்லை. மற்றொரு வழியி ருக்கிறது, அதன்படி மக்களை உங்களுடைய விரோதி களாக ஆக்கிக் கொள்ளலாம், அவர்களை ஏசலாம், அவர்களுடைய உதவியைப் பெறுவதற்கு மாறாக எதிர்ப்பைப் பெறலாம்.

தனியாரின் தொழில் முயற்சி பற்றியும், 'கட்டுப்பா டற்ற வாணிபம்' பற்றியும் சிலர் பேசிக் கொண்டிருக்க லாம். ஆனால் அநுபவத்தில் எவரும் கட்டுப்பாடற்ற வாணிபத்தில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. தொழில்கள், இறக்குமதி, ஏற்றுமதி சம்பந்தமாக உல கம் முழுவதிலும் கட்டுப்பாடும், ஒழுங்கு முறையும் அமைந்திருக்கின்றன. முதலாளித்துவப் பொருளா தார அமைப்புடன் முதன்மையான தொழில் வளர்ச்சி யுள்ள நாடுகளிலேகூட அரசாங்கம் செலுத்திவரும் ஆதிக்கியத்தைப் பார்த்தால், ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு சோஷலிஸ்ட் அவ்வளவு அதிகாரத்தை எதிர் பார்த்திருக்க முடியாது. நாம் மெதுவான வழியில் செல்ல வேண்டுமென்று நான் சொல்லவில்லை. சோஷ லிஸப் பொருளாதார அமைப்பை நோக்கி நாம் வேக மாகவும் உறுதியாகவும் செல்வோம். ஆனால் பல துறை களிலும் சமநிலையான வளர்ச்சி யடையும்படி செல் வோம். எவ்வளவு பெற முடியுமோ அவ்வளவையும் நாம் பெறுவது நலம். தனியார் துறை நடந்து வருவ தில் நான் ஒரு தீங்கையும் காணவில்லை—ஏராளமான நன்மையையே காண்கிறேன்.

தொழில் அபிவிருத்தி யில்லாத இந்தியாவைப் போன்ற நாட்டில் அரசாங்க முயற்சி யில்லாமலும், அரசாங்கத் தொழில் துறையை விரிவுபடுத்தாமலும், தனியார் துறையில் முக்கியமான முனைகளில் கட்டுப் பாடு செய்யாமலும் நாம் முன்னேற முடியாது.

*  *  *

## அரசாங்க முயற்சியும் மக்களின் ஒத்துழைப்பும்

தேசம் சோஷலிஸப் பாணியிலுள்ள சமுதாயத்தை நிறுவும் பொறுப்பை மேற்கொண்டுள்ளது. இந்த மாறுதலைக் கொண்டுவர நாம் பல துறைகளில் பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கின்றது. ஆயினும் சுதந்தரத்தின் அடிப்படையை விரிவாக்கி அதை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டியதும், ஆட்சி முறை ஸ்தாபனத்துடன் மக்கள் நெருங்கிப் பழகவும் ஒத்துழைக்கவும் வழி செய்வதும், முக்கியமாக நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு அவர்களுடைய ஆதரவைப் பெறுவதும் முக்கியமான வேலையாகும். நாம் மக்களின் திட்டம் பற்றியும், மக்களின் சமுதாய நலத் திட்டங்கள் பற்றியும் பேசுகிறோம். இந்தப் பிரசினை சம்பந்தமாக நம் நோக்கத்தை இதுவே எடுத்துக் காட்டுவதாகும். அரசாங்க முயற்சி அவசியம்தான், ஆனால் அதனால் மட்டுமே பெரிய மாறுதலைச் செய்து விட முடியாது. நாம் பெரும் பெரும் மாறுதல்களை நோக்கமாகக் கொண்டிருக்கிறோம்.

—*சிம்லா, அபிவிருத்திக் கமிஷனர்கள் மகாநாட்டிற்கு 9-5-55ல் அனுப்பிய செய்தி.*

* * *

## சமூகத்தையே ஊக்குவிக்க வேண்டும்

சோஷலிஸப் பாணியிலுள்ள சமுதாயத்தைப் பற்றியும், தொழில்களைப் பரப்புவது பற்றியும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவது பற்றியும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றியும், வேறு பல விஷயங்களைப் பற்றியும் நாம் பேசுகிறோம். உண்மையில் அவசியமானது என்னவென்றால், இந்திய சமுதாய அமைப்பின் அடிப்படையை எப்படியாவது ஊக்குவித்து ஆர்வத்தோடு செயற்படும்படி செய்

தலே. மேலேயிருந்தும் தூண்டுதல்கள் அவசியம்தான், ஆனால், இதுவரை எக்காலத்திலும் சமுதாயத்தின் மேல்தளங்களில் இருப்பவர்களின் தூண்டுதல்களே நிகழ்ந்து வந்திருக்கின்றன. கோடிக் கணக்கான கிராமவாசிகள், லட்சக்கணக்கான தொழிலாளர்கள், குறைந்த வருமானமுள்ளவர்கள், வேலையில்லாமலிருக்கும் ஜனங்கள், நிலத்தையே சார்ந்திருக்கும் மக்கள் ஆகிய இந்திய சமுதாயத்தின் அடித்தலமாக விளங்கும் மக்களை ஊக்கப்படுத்திச் செயலாற்றும்படி செய்தாலன்றி, நாம் நம் பிரசினைகளைத் தீர்ப்பதாகாது. அவர்களே இந்திய சமுதாயத்தின் அடிப்படை.

*11-4-55ல் லோகசபையில் நிகழ்த்திய சொற்பொழிவு.*

* * *

## இந்தியாவின் குறிக்கோள்

நாங்கள் ஜனநாயகத்திலும், சமத்துவத்திலும், தனியான விசேட உரிமைகளை ஒழிப்பதிலும் நம்பிக்கை கொண்டிருக்கிறோம், அமைதியான முறைகளில் எங்கள் நாட்டில் சோஷலிஸப் பாணியிலுள்ள சமுதாயத்தை உருவாக்குவதை நாங்கள் லட்சியமாகவும் கொண்டிருக்கிறோம். அந்தச் சமூக அமைப்பும், ஜனநாயகமும் எத்தகைய உருவில் அமைந்த போதிலும், அது எல்லோரும் அறிவு பெறுவதற்கும், சமமான சந்தர்ப்பம் பெறுவதற்கும் நிச்சயமாக வழி செய்யும்.

*—மாஸ்கோவில் வெளியிட்ட அறிக்கை, ஜூன் 22, 1955.*

* * *

## நேரான வழியே போதும்—சித்தாந்தம் தேவையில்லை

பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், அவர்களுக்குத் தேவையான பொருள்களைச் சேகரித்துக் கொடுப்பதும், நாகரிகமாக வாழ்வதற்குத்

தேவையான அம்சங்களை அமைத்துக் கொடுப்பதும், அவர்கள், பொருள்கள் மட்டுமின்றி, கலாசாரத்திலும் ஆன்மார்த்திக விஷயங்களிலும் மேம்பாடு அடைந்து முன்னேற அவர்களுக்கு உதவி செய்வதுமே நமக்கு இன்றுள்ள பிரசினை. நெடுங்காலத்திற்குப் பின்னால் என்ன ஆகும் என்பது எனக்குத் தெரியாது, ஆனால் அவர்களைச் சரியான பாதையில் திருப்பிவிட மட்டுமே நான் விரும்புகிறேன்; அப்படித் திருப்பிவிட எனக்கு உதவியாயிருப்பது எந்த 'இஸம்' ஆக இருந்தாலும், நான் கவலைப்படவில்லை, நான் நேர் வழியில் செலுத்த முடிந்தாலே போதும். ஒரு விஷயம் சரியாக வரவில்லை யென்றால், வேறு ஒன்றை முயற்சி செய்வோம். இந்த வழி அந்த வழி என்று நாம் சித்தாந்தம் வகுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. நம் வழியில் குறுக்கே எது வந்தாலும் அதைப் பொருட்படுத்த மாட்டோம், அல்லது அதை விலக்கி யெறிந்து விடுவோம்.

*— புதுடில்லி, இந்திய வர்த்தக, தொழில் சம்மேளனத்தில் சொற்பொழிவு, 4-3-49.*

* * *

## சரியான மார்க்கத்தில் திரும்பினால் போதும்

இந்தியா அதிகஆன்மீக வளர்ச்சி பெற்றது என்று நான் சொல்வதாகக் கொள்ள வேண்டாம்: மற்ற நாடுகளும் அதைப் போல் வளர்ச்சி பெற்றிருக்கலாம், அல்லது பெருமலிருக்கலாம். ஆனால் இந்தியாவின் ஆன்மீகக் கொள்கையைப் பற்றிப் பேசுதல் (நம் முன் உள்ள) பிரசினைகளைக் குழப்புவதாகவே ஆகும். ஆனால் இந்தியா, இன்றுள்ள நிலையில், தனக்குரிய வழிகளிலேயே உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைய முடியும், பொருளாதார ஆதிக்கியம் அல்லது வேறு

ஆதிக்கிய வெறியால் ஏற்படக் கூடிய கஷ்டங்களிலும், அபாயங்களிலும் சிக்கிக்கொள்ளாமலே இதை அடைய முடியும் என்று நான் நினைக்கிறேன். இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் ஒரு மோட்டார் கார், ஒரு சலவை இயந்திரம், அல்லது ஒரு குளிர்பதன சாதனத்தைப் பெற்றிருக்க வேண்டுமென்று நான் ஆத்திரப்படவில்லை. ஆயினும் சரியான மார்க்கத்தில் செல்வதற்கு நாம் ஊக்கமளிக்க வேண்டும்.

—புதுடில்லி, அபிவிருத்திக் கவுன்சிலில் சொற்பொழிவு,
7-1-56.

* * *

## சொத்துப் பறிமுதல் தவறானது

நான் சொத்துக்களுக்கு மதிப்பு வைப்பதில்லை. சொத்தைச் சுமந்து கொண்டு திரிவது ஒரு சுமையாக எனக்குத் தோன்றுகின்றது. வாழ்க்கைப் பாதையில் யாத்திரை செய்கையில் ஒருவர் அதிகச் சுமைகளை எடுத்துச் செல்லக் கூடாது, ஒரு காணி நிலத்துடனே, ஒரு கட்டத்துடனே அவர் தம்மைப் பிணைத்துக் கொண்டு நின்றுவிடக் கூடாது. சொத்துக்களில் இவ்வளவு அதிகமான பற்று வைத்திருப்பதை என்னால் பாராட்ட முடியவில்லை. ஆனால், நான் பாராட்டாவிட்டாலும், அந்தப் பற்று எங்கும் பரவி நிற்பதை நான் அறிந்திருக்கிறேன். இதே சமயத்தில் எதிர்க் கட்சி அங்கத்தினர் சிலர் நஷ்ட ஈடு கொடுக்காமலே சொத்துக்களை ஆர்ஜிதம் செய்யவேண்டும் அல்லது பறிமுதல் செய்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறும் கருத்து அடிப்படையிலேயே தவறானது. சொத்தின் ஆசையால் நான் இப்படிக் கூறவில்லை, பொதுவான நன்மையை மனத்திற் கொண்டே கூறுகிறேன். ஒருவர் முறை தவறி நடப்பது போன்று

குறிப்பிட்ட சந்தர்ப்பங்களைத் தவிர நீதியான முறையில் நஷ்ட ஈடு கொடுக்காமல் எதையும் ஆர்ஜிதம் செய்ய நான் விரும்பவில்லை.

—லோகசபைச் செற்பொழிவு, 11-4-55.

*   *   *

## நீண்ட காலப் பிரசினை

உலகத்தை அளாவிய முறையில் சோஷலிஸம் நிர்மாணமாகும் பொழுதுதான், உலக ஒழுங்கு முறையும் சமாதானமும் வரும். தொன்றுதொட்டு ஆழமாகப் பதிந்துள்ள வழக்கமான அபிப்பிராயங்களும், குணமும் அடிப்படையிலேயே மாற்றம் பெறுவது சோஷலிஸத்தில் அடங்கியுள்ள கருத்து. இதற்குப் போதிய காலம் தேவை.

—லோதியன் பிரபுவுக்கு எழுதிய கடிதம், 17-1-36.

*   *   *

## பொருளாதார அமைப்பின் விளைவே பலாத்காரம்

பலாத்காரம், ஏகபோக உரிமை, ஒரு சிலருடைய கைகளில் செல்வம் குவிதல் ஆகியவை இக் காலத்திய பொருளாதார அமைப்பின் விளைவுகளாகும். பெரிய அளவில் நடைபெறும் தொழிலால் அநீதியோ, பலாத்காரமோ ஏற்படுவதில்லை, ஆனால் அப் பெருந் தொழிலைத் தனிப்பட்ட முதலாளிகளும் பெருநிதி படைத்தவர்களும் தவருகப் பயன்படுத்திக் கொள்வதாலேயே அவை தோன்றுகின்றன. பெரிய இயந்திரம் மனிதனுடைய ஆற்றலைப் பன்மடங்கு பெருக்க உதவுகின்றது, அந்த ஆற்றல் ஆக்க வேலைக்கும் உதவும், அழிவு வேலைக்கும் உதவும், அது நன்மைக்கும் தீமைக்கும் பயன்படக் கூடியது. பெரிய இயந்திரத்தைத்

தவருக உபயோகிப்பதையும், பலாத்காரத்தையும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பை மாற்றுவ தன் மூலம் நாம் நீக்கிவிட முடியும் என்று நான் எண்ணுகிறேன். தனி உடைமையும், பொருள் சேர்க்கும் ஆசையும் அடிப்படையாயுள்ள சமூகமே பலாத்காரப் போட்டியை வளர்க்கின்றது. சோஷலிஸ அமைப்பில் இந்தத் தீமை ஒழிய வேண்டும், அதே சமத்தில் பெரிய இயந்திரத்திஞல் கிடைக்கும் நன்மை மட்டும் மிஞ்சியிருக்க வேண்டும்.

—கிருஷ்ண கிருபலானிக்கு எழுதிய கடிதம், *29-9-39.*

* * *

## தேசியமும் சமூக நீதியும்

மற்ற இடங்களைப் போல, இந்தியாவிலும் இரண்டு சக்திகள் வளர்ந்து வந்தன: அவை தேசியமும், சமூக நீதி பற்றிய ஆர்வமுமாகும். சோஷலிஸமும் மார்க்ஸிஸமும் சமூக நீதிக்குரிய ஆர்வத்தின் சின்னங்களாக விளங்கின. விஞ்ஞான ரீதியாக அவைகளில் பொதிந்திருந்த உண்மைகள் எப்படி யிருப்பினும், சாதாரண மக்களுக்கு அவை எல்லையற்ற உணர்ச்சியைத் தூண்டக் கூடியவைகளாக இருந்தன. ஐரோப்பாவின் மேற்குப் பகுதியிலே (இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளில்) ஆலைத் தொழில்கள் பெருகத் தொடங்கிய காலத்தில் இருந்த பயங்கரமான நிலைமைகளே முக்கியமாக மார்க்ஸின் மனம் வருந்தி உருகும்படி செய்தன. அந்தக் காலத்தில் உண்மையான ஜனநாயக அரசாங்கம் இல்லை, அரசியல் சட்டத்திற்கு அடங்கிக் கிளர்ச்சியின் மூலமாக மட்டும் மாறுதல்களைச் செய்வதற்கு வசதியில்லை. ஆகவே மாறுதல் ஏற்படப் பலாத்காரம் ஒன்றே வழியாகத் தோன்றிற்று. எனவே மார்க்ஸிஸம் பலாத்

காரப் புரட்சியை அடிப்படையாகக் கொண்டு சிந்தனை செய்வதைத் தவிர்க்க முடியவில்லை. பழைய ஐரோப்பிய சரித்திரத்திற்கும் அதுவே ஒத்ததாகவும் இருந்தது. ஆனால் அதற்குப் பின்னால், அரசியல் ஜனநாயகம் பெருகிப் பரவி விட்டது, அத்துடன் அமைதியான முறையிலேயே மாறுதல் செய்யக் கூடிய வாய்ப்பும் வந்து விட்டது. விஞ்ஞானமும் பொறி இயல் அறிவும் பெருவாரியான அளவில் முன்னேறி விட்டன, எல்லோரும் வாழ்க்கை வசதிகளைப் பெறக்கூடிய அளவுக்குச் செழிப்பும் ஏற்பட்டு விட்டது. முதலாளித்துவம்கூட இக் காலத்தில் பெரும் மாறுதலை அடைந்துள்ளது. ஆயினும் அதன் அடிப்படையான அமிசங்கள் இன்னும் இருக்கின்றன. அது ஏகபோக உரிமைகளுள்ள பெரிய ஸ்தாபனங்களை நிறுவவும், பொருளாதார சக்திகளைச் சில இடங்களிலேயே சேர்த்துக் குவித்துக் கொள்ளவுமே நாடுகின்றது. ஜனநாயக முறையிலுள்ள அரசாங்க அமைப்பு, ஸ்தாபன ரீதியாகக் கட்டுப்பட்ட தொழிலாளர் இயக்கம், இவைகளுக்கெல்லாம் மேலாக, சமூக நீதி வேண்டும் என்ற துடிப்பும், விஞ்ஞான வளர்ச்சியும், பொறி இயல் அறிவின் வளர்ச்சியும் சேர்ந்து இத்தகைய மாறுதலை உண்டாக்கி யிருக்கின்றன. முதலாளித்துவ நாடுகளிலும், மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அமைப்பதில் வெற்றி கண்டவைகளையும் நாம் பார்க்கிறோம்.

—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.

* * *

## பலாத்காரத்தால் வரும் வேகம்

சோவியத் யூனியனில் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களின் செழிப்பையும், விஞ்ஞானத்திலும்

பொறி இயல் அறிவிலும் மகத்தான முன்னேற்றத்தையும் நாம் காண்கிறோம், மேலும் மிகச் சுருக்கமான காலத்திலேயே இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது முக்கியமாகப் பலாத்காரத்தின் மூலமாகவே அடைந்த முன்னேற்றம் என்று சொல்வது சரியன்று; மற்ற (அரசாங்கங்களின்) முறைகளிலும் ஏராளமான பலாத்காரம் உண்டு. ஆயினும், குறிப்பிட்ட சூழ்நிலைகள் காரணமாக, சோவியத் யூனியனின் வளர்ச்சியில் ஏராளமான பலாத்காரமும், பலரை ஒழித்துக் கட்டுதலும் ஏற்பட்டதும் உண்மைதான் என்று நான் எண்ணுகிறேன். சோவியத் யூனியனின் பெருந் தலைவர்களே இந்தப் பலாத்காரத்தை மற்றவர்களைக் காட்டினும் அதிகமாகக் கண்டித்துள்ளனர்.

—டி டி

* * *

## சமூக நீதி

இன்று உலகில் முதன்மையான நோக்கங்களாயுள்ளவை சமூக நீதியும், சமத்துவமும்.

—டி டி

* * *

## வாழ்க்கை பற்றிய ஞானம்

முதலாளித்துவத்தின் ஆரம்பக் காலத்தில் உற்பத்திப் பெருக்கமே முக்கியம் என்று வற்புறுத்தப் பட்டது. இப்பொழுதும்கூடப் பெரும்பாலும் அவ்வாறே செய்யப்படுகின்றது. ஆனால் உற்பத்தி மட்டும் நம்முடைய பிரசினைகளைத் தீர்த்து வைக்க முடியாது என்பது நாளுக்கு நாள் தெளிவாகி விட்டது, அதனால் மட்டும் மகிழ்ச்சி பெருகி விடாது, திருப்தி ஏற்பட்டு விடாது.

செல்வங்களில் பேராசை, சொத்துக்கள் சேர்ப்பதில் ஆர்வம், மேலும் மேலும் செல்வங்களைக் குவித்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் ஆகியவற்ருல், ஊழல் பெருகி, போட்டியும் பொருமையும் மலிந்து விட்டன. சமூகத்தில் மக்கள் சமரசத்தோடு வாழ வேண்டும், அல்லது உலகம் முழுதுமே அப்படி வாழ வேண்டும், என்பது நம் இலட்சியமாளுல், பொருளுற்பத்தி மட்டும் அதை அடைந்துவிட முடியாது. அத ஞல் ஏற்றத் தாழ்வுகளே அதிகரிக்கின்றன. ஆகவே நியாயமான விநியோகமும், உற்பத்தியான பொருள்களை முறையாக உபயோகித்தலும் முக்கியமாகின்றன. முடிவாக ஆராய்ந்து பார்த்தால், ஒருவர் எப்படி வாழ வேண்டும், தமக்காகவும் தம் சமூகத்திற்காகவும் வாழ்க்கையை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதற்கு உரிய ஞானமே தேவை என்று ஏற்படுகின்றது. பொருளாதாரக் கொள்கையை, ஏதோ இயற்கையின் நியதியைப் போல, வியாக்கியானம் செய்யாமல், மானிட ஜீவன்களை மதித்து, நன்னெறிக்குரிய விதிகளைக் கொண்டு மதிப்பிட வேண்டும்.

— ஷூ ஷூ

* * *

## அவசரம் கூடாது

உடைமைகளைச் சமுதாய உடைமைகளாகச் செய்வதிலேகூட, நாம் முதலில் அடிப்படைகளிலிருந்து தொடங்க வேண்டும், வேலைகளை எடுத்துக் கொள்ள வேண்டிய வரிசையையும், நேரத்தையும் தீர்மானிக்க வேண்டும், தேசியப் பொருளாதார அமைப்பில் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு, சரியான சந்தர்ப்பம் வந்த பிறகுதான் அதைத் தேசப் பொதுவாக்க வேண்டும். இது எப்பொழுது சாத்தியப்படும் என்

பதை நான் சொல்ல இயலாது. நமக்குத் தேவை பணம் மட்டுமன்று. அதைவிட முக்கியமானது பயிற்சி பெற்ற தொழில் நிபுணர்களின் கூட்டம்.

—அரசியல் நிர்ணய சபையில் பேசியது, 17-2-1948.

* * *

## பயிற்சி பெற்ற நிபுணர்கள் தேவை

ஆராய்ந்து பார்த்தால், உண்மையில் தொழில் துறையிலும், வாழ்க்கையில் வேறு எந்தத் துறையிலும், தேவையாயிருப்பவர்கள் பயிற்சி பெற்ற நிபுணர்களே. இன்று இந்தியாவில் எந்தத் துறையிலும் நமக்குப் போதுமான பயிற்சி பெற்ற நிபுணர்கள் இல்லை. விஞ்ஞானம், தொழில் முதலிய ஒவ்வொரு துறையிலும் மிக உயர்ந்த திறமையுள்ளவர்களை நாம் பெற்றிருக்கிறோம். உலகிலேயே சிறந்த விஞ்ஞானிகளில் சிலரை நாம் பெற்றிருக்கிறோம். எனினும், அவர்கள் சிலரே. நமக்கு இன்னும் பலர் தேவை.

—ஷை ஷை

* * *

## கணம்தோறும் மாறிவரும் உற்பத்திக் கருவிகள்

நம்முடைய தீவிரப் புரட்சிக்காரர்களிலே பலர், இலட்சிய உலகைப் பற்றிச் சிந்தனை செய்த போதிலும், உலகப் பிரசினைகளைப் பரிசீலனை செய்வதில் மட்டும் விஞ்ஞான முறையில் பார்ப்பதில்லை. இது ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது. சோஷலிஸ்டுகளோ, கம்யூனிஸ்டுகளோ ஆகிய நண்பர்களில் பெரும்பாலோர் பொருளுற்பத்திக் கருவிகளும் முறையும் இப்போதுள்ள நிலையிலேயே இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதை அவர்கள் ஒப்புக்-

கொள்ள மாட்டார்கள். ' இல்லை, மாறி வருகின்றனவா ' என்று சொல்லுவார்கள். ஆனால், அவர்களுடைய பார்வைத் திட்டத்தை இன்றுள்ள உலக நிலையை அப்படியே வைத்துக் கொண்டு அமைக்கிறார்கள், இடை விடாமல் மாறி வரும் உலகில் புதிய உற்பத்தி முறைகள் வரும் என்றும், புதுக் கருவிகள் அமையும் என்றும் அவர்கள் கவனிப்பதில்லை. நில உடைமையை மாற்ற வேண்டும் என்று அவர்கள் எண்ணுகின்றனர். சரிதான், ஏனெனில் பழைய பண்ணையார்-குடியானவர் முறை மாறினால்தான் நாம் புதிய சமுதாயத்தை அமைக்க முடியும். அதுவரைக்கும் நல்லதுதான். நில உடைமை முறையை மாற்றுங்கள். தொழிற்சாலைகளை அரசாங்கமே வாங்கித் தொழில்களை நடத்த வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர், ஏனெனில் சோஷலிஸ்ட் பொருளாதார அமைப்பில் பெருந் தொழில்கள் அரசாங்கத்தின் உடைமையா யிருக்க வேண்டும். சரி, அதுவும் நல்லதுதான். ஆனால், பொருளுற்பத்தி முறைகளில் ஏற்படும் பெரிய மாறுதல்கள் இப்பொழுதுள்ள முறைகள் கருவிகளைப் பயனற்றவையாகச் செய்து விடக்கூடியவை, விவசாயத்திலும் இப்பொழுதுள்ள முறைகள் முற்றிலும் மாறிவிடக் கூடியவை, இவைகளைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. ' இதை ஏன் அரசாங்கம் எடுத்துக் கொள்ளக் கூடாது, அதை ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது? ' என்று அவர்கள் கேட்கிறார்கள். 90-சத விகிதம் பயனற்றுப் போன பொருள்களுக்காக ஏராளமான பணத்தைச் செலவழிக்க வேண்டுமா? நுண்ணிய பொறிகள் சம்பந்தப்பட்டவரை பழைய பயனற்றுப் போன இயந்திரங்களையும், தொழிற்சாலைகளையும், பிறவற்றையும் வாங்குவது பணத்தை முற்றிலும் வீணாக்குவதாகும். புதிய தொழிற்சாலைகளும் புதிய கருவிகளும் அமைக்கப்பெறாத வரையில், அவைகள் பயனளிக்கும் என்பது உண்மை

தான், நம்மிடம் ஏராளமான பணமும் வசதிகளும் இருந்தால், நாம் அவைகளையும் வாங்கிக் கொண்டு, வேறு தொழிற்சாலைகளும் அமைக்கலாம். ஆனால், வசதிகள் குறைவா யிருக்கும் பொழுது, நாம் பழைய கருவிகளை யெல்லாம் வாங்கி வைத்துக் கொள்வதைப் பற்றிச் சிந்திக்கக் கூடாது, மாறி வரும் புதுக் கருவிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும், புதிய முறைகளை அமைப்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்; ஆனால் பழையவற்றில் எங்காவது, ஏதாவது நமக்குத் தடையாக நின்றால், அதை மட்டும் வாங்க வேண்டும்.

—அரசியல் நிர்ணய சபையில் பேசியது, 7-4—1948.

* * *

## எப்படியும் தொழில்கள் நடக்கவேண்டும்

நாட்டில் மூலதனம் எளிதில் வெளி வருவதில்லை, தனியார் தொழிலுக்கோ, பொதுக் கடன்கள் முதலியவற்றிற்கோ மூலதனம் கிடைத்தல் அரிதா யிருக்கிறது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. இது உண்மைதான். இதற்குக் காரணம் இப்பொழுது ஏற்பட்டு வரும் மாறுதல்கள், நாம் செய்யும் அல்லது செய்யாது விடும் வேலைகளல்ல. தேசம் விலகி நின்று கொண்டிருக்க முடியாது. தொழில் அதிபர்களுக்கு நாம் போதிய இடமும் வாய்ப்பும் அளிப்போம். அவர்கள் தொழில்களை நடத்தா விட்டால், அவர்களை விட்டு விட்டு, நாமே முன்னேறிச் செல்ல வேண்டியதுதான். போதிய ஆதாயம் இராது என்றோ, வேறு ஏதாவது ஏற்பட்டு விடும் என்றோ, அவர்கள் தொழில்களை முறையாக நடத்தா விட்டால், நாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. மக்கள் காத்துக் கொண்டிருக்க முடியாது. நாம் நல்ல வாய்ப் பளிக்கிறோம், அவர்கள் தங்களால் முடிந்ததை யெல்லாம்

செய்யத் தவறினுல், வேறு யாராவது செய்துதான் ஆகவேண்டும், இடம் காலியாக இருக்க முடியாது.

—ஷெ ஷெ

* * *

## எதற்கும் குறை கூறுகிருர்கள்

இந்த நாடு முன்னேறி வருகிறது என்பதிலும், எதிர்காலத்தில் வேகமாக முன்னேறும் என்பதிலும் எனக்குத் துளியேனும் ஐயமில்லை. நம் நாட்டில் பல ஜனங்கள் இருக்கிருர்கள்: அவர்களுடைய முக்கிய மான தொழில் தங்கள் நாட்டைக் குறை கூற வேண் டும், தங்கள் மக்களைக் குறை கூற வேண்டும், அரசாங் கத்தைக் குறை கூற வேண்டும், அநேகமாக ஒவ் வொன்றையும் குறை கூற வேண்டும் என்பதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது!. (நல்லது, கெட்டதை ஆராய்ந்து கூறும்) விமரிசனம் எவ்வளவு வேண்டு மாளுலும் வரட்டும். எவ்வளவு பலமான, இடைவிடாத விமரிசனத்தையும் வரவேற்கிறேன். நமக்கு விமரி சனம் தேவைதான்; வேண்டுமாளுல் எதிர்க்கட்சியும் இருக்கட்டும், அதைப்பற்றிக் கவலையில்லை. ஆளுல் (உருப்படாது, உருப்படாது) என்ற அளவுக் கதிக மான அவநம்பிக்கை பற்றி எனக்குக் கவலைதான், இந்தியாவின் எதிர்காலம் பற்றி இப்படித் தவளை போல் கத்துவதும் கவலைதான். பிரத்தியட்சமான உண்மைகளைப் பாராமல், வெறும் நம்பிக்கை கொண் டிருப்பது தவறுதான்; ஆளுல், அவநம்பிக்கை கொள் வதும், பெரிய பெரிய அபாயங்கள் நமக்கு ஏற்பட்டு விடும் என்று கற்பனையில் காண்பதும் அதற்கு நிக ரான தவறுதான். நம்மை எதிர் நோக்கி வந்த சிரமங் களின் பாரமும், அளவுக்கு மிஞ்சிய குறை கூறலும் ஒரு புறமிருக்க, இந்தியாவையும் அதன் எதிர்காலத்

தையும் பற்றி எண்ணும் பொழுது, நான் உற்சாகமா கவே யிருக்கிறேன்.

—புதுடில்லியில் ஆற்றிய சொற்பொழிவு, **4-3-1949.**

*　　*　　*

# நமது
# சுதந்தர அரசாங்கம்

# 10

# நமது அரசியல் சட்டம்

## நமது அரசியலை நாமே உருவாக்குவோம்

இங்கே நான் எழுந்து நிற்கும் பொழுது, எத்தனையோ விதமான விஷயங்கள் என்மீது குவிந்து, என்னை அழுத்துவது போலத் தோன்றுகின்றது. நாம் ஒரு சகாப்தத்தின் முடிவில் இருக்கிறோம்; மிகவும் சீக்கிரத்திலே நாம் ஒரு புதிய சகாப்தத்தையும் தொடங்க இருக்கிறோம். என் மனம் இந்தியாவின் மகோன்னதமான பண்டைய வரலாற்றை நாடிச் செல்லுகின்றது, சென்ற 5,000 ஆண்டுகளாக உள்ள இந்தியச் சரித்திரத்தைப் பற்றிச் சிந்திக்கின்றது. அந்தச் சரித்திரத்தின் உதய காலமே உலக சரித்திரத்திற்கும் உதய காலம் என்று கொள்ளலாம். அன்று முதல் இன்றுவரை யுள்ள வரலாற்றில் என் மனம் இலயித்து நிற்கின்றது. அந்தப் பழமையெல்லாம் என் மீது கவிந்து எனக்கு உற்சாகமூட்டுகின்றது. அதே சமயத்தில் ஏதோ ஒரு விஷயம் எனக்குத் துயரத்தையும் அளிக்கின்றது. நான் அந்தப் பழம் பெருமைக்கு உரியவன்தானா? நிகழ்காலம் என்ற கத்தியின் முனையின் மேல் நின்றுகொண்டு, மாபெரும் பழமைக்கும், அதைவிடப் பெருமையுள்ள எதிர்காலத்திற்கும் இடையிலே நின்றுகொண்டு, அதிக உன்னதமான எதிர்காலத்தைப்பற்றி நான் சிந்தனை செய்யும்பொழுது எனக்கு ஓரளவு நடுக்கமுண்டாகின்றது, இந்தப் பெரும் பணியைப் பற்றி மலைப்பு உண்டாகின்றது.

இந்தியாவின் சரித்திரத்தில் விசித்திரமான ஒரு கட்டத்தில் நாம் இங்கே வந்து கூடியிருக்கிறோம். பழமையிலிருந்து புதுமைக்கு மாறும் இந்த நிலையில் ஏதோ மாய வித்தை இருப்பது போல் தோன்றுகின்றது, இரவு பகலாக மாறும்பொழுது ஏற்படும் மாயவித்தை போன்ற ஒன்றை நாம் காண்கிறோம். பகலில் மேகங்கள் கவிந்து மந்தாரமா யிருந்த போதிலும், பகல் பகல் தான். ஏனெனில் மேகங்கள் கலைந்த பின்பு, நாம் கதிரவனை மீண்டும் காண முடியும். இத்தகைய கருத்துக்களெல்லாம் காரணமாக, இந்தச் சபையில் பேசுவதற்கும், இதிலே என் கருத்துக்களையெல்லாம் சமர்ப்பிப்பதற்கும் எனக்கு ஓரளவு கஷ்டமா யிருக்கிறது. மேலும் ஆயிரக் கணக்கான இந்த ஆண்டுகளில் தோன்றி மறைந்த வீர தீரர்களையும், இந்தியாவின் சுதந்தரத்திற்காகப் பரம்பரை பரம்பரையாகப் போராடிய நம் தோழர்களையும் என் மனக்கண்ணாலே நான் கண்டுகொண்டிருக்கிறேன். இப்பொழுது நாம் இந்தப் பழமையின் எல்லையில் நின்றுகொண்டு. புது யுகத்தை வரவேற்பதற்காக உழைத்துக்கொண்டிருக்கிறோம்.........

இதற்கு முன்னால் (உலகிலே) நடந்துள்ள அரசியல் நிர்ணயசபைகளைப் பற்றியும் நான் சிந்தனை செய்கிறேன். அமெரிக்காவில் அமெரிக்க சமூகத்தை உருவாக்குவதற்காக அதன் தந்தையர்கள் (என்று போற்றப்படும் தலைவர்கள்) ஓர் அரசியலைத் தயாரிப்பதற்காகக் கூடியதைப் பற்றி நான் சிந்தனை செய்கிறேன். அவர்கள் தயாரித்த அரசியல் சட்டம் ஒன்றரை நூற்றாண்டுக் காலமாக நிலைத்து நிற்கின்றது, அந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பெருமையா யிருந்த அமெரிக்க தேசிய சமூகம் வளர்ந்து வந்துள்ளது. நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால்

நிகழ்ந்த மாபெரும் புரட்சி ஒன்றும் என் நினைவுக்கு வருகின்றது. அப்பொழுது, பெருமையும் அழகும் மிகுந்த பாரிஸ் நகரில் கூடிய அரசியல் நிர்ணயசபையும் என் மனத்தில் இடம் பெறுகின்றது. பாரிஸ் சுதந்தரத்திற்கான பல போராட்டங்களின் நிலைக்களனாக விளங்கிய நகரம். அங்கே கூடிய அரசியல் நிர்ணய சபை அரசரிடமிருந்தும், மற்ற அதிகாரிகளிடமிருந்தும் ஏற்பட்ட இடையூறுகளையெல்லாம் தாண்டி, மீண்டும் நடந்து வந்ததை நான் எண்ணிப் பார்க்கிறேன். இந்த இடையூறுகள் வந்ததுடன், சபை கூடுவதற்கு ஓர் அறைகூட மறுக்கப்பட்ட நிலையில், அந்த அரசியல் நிர்ணயசபையின் உறுப்பினர்கள், திறந்த வெளியில், ஒரு டென்னிஸ் மைதானத்தில் கூடி, தேச விசுவாசப் பிரமாணம் செய்துகொண்ட விவரம் இச்சபையின் அங்கத்தினர்களுக்கு நினைவிலிருக்கலாம். அந்தப் பிரமாணத்திற்கே 'டென்னிஸ் மைதானப் பிரமாணம்' என்று பெயர் வந்துவிட்டது. அரசர்களையும் மற்றவர்களையும் அந்தப் பிரதிநிதிகள் பொருட்படுத்தாமல், தாங்கள் மேற்கொண்ட பணியை நிறைவேற்றும் வரை அவர்கள் கலையாமலிருந்தனர். அத்தகைய தீவிரமான கடமையுணர்ச்சியுடனேதான் நாமும் இங்கே கூடியிருக்கிறோம் என்றும், இந்த அறையிலோ, அல்லது வயற்புறங்களிலோ, சந்தை அருகிலோ, எந்த இடத்திலாயினும் நாம் தொடர்ந்து கூடி, நாம் மேற்கொண்டுள்ள வேலையைப் பூர்த்தி செய்வோம் என்றும் நான் நம்புகிறேன்.

பிறகு என் மனம் மிகச் சமீபத்தில் நடந்த ஒரு புரட்சியையும், அதன் மூலம் தோன்றிய புதுமுறை அரசாங்கத்தையும் பற்றிச் சிந்தனை செய்கின்றது. அவைதாம் ரஷ்யாவில் நிகழ்ந்த புரட்சியும், அதிலிருந்து எழுந்த சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு

களின் யூனியனும். ரஷ்யா வன்மை மிகுந்த மற்ெருரு நாடு, வல்லமை மிகுந்ததோடு, இந்தியாவிலுள்ள நமக்கு அண்டை நாடாகவும் விளங்குவது.

எனவே நம் மனம் இந்தப் பெரிய முன்மாதிரிகளை நாடிச் செல்கின்றது, அவைகளின் வெற்றியிலிருந்து நாம் படிப்பினை பெறுகிறோம், அவைகளின் தோல்வி களைத் தவிர்க்கவும் விரும்புகிறோம். ஒருவேளை அவை களின் தோல்விகளை நாம் தவிர்க்க முடியாமற் போக லாம். ஏனெனில் மனிதர் முயற்சியிலேயே ஓரளவு தோல்வியும் சேர்ந்தே யிருக்கும். எப்படியிருந்த போதிலும், தடைகள் கஷ்டங்களை யெல்லாம் தாண்டி, நாம் நீண்டகாலமாகக் கனவு கண்டுகொண்டிருப்பதை நனவில் படைப்போம் என்றும், நாம் முன்னேறுவோம் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்.

—*அரசியல் நிர்ணய சபைச் சொற்பொழிவு.* ***13-12-1946.***

* * *

## அரசியல் சட்டம்

அரசியல் சட்டம் என்பது அரசாங்கங்களும் மக்களும் நடந்துகொள்ள வேண்டிய முறைகளின் தொகுப்பாகும். மக்களுடைய வாழ்க்கை இலட்சியங் கள், ஆசைகளுடன் தொடர்பில்லாத ஓர் அரசியல் சட்டம் பொருளில்லாமல் வெறுமையாகிவிடும்; மக்க ளின் இலட்சியங்களுக்கு அது மிகவும் குறைவா யிருந் தால், மக்களை அது கீழே இழுக்கும். மக்களின் மனங் களும் கண்களும் ஏறிட்டுப் பார்க்கும்படி அது உன்னத மான இலட்சியங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

—*அரசியல் நிர்ணய சபைச் சொற்பொழிவு.* ***8-11-1948.***

* * *

### சட்டம் எளிதில் மாற்றக்கூடியதாக இருக்க வேண்டும்

இன்று உலகம் கொந்தளிப்பா யிருக்கையில், நாமும் மிக வேகமாக மாறி வரும் நிலையில், இன்று நாம் செய்யக்கூடியவைகள் எல்லாம் நாளைக்கு முற்றிலும் அப்படியே பொருத்தமா யிருக்க முடியாது. ஆகையால் நாம் ஓர் அரசியல் சட்டத்தை உருவாக்கும்பொழுது, அது அடிப்படையான முறையாகவும், கூடியவரை செம்மையானதாகவும் இருக்கும்படி கவனிப்பதுடன், அது வளர்ந்து கொடுக்கக்கூடியதாகவும், குறிப்பிட்ட ஓரளவு காலம்வரை நாம் அதை எளிதாக மாற்றக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

* * *

—டி. டி.

# 11

## நமது அரசாங்கம்

---

### மக்களின் ஒத்துழைப்பு

ஜீவாதாரமான சமுதாயப் பிரசினைகளிலே கூடத் தலையிட்டு ஒழுங்குபடுத்தி வரும் ஓர் அரசாங்கம் வெறும் போலீஸ் ஆட்சி மட்டும் புரிந்து வரும் அரசாங்கத்திலிருந்து வேறு முறையில் செயற்பட்டு வர வேண்டும். போலீஸ் அரசாங்கம் அமைதியை நிலை நாட்டவும், வரி வசூல் செய்யவும், ஏறத் தாழ இவை போன்ற வேறு சில கடமைகளைச் செய்யவும் வேண்டியிருக்கும். இந்தக் காலத்தில் நாம் நுணுக்கமான சமூகப் பிரசினைகளையும், பொருளாதார விஷயங்களையும் தீர்த்துவைக்க வேண்டி யிருக்கின்றது. அந்தப்

பிரசினைகளை அரசாங்கம் ஓர் உத்தரவைப் பிறப்பித்துத் தீர்த்துவிட முடியாது. நேர்மையான சட்டங்கள் அவசியந்தான். அரசாங்க ஆட்சியும் நேர்மையாக நடைபெற வேண்டியது அவசியமென்றும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அத்தகைய பொருளாதார விஷயங்களில் நடவடிக்கைகள் ஓரளவுக்கு மேல் செல்ல முடியாது. மக்களுடைய செயலும், மக்களுடைய மனோபாவமும், பொதுவாக மக்கள் அளிக்கும் ஒத்துழைப்புமே அந்தப் பிரசினைகளை, இந்த வழியிலோ, அந்த வழியிலோ, ஒருவிதமாகத் தீர்த்து வைக்க முடியும். அரசாங்கத்தின் தலைசிறந்த சட்டங்களோ, நடவடிக்கைகளோ, மக்கள் வேலை செய்ய மனமில்லாதிருந்தாலும் பயனற்றுப் போகும், அல்லது போதிய பயன் அளிக்கமாட்டா. பலவீனமான ஓர் அரசாங்கம், மோசமாக ஆட்சி புரியும் ஓர் அரசாங்கம்கூட, மக்களின் ஒத்துழைப்பு இருந்தால் அதிகப் பயன்களை அளிக்க முடியும்.

—*லக்ஷ்மணபுரிப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவு,*
***28-1-1949.***

* * *

## மக்களின் தேவைகள்

சாதாரணப் பொதுமக்களின் விருப்பங்களை எந்த அரசாங்கமும் அலட்சியம் செய்ய முடியாது. ஜனநாயகமே அந்த விருப்பங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது, அவைகளை எந்த அரசாங்கமும் உதாசீனம் செய்தால், அதைத் தள்ளிவிட்டு வேறு அரசாங்கங்கள் ஆட்சிக்கு வந்துவிடும்.

—*புதுடில்லியில் இந்திய ரசாயனப் பொருள் உற்பத்தியாளர் சங்கத்தில் ஆற்றிய சொற்பொழிவு,* ***26-12-1950.***

* * *

## சாதாரண மனிதனின் நலமே முதன்மையானது

இந்தியாவில் சாதாரணப் (பிரஜையாயுள்ளவன்) மனிதன் தொன்று தொட்டே மிகவும் அவதிப்பட்டு வருகிறான், அவனுக்கு ஊழியம் செய்வது முக்கியம். அவனுடைய தேவைகளே முதன்மையானவை, அவைகளுக்குக் குறுக்கே நிற்பவைகளைப் பற்றிப் பின்னால் இரண்டாவதாகக் கவனித்துக் கொள்ளலாம். சாதாரண மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், அவன் முன்னேறுவதற்குப் பூரணமான வசதி செய்து கொடுப்பதும் அவசியமாகும்; அப்படிச் செய்வதுதான் நேர்மை, ஜீவகாருண்யம் என்பதுடன், அதுவே அரசியல் அறிவுமாகும். அவனுக்கு இந்த வாய்ப்பை அளிக்க மறுக்கும் எந்தச் சமுதாய அமைப்பும் கண்டனத்திற்கு உள்ளாகும், அதை மாற்றிவிட வேண்டும்.

—புதுடில்லியிலிருந்து செய்த ரேடியோ சொற்பொழிவு,
*14-2-1948.*

* * *

## இந்தியா பிறநாடுகளின் நகலா யிருக்கக் கூடாது

இந்தியா அமெரிக்க (அரசாங்க) முறையையோ, அல்லது ரஷ்ய முறையையோ, அல்லது சீன முறையையோ, அல்லது பிரிட்டிஷ் முறையையோ, அப்படியே பின்பற்றி, அதேபோல அமைத்துக் கொள்ளுமானால், நான் இந்தியாவை அதிகமாக மதிக்க மாட்டேன். அப்படியானால் அது இந்தியாவாக இராது, வேறு ஒன்றின் நகலாகவே யிருக்கும். இதனால் நான் அமெரிக்க, பிரிட்டிஷ் முறைகளையோ, பிற முறைகளையோ மதிக்கவில்லை யென்று பொருளாகாது. நான் சொல்வது இதுதான்: நாம் நம் சொந்தச் சிந்தனை

யுடன் செயற்பட வேண்டும். ஒரு நபர் பல திறப்பட்ட அமிசங்களையும் ஒன்றுசேர்த்துக் கொண்டு, தான் கம்பீரமாக விளங்குவதற்குப் பதிலாக, வேறொருவரின் நகலாக விளங்கினால் என்ன நன்மை யுண்டாகும், ஒரு தேசமே அப்படி நகலாக விளங்கினால் என்ன பயன்?

—புதுடில்லியில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசியது, 13-11-1954.

* * *

## வாழ்க்கையின் மாறுதல்களுக்கு ஏற்றபடி சட்டங்களும் மாறவேண்டும்

சட்டங்களின் ஆட்சி வாழ்க்கையின் பிரசினைகளை விட்டு ஒதுங்கி வேறுவிதமாக நடக்க முடியாது, இன்று முக்கியமில்லாமல், நேற்று முக்கியமா யிருந்த பிரசினைகளுக்குத் தீர்வு காண்பதாக அது இருந்து பயனில்லை. சட்டத்தின் இயற்கையே மாற்றமில்லாது ஒரே நிலையில் இருத்தலாகும், ஆனால் மாறிவரும் உலகில் எதுவுமே வளர்ச்சியில்லாமல் நிலையாக இருக்கமுடியாது. அடிப்படையான தத்துவங்கள் நிலையாக இருக்க முடியும், ஆனால் அவைகளைத் தற்கால நிலைமைகள் பயன்படுத்துவதற்கு அவை மாறியாக வேண்டும். ஒரு சமூகம் சட்டத்தின் ஆட்சிக்குள் இருந்தாலன்றி, அது கட்டுப்பாடில்லாத அராஜக நிலையில் வாழ்வதாகும். சட்டத்தின் ஆட்சி நடைபெற வேண்டுமானால், சட்டத்தை அமல் நடத்தச் சுதந்தரமுள்ள நீதிபதிகள் இருக்கவேண்டும் என்பது தெளிவு. இல்லாவிட்டால், சட்டத்திற்காகவே சட்டத்தைப் பாதுகாத்தல் என்பது மாறி, வேறு நன்மைகளை நாடிச் சட்டம் தவறாக உபயோகிக்கப்படும். இந்த இரண்டு அடிப்படையான உண்மைகளும் தெளிவாய்த் தெரிகின்றன. சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தி ஆதரித்து வரவேண்டு

மென்ற காங்கிரஸின் நோக்கம் நாகரிக வாழ்க்கையைக் காப்பாற்ற வேண்டும் என்று பொருள்படும்......

விஞ்ஞான அபிவிருத்தியாலும், நுணுக்கமான கருவிகளின் பெருக்கத்தினுலும் சமுதாயம் மிகவும் மாறுதலடைந்தது. சென்ற இருநூறு ஆண்டுகளுக்கிடையில் ஜனங்களுடைய வாழ்க்கையும், அவர்கள் ஒருவரோடொருவர் பழகும் முறைகளும், அவர்களுடைய பிரசினைகளும், தொழிலும், உற்பத்தி முறைகளும், எல்லாமுமே மாறிவிட்டன, இதற்குக் காரணம் தொழிற் புரட்சி. சட்டமும் இந்த மாறுதல்களோடு ஒட்டிப் போகும் முறையில் மாறுதலடைந்து வந்துள்ளது.

இந்த 'ஜெட்' விமானக் காலத்தில், அல்லது விண்வெளி யாத்திரை செய்யும் சகாப்தத்தில், மாறுதல்கள் அதிதீவிர வேகத்தில் ஏற்பட்டு வருகின்றன. அவற்றுடன் புதிய பிரசினைகளும் வந்து சேருகின்றன. சட்டத்தின் ஆட்சி மிகவும் முக்கியமானது, ஆனுல் அது வாழ்க்கையில் சட்டத்தோடு நெருங்கியே செல்ல வேண்டும் என்று நாம் கருத வேண்டி யிருக்கிறது. அது விலகி வேறு பக்கமாகத் திரும்பிச் செல்ல இயலாது. அது இன்றுள்ள பிரசினைகளை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இப்படி யிருந்த போதிலும், சட்டம் அடிப்படையான மூலாதாரமான விஷயத்தின் சின்னமாக விளங்குவதால், அது மாருமலிருக்க முயல்வதே அதன் இயற்கை. அது அடிப்படையான அமிசத்தையும் விடாமல், மாறவும் வேண்டும்; ஏனெனில் மாறிவரும் உலகில், அது மட்டும் மாருமலிருக்க முடியாது.

*—புதுடில்லியில் நிகழ்ந்த சட்ட நிபுணர்களின் சர்வதேச காங்கிரஸில் சொற்பொழிவு, 6-1-1959.*

*  *  *

## அரசன் தெய்வாம்சமா?

மனிதர்களை ஆள்வதற்குத் தான் தெய்விகமான உரிமை பெற்று இங்கு வந்திருப்பதாக எவனுவது ஒருவன் இன்று சொல்லத் துணிந்தால், அது நிந்தைக் குரிய விஷயமாகும், அவன் எவ்வளவு உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருப்பவனுயினும், இதுதான் விஷயம். எந்த மனிதனும் இம்மாதிரிக் கற்பனை செய்துகொள்வதைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அரசர்களின் இந்தத் தெய்விக உரிமையைப் பற்றி நாம் எவ்வளவோ கேட்டிருக்கிருேம்; பழைய வரலாறுகளில் இதைப் பற்றி ஏராளமாகப் படித்திருக்கிருேம்; இதைப் பற்றிக் கடைசி முறையாகக் கேட்டு முடிந்தாகி விட்டது, இந்தக் கொள்கையைப் பல சகாப்தங்களுக்கு முன்பே முடித்துக்கட்டிப் பூமிக்குள்ளே ஆழமாய்ப் புதைத்தாகி விட்டது என்று நாம் எண்ணிக் கொண்டிருந்தோம். இந்தியாவிலோ அல்லது வேறிடத்திலோ, யாராவது ஒரு நபர் அந்த உரிமையை இன்று கோரிஞல், அவர் இந்தியாவின் தற்கால நிலையை உணராதவராவார். அத்தகைய நபர்களுக்கு நான் தெளிவாய்க் கூறிக்கொள்வது இதுதான்: அவர்களுக்கு மரியாதை காட்டவேண்டுமாஞல், அத்தகைய கருத்தை அவர்கள் குறிப்பாகக்கூடக் காட்டக் கூடாது, பேசுவது அறவே கூடாது. இந்த விஷயத்தில் விட்டுக் கொடுத்துச் சமாதானம் செய்துகொள்வது என்பதே நிச்சயமாய்க் கிடையாது.

— *அரசியல் நிர்ணயசபைச் சொற்பொழிவு*, **22-1-1947.**

* * *

# 12

## பிரிட்டிஷ் காமன்வெல்த்

### இந்தியாவும் பிரிட்டிஷ் காமன்வெல்தும்

சென்ற இருபது ஆண்டுகளுக்கு மேலாக, நான் கோடிக் கணக்கான என் நாட்டு மக்களுடன் சேர்ந்து; இந்தியாவின் பரிபூரண சுதந்தரம் பற்றிச் செய்து கொண்டுள்ள சபதங்களின் வாசகத்திற்கும் பொருளுக்கும் சிறிதும் முரணின்றி நடந்துள்ளேன் என்பதைப் பற்றி எனக்குத் துளியளவு கூடச் சந்தேகமில்லை. லண்டனில் நான் எடுத்துக் கொண்ட நடவடிக்கை இந்தியாவின் கௌரவத்திற்கோ, நன்மைக்கோ, யாதொரு தீங்கும் இழைக்காததோடு, அது அந்தக் கௌரவத்தை மாசு படாமல் பளபளப்பாகச் செய்துள்ளது, உலகில் இந்தியாவின் செல்வாக்கையும் உயர்த்தியுள்ளது.

இயற்கையில் நான் இந்தியாவின் நன்மைகளையே நாடினேன், ஏனெனில் அதுவே என் முதற் கடமை. அந்தக் கடமையை நான் எப்பொழுதும் உலகின் நன்மையுடன் பொருத்திப் பார்ப்பதே என் வழக்கம். இந்தப் பாடத்தைத்தான் நமது குருநாதர் நமக்குப் போதித்தார், எப்பொழுதும் இந்தியாவின் சுதந்தரத்தையும் கௌரவத்தையும் காப்பாற்றிக் கொண்டு, மற்றவர்களுடன் சமாதானத்தையும், நட்பையும் பெறும் மார்க்கங்களைக் கைக்கொள்ளும்படி அவர் நமக்குச் சொல்லியிருக்கிறார். இன்று உலகம் பூசல் நிறைந்ததாக இருக்கின்றது, அடிவானத்திலே பெரிய அபாயக் குறி தெரிகின்றது. மனிதர்களின் இதயங்களில் துவேஷமும், பயமும், சந்தேகமும் தோன்றி,

அவர்களுடைய பார்வையை மறைத்துக் கொண்டிருக்கின்றன. உலகில் இந்த நெருக்கடியை ஓரளவு குறைக்கக் கூடிய ஒவ்வொரு நடவடிக்கையும் வரவேற்கத் தக்கது. இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் உள்ள பழைய போராட்டம், இரு நாடுகளுக்கும் கௌரவமான முறையில், இப்படி நட்பு முறையில் சமரசமா யிருப்பது எதிர்காலத்திற்கு ஒரு நல்ல சூசகம் என்று நான் எண்ணுகிறேன். உலகிலே பிரிவினைச் சக்திகள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளோடு நாமும் சேர்ந்து கொண்டு பிளவுகளைத்தான் அதிகப்படுத்த முடியும்; ஆனால் பழைய புண்களை ஆற்றவும், ஒத்துழைப்பை வளர்க்கவும் கூடிய சந்தர்ப்பங்களையே நாம் வரவேற்க வேண்டும்.

முற்காலத்தில் பலதிறப்பட்ட கலாசாரங்களும் வந்து கலந்து கொள்ளக்கூடிய நிலைக்களனாக விளங்கும் பாக்கியம் இந்தியாவுக்குக் கிடைத்திருந்தது. இப்பொழுதும், பிற்காலத்திலும், இன்று உலகுக்கு இன்றியமையாததாக விளங்கும் சமாதானத்தை நிலைநாட்டி, போராடும் நாடுகளை ஒன்று சேர்க்கும் பாலமாக விளங்கக் கூடிய பேறும் அதற்குக் கிடைக்கக் கூடும். இந்தியா அமைதிக்காகவும் சுதந்தரத்திற்காகவும் தன் கொள்கையை நன்கு நிறைவேற்றிக் கொள்ளவும், உலகிலுள்ள ஆவேஷங்களையும், நெருக்கடிகளையும் குறைக்கவும் உதவும் என்ற நம்பிக்கையிலேயே நான் லண்டன் ஒப்பந்தத்திற்கு இசைந்தேன். நம் நாட்டிற்கும் உலகத்திற்கும் ஏற்ற முடிவுகள் என்று நம்பியே, லண்டன் பிரதம மந்திரிகள் மகாநாட்டின் முடிவுகளோடு நானும் கலந்து கொண்டேன்.

—புது டில்லியிலிருந்து ஒலிபரப்பிய சொற்பொழிவு,

***10-5-1949.***

* * *

## சுதந்தரத்துடன் ஒத்துழைப்பு

காமன்வெல்தோடு நாம் சேர்ந்திருப்பதில், அது நம்மை எந்த விதத்திலும் கட்டுப்படுத்துவதா யில்லை. சென்ற இரண்டு மூன்று வருட அனுபவத்திலும் அப்படி ஏற்படவுமில்லை. அது நமக்குச் சில நன்மைகளையும் அளித்துள்ளது. அவைகளுக்காக நாம் எந்த வகையிலும் கடன் பட்டிருக்கவுமில்லை. கனம் அங்கத்தினர்களிலே சிலருக்கு நாம் காமன்வெல்திலே சேர்ந்திருப்பது பிடிக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். அவர்களுடைய வெறுப்பு வருந்தத் தக்கது. நான் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. ஏனெனில் நாம் நமது நாடு பெறக்கூடிய நன்மைகளை மட்டுமே கவனிக்க வேண்டியிருக்கிறது. இலங்கையும் தென் ஆப்பிரிகாவும் காமன்வெல்தின் உறுப்புக்களா யிருக்கின்றன. அந்த நாடுகளில் நடைபெறுகிற காரியங்களை நாம் ஏன் சகித்துக் கொண்டிருக்கிறோம் என்று நம்மைக் கேட்பது நியாயமான கேள்விதான். தத்துவம் காரணமாக நாம் காமன்வெல்திலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்று எந்த அங்கத்தினர்களாவது கோரினால், அவர்களுக்கு நான் சொல்லக்கூடிய பதில், அவர்கள் எந்தக் காரணத்திற்காக விலக வேண்டுமென்று சொல்கிறார்களோ, அதே காரணத்தால்தான் நான் சேர்ந்திருக்க வேண்டுமென்று சொல்கிறேன். என் கருத்தை நானே விளக்கி விடுகிறேன். காமன்வெல்தின் முக்கியமான பெருங் கொள்கைகளை வகுப்பதில், நாம் நம் செல்வாக்கை உபயோகிப்பதற்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன. வெளியே நமக்கு இவ்வளவு வாய்ப்பு இராது. காமன்வெல்தில் இருத்தல் என்பது ஆண்டுக்கு ஓரிரு முறைகள் சந்தித்துப் பேசித் தகவல்களைக் கலந்து கொள்வது என்பதுதான். இதனால் நமக்குக் கிடைக்கும் நன்மைகளுக்காக நாம் எதுவும் அதிக

மாய்க் கொடுத்துவிடவில்லை. காமன்வெல்திலுள்ள நாடுகளில் எதிலாவது தலையிட உரிமை கொண்டாடி ஞல், பிறகு நான் காமன்வெல்தில் இருக்க விரும்ப மாட்டேன். கனம் அங்கத்தினர்களில் எவரேனும் காமன்வெல்த் நாடுகள் பொதுவான யுத்தத் திட்டங் களோ, தற்காப்புத் திட்டங்களோ கொண்டிருக்கலாம் என்று எண்ணிஞல், அது முற்றிலும் தவறு என்று நான் அவர்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். தற்காப்புத் திட்டங்கள் பற்றி நாங்கள் காமன்வெல் தில், தனியாகவோ கூட்டாகவோ, ஒரு போதும் விவாதிக்க வில்லை.

*—பார்லிமெண்டுச் சொற்பொழிவு, 12-6-1952.*

* * *

## இருக்கிற ஸ்தாபனத்தை உடைக்க வேண்டாம்

நாம் காமன்வெல்தில் சேருவதன் காரணம், அத ஞல் நமக்கு நன்மையுண்டாகுமென்றும், நாம் உல கிலே முன்னேறச் செய்ய வேண்டுமென்று விரும்பும் சில இயக்கங்களுக்கு நல்லது என்றும் கருதுவதுதான். காமன்வெல்தின் மற்ற நாடுகளும் நம்மை அதில் இருக் கும்படி விரும்புகின்றன. ஏனெனில், அதஞல் அவை களுக்கும் நன்மையுண்டு என்று அவைகள் நினைக்கின் றன. காமன்வெல்திலுள்ள நாடுகள் பயனடைவதை அவைகள் யாவும் உணர்ந்துள்ளன. அதஞலேயே அவைகள் சேர்ந்துள்ளன. அதே சமயத்தில், ஒவ்வொரு நாடும் தன் போக்கில் போவதற்கு முற்றிலும் உரிமை உடையது என்பது மிகவும் தெளிவாக்கப் பெற்றுள்ளது. இன்றைய உலகில் எத்தனையோ பிரிவுச் சக்திகள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. எந்த நேரத்தி லும் யுத்தம் தொடங்கும் நிலையில் நாம் நிற்கிறோம். இந்த நிலையில், இருக்கிற கூட்டு ஸ்தாபனம் ஒன்றை

உடைத்தெறிவதை ஆதரிப்பது நன்மையாகாது. அதி லேயுள்ள தீமையான பகுதியை உடைத்தெறியலாம்; நம் வளர்ச்சிக்குத் தடையாயுள்ள எதையும் தகர்த் தெறியலாம். ஏனென்ருல் ஒரு தேசத்தின் வளர்ச்சியை எதுவும் தடுப்பதை எவரும் விரும்பமாட்டார். அவ்வா றின்றி, ஒரு சங்கத்தின் தீய பகுதிகளை உடைத்தெறி வது தவிர, இந்த உலகத்தில் நன்மை செய்யக் கூடிய கூட்டுறவான ஸ்தாபனம் ஒன்றை உடைப்பதைக் காட்டிலும் வைத்துக் கொள்வதே நலமாகும்.

*—அரசியல் நிர்ணய சபையில் சொற்பொழிவு, 16-5-1949.*

* * *

## காமன்வெல்தும் உலக சமாதானமும்

காமன்வெல்த் உறவு நமது பாதையில் சிறிதளவு கூடத் தடையாக நிற்கவில்லை. மற்ற காமன்வெல்த் நாடுகளின் கொள்கைகளிலிருந்தும் செயல்களிலிருந் தும் நாம் அடிக்கடி வேறு பட்டிருந்துள்ளோம். அவை களுடன் விவாதம் செய்து, நாம் வேறு அபிப்பிராயங் கள் கொண்டோம். சமீபத்தில் பாக்தாத் ஒப்பந்தம் ஏற் பட்டுள்ளது. அது துரதிருஷ்டமானது என்றும், அதில் சேர்ந்துள்ள நாடுகளின் வருந்தத்தக்க செயலாகும் என்றும் நாம் கருதுகிறோம். நமது நோக்கப்படி வருந் தத்தக்கது என்பதன்று, சமாதானத்திற்கும் பாதுகாப் பிற்கும் குந்தகமானது என்பதாலேயே அவ்வாறு கருதுகிறோம். அதனால் பெரிய விளைவுகள் ஏற்படவும் கூடும். இத்தகைய நடவடிக்கை எடுக்கப் பெற்ற போதிலும், இது நம் கொள்கையைப் பாதிக்கவில்லை. காமன்வெல்துடன் நாம் கொண்டுள்ள உறவு சமா தானம், ஒத்துழைப்பு ஆகிய மேலான காரியங்களுக்கு மிகவும் உதவியாக இருந்துள்ளது.

*—லோகசபைச் சொற்பொழிவு, 5-12-1955.*

* * *

## காமன்வெல்த் ஒரு வழிகாட்டி

பார்லிமெண்டரி முறையில் சில ஸ்தாபனங்களை அமைப்பதைக் காட்டிலும் முக்கியமானது, அவைகளில் அடங்கியுள்ள தன்மை அல்லது தத்துவம். காமன்வெல்த் அத்தகைய ஜனநாயக ஸ்தாபனங்களின் பிரதிநிதியாக விளங்குவது, அதில் ஜனநாயகப் பண்பு அதிகமாயுள்ளது.

நாம் எந்த நேரமும் ஏராளமான நெருக்கடிகளைத் தாங்க வேண்டி யிருக்கின்றது. முன்னால் நாம் அவைகளைத் தாங்கிச் சமாளித் திருக்கிறோம். காமன்வெல்தும் சிதறி விடாமல் காத்திருக்கிறோம். எதிர்காலத்திலும் நாம் அவைகளைத் தாங்கிக் கொள்ள வேண்டி யிருக்கும். ஏனெனில் உலகில் சங்கடங்களும் சண்டைகளும் நிறைந்திருக்கின்றன, அவற்றுடன் அச்சமும் சந்தேகமும் தொடர்ந்து பெருகின்றன. அந்நிலையில் நாம் ஜனநாயகப் போக்கைக் காத்து நிற்பது எளிதான காரியமன்று. ஜனநாயகம் என்பது சமாதானமான சகவாழ்வு. நம்மைப்போலவே இருப்பவர்களுடன் மட்டும் சகவாழ்வு என்றில்லாமல், நம்மிலிருந்து மாறுபட்டிருப்பவர்களுடனும் சகவாழ்வு என்பதாகும். ஒத்த நாடுகள் சகவாழ்வு வாழ்தல் எளிதாகும். அதில் பிரசினைகளில்லை. அதற்கு முயற்சி எதுவும் தேவையில்லை. ஆனால், அபிப்பிராயங்களில் மாறுபட்டு, வாழ்க்கை முறைகளில்கூட மாறுபட்டிருக்கும் நிலையிலும், நாம் சகிப்புத்தன்மையுடன், ஒருவரை யொருவர் புரிந்து கொள்ள முயற்சி செய்தலே சமாதான சகவாழ்வு.

காமன்வெல்த் நாடுகளுக்குள் ஒற்றுமைகள் அதிகமிருக்கின்றன. அவைகள் எனக்குப் பிரமாதமாகத் தோன்றவில்லை; ஆனால், அவைகளுக்குள் ஏற்படும்

வேற்றுமைகள், கூட்டமாகக் கூட முடியாமலும், அதிகமாக ஒத்துழைக்க முடியாமலும் தடை செய்ய வில்லை. அந்த அமிசம்தான் எனக்குப் பெரிதாகப் படு கின்றது. இது காமன்வெல்துக்கு நன்மையானால், உலக அரங்கிலே செயற்படும் சபைகளுக்கும், வேற்று மைகள் அதிகமா யிருப்பதால் ஒத்துப்போக இயலாம லுள்ள மற்ற நாடுகளுக்கும் நன்மையேயாகும்.

*—புது டில்லியில் காமன்வெல்த் பார்லிமெண்டரி மகாநாட்டில் சொற்பொழிவு, 3-12-1959.*

* * *

# 13

# நமது வெளிநாட்டுக் கொள்கை

---

## நாம் வெற்றியடைந்துள்ளோம்

**ந**மது அரசாங்கமும், ஓரளவு முக்கியமாக நானும் பெரிய பாரங்களைத் தாங்கவேண்டி யிருந்தது. இன் னும் தாங்க வேண்டி யிருக்கிறது. நமக்கு எதிரே மேலும் பெரிய கஷ்டங்கள் காத்துக் கொண்டிருக்கின் றன. இருந்த போதிலும், நான் உண்மையாக உணர் வது என்ன வென்றால், நாம் வெற்றியே அடைந்துள் ளோம், தோல்வியன்று என்பதே. வெகு தூரத்திற்கு அப்பால் எட்டி யோசிக்காமல், சமீப எதிர் காலத்தை மட்டும் பார்த்தால், நமக்கு நம்பிக்கையே யிருக்கின் றது. இந்தியாவின் வரலாற்றில் இந்த மகோன்னத மான நிலையில் அதற்குத் தொண்டு செய்வதில் பங்கு பெறும் பாக்கியம் கிடைத்ததற்காக அந்தரங்கத்தில் எனக்கு மகிழ்ச்சியே எற்படுகின்றது.

*—அரசியல் நிர்ணய சபைச் சொற்பொழிவு, 8-3-1949.*

* * *

## இந்தியாவின் முக்கியத்துவம்

பூலோகப் படத்தைப் பாருங்கள். மத்தியக் கிழக்கைப் பற்றிய ஏதாவது பிரசினையை நீங்கள் பரிசீலிக்க நேர்ந்தால், இந்தியாவையும் கவனித்தாக வேண்டும். தென்-கிழக்கு ஆசியா பற்றிய பிரசினைக்கு நீங்கள் இந்தியாவைப் புறக்கணிக்க முடியாது. மத்தியக் கிழக்கு மேற்காகத் தென்-கிழக்கு ஆசியாவுடன் சம்பந்தப்பட்டிருந்தாலும், இரண்டும் இந்தியாவுடன் தொடர்புள்ளவை.

—ஷெ ஷை

* * *

## வெளிநாடுகளின் தொடர்பு

நம் ஸ்தானிகர் ஆலயங்கள் உலகம் முழுதும் பரவி வருவதைப் பற்றி அடிக்கடி குறை சொல்லப் படுகிறது. ஒருவேளை இது நம் பெருமையை விளம்பரப் படுத்திக் கொள்வதற்கான ஒரு செயல் என்று கருதப் படுகின்றது போலும். என்னிடம் எப்பொழுதும் ஒரு குறை இருந்து வருவது போலவும் சில சமயங்களில் கேள்விப் பட்டிருக்கிறேன்; நான் இந்தியாவிலுள்ள கஷ்டங்களை மறந்து விடுவதாகவும், அவைகளை எண்ணிப் பார்ப்பதில்லை என்றும், உள்நாட்டுப் பிரசினைகளைக் கவனிப்பதில்லை என்றும், திம்புக்துவிலிருந்து பெரு வரையிலும் ஸ்தானிகர்களை அனுப்புவதிலேயே கருத்தா யிருக்கிறேன் என்றும் கூறப்படுகின்றது. இந்தச் சபை இதைப் பற்றிப் பரிசீலனை செய்து தெளிவு பெறுவது நலமென்று நான் கருதுகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் திம்புக்துவையும் பெருவையும் பற்றிப் பேசிவிடுதல் அறிவின் சிகரம் என்று எனக்குத் தோன்றவில்லை. இந்தியா எப்படியிருக்கிறது, அதற்கு உள் நாட்டில் என்ன தேவை

என்பவைகளைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளா மையே இதற்குக் காரண மென்று தெரிகின்றது. நாம் வெளியேறிச் சென்று, வெளி நாடுகளில் நம் ஸ்தாப னங்களை அமைத்துக் கொள்ளா விட்டால், வேறு எவர் களாவது நம் நன்மைகளை ஆங்காங்கே பாதுகாத்து வரவேண்டும். அவர்கள் எவர்கள்? பாகிஸ்தான் பல நாடுகளில் செய்துள்ளது போல, நாமும் மற்ற நாடு களில் இங்கிலாந்தே நம் நலன்களைக் கவனித்து வரச் சொல்லப் போகிறோமா? இதைத்தான் நாம் சுதந்தரம் என்று கருதுகிறோமா? சுதந்தரம் என்பது என்ன? முக்கியமாகவும் அடிப்படையாகவும் அது வெளிநாட்டு உறவுகளையே பொறுத்தது. அதுதான் பூரண சுதந் தரத்திற்கு அடையாளம். மற்றதெல்லாம் ஸ்தல சுயாட்சியாகும். வெளிநாட்டு உறவுகள் நம் கையை விட்டுப் போய் விட்டால், வேறொருவர் வசம் ஒப் படைக்கப்பட்டால்; அந்த அளவுக்கு நம் சுதந்தரம் குறையும். நாம் சுதந்தர நாடாக இருந்தால், அந்நிய உறவுகளை நாமே வைத்துக் கொள்ள வேண்டும். உண்மையில், நாம் அவைகள் இல்லாமல் இருக்க முடி யாது. வெளி உறவுகள் வைத்துக் கொண்டால், ஆங் காங்கே நமக்கு ஸ்தாபனங்களும் இருக்க வேண்டும். வெளி உறவுகளில் வர்த்தகம், தொழில் முதலியவை களும் சேர்ந்திருந்த போதிலும், அவைகளை வாணிபத் திற்காகக் கிளை நிலையங்கள் அமைப்பது போல அமைத் துவிட முடியாது. அப்படித்தான் நம் தொழில் அதி பர்கள் சிலர் எண்ணுகின்றனர். அது மிகவும் நுணுக்க மான, கஷ்டமான காரியம். மனிதர்களின் மனப் பான்மை, சமுதாயங்களின் மனப்போக்கு, நாடுகளின் சரித்திரம், கலாசாரம், மொழி முதலியவைகளை யெல் லாம் கவனித்துச் செயல் புரிய வேண்டியதாகும்.

—ஷி ஷி.

* * *

## அமைதி, சமத்துவம், சுதந்தரம்

நாம் உலக விஷயங்களில் எதற்காக அக்கறை கொள்கிறோம்? எந்த நாட்டின் மீதும் நாம் ஆதிக்கியம் செலுத்த விரும்பவில்லை. எந்த நாட்டின் உள் விவகாரங்களிலோ, வேறு விவகாரங்களிலோ, நாம் தலையிட விரும்பவுமில்லை. உலக விஷயங்களில் நமக்கு முக்கியமான தேவை சமாதானம், இன வேறுபாடுகளின்றிச் சமத்துவம் நிலவ வேண்டும், இன்னும் அடிமைப் பட்டிருக்கும் மக்கள் விடுதலை பெற வேண்டும். மற்றைப்படி நாம் உலக விவகாரங்களில் தலையிட விரும்ப வில்லை, மற்றவர்கள் நம் விவகாரங்களில் தலையிடுவதையும் விரும்பவில்லை. அப்படித் தலையீடு ஏதாவது ஏற்பட்டால், அது இராணுவம், அரசியல், அல்லது பொருளாதாரம் ஆகிய எந்த முறையில் இருந்த போதிலும், நாம் அதை எதிர்த்து நிற்போம்.

—டெ. ஷை

* * *

## கூட்டுச் சேராக் கொள்கை

உலக உறவு பற்றி நாம் ஒரு கொள்கையை வகுத்துக் கொள்ள முயற்சி செய்திருக்கிறோம், அது (எந்த வல்லரசுடனும்) கூட்டுச் சேராமை, அல்லது உங்களுக்கு விருப்பமான வேறு பெயராலும் அதை அழைக்கலாம். இந்தக் கொள்கை திடீரென்று மந்திரத்தால் தோன்றியதன்று என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இது சுதந்தரம் வருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே உருவானது. நம்முடைய மனப்பான்மையும், நமது பூகோள அமைப்பும் இதை இயற்கையாகவும், தவிர்க்க முடியாத நிலையிலும் அமைத்துள்ளன. பூகோள அமைப்பு மிகவும் முக்கியமானது. வட துருவத்தில் அமர்ந்து கொண்டிருந்தால்,

பூமத்திய ரேகைக்கு அருகில் ஓரிடத்தில் இருப்பதிலிருந்து நமது பார்வையே வேறுபட்டிருக்கும். நமது கூட்டுச் சேராக் கொள்கை நமது பார்வையை மறைத்து, அபாயங்களை அறிய முடியாதபடி செய்கின்றதா? இல்லை என்பது வெளிப்படை. ஆனால் அபாயங்களைக் குறைப்பதற்கு இந்த முறையில் சிந்தனை செய்தல் நலமாயுள்ளது, போர் செய்யாமல் இரு கட்சியினர் தத்தம் வலிமையைப் பரீட்சித்துக் கொண்டிருக்கும் பனிப் போர் என்ற நிலைமையைக் காட்டிலும் இது மேலானதாகும்.

*—புதுடில்லி, தேசியப் பாதுகாப்புக் கல்லூரியில் நிகழ்த்திய சொற்பொழிவு, 27—4—1960.*

* * *

இந்தியா ஏதாவது ஒரு வல்லரசுடனோ அல்லது வல்லரசுகளின் கூட்டத்துடனோ சேராமலிருப்பது ஏன் என்று என்னிடம் அடிக்கடி கேட்கப்படுகின்றது, அப்படிச் செய்யாததால், நாம் மதில் மேலேயே அமர்ந்திருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. இந்தக் கேள்வியும், வியாக்கியானமும் தெளிவாய்ப் புரிந்து கொள்ளக்கூடியவையே, ஏனெனில் அபாயகரமான காலத்தில், அந்த அபாயத்தில் சிக்கியிருப்பவர்கள் அமைதியாக ஒதுங்கி அமர்ந்திருப்பவர்களைப் பார்த்தால், அவர்களுடைய போக்கு அறிவுக்குப் பொருத்தமில்லாத தாகவும், அற்ப நோக்கமுடையதாகவும், ஆக்க வேலைக்குப் பயனற்றதாகவும், பிரத்தியட்ச உண்மையைக் கவனிக்காததாகவும், வீரமற்றதாகவும் கூடத் தோன்றுவது இயற்கை. ஆனால் இந்தியா பின்பற்ற விரும்பும் கொள்கை எதிர்மறையாகவும், நடு நிலையாகவும் உள்ளதன்று. அது நேர் நிலையாக உள்ளது,

ஆற்றல் நிறைந்தது, எங்களுடைய சுதந்தரப் போராட்டத்திலிருந்தும், மகாத்மா காந்தியின் உபதே சங்களிலிருந்தும் பிறந்தது. நாங்கள் முன்னேற்ற மடைந்து வளர்ச்சி பெறுவதற்குச் சமாதானம் கண் டிப்பான அவசியம் என்பதுடன், உலகுக்கும் அது முதன்மையான முக்கியத்துவ முள்ளது. அமைதியை எப்படிக் காத்து வைப்பது? ஆக்கிரமிப்புக்குப் பணிந்து கொடுப்பதாலன்று, தீமையுடனோ அநீதியு டனோ சமாதானம் செய்துகொள்வதாலுமன்று. பேசிக் கொண்டே போருக்கு ஆயத்தம் செய்வது மன்று! ஆக்கிரமிப்பை எதிர்க்கத்தான் வேண்டும். ஏனெனில் அது அமைதிக்குப் பங்கமாகும். அதே சமயத்தில், சென்ற இரண்டு யுத்தங்களின் பாடத்தையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பாடத் திற்குப் பின்னும், நாம் பழைய வழியிலேயே போவது தான் எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது. எதிர் எதிராக இரண்டு வல்லரசுக் கோஷ்டிகள் உலகில் அமைந்து வரும் முறை, நாம் தவிர்க்க வேண்டும் என்று விரும்பும் போராட்டத்தை விரைவிலே உண்டாக்கக் கூடியது. அது பயங்கரமான சூழ்நிலையை உண் டாக்குகின்றது, அந்தப் பயம் மக்களின் மனங்களை இருளடையச் செய்து, அவர்களைத் தவறான வழிகளில் செலுத்துகின்றது. வாழ்க்கையில் அச்சத்தைப் போல் கெடுதலானதும் பயங்கரமானதும் வேறில்லை என்று தோன்றுகின்றது. ஐக்கிய நாடுகளின் பெரிய ஜனாதி பதி ஒருவர் கூறியுள்ளபடி, அச்சத்தைப் போல அஞ்ச வேண்டிய பொருள் வேறில்லை.

*—நியூயார்க் கொலம்பியா ப்ல்கலைக் கழகத்தில் நிகழ்த் திய சொற்பொழிவு, 17-10-1949.*

*　　*　　*

## கட்சிகளிலிருந்து ஒதுங்கியிருத்தல் ஒரு முயற்சிதான்

உலகில் மற்ற நாடுகளைப் பற்றி விமரிசனம் செய்வதிலோ, அவைகளுக்குப் புத்திமதி சொல்வதிலோ, இந்தியாவுக்கு நன்மை பெருகி விடும் என்று ஒரு கண நேரம்கூட நான் உரிமை கொண்டாடவில்லை. அந்தப் பிரசினைகளைப் பற்றி நாம் உணர்ச்சிப் பெருக்கால் கொதிப்படையாமல் இருக்கவே முயற்சி செய்கிறோம். அப்படி முயற்சி செய்யக் கூடாதென்பதற்கு ஒரு காரணமும் கிடையாது. ஆதலால் வல்லரசுக் கூட்டங்கள் என்று சொல்லப்படும் குழுக்களுடன் நாம் கூட்டாகச் சேராமலிருப்பதுதான் நலம் என்று ஏற்படுகின்றது. அவ்வாறு சேராமல் நாம் அதிகத் தொண்டு செய்ய முடியும், அபாயகரமான ஒரு நிலையில், நாம் நட்பு முறையில் முயற்சிகள் செய்து, அந்த அபாயத்தை நீக்குவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படலாம் என்று நான் எண்ணுகிறேன். அதற்கு மேலாக, நானும் அதிகம் எதிர்பார்ப்பதாகக் கூறவில்லை. அவ்விதம் செய்ய முடிந்தால், அதைப்பற்றி முயற்சி செய்தல் நலமேயாகும்.

—*புதுடில்லி, உலக விஷயங்களின் இந்தியக் கவுன்சிலில் பேசியது, 22-3-1949.*

* * *

இந்தியா உலக விவகாரங்களிலிருந்து ஒதுங்கியிருத்தல் என்று நம்புவது பிரத்தியட்ச நிலையை உணராமையாகும். இந்தியா விலகியிருக்க இயலாது. ஏனெனில் இன்றைய உலகில், ஒரு பெரிய நாடோ, சிறிய நாடோ தனித்திருக்க முடியாது.

—*வாஷிங்டன் நகரில் கூறியது, 13-10-1949.*

* *

## எல்லா நாடுகளுடனும் நட்புரிமை

உலக விவகாரங்களில் இப்பொழுது நம் முன் நிற்பவை அதில் நடக்கும் பூசல்களுடன் சம்பந்தப் பட்டவை. நமது வெளிநாட்டுக் கொள்கை ஒன்றுக் கொன்று விரோதமான வல்லரசுக் கட்சிகளிலிருந்து விலகி யிருத்தலும், எல்லா நாடுகளுடனும் நட்புறவு டன் இருத்தலும், இராணுவக் கூட்டு முதலிய எந்தக் கூட்டிலும் சேராதிருத்தலும், அதன் மூலம் எந்தப் பூசலிலும் இழுக்கப்படாமல் காத்துக் கொள்ளலும் ஆகும். சிலர் இது அவ்வளவு நல்ல கொள்கையன்று என்று குறை சொல்லியுள்ளனர். ஒரு கட்சியுடன் நெருங்கிக் குலாவுவதன் மூலம், அல்லது சேர்வதன் மூலம் நாம் பெறக்கூடிய நன்மையை இழந்து வரு கிறோம் என்றும் அவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். வேறு சிலர், நாம் சொல்வது ஒன்று, ஆனால் இரகசிய மாகவோ, வேறு விதமாகவோ நடப்பது வேறு வழியில் என்று குறை சொல்லியுள்ளனர். நோக்கங்களையே சந் தேகித்துக் கூறும் குறைகளுக்குப் பதில் கூறுதல் கடி னம்தான், ஆனால் கூட்டுச் சேர்ந்து எந்த வகையிலும் மாட்டிக் கொள்ளாமலிருத்தல் என்பதை நாம் கண்டிப்பு டன் பின்பற்றி வந்துள்ளோம், எந்த வல்லரசுடனோ, வல் லரசுகளின் கட்சியுடனோ இராணுவ ஒப்பந்தம் எதுவும் நிச்சயமாக இல்லை; அந்தக் கொள்கையை மேலும் கடைப்பிடித்து வரவே உத்தேசித்துள்ளோம், ஏனெனில் இப்போதைக்கோ, எதிர்காலத்திலோ, அதைத் தவிர வேறு வழியில்லை. இதனால் மற்ற நாடுகளுடன் நெருங் கிய ஒத்துழைப்பில்லை என்று ஏற்பட்டு விடாது.

—*அரசியல் நிர்ணய சபைச் சொற்பொழிவு, 8–3–1949.*

* * *

## சர்வதேச விவகாரங்கள்

சர்வதேசப் பூசல்களில் நாம் எவ்வளவு விலகி யிருக்கிறோமோ, அவ்வளவு நல்லது என்று நாளுக்கு நாள் நான் அதிகமாக நம்புகிறேன். நம்முடைய நன்மைகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள் வேறு. விலகுதல் ஏன் நலமென்றால், தலையிட்டால் தக்க பயன் உண்டாக வேண்டும், பயனில்லாமல் தலையிடுதல் நமது பெருமைக்கு உகந்ததன்று. தக்க பயன் விளையும் படி செய்யும் வலிமை நமக்கு இருக்க வேண்டும், அல்லது நாம் தலையிடாமலே இருக்க வேண்டும். சர்வதேச விவகாரம் ஒவ்வொன்றிலும் நான் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை.

— *அரசியல் நிர்ணயசபைச் சொற்பொழிவு*, **8-3-1948.**

* * *

## அரசியல் வேற்றுமைகளும் சமாதான சக வாழ்வும்

சமாதானத்தை நிலைநாட்டுதல் இந்தியாவின் கொள்கையில் அடிப்படையான அமிசம். இந்தக் கொள்கையைப் பின்பற்றித்தான் நாங்கள் எந்தவிதமான இராணுவ ஒப்பந்தத்திலோ, வேறு ஒப்பந்தத்திலோ சம்பந்தமில்லாமல், கூட்டுச் சேராமலிருக்கிறோம். கூட்டுச் சேராமை என்பது மனத்தில் தீவிரமாய்ச் சிந்திக்காமையன்று, செயலற்ற தன்மையன்று, நம்பிக்கைக் குறைவும் உறுதியாக முடிவு செய்யாமையும் அன்று; நாம் தீமை யென்று கருதுவதற்குப் பணிந்து கொடுப்பதாகவும் அதை எண்ணக் கூடாது. நம்மை எதிர் நோக்கி வரும் பிரசினைகளைத் தீர்க்க அது நேரான தீவிர நடவடிக்கைக்குரிய வழியாகும். ஒவ்வொரு நாடும் சுதந்தரத்திற்கு உரிமையுடையதோடு, தன் கொள்கையையும் வாழ்க்கை முறை

யையும் நிர்ணயித்துக் கொள்ளவும் உரிமையுடையது. அந்த முறையில்தான் உண்மையான சுதந்தரம் நிலவ முடியும், மக்களும் தங்கள் சொந்த இயல்புக்குத் தக்க படி வளர்ச்சி யடைய முடியும். ஆகையால் அனுக்கிர மிப்புக் கொள்கையிலும், ஒரு நாட்டின் விவகாரங் களில் வேறு ஒரு நாடு தலையிடாமையிலும் நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம், நாடுகளுக்குள் சகிப்புத் தன்மையிலும் சமாதான சக வாழ்விலும் நம்பிக்கை வைக்கிறோம். நாடுகளுக்குள் ஒருவர் கருத்துக்களை மற்றவர்களுக்குப் பரிமாறுவதன் மூலமும், வாணிபத் தின் மூலமும், மற்றைத் தொடர்புகள் மூலமும், ஒவ் வொரு நாடும் மற்றவைகளிடமிருந்து எவ்வளவோ கற்றுக் கொள்ள முடியும், பரஸ்பர நம்பிக்கையும் நிலைத்திருக்கும். ஆகவேதான் நாங்கள் எல்லா நாடு களுடனும் சிநேக முறையில் பழக முயற்சி செய் கிறோம், அந் நாடுகளின் கொள்கைகளோ, அரசியல் அமைப்போ எங்களுக்குப் பிடிக்காம லிருக்கலாம். இந்த முறையால் நாங்கள் எங்கள் நாட்டுக்கு மட்டு மின்றி, உலகின் சமாதனத்திற்கும் நல்லுறவுகளுக்கும் துணை புரியலாம் என்று நாங்கள் எண்ணுகிறோம்.

— *வாஷிங்டனில் ரேடியோ சொற்பொழிவு, 18-12-56.*

* * *

## பனிப் போர்

உலகத்தைப் பாதிக்கும் அபாயங்களில் மிகப் பெரிய அபாயம் பனிப் போர். நாடுகளிடையே மன ஒற்றுமை ஏற்படாதபடி செய்யும் செங்கற் சுவர்கள் அல்லது இரும்புத் திரைகளைவிட, பனிப் போரால் பெருந் தடை விளையும். எதிரே நிற்பவரின் மனப் போக்கை உணர முடியாதபடி அது செய்து விடுகின் றது. அது உலகைத் தேவர்களாகவும் அசுரர்களாகவும்

இரண்டு கட்சிகளாகப் பிரிக்கின்றது. நாம் எல்லோரும் ஓரளவு தெய்வத்தன்மை உள்ளவர்கள் என்று வைத்துக் கொள்ளலாம், ஆனால் நம்மிடம் சயித்தானின் தன்மையும் ஏராளமாக இருக்கின்றது. நாம் ஒரு தேசமாயினும், தனி நபராயினும், நம்மிடமுள்ள நன்மையைப் பயன்படுத்திப் பார்க்க வேண்டும், பிறரிடமுள்ள நன்மையை எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் தீமையான அமிசங்களை அடக்கி வைக்க வேண்டும்.

—லோக்சபைச் சொற்பொழிவு, 20-11-1956.

* * *

## தனிமையும் கூட்டும்

இந்தியா மிகப் பெரிய தேசம், வேறு எவ்வளவு பெரிய தேசமாயினும் அதனுடன் இந்தியா தன்னைப் பிணைத்துக் கொள்ள முடியாது. உலக விவகாரங்களில் இந்தியா முக்கியமான ஒரு ஸ்தானத்தை வகிக்கப் போவது நிச்சயம். அது இராணுவ முக்கியத்துவமுள்ள ஸ்தானமன்று, ஆனால் அதைவிட முக்கியமான, பயனுள்ள வேறு பல முறைகளில் அமைந்ததாயிருக்கும். இப்போதுள்ள நம் அரசாங்கம் ஒரே திசையில் நெடுந்தூரம் சென்றால், அது பின்னால் நம் நாட்டுக்குச் சிக்கல்களை உண்டாக்கி விடும். அதற்கு ஆட்சேபம் கிளம்பும், நம் நாட்டிலேயே முரண்பாடுகள் தோன்றும், அவை நமக்கும் பயன்படா, வேறு எந்த நாட்டிற்கும் பயன்படா. வல்லரசுக் கட்சிகளிலிருந்து விலகி யிருந்து கொண்டு, சரியான சந்தர்ப்பத்தில் நாம் தலையிட்டுச் சமாதானத்திற்காகச் செல்வாக்குடன் வேலை செய்ய முடியும், இடையில் அந்த நாடுகளுடன் நாம் பொருளாதாரம் முதலிய துறைகளில் ஒத்துழைத்து வர முடியும். ஆகவே நம் கொள்கை

உலகில் மற்ற நாடுகளுடன் சேராமல் துண்டுபட்டிருப்பதன்று. நாம் ஒதுங்கி யிருக்க விரும்பவில்லை. நாம் மிக நெருக்கமான தொடர்புகள் வைத்துக்கொள்ளவே விரும்புகிறோம். ஏனெனில் ஆரம்பம் முதலே நாம் உலகம் நெருங்கி ஒன்று சேரும் என்பதை உறுதியாக நம்பி வருகிறோம், இறுதியில், 'ஒரே உலகம்' என்று சொல்லப்படும் முறையில், எல்லா நாடுகளும் சேரும் இலட்சியத்தையும் அடைவதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஆனால் இந்தியா மற்ற நாடுகளுடன் பிணைக்கப்பட்டு, குறிப்பிட்ட ஒரு கூட்டத்தில் நின்று செயற்படுவதைவிட, தனித்து நின்று, நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தன் விருப்பம் போல் நடந்து கொள்வதுதான் உலக ஒற்றுமைக்கு அதிக நன்மை செய்ய முடியும் என்று நாம் தீர்மானித்துள்ளோம்.

*— புதுடில்லியில் உலக விவகாரங்களுக்கான இந்திய கவுன்சிலில் நிகழ்த்திய சொற்பொழிவு, 22—3—1949.*

* * *

## இந்தியா காட்டும் வழி

உலக அரசியலுக்கு இந்தியா புதிதா யிருக்கலாம், இக் காலத்தில் அசுரர்களைப் போன்ற படை வலிமையுள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்தியாவின் இராணுவ பலம் அற்பமானதா யிருக்கலாம். ஆனால் சிந்தனை சக்தியிலும், அநுபவத்திலும் இந்தியா பழம் பெரு நாடு, வாழ்க்கை யாத்திரையில் அது பல நூற்றாண்டுகளாகத் துணிவுடன் முன்னேறி வந்துள்ளது. அதன் நீண்ட வரலாறு முழுதும் அது சமாதானத்திற்காகவே பாடுபட்டு வந்துள்ளது, இந்தியா செய்யும் ஒவ்வொரு பிரார்த்தனையும் சாந்தி ஏற்படவேண்டும் என்றே முடிவது வழக்கம். இந்தப் பழைய, ஆனால்

இளமையான இந்தியாவிலிருந்துதான் மகாத்மா காந்தி தோன்றினார், அவர் சாந்தி நிறைந்த ஒரு செயல் முறையை எங்களுக்குக் கற்பித்தார்; அது காரியத்தைக் கைகூடச் செய்தது. அதனால் விளைந்த பயன்களால் நாங்கள் விடுதலை யடைந்ததுடன், நேற்றுவரை நாங்கள் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த எதிரிகளுடன் நண்பர்களாக இருக்கவும் முடிந்தது. அதே தத்துவத்தை மேலும் விரிவான பிரதேசங்களில் எவ்வளவு தூரம் உபயோகித்துப் பார்க்கலாம்? என்றால் அதைச் சொல்ல முடியாது. ஏனெனில் சூழ்நிலைகள் மாறியிருக்கும், எந்தத் தீமையை எதிர்க்கிறோமோ அதற்குத் தக்க வழிகளை அமைக்க வேண்டியிருக்கும். ஆயினும், அந்தச் செயல்முறைக்கு ஆதாரமா யிருந்த தத்துவமே மானிட விவகாரங்களில் உபயோகிக்கத் தக்கது என்பதிலும், அதுவே ஒரு பிரசினையை முழுதும் தீர்க்க வல்லது என்பதிலும் எனக்குச் சந்தேகம் கிடையாது. நாம் சுதந்தரமடைய வேண்டும், அதைப் பாதுகாக்கவும் வேண்டும். நாம் ஆக்கிரமிப்பை எதிர்க்க வேண்டும், அதைச் சமாளிப்பதற்குத் தேவையான அளவுதான் பலாத்காரத்தைக் கையாள வேண்டும். ஆனால் ஆக்கிரமிப்பைச் சமாளிப்பதற்காக ஆயத்தங்கள் செய்யும் பொழுதும், இறுதி இலட்சியமான சாந்தியும் சமரசமும் நினைவிலிருக்க வேண்டும். இதயமும் மனமும் இந்த மேலான நோக்கத்தில் இலயித்து நிற்க வேண்டும். துவேஷமோ பயமோ அவைகளைக் கோணலான வழியில் திருப்பிவிடக் கூடாது.

*—நியூயார்க் நகரில் ‘கிழக்கு மேற்குச் சங்க’த்தில் பேசி*

*19-10-1949.*

* * *

4652

# 14

# பஞ்ச சீலம்

---

## ஐந்து தத்துவங்கள்

ஒவ்வொரு நாடும் தன் விதியைத் தானே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையை அங்கீகரிப்பதற்காகவே, இந்திய அரசாங்கமும் சீனாவின் மக்கள் அரசாங்கமும் தமக்குள் உள்ள உறவு முறைகளுக்கு அடிப்படையாக ஐந்து தத்துவங்களை ஏற்றுக்கொண்டுள்ளன. இந்தத் தத்துவங்களாவன: ஒன்றினுடைய பிரதேச உரிமையையும் பூரண இராஜாங்க அந்தஸ்தையும் மற்றது அங்கீகரித்து மதித்து நடக்க வேண்டும்; ஆக்கிரமிப்புச் செய்யாமை; ஒன்றின் உள்நாட்டு விஷயங்களில் மற்றது தலையிடாமல் இருத்தல்; சமத்துவமும் பரஸ்பர நன்மையும்; சமாதானமான சகவாழ்வு. இதற்குப் பின்னால் இந்தத் தத்துவங்களைப் பர்மாவும், யுகோஸ்லேவியாவும் ஏற்றுக் கொண்டன, சோவியத் அரசாங்கமும் இவைகளை ஆதரித்துள்ளது.

*—மாஸ்கோவில் வெளியிட்ட அறிக்கை,* ***22-6-1955.***

* * *

## பஞ்ச சீலத்தின் செல்வாக்கு

பெரிய நாடுகள் ஒன்றை ஒன்று சந்தித்து, நேரில் பேசி, தமக்குள்ளேயே தங்கள் பிரசினைகளை முடிவு செய்து கொள்ள வேண்டும் என்பதைத்தான் நாம் யோசனையாகக் கூறியுள்ளோம். இதையே நடைமுறைக்குக் கொண்டு வரவும் விரும்பினோம். அவை

கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்வது நமது கடமையன்று. சென்ற சில ஆண்டுகளுக்கிடையில் தோன்றியுள்ள சில தடைகளை மட்டும் நாம் நீக்க முடியும்.

இந்த வகையில் இந்தியா அளிக்கக்கூடிய உதவியை இரண்டொரு சொற்களில் கூறிவிடலாம். அவையே பஞ்ச சீலமும், அதை ஒட்டியுள்ள கருத்துக்களும். இந்தக் கருத்துக்களில் எதுவும் புதுமையில்லை. ஆனால், குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் அவைகளைச் செயலில் பயன்படுத்துவதுதான் புதுமையாயிருக்கும். சமாதான சகவாழ்வு பற்றிய இத் தத்துவங்கள் இலேசாக முதலில் குறிப்பிடப்பட்டு, அமலுக்கு வந்தபின், அவை, உலகம் எங்கும் பரவி, மேலும் மேலும் பல நாடுகளைக் கவர்ந்துள்ளன; அத்துடன் அவைகளின் ஆழமும் பொருளும் அதிகமாகி யிருக்கின்றன. அதாவது, சாதாரணமாகக் கூறப் பெற்றுவந்த பஞ்ச சீலம் என்ற சொல் உலக விவகாரங்களில் குறித்த பொருளும் முக்கியத்துவமும் பெற்றுவரத் தொடங்கியுள்ளது.

—லோகசபைச் சொற்பொழிவு, *17-9-1955.*

* * *

முன்னேற்றத்திற்குப் பல வழிகள் இருக்க முடியும், வெவ்வேறு நோக்கங்களும் இருக்கலாம். ஆனால், பொதுவாக முடிவான இலட்சியங்கள் ஒன்றாகவே இருக்கும். இதற்கு வேறு ஓர் உபமானமும் சொல்லலாம்: உண்மை என்பது, ஒரு தேசம் அல்லது ஒரே மக்களினத்தில் மட்டும் இருக்கும் என்பதில்லை, எவரும் அதை முழுதும் தெரிந்து கொள்ள முடியாத வகையில் அது பல அமிசங்களைக் கொண்டது. ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு மக்களினமும், தாங்கள் தங்கள் இயல்புக்கு ஏற்றபடி நடப்பதால், தாங்களே தங்களுக்குரிய

அறிவியல் வளர்ச்சி, ஒழுக்கம், ஆன்மிக உணர்வு, வெளியார்களிடமிருந்து கிடைக்கும் கருத்துக்களை வரவேற்பதற்குரிய திறந்த மனப்பான்மை, பிறர் அநுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளல் முதலியவற்றில் நாம் கொள்ள வேண்டிய ஆர்வத்தையே கூறுகிறேன். ஒரு நாடு இப்படி முயற்சி செய்து வருவதை மற்ற நாடுகளில் ஒவ்வொன்றும் அநுதாபத்துடனும், நட்பு முறையிலும் புரிந்து கொண்டு, அதிலே தான் தலையிடாமலும், தன் விருப்பத்தை அந் நாட்டின்மீது திணிக்காமலும் இருக்க வேண்டும்.

— *லோகசபைச் சொற்பொழிவு, 17-9-1955.*

* * *

# திட்டங்களும்
# முன்னேற்றமும்

# 15

# செயல்

## சோம்பேறிகள் தேவையில்லை

வேகமாக நடக்க முடியாத மனிதனை நரகத்திற்குத்தான் அனுப்ப வேண்டும். அணிவகுத்து வேலை செய்வோர் கூட்டத்திலிருந்து அவன் வெளியேறி விடுதல் நலம். மந்தமானவர்கள் நமக்கு வேண்டாம். எப்பொழுதும் தங்கள் உத்தியோக நிலைமைகளையும், இடமாற்றம் முதலியவைகளையும் பற்றியே குறை சொல்லிக் கொண்டிருக்கும் சோம்பேறிகள் நமக்குத் தேவையில்லை. இத்தகைய குறைகளைக் கேட்டுக் கேட்டு நான் சலிப்படைந்து விட்டேன். ஆனால், எனக்குத் தேவை செயல், செயல், செயல்தான். செயலில் வெற்றி காண வேண்டுமென்றே நான் விரும்புகிறேன். புனிதமான சமயத்தைக் காக்கச் செல்லும் படையினரைப் போன்ற மனிதர்களையே நான் வேண்டுகிறேன். சரியென்று தங்களுக்குத் தோன்றிய விஷயத்திற்காகப் போராடி, தவறானதற்குத் தலைவணங்காதிருக்கும் மனிதர்களே எனக்குத் தேவை. நீங்கள் பெருங் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நீங்கள் இந்தியாவை நிர்மாணிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நம்முடைய இந்த மாபெரும் நாட்டை நிர்மாணிப்பதைவிட மேலான ஒரு காரியத்தை நீங்கள் காண முடியுமா? இந்த வேலையை அத்தகைய உணர்ச்சியுடன் நீங்கள் மேற்கொள்ள வேண்டும். மெலிந்தவர்களும், மந்த

மாணவர்களும், சோம்பேறிகளும் வெளியே தொலையட்டும். அவர்களுக்கு இரக்கமே காட்ட வேண்டியதில்லை.

— புதுடில்லியில் சொற்பொழிவு, அக்டோபர் 13, 1954.

*     *     *

## சிந்தனையும் செயலும்

.(செயல் இல்லாத வெறும் சிந்தனை சிதைந்த கருவைப் போன்றது.) சிந்தனை யில்லாத செயல் தவறும். செயலும் சிந்தனையும் எவ்வளவுக்கு எவ்வளவு பொருந்திச் சேர்ந்திருக்கின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு பயன் விளையும், நாமும் மகிழ்ச்சியடைகிறோம். ஒன்றைச் செய்ய வேண்டுமென்ற ஆசையும், அதைச் செய்யத் திறமையின்மையும், அல்லது ஒரு வகையாகச் சிந்தனை செய்து, வேறு வகையாகச் செயல்புரிவதும் அந்த நிலையில் ஏற்படமாட்டா. எவனுடைய சிந்தனையும் செயலும் சேர்ந்து செயற்படுகின்றனவோ, அவனே தலைசிறந்த இன்பத்தை அடைபவன்.

—புதுடில்லியில் பல்கலைக் கழகங்களின் இளைஞர் விழாவில் பேசியது, 23-10-1955.

*     *     *

## நாம் கடுங்காவல் பெற்றவர்கள்

இன்று நம் தேசம் வேலை செய்ய வேண்டிய காலம். இந்தத் தலைமுறையிலே உள்ள நாம் அனைவரும் வேலை செய்யும்படி கடுங்காவல் தண்டனை பெற்றவர்கள் என்று சொல்லத் தோன்றுகிறது. நீங்கள் எவ்வளவு விரும்பினாலும், இதிலிருந்து தப்பிக்கொள்ள இயலாது. நாம் அனைவரும் கடுமையான வேலை செய்யும்படி தண்டனை பெற்றவர்கள். ஆனால் வேலையில், எந்த

விதமான வேலே என்பதும், எந்த உணர்ச்சியோடு நாம் அதை அணுகுகிறேம் என்பதுமே முக்கியமானவை. அது உழைப்பா யிருந்தால், நல்ல வேலேயா யிருந்தால் போதும். நீங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தா லும் குறைவில்லே. ஜனங்கள் என்னிடம் வந்து, 'இவ் வளவு கடுமையாக வேலே செய்யாதீர்கள், நீங்கள் போதிய அளவு தூங்குவதில்லே' என்று சொல்லுகிருர் கள். அதுதான் முக்கியம் என்பது அவர்கள் எண்ணம். கடினமான வேலேயால் எந்த மனிதனும் மரித்ததில்லே, ஆனல் அவன் நல்ல இலட்சியத்திற்காக வேலே செய்ய வேண்டும், வேலேயில் அவன் உள்ளம் ஈடுபட்டிருக்க வேண்டும். களேப்பினுலும், வெறுப்பு முதலியவற்ரு லும் மக்கள் மரிப்பதுண்டு. ஆதலால் நீங்களும் நானும் வேலே செய்தாக வேண்டும்.

—லக்சுமணபுரி பல்கலேக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசியது, *28-1-1949*.

* * *

## கைகளால் உழைத்தல்

நாம் நம் மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டும். இக்காலத்தில் நாம் கைகளால் உழைப் பதை இழிவாகக் கருதுவது வழக்கமா யிருக்கிறது, இந்த எண்ணமே நம் தற்போதைய நிலேக்குக் காரணம். நம் நாட்டில் இரண்டு விதமான வேலேயின்மைகள் இருக்கின்றன—வேலேயே கிடைக்காத ஜனங்கள் இருக்கின்றனர், வேலே செய்ய மனமில்லாத ஜனங் களும் இருக்கின்றனர்……… வேலே செய்வதில் மனம் கொள்வதுதான் மிக முக்கியமான விஷயம். ஒரு தேசத்தின் செழிப்பு அங்கு வேலே செய்யும் மக்களின் எண்ணிக்கையையே பொறுத்திருக்கிறது.

—புதுடில்லியில் தொழில் மகாநாட்டில் பேசியது, *18-12-1947*.

* * *

# 16

# திட்டங்கள்

## ஒரே நாடு என்ற உணர்ச்சி

இந்தியாவில் விவசாயம், தொழில்கள் சமுதாய மாறுதல்கள், பொருளாதாரம் முதலிய நாட்டின் பல துறைகளையும் கூட்டாகச் சேர்த்து ஒரே திட்டத்தில் அடக்குவதற்காகச் சிந்தனை செய்வது இதுதான் முதல் தடவை. இது ஒரு முக்கியமான நடவடிக்கை, சிந்தனையில் ஏதாவது குறை இருந்தபோதிலும், பெரிய அளவில் உன்னதமான ஒரு காரியத்தைச் செய்துமுடித்திருப்பதே பெரிதாகும். மக்கள் நாடு முழுவதையும் ஒன்றாகக் கருதும்படி இது செய்துள்ளது, நாடு முழுவதையும் திட்டத்தைப் பற்றியே சிந்திக்கும்படி செய்துள்ளது. அரசியலிலும் வேறு பல வகைகளிலும் ஐக்கியப்பட்டு விளங்கும் இந்தியா, அதே அளவுக்குச் சிந்தனையிலும் உணர்ச்சியிலும் ஐக்கியப்பட்டிருக்க வேண்டும். மாகாணப் பற்று, வகுப்புவாதம், சமயம், அல்லது சாதியைக் காரணமாகக் கொண்டு நாம் அடிக்கடி வேறு திசைகளை நோக்கிச் சென்றுவிடுகிறோம். நாட்டின் ஐக்கியத்தைப் பற்றி உணர்ச்சிபூர்வமாக நாம் நினைவில் வைத்துக்கொள்வதில்லை; நம்முடைய பிரசினைகளையெல்லாம் ஒரே நாட்டின் பிரசினைகளாகக் கருதும்படி திட்டமிடுதல் உதவி புரியும். தேசத்தின் மொத்தத் தேவைகளில், கிராமங்கள் அல்லது மாவட்டங்கள், அல்லது மாகாணங்களின் தனிப் பிரசினைகளின் முக்கியத்தைப் பற்றி ஒரே மொத்தமாக நாம் தெரிந்துகொள்ள அது உதவுகின்றது. ஆகவே வெறும் திட்டமிடுதலும், இம்மாதிரி முன்னேற்றம் பற்றிப்

பரிசீலனை செய்து ஒரு திட்டம் தயாரித்திருப்பதுமே நமக்கு ஒரு வெற்றி என்று நாம் பெருமை கொள்ள லாம்.

—பார்லிமெண்டுச் சொற்பொழிவு, 15-12-1952

* * *

## அரசியல் சட்டத்திற்கு அடங்கிய திட்டம்

சில குறிப்பிட்ட தொழில்களுக்காக மட்டும் திட்டம் வகுத்தலைப் பற்றிப் பேசுதல் எளிது. சிறுசிறு துண்டுத் திட்டங்கள் தயாரிப்பதைக் காட்டிலும், தேசம் முழுவதற்குமாகத் திட்டமிடுவதில் அதிகமான முயற்சிகள் தேவை. ஒரு தேசிய சமுதாயம் பலவித மான வேலைகளில் ஈடுபட்டிருப்பதில், அவைகளை ஒன் ருகத் தொகுத்துப் பார்ப்பதே நாட்டிற்குப் பொது வான திட்டமாகும்......நாம் ஜனநாயக அமைப்பின் கீழே செயற்பட்டு வருவதாலும், நமது அரசியல் சட் டத்திலும் இந்தப் பார்லிமெண்டிலும் ஜனநாயக முறை யையே விதித்திருப்பதாலும், நாம் தீட்டும் எந்தத் திட்டமும் அந்த அமைப்புக்கு அடங்கியதாகவே இருக்க வேண்டும், நமது அரசியல் சட்டத்திற்கும் நாம் வேலை செய்து வரும் (பார்லிமெண்டரி) அமைப் புக்கும் சம்பந்தமில்லாத ஒரு திட்டம் தயாரிக்கத் திட்டக் கமிஷனுக்கு அதிகாரம் கிடையாது.

—பார்லிமெண்டுச் சொற்பொழிவு, 15-12-1952.

* * *

## தொழில் மயமாக்குதலே பாதுகாப்பு

'ஐந்தாண்டுத் திட்டங்களால் என்ன பயன்? நீங்கள் பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டும்' என்று கனம் அங்கத்தினர் ஒருவர் இங்கே சொன்ன

தாக நான் கேள்விப்பட்டேன். அது முக்கியமான ஓர் அறிவிப்பாகும். ஆனால் ஐந்தாண்டுத் திட்டம் என்பதே நாட்டின் பாதுகாப்புத் திட்டம்தான். இல்லையெனில், அது வேறு என்ன? பாதுகாப்பு என்பது, துப்பாக்கி களையும் மற்ற ஆயுதங்களையும் ஏந்திக்கொண்டு, மனிதர்கள் சாலையில் மேலும் கீழுமாக நடந்துகொண்டிருப்பதன்று. இக்காலத்தில் பாதுகாப்பு என்பது, பாதுகாப்புக்குத் தேவையான தளவாடங்களையும் பொருள்களையும் உற்பத்தி செய்யத் தொழில் முறையில் தயாரா யிருத்தலே யாகும்.

*—லோகசபைச் சொற்பொழிவு, 21-3-1956.*

* * *

## திட்டம் தீட்டுதல்

விஞ்ஞானத்தைச் செயற்படுத்துவதுதான் திட்டமிடுதல். திட்டமிடுதல் வளைந்து கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும்; விழிப்போடு எப்பொழுதும் எச்சரிக்கையா யிருக்கவேண்டும். தொழில் அமைப்பு முறையில் மட்டுமின்றி, ஆட்சி முறைக்கும் இது பொருந்தும்.

*—புதுடில்லி, இந்தியப் பொது ஆட்சிமுறை இன்ஸ்டிடியூட்டில் ஆற்றிய தலைமையுரை, 6-4-1957.*

* * *

## எல்லாத் துறைகளிலும் முற்போக்கு

திட்டமிடுதலில் முக்கியமான அம்சம் சமரசப் படுத்தல்; தொழிலுக்கும் விவசாயத்திற்கும் இடையில் சமநிலை அமைத்தல், கனரகத் தொழிலுக்கும் மற்ற இயந்திரத் தொழிலுக்கும் இடையில் சமநிலை அமைத்தல், குடிசைத் தொழிலுக்கும் ஆலைத் தொழிலுக்கும் இடையில் சமநிலை அமைத்தல் என்று அது

பல வகையாகும். இவற்றில் ஒன்று தவருனல், மொத்தப பொருளாதார நிலையே கவிழ்ந்துவிடும். தொழிலிலே அதிகமாய்க் கவனம் செலுத்தி விவசாயத்தைப் புறக்கணித்தால், தேசம் கஷ்டங்களில் சிக்கிக்கொள்கின்றது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் சில உள்-முரண்பாடுகளும் பொருளாதாரக் கஷ்டங்களும் இருந்தன, இந்த நாடுகளின் பொருளாதாரம் சமரசப்படுத்தப்பட்ட ஏகோபித்த நிலையன்று, தொழிலை விரைவில் அபிவிருத்தி செய்வதில், முக்கியமாகக் கனரகத் தொழிலை விருத்தி செய்வதில், அளவுக்கதிகமாக வற்புறுத்தப்பட்டு வந்தது. இதனுல் விவசாயம் கஷ்டத்திற்கு உள்ளாயிற்று. அதிலிருந்து பொருளாதார அமைப்பும் பாதிக்கப்பட்டது!.

—இந்தூரில் அ. இ. காங்கிரஸ் கமிட்டியில் ஆற்றிய சொற்பொழிவு, 4-1-57.

* * *

## மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய பரிசீலனை

விவசாயத் துறையில் விளைவு ஏமாற்றத்தை அளித்தபோதிலும், திட்டத்தின் முழுச் சித்திரத்தையும் கவனித்தால், எனக்குக் கலக்கம் ஏற்படவில்லை; மின்சார உற்பத்தி, தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பிற்கால அபிவிருத்திக்கு உறுதியான அடிப்படை போடப்பெற்றுளது. குறை கூறுபவர்கள், அரசாங்கம் சரித்திரத்திலே ஈடாகச் சொல்ல முடியாத மாபெரும் வேலையை மேற்கொண்டிருப்பதை, மதிப்பிட்டுப் பார்க்க வேண்டும். இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு மேலான ஒரு வாழ்க்கையை அமைப்பதே அந்த வேலை. திட்டமிடுவதன் மூலம், பல ஆண்டுகளாகப் பொருளாதாரத்தில் தேக்கமடைந்து கிடந்த நிலைமை

யிலிருந்து நாட்டை நாம் மேலே தூக்கி நிறுத்துவதில் வெற்றியடைந்துள்ளோம். இது அற்பமான வெற்றியன்று.

—லோகசபைச் சொற்பொழிவு, *11-12-1963.*

*  *  *

சென்ற இரண்டரை வருட முன்னேற்றத்தைக் கொண்டு திட்டத்தின் இறுதி வெற்றியை மதிப்பிடக் கூடாது. இன்னும் எஞ்சியுள்ள ஆண்டுகளில் திட்டம் அதிக அளவில் நிறைவேறிவரக்கூடும்.

—ஷை ஷை

*  *  *

முதல் திட்டத்தின் தொடக்கத்தில் ஒவ்வொரு நபரும் உபயோகித்து வந்த 9-கஜம் துணியின் அளவு 14·5 கஜத்திற்கு உயர்ந்துள்ளது. சுகாதாரத் திட்டங்கள் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளன. இதன் பயனாக, 1940-ஆம் வருடத்தையொட்டி இந்தியரின் ஆயுள் அளவு 32–வயதாயிருந்தது 50–ஆக உயர்ந்துள்ளது. இந்த வளர்ச்சிகள் குறிப்பிடத் தக்கவை, இத்தகைய பெரு மாற்றங்களுக்கு நிகராக வேறு எந்த நாட்டிலும் காண முடியாது. அடிப்படைகள் அமைக்கப் பெற்றுவிட்டன. எதிர்காலத்தில் முன்னேற்றம் துரிதமாக ஏற்படும் என்பதும் முக்கியமான விஷயம்.

விவசாயத் துறையில் தோல்வி ஏற்படுதல் இந்தியாவுக்கு மட்டும் உரியதன்று. இதில் தொழில் வளம் மிகுந்த நாடுகள்கூடப் பெருங் கஷ்டங்களை அடைந்துள்ளன. இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளை நீக்க வேண்டியதும் அவசியம்தான்.

—ஷை ஷை

*  *  *

இந்தியாவில் நமக்குத் தடையாக வழி மறித்துள்ளதைப்போல் வேறு எந்த நாட்டிலும் ஏற்பட்டதில்லை— திட்டமிடுவதிலோ, எவ்வித முன்னேற்றமும் அடைவதிலோ, மக்களின் சமூகப் பழக்கவழக்கங்கள் குறுக்கே நிற்பதுதான் அந்தத் தடை. அவைகளும் மாறி வருகின்றன. ஆயினும் 45- கோடி மக்களின் சமூகப் பழக்கங்களை மாற்றுவது என்பது மிகப் பெரிய வேலை என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்வர்.

—டீ டீ

* * *

# 17

## தனியார் உரிமைகள்

---

நாம் மேற்கொண்டுள்ள பெரிய காரியத்திற்கு மக்கள் அனைவருடைய பூரண ஒத்துழைப்பும் அவசியமாகும். அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய, பயனளிக்கும் என்று அவர்கள் நம்பக்கூடிய இலட்சியத்தை அவர்கள் முன்பு வைத்தால்தான் அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற முடியும். நாம் செய்ய விரும்பும் மாற்றத்திற்கு, நம் மக்கள் ஏராளமான பொறுப்புக்களை ஏற்கவேண்டியிருக்கும்; அவர்கள் தங்களுக்கு நன்மைகளை அளிக்கக்கூடிய ஒரு சமூகத்தை நிறுவுவதில் பங்கு கொள்வதாக உணர்ந்தாலொழிய, அவர்கள் மேற்கொண்டு பாரங்களைச் சுமக்க விரும்பமாட்டார்கள், அல்லது தங்கள் முழு ஒத்துழைப்பையும் அளிக்க மாட்டார்கள். 'சுதந்தரமான தொழில்' என்று சொல்லப்படுவது நம் பொது மக்களுக்கு உகந்ததாயிராது; அது நம்மிட

முள்ள மூலப் பொருள்களை, முதன்மையான தொழில்களுக்கன்றி, வேறு தொழில்களுக்குப் பயன்படுத்தி விடும். அது சுயலாபம் என்ற நோக்கத்துடன், தனி நபர் ஆசை கொள்ளக் கூடியதா யிருக்குமேயன்றி, சமூகத்திற்கு அதில் சிரத்தை இராது.

—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.

* * *

நாம் செய்ய வேண்டியிருக்கும் வேலைக்கு, விஞ்ஞான முறையில், கவனமாகத் திட்டமிட்டுக் கொண்டு தான் இறங்க வேண்டும், அப்படியானால்தான் நம்மிட முள்ள பொருள்களை வீண் போக்காமல் சிறந்த முறையில் உற்பத்திக்குப் பயன்படுத்திக் கொள்ளவும், தேசத்தின் முயற்சிகள் அனைத்தையும் நம் இலட்சியத்தை நோக்கிச் செலுத்தவும் முடியும். இந்த விஞ்ஞான யுகத்திலே தனிப்பட்டவர்களின் திட்டமில்லாத தொழில் முறையிலே நம்பிக்கையுள்ளவர்களும் சிலர் இருக்கின்றனர், அந்த முறைக்குச் சுயலாபமே முக்கியமான குறிக்கோள்.

—ஷை ஷை

* * *

## அரசாங்கத் தலையீடு

ஒரு நாள் நான் கல்கத்தாவில் இருந்தேன். அங்கிருந்த கூட்டு வர்த்தக சபைகளின் தலைவர் அரசாங்கம் எந்த வகையிலும் தலையிடக் கூடாது என்றும், குறுக்கிடக் கூடாது என்றும் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே யிருந்தார். அரசாங்கம் ஒதுங்கியிருந்தால் தொழில் செழித்து வளரும் என்று அவர் கூறினார். அதைக் கேட்க எனக்கு மிகவும் வேடிக்கையாக இருந்தது. ஏனெனில், அந்த விசேடமான அபிப்பி

ராயம் பூமியிலிருந்தே அநேகமாக மறைந்து போய் விட்டது என்று எண்ணியிருந்தேன். ஆயினும் அது கல்கத்தாவில் இன்னும் இருக்கிறது.

—புதுடில்லியில் தொழில் மகாநாட்டில் பேசியது,
*18-12-1947.*

* * *

# 18

# விவசாயம்

## விவசாயமும் தொழில்களும்

**பெ**ரிய தொழிற்சாலைகள் அமைப்பதைப் பார்க்கினும் விவசாயம் அதிக முக்கியமானது, அது இந்திய முன்னேற்றத்தை உருவாக்குவது. முன்னேற்றத்திற்குத் தேவையான பொருள்களைக் கொடுப்பதும் அதுதான். விவசாயத்தில் நாம் தோல்வியுற்றால், தொழில்களிலும் நமக்குத் தோல்விதான் ஏற்படும்.

— புதுடில்லி, தேசிய அபிவிருத்திக் கவுன்சில்
சொற்பொழிவு, 8-11-63.

* * *

## ஜப்பானின் செழிப்பு

ஜப்பான் தேசத்தில் நில உச்சவரம்பு ஏழு ஏக்கர் என்று நம்புகிறேன். சராசரியாக ஒரு விவசாயிக்கு உள்ள நிலம் 3½ ஏக்கர். அப்படி யிருந்தும், ஜப்பானியக் குடியானவர்கள் மூன்று, அல்லது நான்கு, அல்லது ஐந்து ஏக்கர் நிலங்களைக் கொண்டே செழிப்புடன் விளங்குகின்றனர். ஏனெனில், அவர்கள் திறமை

யுடையவர்கள். அவர்களுக்குத் தங்களுடைய தொழிலின் நுட்பம் தெரியும். இரசாயன உரமோ, வேறு கருவிகளோ, பொருள்களோ, அவர்களுக்குத் தேவையானவைகள் கொடுக்கப் பெறுகின்றன. அவர்கள் மிகவும் வெற்றிகரமாகப் பயிர் செய்கிறார்கள் ஓர் ஏக்கரிலோ அல்லது ஹெக்டேரிலோ, வேறு எந்த நாட்டைப் பார்க்கினும் அதிகமாக ஜப்பான் விளைவை உண்டாக்கி வருகின்றது. முன்னேற்றம் எப்படி வரும் என்பதை நாம் இதில் காணலாம்.

—ஷை ஷை

* * *

## பஞ்சாப் காட்டும் பாதை

மற்ற இராஜ்யங்களைக் காட்டிலும் அதிகச் செழிப்புடன் உள்ள இராஜ்யம் பஞ்சாப். அங்கே பெரிய கனரகத் தொழிற்சாலை ஒன்றுகூட இல்லை. ஆனால், சிறு தொழில்கள் நிறைய இருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகளை அதிகமாய்ப் பெற்றுள்ள சில இராஜ்யங்களில் தனி நபரின் சராசரி வருமானம் மிகவும் குறைவு. அங்கெல்லாம் தொழில் வளர்ச்சி அதிகமாயிருப்பினும், விவசாயம் வளர்ச்சியடையவில்லை. இதைக் கருதி விவசாய அபிவிருத்தியையும், அத்துடன் தொடர்பு கொண்ட நிலச் சீர்திருத்தத் திட்டத்தையும் பற்றி அதிகமாய்ச் சிந்திக்கும்படி உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

— ஷை ஷை

* * *

## உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்

உணவைப் பற்றி ஒரு வார்த்தை. உணவு இன்று நமது அடிப்படையான பிரச்சினையாக ஆகிவிட்டது.

நாம் நிலைமைக்குத் தக்கபடி சமாளிப்பதில் தோல்வியடைந்த விஷயம் இது என்று கூறுவது பொருந்தும். வெளியிலிருந்து எளிதாக உணவுப் பொருள்களை வரவழைக்க முடிந்ததால், இந்தப் பிரசினையை நாம் முறையாகத் தீர்க்கவில்லை என்று நான் எண்ணுகிறேன். குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பின்—இரண்டு ஆண்டுகளுக்குப் பின்—நாம் வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதில்லை என்று உறுதி செய்துகொள்ள வேண்டும், அதற்கு மேல் ஒரு நாள்கூட அதிகமாகக் கூடாது, அதற்குள் எவ்வளவு பொருள் உற்பத்தி செய்கிறோமோ அந்த அளவைக் கொண்டு வாழவேண்டும், இல்லாவிடில் இந்த முயற்சியில் மடிய வேண்டும் என்று நாம் உறுதி செய்து கொள்ள வேண்டும். இந்தியாவில் முக்கியமாக உணவுப் பிரசினை கஷ்டமான பிரசினை என்று நான் எண்ணவில்லை. எப்படியோ நாம் அதைக் கஷ்டமானதாகச் செய்துவிட்டோம். உணவுப் பொருள்களில் பற்றாக்குறையாக உள்ளது 6% அல்லது 7% தான். இப்பொழுது 10% என்று வைத்துக் கொள்வோம். நீண்டகாலத் திட்டங்கள் ஒருபுறமிருக்க, ஐந்து, ஆறு, அல்லது பத்து ஆண்டுகளுக்குள் பயனளிக்கக்கூடிய திட்டங்களின் மூலம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் உணவு உற்பத்தியைப் பெருக்கியும், அதற்குத் தேவையான அதிக நிலங்களில் பயிர் செய்தும், உணவு சம்பந்தமான நம் பழக்கங்களை மாற்றிக் கொண்டும், 7 அல்லது 8% பற்றாக்குறையை நாம் நீக்கிவிட முடியும். மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கங்களும், மற்ற ஸ்தாபனங்களும் இந்த முறையில் வேலை செய்ய வேண்டும் என்பது என் விருப்பம்.

*—புதுடில்லியில் ஆற்றிய சொற்பொழிவு, 4-3-1949.*

* * *

உணவு உற்பத்தியைப் பெருக்கப் பல வழிகள் இருக்கின்றன; அதிக நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வரலாம்; பாசன வசதிகளைப் பெருக்கி அதிக நீர் கிடைக்கும்படி செய்யலாம்; தீவிரச் சாகுபடி முறையையும் மேற்கொள்ளலாம். உற்பத்திப் பெருக்கத்திற்குரிய வழிகளில் தீவிரச் சாகுபடி முறையே அநேகமாக முதன்மையானது என்று சொல்லலாம். ஒவ்வோர் ஏக்கரிலும் விளைவதைச் சற்று அதிகமாக விளையும்படி செய்தாலும்கூட, மொத்தத்தில் விளைவு அமோகமாகப் பெருகிவிடும். இப்பொழுது விளைவது மிகவும் குறைவு. மற்ற நாடுகள் செய்துள்ளது போல, நாமும் ஏன் விளைவைக் கூட்ட முடியாது என்பதற்குப் போதிய காரணம் கிடையாது. நம் குடியானவர்கள் கடினமாக உழைக்கக் கூடியவர்கள். ஆனால், சில சமயங்களில் அவர்களிடம் நல்ல விதைகளோ, உரமோ, அல்லது வேறு அவசியமான பொருள்களோ, இருப்பதில்லை. அரசாங்கங்கள் நிச்சயமாக உதவி செய்ய முடியும். ஆனால், இறுதியான வெற்றி விவசாயிகள் தாங்களே தங்களுக்குச் செய்து கொள்ளும் உதவியினால்தான் வரும். குடியானவர்களுடைய கூட்டுறவு சங்கங்களின் மூலம் அவர்களுக்குப் பொதுவான நன்மைகள் அதிகமாக விளையும்.

— புதுடில்லியிலிருந்து ஒலிபரப்பிய பேச்சு, *14-6-1952.*

* * *

# 19

# தொழில்கள்

## உற்பத்தி, உற்பத்தி, உற்பத்தி!

**உ**ற்பத்தி என்பதன் பொருள் செல்வம். நாம் உற்பத்தி செய்யாவிட்டால், போதுமான செல்வம் இராது. விநியோகமும் அதைப் போலவே முக்கியம் தான்; செல்வம் சிலர் கையில் குவிந்து விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்; எனினும், விநியோகத்தைப் பற்றி நாம் சிந்திக்கு முன்பாக, உற்பத்தி பெருகியிருக்க வேண்டும்......

நம்முடைய நிலங்களிலிருந்தும், ஆலைகளிலிருந்தும், தொழிற்சாலைகளிலிருந்தும் செல்வம் ஆறுகப் பெருகி வரவேண்டும், வந்து நம் நாட்டிலுள்ள கோடிக் கணக்கான மக்களின் கைக்குக் கிடைக்க வேண்டும், இறுதியில் இந்தியாவைப் பற்றி நாம் கண்டு கொண்டிருந்த கனவுகள் நிறைவேறுவதைப் பார்க்க வேண்டும்......

இப்பொழுது, பொருளுற்பத்தி என்ருல்; கடினமான வேலை என்று பொருள், இடைவிடாத வேலை என்று பொருள். பொருளுற்பத்தி என்ருல், வேலையை நிறுத்தாமை, வேலை நிறுத்தம் செய்யாமை, கதவடைப்புச் செய்யாமை என்று பொருள்...

தற்போதுள்ள நம் மக்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கும்படி செய்ய முடியும், இதன் மூலம் நாட்டின் செல்வமும் அதிகரிக்கும், வேலையில்லாத திண்டாட்டமும் நீங்கும்; ஒவ்வொருவருக்கும் வேலை கிடைக்கு

மாஞல்; எந்த நாடும் கூடுதலான ஜனத்தொகை யுள்ளது என்று சொல்ல முடியாது...

ஆகவே, நாம் வேலையைச் செய்து கொண்டே செல்வோம், கடினமான வேலையைச் செய்து கொண்டே யிருப்போம். நாம் பொருள்களை உற்பத்தி செய்வோம், ஆனல் நாம் படைக்கும் பொருள்கள் தனிப்பட்டவர்களின் கைகளில் போய்ச் சேருவதற்காக அன்று, நம் சமுதாயத்திற்கு அவை உரியவை, மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், சாதாரண மனிதனின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்காகவே இதை நாம் செய்தால், இந்தியா வேகமாக முன்னேறுவதை நாம் காண்போம், நம் பிரசினைகளில் பல தாமாகவே தீர்ந்துவிடும். இந்தியாவை மறுபடி நிர்மாணம் செய்வது எளிதான காரியமன்று. நாம் பல கோடி மக்களா யிருப்பினும், தேவையான மூலப் பொருள் அமோகமாக இருப்பினும், புத்தி சாதுரியத்துடன் கடுமையாகத் தொழில் செய்யக்கூடியவர்களுக்குக் குறைவில்லாம லிருப்பினும், இந்தக் காரியம் மிகப் பெரிதுதான்...

அமைதி யிருந்தால்தான் இது சாத்தியமாகும். சர்வதேச அமைதி வேண்டும், உள் நாட்டில் அமைதி வேண்டும், தொழிலாளர் உலகிலும், தொழில் உலகிலும் அமைதி வேண்டும். இந்த அமைதியை நாம் அடைந்தாக வேண்டும். இந்த நேரத்தில் நான் உங்களிடம் பேசுவது தொழிலமைதி பற்றி. நாம் அனைவரும் இந்தப் பொருளுற்பத்திப் போரில் ஈடுபடுவோம். இது தனிப்பட்டவர்களுக்குச் செல்வம் சேர்ப்பதற்காக அன்று என்பதும், தேச சமுதாயம் அனைத்திற்கும் என்பதும் நினைவிருக்கட்டும். ஏனெனில் இந்தியா வாழ்ந்தால், நாமும் வாழ்கிறோம்.

—புதுடில்லி ரேடியோ சொற்பொழிவு, *18—1—1948.*

* * *

## தொழில் தகராறுகள்

இன்று நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடங்களில் ஒன்று, தொழில் தகராற்றினுல் எந்தக் காலத்திலும் தீமை யுண்டாவதோடு சமுதாயமும் பலவீனமடையும், அதிலும் இந்த நேரத்தில் அது நிச்சயமாகச் சேதம் விளேவிக்கும், ஏனெனில். இப்பொழுதுதான் நாம் நம் அரசாங்கக் கப்பலே மிதக்கவிட்டிருக்கிறேம். கப்பலின் மாலுமிகள் ஒத்துழையாமையை ஆரம்பித்தால், கப்பல் தனது யாத்திரையைத் தொடங்கி எப்படிச் செல்ல முடியும்?

—விசாகப்பட்டினம் சொற்பொழிவு, 14—3—1948.

*　　　　*　　　　*

## ஜனநாயகமும் தொழிற் பெருக்கமும்

சில சோஷலிஸ்ட் நாடுகளில் விரைவாகத் தொழில் மயமாக்குவதால், பயங்கரமான கஷ்டங்களேத் தாங்க நேர்தது. பார்லிமெண்டரி ஜனநாயக முறையுள்ள நாடுகளில் எதுவும் அந்த அளவு பெரும் செலவு செய்து தொழில்களேப் பரப்ப முடியாது. இராணுவ பலத்தை உதவியாகக் கொண்டுள்ள சர்வாதிகாரம் அதைச் சாதிக்க முடியலாம். ஆனுல், ஒரு சர்வாதிகாரிகூட மக்களின் சம்மதமில்லாமல் நெடுந்தூரம் செல்ல முடியாது.

—லோகசபைச் சொற்பொழிவு, 21-12-1954.

*　　　　*　　　　*

நான் தொழிற் சங்கங்களே முழுதும் ஆதரிக்கிறேன். கொள்கையளவில் தொழிலாளர் வேலேநிறுத்தம் செய்வதற்குரிய உரிமையை நான் ஆதரித்து வந்துள்ளேன். ஏனெனில் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் சென்ற 150–ஆண்டுகளாகத் தொழிற்சங்க இயக்கத்தின் வரலாற்றை நான் படித்திருக்கிறேன்.

தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளும் ஒவ்வொரு முதலாளியும் பல தலைமுறைகளாகத் தொழிலாளர்கள் அனுபவித்து வந்த பயங்கரமான துன்பங்களையும், அவர்கள் நசுக்கப்பட்டுவந்த விவரத்தையும், சிறு குற்றங்களுக்காக அவர்கள் ஜன்ம தண்டனை விதிக்கப் பெற்று ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப் பெற்றதையும், தொழிற் சங்கங்கள் தங்கள் கூட்டு முயற்சிகளால் நாளடைவில் படிப்படியாகச் சில சாதாரண மனித உரிமைகளை—அவைகளை விசேட உரிமைகள் என்று நான் சொல்ல மாட்டேன்—அடைந்தன என்பதையும் உணர வேண்டும் என்று நான் எண்ணுகிறேன்.

*—கல்கத்தாவில் கூட்டு வர்த்தகச் சங்கத்தில் ஆற்றிய சொற்பொழிவு, 14-12-1953.*

* * *

# 20

## கூட்டுறவு

---

### தனிமனிதரின் சுதந்தரமும் கூட்டுறவும்

**த**னி நபரின் சுதந்தரத்தை நம்மில் பலர் போற்றுகிறோம், அப்படிப் போற்றுவதில் அந்தச் சுதந்தரத்தையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும், தனியார் இலாபமடைய வசதி செய்யும் சமுதாயத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் வேண்டும் என்றால், என்ன செய்வது? இதற்குக் கூட்டுறவு இயக்கத்தின் தத்துவம் ஒரு பரிகாரமாகவும், ஒருபுது சமூகப் பாணியாகவும் தோன்றுகின்றது.

*—புதுடில்லியில் கூட்டுறவு காங்கிரஸில் ஆற்றிய சொற்பொழிவு, 12-4-1958.*

* * *

## கூட்டுறவால்தான் விஞ்ஞானம் பயன்படும்

பெருந்தொழில்கள், அடிப்படையான தொழில்களை அரசாங்கக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள நாம் விரும்புகிறோம். ஆனால் சிறு தொழில்கள், வீடுகளில் நடத்தும் தொழில்கள், குடிசைத் தொழில்களை எப்படிச் செய்வது? நிலத்தை என்ன செய்வது? அரசாங்கம் அவைகளைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்ள நாம் விரும்பவில்லை. நாம் நவீன உலகத்தில் இருக்கிறோம். குடிசைத் தொழில், வீட்டுத் தொழில், சிறு தொழில் எதுவா யிருந்தாலும், சிறு நிலமா யிருந்தாலும், எதுவும் சிறு அளவில் இருந்தால், நவீன விஞ்ஞானத்தை உபயோகித்து முழுப் பயனையும் அடைய முடியாது. நாம் பின் தங்கி நிற்க நேரிடும். நாம் எந்த முறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்? எல்லாவற்றையும் அரசாங்கமே விழுங்கவேண்டுமா? நிலத்தைப் பற்றிப் பேசுங்கால், தனிப்பட்ட சொந்தக்காரர்கள் மூலம் பெரிய பண்ணைகளை அமைக்க முடியாது. இது வெளிப்படையாகத் தெரியும் விஷயம். நாம் எந்த வழியை மேற்கொள்வது? கூட்டுறவைத் தவிர வேறு வழியில்லை. தனி நபர்களோ, சில கூட்டங்களோ, ஏராளமான நிலங்களை உடைமையாகக் கொள்ளாமலும், அதே சமயத்தில் தற்கால விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்திக்கொள்ள வசதியாக இருக்கும்படி, (நிலங்கள் சிதறுண்டு கிடக்காமல்,) பெரிய அளவில் நிலங்களைச் சேர்த்துப் பயிரிடுவதற்கு வாய்ப்பு அமையும்படியும் இந்த முறையில்தான் நாம் செய்ய முடியும். சிறு அளவுள்ள தொழில்களுக்கும், தற்கால விஞ்ஞானத்தின் மூலம் கிடைக்கும் புதிய நுட்பமான கருவிகளுக்கும் இடையிலுள்ள காலியிடத்தைக் கூட்டுறவு ஸ்தாபனம்தான் நிரப்ப முடியும். முற்காலத்தில் அது எவ்வளவு முக்கியமா யிருந்ததோ, அதே

போல இப்பொழுதும் முக்கியமாக விளங்குகின்றது. தற்கால இந்தியாவில் அது முன்னைவிட அதிக அவசியமாகிவிட்டது, ஏனெனில் இப்பொழுது நாம் நன்றாக உணர்ந்துகொண்டு, ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தை அடைவதற்கு, உறுதியாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

—டெ டெ

* * *

## கிராமப் பஞ்சாயத்து, கிராமக் கூட்டுறவு, கிராமப் பள்ளி

கூட்டுறவு ஸ்தாபனம் சிறிதாயிருக்க வேண்டிய அவசியமென்ன ? இதற்குப் பல காரணங்கள் உண்டு. ஸ்தாபனம் எவ்வளவு பெரிதாகின்றதோ, அந்த அளவுக்கு அதன் அங்கத்தினர்கள் ஒருவரை யொருவர் தெரிந்துகொள்ள முடியாது. ஜனங்கள் ஒருவரை யொருவர் நன்கு தெரிந்து, பழகி, ஒத்துழைக்க முடியாத நிலைமை நாளடைவில் அது அடைந்துவிடும். மேலேயுள்ள பெரிய ஸ்தாபனங்களில் ஜனங்கள் ஒருவரை யொருவர் தெரிந்துகொள்ளாம லிருந்தால், அதனால் அதிகக் கெடுதல் நேர்ந்துவிடாது. ஆனால், கிராம நிலையில் ஒருவரை யொருவர் நம்பவேண்டும், சேர்ந்து வேலை செய்யவேண்டும். பெரிய ஸ்தாபனம் வேண்டுமானால், ஒரு பிரதேசத்திலுள்ள கூட்டுறவுகளை இணைத்து வேலை செய்யலாம். ஆனால் அடிப்படையான ஸ்தாபனம் சிறிதாகவே இருக்கவேண்டும்.

நான் முன்பு அடிக்கடி சொல்லி வந்த ஒரு விஷயத்தை இங்கும் சொல்லுகிறேன். இந்தியாவில் அடிப்படையாக நின்று தாங்க வேண்டிய மூன்று தூண்கள் கிராமப் பஞ்சாயத்து, கிரா

மக் கூட்டுற சங்கம், கிராமப் பள்ளிக்கூடம் ஆகியவை. இவைகளின் மீதுதான் அரசியல், பொருளாதார, சமுதாய முறைகளில் இந்தியாவின் முழு அமைப்பும் நிறுவப்பட வேண்டும். இயற்கையாக நாம் உயரேயுள்ள பெரிய ஸ்தாபனங்களைப் பற்றியே எண்ணுவது இயல்புதான், சட்டத்தை நிறுவி இந்தியாவின் கதியை நிர்ணயம் செய்யும் பார்லிமெண்டு அடித்தளத்தில் எதிலிருந்து பலம் பெறுகின்றதோ, அது வலிமை பெற்றிருந்தால்தான்பார்லிமெண்டும் முக்கியமானதாகும். பலமான அடிப்படையில்லாமல், பார்லிமெண்டு காற்றிலே மிதந்து கொண்டிருக்க முடியாது. இந்தியாவில் அந்தப் பலமான அடிப்படை கிராமத்திலுள்ளது. இதனால்தான் கிராமப் பஞ்சாயத்தும், கிராமக் கூட்டுறவும், கிராமப் பள்ளியும் முக்கியமாக விளங்குகின்றன.

—டி டி

*　　　*　　　*

## கூட்டுறவு விவசாயம் பெருகவேண்டும்

நாம் எதைச் செய்தாலும், ஜனங்களின் பூரணமான சம்மதத்தின் பேரிலும், அவர்களுடைய நல்லெண்ணத்தைத் துணையாகக் கொண்டுமே செய்யவேண்டும்.

இந்த அடிப்படையில் கவனித்தால், பல இடங்களில் கூட்டுறவு விவசாயம் பொருத்தமாயிருக்கும் என்பதைப் பற்றி என் மனத்தில் சந்தேகமேயில்லை. இடத்திற்கு இடம் வித்தியாசமிருப்பதால், இப்பொழுது 'ஒவ்வோர் இடத்திலும்' என்று நான் சொல்லவில்லை. நெல் பயிரிடுவதற்கு ஒரு வகையான பண்ணை முறையும், கோதுமை பயிரிடுவதற்கு வேறு வகையான பண்ணை முறையும் தேவையாயிருக்கும். இது ஒருபுறமிருக்க, சிறுசிறு நிலங்களாக இருப்பவை

களை ஒன்ருகச் சேர்த்துப் பயிர் செய்தால்தான் அதிகப் பயனடைய முடியும் என்று நான் கருதுகிறேன். அவைகள் வெவ்வேறு நபர்களுக்குச் சொந்தமா யிருக்கலாம்; ஆனுல் பயிர் செய்வதில் அவைகளைச் சேர்த்துச் செய்ய வேண்டும். இந்த வழியில்தான் சேதம் அதிகமில்லாமல் செய்ய முடியும். நூறு வகை யாக முன்னேற்றமும் அடைய முடியும். இதை நான் விவரிக்காமலே எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

விவசாயத்தில் கூட்டுறவு முறையை நாம் மிகவும் விரிவாக்க வேண்டும். இப்பொழுது சுருக்கமான அளவில் இருந்து வருகிறது, மக்களின் சம்மதத்தின் பேரில், கூட்டுறவு விவசாயம், அல்லது சேர்ந்து செய் யும் விவசாயமே கடைசிப் படியாக இருக்கும். அரசாங்கப் பண்ணைகளையும் நாம் வைத்துக் கொள்ள வேண்டும். அவைகள் மாதிரிப் பண்ணைகளாக விளங் கும்; அவைகளில் கூட்டாக விவசாயம் செய்வதன் ஆதாயங்களைக் காட்ட முடியும். அவைகளின் மூலம் நாமும் ஜனங்களும் பல விஷயங்களைக் கற்றுக் கொள்ள முடியும்......

நமக்குள்ள ஒரே வழி கூட்டுறவு இயக்கம்தான். கூட்டுறவின் மூலமாகவே, தனி நபர் தன் திறமையை யும் பண்பையும் இழக்காமலும், தன் சுதந்தரத்தைக் காத்துக்கொள்ளவும், அதே சமயத்தில் பெரிய அள வில் தொழில் செய்யவும், விஞ்ஞானத்தையும் பொறி இயல் அறிவையும் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும்.

—ஷை ஷை

*  *  *

## மக்களுக்குப் பொறுப்புக் கொடுக்க வேண்டும்

கூட்டுறவு ஸ்தாபனம் என்று நான் சொல்லும் பொழுது, கிராமக் கூட்டுறவு சங்கத்தையே குறிப்பிடுகிறேன், அதற்கு மேல் பெரிதானதை அல்ல; கூடுதலாகப் போனால், அருகிலுள்ள இரண்டு மூன்று கிராமங்களைச் சேர்த்துக் கொள்ளலாம். இப்பொழுது நமது எண்ணமெல்லாம் கிராமப் பஞ்சாயத்திலும், கிராமக் கூட்டுறவிலுமே இருக்கின்றது. அவைகள் முடிவுகள் செய்வதற்கும் நாம் அவைகளுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். நாம் இதைத் துணிந்து செய்ய வேண்டியதுதான். அவைகளின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி, அவைகள் செயலற்றுக் கிடக்கும்படி விடாமல்,அதிகாரம் அளிப்பதே மேல். என்னைப் பொறுத்தவரை, கிராம மக்களின் நல்லெண்ணத்தில் நான் அதிக நம்பிக்கையுள்ளவன். அவர்கள் தவறுகள் செய்யவும் கூடும். அதனால் பாதகமில்லை. நாம் எல்லோருமே தவறுகள் செய்கிறோம். அவர்களுக்குப் பொறுப்பும் அதிகாரமும் அளித்தால், அவர்கள் தன் னம்பிக்கை கொள்வார்கள், தாமாகவே முயற்சிகள் செய்வார்கள், செயலில் ஈடுபடுவார்கள், அதிகாரிகள் வந்து வேலை செய்ய வேண்டுமென்று காத்திருக்க மாட்டார்கள்.

—புதுடில்லியில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டி, *7—11—1958.*

* * *

## உணவு உற்பத்தியும் பெருக வேண்டும், உழைப்பவர்களும் நன்ரு யிருக்க வேண்டும்

உற்பத்தியைப் பெருக்குவதற்கு இரண்டு வழிகள் தான் உண்டு. திறமையுடன் வேலை செய்யும் பெரிய மிராசுதார் மூலம், அல்லது திறமையுள்ள குடியான

வர்கள் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் பெருக்க லாம். முதல் முறையில் குடியானவர்கள் கசக்கப்படு வார்கள், கொடுமைக்குள்ளாவார்கள். ஆகையால் நாம் இரண்டாவது முறையை மேற்கொள்ள வேண்டி யிருக்கிறது. நாம் உணவு உற்பத்தியை மட்டும் கவ னிக்காமல், மனிதர்களின் முன்னேற்றத்தையும் சேர்த் துக் கவனிக்க வேண்டும். உணவு உற்பத்தியுடன், மனிதர் நலனையும் மறக்காம லிருக்க வேண்டும். மனிதர் நலனை மறந்து விட்டால், நாளடைவில் உணவு உற் பத்தியும் குறைந்துவிடும். இதனால்தான், முதலாளித் துவ நாடுகள் உட்பட, ஒவ்வொரு நாட்டிலும் நிலப் பிரபுவை நீக்கி விட்டனர். இதற்கு உதாரணமாக ஜப்பானைக் கூறலாம். ஜப்பானிலிருந்த அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்கம் நிலப் பிரபுத்துவ முறையை ஒழிப்பதற்கு ஜப்பானியருக்கு ஊக்க மளித்து வந்தது. ஐக்கிய நாடுகளின் அரசாங்கத்தை சோஷலிஸ்ட் அரசாங்கம் என்று யாரும் சொல்லமாட் டார்கள். நம் மக்களில் சிலர் இந்த நவீனப் போக்கை முற்றிலும் புரிந்து கொள்ளாம லிருக்கின்றனர்.

—ஷை. ஷை.

* * *

## கூட்டு உழைப்பு

கூட்டு விவசாயம் தனி விஷயமாதலால், இப் பொழுது அதைப் பற்றி நான் குறிப்பிடாமல், பொது வாகக் கூட்டுறவைப் பற்றியே கூறுகிறேன்— கூட்டுறவுதான் காங்கிரஸ் சபையின் அடிப்படைக் கொள்கை. நமது அரசியல் நிர்ணயச் சட்டத்தில் ‘கூட்டுறவு காமன்வெல்த்’ பற்றிச் சொல்லியுள்ளோம். தொழிலில் கூட்டுறவு பற்றிப் பேசுகிறோம். எப் பொழுதும் அதைப் பற்றியே பேசி வந்துள்ளோம்.

நாகபுரி காங்கிரஸில் நாம் தீர்மானித்திருப்பது என்ன வென்றால், மூன்று ஆண்டுகளுக்குள் நாடு முழுவதிலும் ஊழியக் கூட்டுறவுகளை அமைக்க வேண்டும் என்பது தான்—ஊழியக் கூட்டுறவுகள் இந்த நிலையில் கூட்டு விவசாயம் அன்று என்பதைக் கவனிக்கவும்: ஜனங்க தங்கள் நிலங்களைத் தாங்களே வைத்துக் கொ வார்கள், தனித் தனியாகவே பயிரிடுவார்கள். ஆனு மற்றும் பல பொருளாதார விஷயங்களுக்காகக் கூட்டுறவு சங்கத்திலே வந்து கூடுவார்கள். தற்கால உலகில் தொடர்பே யில்லாதவரைத் தவிர, உலகில் வேறு எவரும் இதை ஆட்சேபிக்க மாட்டார் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சிறு நிலங்கள் பெருகி யுள்ள இந்தியா போன்ற நாட்டில் இதை யாரும் எதிர்க்க முடியாது. சிறு நிலங்களைக் கூட்டுறவினால் இணைக்காமல் தனித் தனியாகவே விட்டுவிட்டோ மானால், அவை தேக்கமடைந்து, நிரந்தரமாக வறுமை யிலேயே கிடக்கும்படி செய்தவர்களாவோம். அவை விருத்தியாக மாட்டா. கடினமாக உழைத்து, நல்ல விதைகளைப் பயன்படுத்தி, மற்றும் செய்ய வேண்டிய வைகளைச் செய்தாலும், அவை ஓரளவுதான் அபி விருத்தி யடைய முடியும். ஆனால் எப்பொழுதும் செலவுக்கு வேண்டிய அளவே வரவு வரும், உண்மை யான முற்போக்கு இராது. இது நாம் விரும்பக் கூடிய நிலைமையன்று. நாம் இதைத் தாண்டிச் செல்ல வேண்டும். இதற்கு நாம் பல காரியங்களைச் செய்ய வேண்டும். இதற்காகத்தான் தொழில் அபிவிருத்தி ஏற்பாடுகளும், ஐந்தாண்டுத் திட்டங்களும் ஏற்பட் டிருக்கின்றன. நிலங்களிலிருந்து அதிக மக்களைத் தொழில்களுக்கு இழுக்க ஏற்பாடு செய்கிறோம். தொழில்கள் என்று சொல்லுகையில் பெருந் தொழில் களையும், சிறு தொழில்களையும், குடிசைத் தொழில் களையும் நான் குறிப்பிடுகிறேன். ஆனால், நிலங்கள்

சம்பந்தப்பட்ட வரையில், ஊழியம் செய்யும் கூட்டுறவு சங்கங்கள் அமைந்து, விதைகளை விற்கவும், உரங்கள், கருவிகள் முதலியவை அளிக்கவும் உதவி செய்தால்தான், சிறு நிலங்கள் நிலைத்திருந்து பயிர் செய்யப்படும். விவசாயியும் அதன் மூலம் நவீனமான கருவிகளைப் பயன்படுத்திக் கொண்டு அபிவிருத்தியடைய முடியும்.

*— புதுடில்லியில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் கூறியது, 7-2-1959.*

* * *

## குடியானவர்களைப் பயனைக் காட்டியே மாற்ற வேண்டும்

இந்தியாவில் தனிப்பட்ட ஒரு நிலைமையை நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது. சராசரியாக இங்கே ஒருவருக்குள்ள நிலத்தின் அளவு மிகவும் சுருக்கம், சுமார் ஒன்று அல்லது இரண்டு ஏக்கர் இருக்கலாம்—நான் நிச்சயமாய்ச் சொல்லுவதற்கில்லை. பெரும்பாலான விவசாயிகள் ஓர் ஏக்கர்கூடப் பெற்றிருக்கவில்லை. இந்த நிலையில் நாம் என்ன செய்வது? சராசரியாக 20 அல்லது 50 ஏக்கர் நிலமாக இருந்தால், இந்தப் பிரசினையே வேறு விதமாக இருக்கும். நாம் வேறு முறையில் சிந்தனை செய்ய வேண்டியிருக்கும். நான் கூட்டு விவசாயத்தையோ, வேறு எந்த முறையையோ, அதன் பெயருக்காக ஆசையுடன் போற்றவில்லை. ஆனால், இந்தியாவிலுள்ள பெரும்பாலான விவசாயிகளைப் போல, ஒருவன் ஓர் ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்? திரு. மஸானி கூறியபடி, நாம் நல்ல விதைகள், தண்ணீர், உரங்கள், நவீனக் கருவிகள் முதலியவற்றை விவசாயிக்கு அளித்தால், அவன் அதை அபி

விருத்தி செய்ய முடியும். இவைகளை யெல்லாம் கொடுக்க வேண்டியது அவசியம்தான். நாளடைவில் கொடுக்கவும் முடியும். ஆனால், இவைகளை யெல்லாம் கொடுத்த பின் என்ன ஏற்படும்? பெரிய நிலங்களைப் பயிர் செய்வதானால், சில அபிவிருத்திகள் ஏற்படும், நமக்கு ஆதாயமும் கிடைக்கும். ஒரே ஏக்கரை வைத்துக் கொண்டிருப்பவன் எப்பொழுதும் அரைவயிறு பட்டினியாகவே யிருக்க நேரும். பருவ காலம் நன்றா யிருந்தால், விளைவு கொஞ்சம் அதிகமா யிருக்கும், பின்னால் அவன் பழைய நிலைமைக்கே வந்து விடுவான். இப்பொழுது நிலத்தை நம்பி வாழ்பவர்கள் அதிகப் பேர்கள் இருக்கின்றனர். அவர்களை வேறு தொழில்களுக்கு மாற்ற வேண்டும். பெரிய தொழிலாயினும், நடுத்தரத் தொழிலாயினும், குடிசைத் தொழிலாயினும் அதில் ஈடுபடும்படி செய்ய வேண்டும். நிலத்தின் மேல் அதிகமானவர்கள் சார்ந்திருப்பதைக் குறைக்க வேண்டும். உற்பத்தி பெருகுவதற்கு உரிய எல்லா முறைகளையும் மேற்கொள்ள வேண்டியது அவசியம். வெறும் கொள்கையளவில் பார்த்தாலும், வேறு வகையில் கவனித்தாலும், இன்றுள்ள நிலைமைகளில் கூட்டு முறையில் விவசாயம் செய்வதைக் குறிக்கோளாகக் கொள்வதுதான் சரியானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களின் சம்மதத்தின் பேரிலேயே நாம் எதையும் செய்வோம் என்பதை மீண்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். கொள்கை யளவில் பார்ப்பதோடு, செயல் முறையில் பார்த்தாலும், நாம் ஒரே முடிவுக்குத் தான் வருவோம். குடியானவர்கள் விரைவில் மாறும் இயல்புடையவர்கள் அல்லர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களுடைய பழக்கங்களை மாற்ற வேண்டும் என்று நான் விரும்பினாலும், எளிதில் மாற்றிவிட

முடியாது. அவர்கள் முன்பு பிரசங்கம் செய்தால் பயனில்லை; வெற்றியடைந்த உதாரணங்களை அவர்கள் நேரில் பார்க்கும்படி செய்ய வேண்டும். அவர்களுக்குப் பக்கத்திலுள்ள ஒருவன் புது முறையில் வெற்றியடைந்துள்ளான் என்று நான் சொன்னால், வேறு எந்த வகையையும்விட அது அவர்களுக்கு நம்பிக்கையை உண்டாக்கும்.

— *லோகசபையில் ஆற்றிய சொற்பொழிவு*, ***19-2-1959.***

* * *

## இப்பொழுதுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்கள்

கூட்டுறவு ஸ்தாபனங்களின் இப்போதைய நிலை பற்றிச் சில விவரங்களை அளிக்க நான் விரும்புகிறேன். கிராமப் புறத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களைப் பற்றிய விவரம் இது. இந்தச் சங்கங்களின் எண்ணிக்கை 1950—51 முடிவில் 1,16,000; 1958—59 முடிவில் எண்ணிக்கை 1,79 000. இவை கிராமச் சங்கங்கள், பெரியவை அல்ல. கிராமக் கூட்டுறவுகளின் உறுப்பினர்கள் 1950—51ல் 51½ இலட்சம் பேர்கள்; 1956—57ல் 91 இலட்சம் பேர்கள்; 1957—58ல் 110 இலட்சம் பேர்கள்; 1958—59ல் 138 இலட்சம் பேர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

பெரிய கூட்டுறவு சங்கங்களில் 1956—57 முடிவில் 1,915-ம், 1957—58 முடிவில் 4,529-ம், 1958—59 முடிவில் 6,318-ம் இருந்தன.

இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் கிராமப் புறங்களில் எவ்வளவு கடன்கள் கொடுத்து உதவி வந்தன என்பதைக் கனம் அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ள விரும்பக்கூடும். கடன் தொகைகளில் 100-க்கு 80 பங்கு கிராமக் கூட்டுறவு சங்கங்களாலேயே கொடுக்

கப்பட்டது. பெரிய சங்கங்கள் 20% மட்டுமே அளித்தன. 1950—51-ல் கடன் தொகை ரூ. 22·9 கோடி, 1955—56-ல் ரூ. 49·62 கோடி, 1956—57-ல் ரூ. 63·3 கோடி, 1957—58-ல் ரூ. 96 கோடி, 1958—59-ல் ரூ. 130 கோடி. இவைகளிலிருந்து கூட்டுறவு சங்கங்கள், முக்கியமாகச் சிறு சங்கங்கள், தக்க அளவில் முன்னேறி யிருப்பதைக் காணலாம்.

கூட்டுறவு விவசாயப் பண்ணைகளில் 1957—58 இறுதியில் இந்தியாவில் 2,000 இருந்தன. 'கூட்டுறவுப் பண்ணைகள்' என்ற தலைப்பில் இருவகையான பண்ணைகள் சேர்க்கப்பட் டிருக்கின்றன. சில சமயங்களில் நிலம் சங்கத்திற்கே இருக்கும், உரிமையும் அதற்குத்தான். ஆனால் குடியானவன் அதைத் தனித்துப் பயிரிடுவான். இத்தகைய பண்ணைகளைக் கழித்துவிட்டால், கூட்டுறவு முறையிலேயே பயிர் செய்யும் சங்கங்கள் 1,357.........

இந்த 1,357 சங்கங்களும் முதல்தரமானவை என்றோ, மிகவும் வெற்றியடைந்தவை என்றோ, கூட்டுறவு விவசாயத்திற்கு எடுத்துக் காட்டாக உள்ளவை என்றோ நான் சொல்லவில்லை. ஆயினும், ஒவ்வோர் இராஜ்யத்திலும் வெற்றிகரமாகப் பயிர் செய்யும் கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் இருக்கின்றன. அவைகள் சென்ற இரண்டு மூன்று ஆண்டுகளில் தோன்றியவை, எவருடைய வற்புறுத்தலினாலும் அவை ஏற்படவில்லை. ஆனால், பல காரணங்களுக்காகக் குடியானவர்களே அவைகளை அமைக்கத் தீர்மானித்தனர்.

—டை. டை

* * *

## கூட்டுறவில் கட்சி அரசியல் வேண்டாம்

காங்கிரஸ் குறித்துள்ள நில சம்பந்தமான கொள்கையை நிறைவேற்றும் பணியில் எந்தக் கூட்டமும், எந்தக் கட்சியும், எந்த நபரும் பங்கெடுத்துக் கொள்ளலாம். ஆட்களையும் கூட்டங்களையும் நாம் கவனிப்பதில்லை, கொள்கையையே கவனிக்கிறோம். இந்தக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டிய இடம் முக்கியமாகக் கிராமங்கள். அங்கே கட்சி அரசியல் புகுவதை நாம் விரும்பவில்லை. அது சாதாரணக் கிராமவாசியைக் குழப்பி விடுகின்றது.

*— புதுடில்லியில் பத்திரிகை நிருபர்களிடம் பேசியது,*
***6-3-1959.***

* * *

## கூட்டுப் பண்ணைகள் வேண்டாம்

(தனி நபர்கள் நிலங்களை உடைமையாகக் கொள்ளாமல் கூட்டுப் பண்ணைகளின் உடைமையாகக் கொண்டு செய்யும்) கூட்டுப் பண்ணை விவசாயத்தை நான் அங்கீகரிக்கவில்லை. எனக்குத் தெரிகிற வரை அது நாம் நாட்டுக்குப் பொருத்தமாகத் தெரியவில்லை. அதற்காக நாம் வேலை செய்யப் போவதில்லை. ஆனால் இந்தியாவிலேகூட அத்தகைய 'கலெக்டிவ் பண்ணைகள்' என்ற கூட்டுப் பண்ணைகள் சில இருக்கின்றன. நாடு பெரிதா யிருப்பதால், பலவகை முறைகளையும் இங்கே அநுமதிக்கிறோம். அரசாங்க ஸ்தாபனம் எதுவும் கட்டாயப்படுத்தாமலே, இவை நடந்து வருகின்றன. சில குடியானவர்களே இவைகளில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

எப்படி யிருந்த போதிலும், நம்முடைய நோக்கம் கூட்டுறவுப் பண்ணைகளை அமைத்தல், அது இந்திய

நிலைகளுக்கு ஏற்றதாயுள்ளது—இங்கே நிலங்கள் சிறியவையாகச் சிதறுண்டிருக்கின்றன......

—புது டில்லியில் இந்திய வர்த்தக, தொழில் கூட்டுச் சங்கங்களின் ஆண்டு விழாவில் தொடக்கச் சொற்பொழிவு, 7—3—1959.

* * *

## பயங்கரமான வறுமை ஒழிய வேண்டும்

பலவிதமான பயமுறுத்தல்களைக் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை. இந்த அடிப்படையான உண்மையை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தியாவில் மிகப் பெரிய விஷயம், பயங்கரமான விஷயம், இங்குள்ள வறுமையும், அதனால் அவதியுறும் கோடிக்கணக்கான மக்களுமே. நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியிலும், ஒவ்வொரு துறையிலும், இதை நாம் கண் முன்பு வைத்துக்கொள்ள வேண்டும். வறுமையை உடனே விரைவில் ஒழித்துவிட முடியாது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அதை ஒழித்துக் கட்டப் பல தலைமுறைகள் ஆகும். ஆனால் நாம் அந்தத் திசை நோக்கிச் செல்ல வேண்டியது அவசியம்.

—டெ டெ

* * *

## பத்து லட்சம் புரட்சிகள் வரட்டும்!

இந்தியாவில் நிலங்கள் சிறு சிறு அளவுள்ளவை. சராசரியாக ஒவ்வொரு விவசாயிக்கும் ஓர் ஏக்கரோ, சற்றுக் கூடுதலோதான் உண்டு. இந்த நிலையில் நாம் என்ன செய்ய முடியும்? குடியானவர்கள் எப்படி முன்னேறுவது? உயர்ந்த விதைகள், சிறந்த உரங்கள் முதலியவற்றை நாம் கொடுத்து உதவினாலும், நிலைமை

மாறப் போவதில்லை; அவர்கள் சிறிது முன்னேறு வார்கள் என்பது நிச்சயம். ஆனால் வறுமைக் குழியி லிருந்து அவர்கள் மேலெழுந்து வரமாட்டார்கள். கோடிக் கணக்காயுள்ள இந்த விவசாய மக்கள் எப்பொழுதும் உயிரை மட்டும் காப்பாற்றிக் கொள்ளும் அளவுக்கு உண்டு வாழும் வாழ்க்கை, எதிர் காலத்திலும் இப்படியே யிருக்கும் நிலையை நான் கற்பனை செய்து பார்க்கக்கூட முடியவில்லை. இந்த நிலையைப் பார்க்கினும் இந்தியாவில் பத்து லட்சம் புரட்சிகளை நான் வரவேற்பேன்.

—டை டை

* * *

## மக்களைத் தொழில்களில் திருப்பவேண்டும்

நிலங்களை நம்பிக்கொண்டு அதிகமான ஜனங்கள் இருக்கிறார்கள். நிலங்களின் மீதுள்ள இந்தச் சுமை குறைய வேண்டும். மக்களைப் பெரிய தொழில், நடுத் தரத் தொழில், சிறு தொழில், குடிசைத் தொழில் களுக்கு மாற்ற வேண்டும். இதைச் செய்ய முடியும் என்றும், விரைவிலே செய்யலாம் என்றும் நான் எண்ணுகிறேன்.

—டை டை

* * *

## தூண்டுதலைத் தவிர, கட்டாயப்படுத்தக் கூடாது

மற்றைப்படி நிலத்தில் கூட்டுறவு முறையில் வேலை செய்ய வேண்டும். உடனே கூட்டுறவுப் பண்ணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. அத்தகைய பேச்சே யில்லை. இந்தியா முழுதும் ஊழியம் செய்யும் கூட்டுறவுகள் அமைய வேண்டும் என்றே நாங்கள் சொன்னோம்.

இதை மூன்று ஆண்டுகளில் செய்ய வேண்டும் என்றும் சொன்னோம். பெரியவையும் சிறியவையுமாக, நம்மிடம் சுமார் 5,50,000 கிராமங்கள் இருக்கின்றன. இவை களுக்கு 2,00,000 கூட்டுறவுகள் அமைக்க வேண்டி யிருக்கும். சில கிராமங்கள் மிகவும் சிறியவை என் பதால், அவற்றை மற்றவைகளோடு சேர்த்து விடலாம். இந்த எண்ணிக்கை நினைக்கவே பயங்கரமான பெரிய எண்ணிக்கை யன்று. ஜனங்களுக்கு வசதிகள் செய் யும் இந்தக் கூட்டுறவுகள் வேலை செய்து வரும் பொழுது கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை மக்கள் ஆரம்பிக்க வாய்ப்பிருக்கும். இதற்காகச் சட்டம் செய்யவோ, கட்டாயப்படுத்தவோ, நாம் விரும்ப வில்லை. ஜனங்கள் தாங்களாகவே முடிவு செய்து கொள்ளும்படி தூண்டுவோம். இது வேறு விஷயம், இதில் நமக்கு உரிமையுண்டு, இதை நிச்சயமாகச் செய்யவும் உத்தேசித்துள்ளோம்.

—ஷை ஷை

* * *

## பயிற்சியும் கல்வியும் இன்றியமையாதவை

கூட்டுறவு பற்றி ஒரு விஷயம் மிகவும் முக்கிய மானது. கூட்டுறவு இந்தியாவில் வெற்றி பெறும், அப் படி வெற்றி பெறுவதற்கு, அதைப் பரப்புவதற்கு முன்பே கவனமாகப் பயிற்சி யளிக்க வேண்டும், கல்வி யைப் பரப்ப வேண்டும். ‘கூட்டுறவைத் தொடங்கி விட்டுக் கிராம ஜனங்களை நடத்தச் சொல்லுங்கள்’ என்று சொல்லுவதில் பயனில்லை. இதுவரை நாம் பயிற்சி விஷயத்தில் போதிய அளவு சிரத்தை எடுத் துக் கொள்ளவில்லை என்பதை நான் ஒப்புக்கொள் கிறேன். நாம் மக்களுக்குக் கவனமாகப் பயிற்சி அளிக்க வேண்டும். அந்தப் பயிற்சியின் அளவைப்

பொறுத்தே கூட்டுறவு இயக்கத்தின் வெற்றியும் இருக்கும்.

—டை டை.

* * *

## இரண்டு வழிகள்

நமக்கு என்ன தேவை? பொதுவாகச் சொன்ஞல், நாம் நம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விரும்புகிறேம். நமது உற்பத்தியைப் பெருக்க விரும்புகிறேம். இதஞல் நிலங்களில் அதிக விளைவு ஏற்பட்டு, விவசாயிகளோடு நாடும் செழிப்படைய விரும்புகிறேம். நம் சமுதாய இலட்சியங்களை அடைவதற்கேற்ற ஒரு மேலான சமுதாய அமைப்பையும் வேண்டுகிறேம். இந்தப் பிரசினையை இரண்டு வழிகளாகப் பரிசீலிக்கலாம். ஒன்று ஆக்க முறை, மற்றது எதிர்மறையானது. எதிர்மறைப்படி முதலில் இதைக் கவனிப்போம். ஏனெனில் இந்தக் கருத்தை எதிர்க்கும் அங்கத்தினர்கள் அதைக் கைக்கொள்கிருர்கள்.

எதிர்மறை முறை இதுதான் : 'இதைச் செய்யாதீர்கள், இது அபாயகரமானது, ஜனங்கள் இதை விரும்ப மாட்டார்கள், பின்ஞல் கேடு வரும். உற்பத்தியே குறைந்துவிடும்!' என்றும் சில சமயங்களில் சொல்லப்படுகின்றது. நாம் எடுத்துக் கொள்ளும் எந்த நடவடிக்கையாலும் உற்பத்தி குறையும் என்ருல், நம் நடவடிக்கை தவறு என்ருகும். அதைப் பற்றி விவாதமே தேவை யில்லை. ஏனெனில் நாம் உற்பத்தியைப் பெருக்குவதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறேம்.

நாம் வேலை செய்யாமல் ஒதுங்கி விட்டால், நமது விவசாயப் பொருளாதாரம் எப்படி யிருக்கும்? குடியானவர்கள் அரை வயிற்று உணவுக்காக மல்லாடிக்

கொண்டிருக்கும் நிலையில் அவர்களை நாம் விட்டு வந்தவர்களாவோம். சில குடியானவர்கள் ஓரளவு வசதியுடன் இருப்பார்கள், சிலர் மோசமான நிலையில் இருப்பார்கள். விளைவும் குன்றிப் போனால், குடியானவர்கள் கதி அதோகதி யாகிவிடும்.

—லோக சபைச் சொற்பொழிவு, 28—3—1959.

* * *

## கேள்விகளும் விடைகளும்

கூட்டுறவுகளை அமைத்தல் சரியான வழி என்பதில் எனக்குத் துளிக்கூட ஐயமில்லை. கூட்டுறவு விவசாயப் பண்ணை அமைத்தலும் சரியான இலட்சியமே யாகும். ஆயினும் இவைகளைப் பற்றி ஆராய்ந்து அபிப்பிராயம் கூறுவதும், கேள்விகள் கேட்பதும் நியாயம்தான். இப்பொழுது இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் அமைப்பதற்கு எந்த அளவுக்கு நிலைமைகள் சாதகமா யிருக்கின்றன என்று கேட்கலாம். 'நீங்கள் போதிய அளவு பயிற்சி கொடுக்காமல், ஏராளமான பயிற்சி பெற்ற ஆட்கள் இல்லாமல், இதை ஆரம்பிக்க முடியாது' என்று சொல்லலாம்; 'ஒரு சட்டத்தை இயற்றி உடனே எல்லாம் நடந்துவிடும் என்று நம்பியிருக்க முடியாது' என்றும் கூறலாம். இது சரியான வக்கணையாகும். இதற்குப் பதிலாக, நாம் மக்களுக்குப் பயிற்சி யளிக்கலாம், மற்றும் சாதகமான சூழ்நிலைகளை அமைக்கலாம். இதுதான் ஒரு பிரசினையை அணுகும் முறையாகும். இதை விட்டு விட்டு, 'கூட்டுறவு விவசாயப் பண்ணைகளும், கூட்டுறவு சங்கங்களும் இந்தியாவுக்குப் புதியவை, இந்திய மக்களின் பண்பாடுகளுக்குப் பொருந்தியவை அல்ல. ஆகையால் அவைகள் வேண்டாம்' என்று சொல்லுவது

நல்லதன்று. அதற்கு அர்த்தமே யில்லை. அது சரியான ஆராய்ச்சிக்கு நேர் மாறானது. அதை ஒப்புக் கொண்டால், நாம் எப்பொழுதும் வறுமையிலே ஆழ்ந்து கிடக்க வேண்டியதுதான். ஏனென்றால் புதிதாக ஏதாவது செய்யாமல், நாம் முன்னேறவே முடியாது.

மற்றொரு புறத்தில், 'கூட்டுறவு விவசாயப் பண்ணை முறை நல்லது, ஆதலால், எல்லா இடங்களிலும் நாளையே அதை அமைத்துவிட வேண்டும்' என்று சொல்லுவதும் சரியாகாது. ஏனெனில் அது மிகவும் கஷ்டமாகும். அது நடைமுறையில் சாத்தியமாகாது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். நாம் முதலில் அடிப்படை போட வேண்டும், மக்களின் மனங்களை நாம் பக்குவப்படுத்த வேண்டும், மக்களை நம் பக்கமாகத் திருப்பிக்கொள்ள வேண்டும்.

—ஷி. ஷி

* * *

## ஒவ்வொரு துறையிலும் கூட்டுறவே நலம்

கூட்டுறவும், கூட்டுறவு முறையில் வேலை செய்வதும், மனிதர் செய்யும் தொழில்கள் எல்லாவற்றிற்கும் பொருத்தமாகும் என்று கொள்கையளவில் ஒப்புக் கொள்ளலாம் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. உயர்ந்த கலைப் படைப்புக்களைத் தவிர, மற்றவைகளில் எல்லாம் இது பொருத்தமாகும். கலைப்படைப்பு மட்டும் நீங்கலாக, மற்ற ஒவ்வொரு தொழிலிலும் கூட்டுறவே மேலான முறையாகும். கொள்கையளவில் அதை மறுக்க முடியாது. நடைமுறையில் ஜனங்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நீங்கள் கஷ்டங்களை எடுத்துக் கூறலாம். அதற்கும் நாம் பதில் கூறுவோம். பெருங் கூட்டங்களாக நாம்

சேர்ந்து வசிப்பதால், கூட்டுறவு ஒரு மேலான வாழ்க்கை முறையாகும். அது தவிர்க்க முடியாத முறையாகவும் உள்ளது. ஜனத்தொகை குறைவாயுள்ள நாட்டில் ஜனங்கள் பெரிய பண்ணைகளை வைத்துக் கொள்வதும், ஒவ்வொன்றும் தனித் தனியா யிருப்பதும் சரிதான். வேத காலத்தில், நிலங்கள் அதிகமாகவும், வனங்கள் மிகுந்தும், ஜனத் தொகை குறைந்தும் இருந்ததால், அந்தக் காலத்திலிருந்த நில உடைமை முறை அக் காலத்திற்கு ஏற்றதாக இருந்திருக்கும். இன்று இந்தியாவில் ஜனத் தொகை நூறு மடங்கு பெருகியும், நாள்தோறும் பெருகிக் கொண்டும் இருக்கும் பொழுது, நாம் வேதகால அமைப்பை வைத்துக் கொள்ள முடியாது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று கூட்டுறவும் அதன் முடிவாகக் கூட்டுறவு விவசாயப் பண்ணையும். இரண்டாவது வழி நிலங்களைச் சார்ந்து வாழும் மக்களை வேறு தொழில்களுக்கு அழைத்துச் செல்லல். விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும், நகர ஜனத்தொகைக்கும் உள்ள விகிதத்தையும், அது மாறிவரும் விவரத்தையும் கனம் அங்கத்தினர்களிலே பலர் தெரிந்திருப்பார்கள். சென்ற 19-ஆம் நூற்ருண்டு முழுவதிலும், ஐரோப்பாவில் தொழில் அபிவிருத்தி யடைந்திருந்த நாடுகளிலெல்லாம், நகரங்களின் ஜனத்தொகை மேலே ஏறிக் கொண்டே யிருந்தது. 'நகர ஜனத்தொகை' என்பதில் நான் தொழிலில் சம்பந்தப்பட்டவர்களையே சிறப்பாகக் குறிப்பிடுகிறேன். விவசாயத்தில் ஈடுபட்ட மக்களின் தொகைக்கும் நகர ஜனத்தொகைக்கும் உள்ள விகிதம் 50: 50, 60: 40, 40: 60 என்ற முறையில் இருந்தது. அமெரிக்காவில் விவசாய மக்களின் தொகை மேலும் குறைவுதான். சென்ற 19-ஆவது

நூற்றுண்டிலும், 20–ஆம் நூற்றுண்டின் ஒரு பகுதியிலும், இந்தியாவில் நகர ஜனத்தொகை குறைந்தும், நாட்டுப்புற ஜனத்தொகை அதிகமாகிக் கொண்டும் இருந்தது.

இதன் பொருள் என்ன? வேலைக்கு வாய்ப்புக்கள் இல்லை, தொழில்கள் வளரவில்லை, ஒவ்வொருவரும் நிலத்தையே நம்பிச் செல்ல வேண்டியிருந்தது. நிலத்தின் மீது அளவற்ற கூட்டம் பாரமாகச் சார்ந்து விட்டது. நிலத்தில் ஏற்கனவே மக்கள் நிறைந்திருந்தனர். அதிலேயே மேற்கொண்டும் அதிக மக்கள் வந்து நெருக்கிப் புகுந்தனர். நிலத்தின்மீது இப்படி ஏறிய சுமைதான் இந்தியாவின் வறுமைக்கு அடிப்படையான காரணம். ஆகவே, நாம் ஜனங்களை நிலத்திலிருந்து பிரித்து வெளியே கொண்டு வந்து, அவர்களுக்கு வேலைகளைக் கொடுக்க வேண்டும். 'பிரித்து' என்று நான் சொல்லுவதில், அவர்களைக் கல்கத்தா அல்லது பம்பாயில் கொண்டுபோய் விட்டுவிட வேண்டும் என்ற கருத்தில் சொல்லவில்லை. அத்தகைய நகரங்களில் தொழில்களில் ஈடுபடச் செய்ய வேண்டும் என்றே கருதுகிறேன்.

துண்டு துக்காணியாயுள்ள நிலங்களில் நவீனக் கருவிகளை உபயோகித்துத் திருந்திய முறையில் விவசாயம் செய்ய முடியாது. நூற்றுக் கணக்கான ஏக்கர் அளவில் நிலமுள்ள பெரிய நிலச்சுவான் புதிய கருவிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். நான் இப்பொழுது 'டிராக்டர்க'ளைப் பற்றிப் பேசவில்லை. நான் டிராக்டர்கள் வேண்டாம் என்று சொல்பவனல்லன், ஆனால், இந்தியாவின் தற்போதைய நிலையில் டிராக்டர்களைப் பெருவாரியாக உபயோகிக்க முடியும் என்று நான் கருதவில்லை. மேலான கருவிகளையும், முறைகளையும் பற்றியே நான் எண்ணிக் கொண்டு பேசு

கிறேன். இவைகளைச் சிறு நிலங்களில் உபயோகிக்க முடியாது. முதலாவது, சிறு நிலமுடைய ஏழை விவசாயிக்கு இவைகளை வாங்கி உபயோகிக்க வசதியே கிடையாது. இரண்டாவது, இவைகளை உபயோகிக்க அவனுக்குப் பயிற்சியுமில்லை. இந்தக் கருவிகளையெல்லாம் பயன்படுத்தப் பெரிய பண்ணைகள் இருந்தால்தான் முடியும். இராஜஸ்தானிலுள்ள மாபெரும் அரசாங்கப் பண்ணையில் இன்று அதிக ஆச்சரியமான பயன்களை அடைந்து வருகிறோம்......... அங்கே 5,000-ஏக்கர்கள் இருக்கின்றன. அங்கு போய் வந்தவர்கள் அங்குள்ள பயிர்களைப் பற்றி விந்தை விந்தையாகப் பேசுகிறார்கள். சாதாரணமாக 4-அடி உயரமாக வளரும் பயிர் அங்கே 10–அடி உயரமா யிருக்கிறதாம்.,...

ஜனங்கள் கூட்டுறவு விவசாயத்தை மேற்கொண்டால் நல்லதுதான். ஆனால், நான் அவர்களை அவ்வாறு செய்யும்படி சொல்லவில்லை. ஏனெனில் அது நல்லதெனினும், ஜனங்கள் தாங்களாக அதில் ஊறி வளர்ந்து வர வேண்டும். அதை அவர்கள் மீது திணிக்க முடியாது. அதில் அடங்கியுள்ள மனோதத்துவத்தையும், அதனால் கிடைக்கும் அநுபவத்தையும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

—டை. டை.

* * *

## உடைமை என்பது கண்ணுக்குப் புலனாகாத ஒன்று

உடைமை (அல்லது சொந்தமாய்க் கொள்ளுதல்) என்பது கண்ணுக்குப் புலனாகாத உருவமற்ற ஒன்று. ஒரு பெரிய பண்ணை இருப்பதாயும், அதைக் குறித்த அளவு பங்குகளுள்ள ஒரு கம்பெனி நடத்துவதாயும் வைத்துக் கொள்வோம். ஒரு மனிதனுக்கு அந்தப்

பண்ணையில் 10% பங்கு இருக்கிறது. ஆனால், அவன் அதில், 'இந்தப் பகுதி நிலம் என்னுடையது' என்று சொல்ல முடியாது. மொத்த நிலத்தில் அவனுக்கு 10% உடைமை உண்டு, இங்கே உடைமை என்பது தெளிவான உருவமாய்த் தெரிகிறது. இலாபத்தில் அவனுக்குரிய பங்கையும் அவன் பெறுகிறான். இந்தக் காலத்தில் தொழில்களில் பின்தங்கிய நாடுகளிலேயே நிலம் மிக மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. எங்குமே நிலத்திற்கு ஓரளவு முக்கியம் உண்டு. ஆனால், தொழில்களில் பின்னடைந்த சமுதாயங்களில், அதன் முக்கியத்துவம் அதிகமா யிருக்கிறது. ஆனால் எங்கெங்கு தொழில் முன்னேறுகின்றதோ, அங்கெல்லாம் உடைமை என்பது பங்குகளும் பங்கு ரசீதுகளுமாகவே மாறுகின்றது, (கடன்கள் அளித்துள்ளவர்க்கு உரிய) செல்வாக்கு அல்லது மதிப்பாக அது ஆகிவிடுகின்றது. இந்த மதிப்புடையவன் தொழில்களைத் தொடங்குவதற்குத் தேவையான எவ்வளவு தொகை வேண்டுமானாலும் பெற முடியும். எனவே உடைமை பற்றிய கொள்கை முழுதுமே மாறி வருகின்றது. இருந்த போதிலும், நாம் ஒரு சதுர கஜ அளவுள்ள நிலத்தின் மீது அமர்ந்துகொண்டு, 'இந்தச் சதுர கஜம் என்னுடையது, இதை எவரும் எடுத்துக்கொள்ள முடியாது' என்று பெருமையடித்துக் கொண்டு, உடைமையோடு ஒட்டிக்கொள்கிறோம். சமுதாய வாழ்க்கை விரிவடைந்து வளரும்பொழுது, அது போய்விடுகின்றது. பெரிய நகரங்களில் தனிப்பட்டவர் உடைமைகளாகச் சில சாலைகளும் பாலங்களும் முன்னால் இருந்தன. இப்பொழுது சாலைகளும், பாலங்களும் பொதுவான உடைமைகளாகி விட்டன. இரயில்வேக்கள் கூடப் பொதுச் சொத்துக்க ளாகிவிட்டன. தனிநபர் உடைமை பற்றிய கருத்து மாறிவருகின்றது, அதனால் பொதுமக்களும் தனி நபரும் இலாபமடைகின்றனர்.

மாறிக்கொண்டு வரும் ஒரு சமுதாயம் உடைமை பற்றிய அடிப்படையான தன் கருத்துக்களைப் பரிசீலனை செய்து மாற்றிக்கொள்கின்றது. இது வழக்கம் தான். இதைக் கண்டு எவரும் பயப்பட வேண்டியதில்லை. இதனால் நாம் எதிர்பார்க்கும் குறிக்கோள்களை அடைய முடியுமானால், நாம் அதை வரவேற்க வேண்டும்.

—ஷெ ஷெ

* * *

## அடிக்கடி ஆராய்ந்து பார்க்கவேண்டும்

நாம் மேலே செல்லச் செல்ல, இந்தக் கூட்டுறவு விஷயத்தை அடிக்கடி பரிசீலனை செய்து, வேண்டும் மாற்றங்கள் செய்து, நிலைமைகள் மாறுவதற்கு ஏற்றபடி, அதையும் பொருத்தமாக மாற்றிக்கொள்வோம். இத்தகைய விஷயம் மாற்றுவதற்கு ஏற்றபடி இளக்கமா யிருப்பதே நலம். வெறும் சித்தாந்த ரீதியாகவோ, ஏட்டுப் படிப்பு முறையிலோ, இதைப் பார்ப்பது விரும்பத் தக்கதன்று. இதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். முதலாவதாக, பல்வேறு வகையான பிராந்தியங்களுள்ள இந்தியா போன்ற ஒரு நாட்டில், சித்தாந்தம் பேசிக்கொண்டிருப்பதும், நெகிழ்ச்சி யில்லாத இறுகிய முறையை அமைப்பதும் புத்திசாலித்தனமாகாது; இரண்டாவதாக, 36– கோடி மக்களைப் பாதிக்கக் கூடிய இத்தகைய பெரிய இயக்கத்தில் நாம் இறுகலான ஒரே கோட்பாட்டைப் பற்றிக்கொண்டிருக்கவும் முடியாது. சமயத்திற்குச் சமயம் எது தேவை என்பதை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். ஆதலால் இத்தகைய பரந்த நோக்கத்துடன் இந்தச் சபை இவ்விஷயத்தைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெகிழ்ச்சியா யிருக்க வேண்டும் என்பதால், குறிப்பாக எதுவுமில்லாமல் இருந்துவிடவும் கூடாது. அதுவும் சரியில்லை. நமது கிராமப் பகுதிகளை நினைவில் வைத்துக்கொண்டு, அவைகளுக்கு ஏற்ற முறையில் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி நாம் நன்ருகச் சிந்தனை செய்து, தெளிவான கருத்துக்களைக் கொள்ளவேண்டும்.

*—லோகசபையில் ஆற்றிய சொற்பொழிவு, 12-4-1959.*

* * *

## நாட்டுப்புறத்தில் கூட்டுறவு

நமது நாட்டுப்புற மக்களுக்குக் கூட்டுறவைத் தவிர வேறு வழி யிருப்பதாக எனக்குத் தெரியவில்லை, பல பணிகளை மேற்கொள்ளும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் அவர்களுக்கு இன்றியமையாதவை. இவைகளின் மூலம் கூட்டுறவு விவசாயத்திற்குச் செல்லவேண்டும். கூட்டுப்பண்ணை முறை இந்தியாவுக்கு இப்போதுள்ள நிலைமைகளில் ஏற்றதாகத் தெரியவில்லை, நம் விவசாயிகள் ஒரு பெரிய இயந்திரத்திலே ஒட்டிக்கொண்டிருக்கும் உறுப்புக்களாகத் தங்களுடைய தனி இயல்புகள் வெளியே தெரியாதபடி இருப்பதையும் நான் விரும்பவில்லை, இந்த நாட்டில் நிலம் சுருக்கம். மக்கள் அதிகப் பேர் இருக்கின்றனர் என்ற உண்மையை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த விஷயங்களைப்பற்றி விவாதம் நடந்து வருவதிலிருந்து, நாம் பழைய பாழடைந்த பொருளாதாரப் பாதைகளை விட்டு வெளியேறி, முன்னேறி வருகிறோம் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

*—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.*

* * *

## கண் முன்னால் காட்ட வேண்டும்

நாம் செய்யும் எந்த முடிவும் பெரும்பாலான மக்களின் சம்மதத்தைப் பெறவேண்டும், நமது குடியானவர்களில் பெரும்பாலோர் நம் முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. நாம் அவர்களை நம் வழிக்குத் திருப்ப வேண்டும். அதைச் செய்வதற்குச் சிறந்த வழி கூட்டுறவு முறையின் பலாபலன்களை அவர்கள் நேரில் தெரிந்துகொள்ளும்படி காட்டுவதுதான். பிறகுதான் அவர்கள் திரும்புவார்கள். இந்தியா பெரிய நாடு. விவசாய அமைப்பில் பல முறைகள் இருக்கின்றன. கடைசியில் அவைகளில் சிறந்த முறை மட்டும் நிலைத்து நிற்கும். கூட்டுறவுகளிலும் கூடப் பல வகைகள் இருக்கின்றன. அவைகளில் எது மிகவும் சிறந்தது என்று நான் உடனே சொல்ல முடியாது. ஒரு வேளை ஒரு வகை நாட்டின் ஒரு பகுதிக்கு ஏற்றதா யிருக்கும், மற்றொன்று மற்றொரு பகுதிக்கு ஏற்றதா யிருக்கும்.

—*அரசியல் நிர்ணய சபையில் பேசியது, 17-2-1948.*

* *

## 21

## ஜனத்தொகை

4652

---

### முக்கியமான அவசர விஷயம்

ஜனத்தொகைப் பிரசினை ஒன்று இருக்கின்றது. உலகம் முழுதுமே ஜனத்தொகை குறிப்பிடத் தகுந்த அளவு பெருகியுள்ளது. இப்பொழுது பெருகி வரும் அளவில், இந்த நூற்றாண்டின் இறுதியில் உலக ஜனத்தொகை 350 கோடியிலிருந்து 500- கோடிவரை

ஆகக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் கி. பி. 2,000- வருடத்தில் 60 கோடியிலிருந்து 68 கோடி வரை பெருகியிருக்கும் என்று கணக்கிடப்படுகின்றது. ஆகக் குறைந்த கணக்குத்தான் 60 கோடி என்பது. அதுவும் பெருக்கத்தை ஓரளவு கட்டுப்படுத்தினால்தான் அந்த அளவில் நிற்கும்.

ஜனத்தொகைப் பெருக்கத்தில் கவனிக்க வேண்டிய இரண்டு அம்சங்கள் உண்டு. அவற்றில் ஒன்று நமது பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது. வேறு திசைகளில் நாம் எவ்வளவு முன்னேறினாலும், அதனால் வாழ்க்கைத் தரங்கள் குறைகின்றன. மற்றோர் அம்சம், உலக ஜனத்தொகைப் பெருக்கத்தால், உலகத்திலுள்ள பொருள்கள் உண்டும் துய்த்தும் வேகமாகக் காலி செய்யப்படுகின்றன. தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களும் விரைவிலே குறைந்துகொண்டு வருகின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டைப் போல, உலகம் முழுதும் முழு வேகத்தில் பொருளுற்பத்தி செய்வதானால், உலகிலுள்ள மூலப் பொருள்கள் யாவும் இந்த நூற்றாண்டின் முடிவுக்குள் காலியாகிவிடக்கூடும். ஆனால் அப்படி ஏற்படுவது அரிது. மற்ற நாடுகளில் மூலப் பொருள்களை உபயோகிப்பது மெதுவாக நடந்தாலும் கூடக் கிடைக்கும் பொருள்கள் யாவும் இன்னும் சில நூற்றாண்டுகளுக்கே போதுமானவையாக இருக்கும்.

இதனால் இரண்டு முடிவுகளுக்கு வரவேண்டியிருக்கின்றது. ஒன்று ஜனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது, மற்றது (நம் இயந்திரங்களுக்கு வேண்டிய நிலக்கரி, மின்சாரம் போன்றவைகளுக்குப் பதிலாக அவைகளை ஓட்டுவதற்கு) வேறு சக்திகளைப் பயன்படுத்துவது. அணுச் சக்தி அபிவிருத்தியானால், அத்தகைய உதவிகள் கிடைக்கலாம்.

இந்தியாவிலுள்ள நாம் ஜனப்பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவதிலே அதிக அக்கறை கொண்டிருக்கிறோம். இது முக்கியமானது என்பதுடன், அவசரமாகவும் கவனிக்க வேண்டிய விஷயம்.

—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.

* * *

# 22

# ஏழைகள் வாழ்க்கை

---

## குப்பைமேட்டுக் குடிசைகள்

குப்பைமேடுகளுள்ள கழிசடையான இடங்களில் பெருங்கூட்டமாக ஜனங்கள் வசிப்பதைக் கண்டால், எனக்குப் பயங்கரமாயிருக்கிறது. நாடோடி போலவோ குழுவரைப் போலவோ ஒருவன் திறந்த வெளியில் வசிப்பதைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. நானே ஓரளவு நாடோடிதான். நாடோடிகளையும் குழுவர்களை யும் நான் விரும்புகிறேன். ஒருவன் மண் குடிசையில் வசித்தாலும், எனக்குக் கவலையில்லை. ஆனல் நகரங் களில் குப்பை மேட்டுக் குடியிருப்புக்களை நான் வெறுக்கிறேன்; அவைகளில் இருப்பவர்களுக்கு நீங் கள் கட்டடங்கள் அமைத்துக் கொடுக்க முடியாவிட் டால், திறந்த வெளியாயுள்ள ஓர் இடத்தை அவர் களுக்கு அளியுங்கள். நல்ல சுகாதாரம், குடிதண்ணீர் முதலிய சில வசதிகளையாவது அளித்து வாருங்கள், மற்ற வசதிகள் அவர்களுக்குத் தொடர்ந்து கிடைத்து விடும்.

—பங்களூர் கார்ப்பரேஷன் கட்டடத்திற்கு அடிப்படைக் கல் போடும் பொழுது ஆற்றிய சொற்பொழிவு, 6-10-55.

* * *

## வறுமையும் செழிப்பும்

வறுமை இழிவானது - தாழ்வு, அதிலிருந்து வெளியேற வேண்டும் என்ற துடிப்பு ஏற்படுவது இயல்பு. வறுமையிலிருக்கும்பொழுது சுதந்தரம் பற்றிப் பேசுதல் அநேகமாக ஒன்றுக்கொன்று முரண்பாடாகும். வறுமையின் மிக மோசமான அமிசம் என்னவென்ருல், அது தானே நிலையாக இருந்து கொள்வதாகும். ஆனால், தனி மனிதனிடமோ சமூகத்திடமோ, அளவுக்கதிகமான செல்வமும் செழிப்பும் ஏற்பட்டால், அதனாலும் பல தீமைகள் தொடர்ந்து வருவதைக் காண்கிறோம். வெறும் பொருட் செல்வங்களைக் குவித்து வைத்துக்கொள்வதால், மனிதனுடைய ஆன்மீக வாழ்க்கையும் வெறுமையாகிவிடும்.

*—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.*

*　　　*　　　*

# 23

## கல்வி

---

## கல்வியும் வகுப்புவாதமும்

**நாம்** விரிவான மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும், மற்றவர்களைப் பார்த்துக் குறுகிய நோக்கமும் உணர்ச்சியும் கொண்டு விளங்கக் கூடாது. இந்த நாட்டில் வகுப்புவாதம் என்று சொல்லப்படும் விஷயத்தை நாம் போதுமான அளவு அநுபவித்திருக்கிறோம். அதனுடைய கசப்பான விஷக்கனியை நாம் ருசி பார்த்துள்ளோம். அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரக் காலம் வந்துவிட்டது. இந்த வகுப்பு

வாத உணர்ச்சி எந்த இடத்திலும் புகுவதை நான் விரும்பவில்லை, அதிலும் கல்வி ஸ்தாபனங்களில் அது புகவே கூடாது. மனிதனுடைய ஆன்மீக உணர்ச்சி சுயேச்சையாக வெளிப்படுவதற்குக் கல்வி உதவியா யிருக்க வேண்டும், அதை மாமூலான சட்டங்களைக் கொண்டு சிறைப்படுத்தக் கூடாது.

*—அலிகார் பல்கலைக் கழகச் சொற்பொழிவு, 24-1-1948.*

* * *

## கல்வியும் கட்டடங்களும்

கட்டடங்களைப் பற்றிய நம் கருத்துக்களைச் சற்றே குறைத்துக் கொண்டு, செங்கல்களுக்குச் செலவழிப் பதைவிடக் கல்விக்கு அதிகமாய்ச் செலவழித்தால், கல்வி வேகமாக முன்னேறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். கல்வி ஸ்தாபனங்களுக்குக் கம்பீரமான கட்டடங்கள் வேண்டும் என்பதை நான் முற்றிலும் ஆதரிப்பவன். நல்ல கட்டடங்கள் அவைகளில் தங்கு வோர் மனங்களில் ஆழமான நல்ல நினைவை உண்டாக் கும் என்று நான் நம்புகிறேன். பிய்ந்து போன கூரை களுள்ள இழிவான கட்டடங்களை நான் விரும்பவில்லை; கம்பீரமான, உறுதியான, பெரிய கட்டடங்களையே நாம் அமைக்க வேண்டும். ஆயினும் இடையில், நாம் முன்னேற வேண்டுமானால், நம் கையிலிருக்கும் பொரு ளைச் செங்கல்லுக்கும் சுண்ணும்புக்கும் செலவழிப் பதைவிடக் கல்விக்கு அதிகமாய்ச் செலவழிப்போ மாக.

*—சென்னையில் பெண்கள் கல்லூரிக்கு அடிப்படைக்கல் நாட்டு விழாவில் நிகழ்த்திய சொற்பொழிவு, 22-1-1955.*

* * *

## திறமையும் உலக அறிவும்

ஜனங்கள் குறித்த விஷயங்களில் விசேடப் பயிற்சி பெறவேண்டும் என்ற ஆர்வத்தில், எந்த விஷயத்தை யும் தெளிவாய்ப் பார்த்துத் தெரிந்து கொள்ளும் ஆற்றலையே இழந்து வருகின்றனர். இதுதான் உலகத்தில் பெரிய அபாயமாக எனக்குத் தோன்றுகின்றது. அவர் கள் ஒரு குறித்த வேலையில் திறமை பெறுகின்றனர். மிக உயர்ந்த திறமை பெறுகின்றனர். ஆனால், மற்ற விஷயங்களைப் பற்றிய விரிவான காட்சியை அவர்கள் இழந்து விடுகின்றனர். ஆதலால் அவர்களை வெறும் திறமைசாலிகள் என்று மட்டுமே சொல்லலாம். அவர் களுக்கு வேறொன்றும் தெரியாது. ஆற்றின் கரையி லிருந்த ஒரு மஞ்சள் மலரைக் கண்டவனுக்கு, மஞ் சள் நிறமான மலர் என்பதைத் தவிர, வேறு எதுவும் விளங்கவில்லை என்று **வோர்ட்ஸ்வொர்த்** பாடியிருக்கும் வரிகள் உங்களில் சிலருக்கு நினைவிருக்கலாம்.

மலர்களுக்குரிய லத்தீன் பெயர்களை ஆராய்ந்து கொண்டிருப்பவனுக்கு, மலர்களின் அழகைப் பற்றிய உணர்வே போய்விட்டதாம். அதாவது, நாம் ஏதோ ஒன்றிலே திறமை பெற்றுக்கொண்டு, உலக ஞானத் தையே இழந்து விடுகிறோம். நமது உலகிலே எத் தனையோ விஷயங்களைப் பற்றிய அறிவு செறிந்திருந்த போதிலும், பொதுவான உலக அறிவு அல்லது ஞானத் தைக் காண்பதுதான் அரிதாயிருக்கிறது.

—சென்னை, அரசாங்கக் காட்சிச் சாலையில் நிகழ்த்திய சொற்பொழிவு, *27-11-1951.*

* * *

## வாழ்க்கையை நாம் முழுமையாக உணர முடியவில்லை

இந்தியா, கிரீஸ் நாடுகளின் புராதன நாகரிகங்களைப் பற்றி நாம் படித்துப் பார்க்கையில், அந்தக் காலத்தில் அறிவுப் பெருக்கத்திற்குரிய வாய்ப்புக்கள் மிகவும் குறைவா யிருந்த போதிலும், மக்கள் தங்கள் அறிவுத் திறன்களை ஒன்றுசேர்த்து வாழ்க்கையைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டிருந்தார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. அவர்கள் இவ்வளவு மனக் குழப்பமடையவில்லை. வாழ்க்கையை முழுமையாக அவர்கள் கண்டு கொள்ள முடிந்தது. இத்தனைக்கும், இந்தக் காலத்தில் கல்லூரியில் சாதாரண உயர் வகுப்பு மாணவன் தெரிந்துள்ள அளவுக்குக்கூட அவர்களுக்கு விஷயங்கள் தெரிந்திருக்க மாட்டா.

இது உண்மையா, தவறு என்பது எனக்குத் தெரியாது. ஏனெனில் பழமையை யாரும் சற்று அதிகமாகப் புகழ்வதே வழக்கம். நான் சொல்வது தவறாகவும் இருக்கலாம். ஆயினும் ஒரு விஷயம் மட்டும் சரியானதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. அதாவது, இக்காலத்தவர்களாகிய நாம் வாழ்க்கையின் பல அமிசங்களையும் முழுமையாய்ப் பொருத்திப் பார்க்கும் ஆற்றலில்லாமல் இருக்கிறோம்; நாம் எவ்வளவு சாதுரியம் பெற்றிருந்த போதிலும், எத்தனை விஷயங்களைத் தெரிந்திருந்த போதிலும், நாம் உலக அறிவைப் பெறவில்லை. நாம்(நாளுக்குநாள்) நெருங்கி வாழ்வதற்கு எத்தனையோ வசதிகள் பெருகி வந்த போதிலும், முற்காலத்து மக்களைவிட நம் மனங்கள் ஒடுங்கிப் போயிருக்கின்றன. நாம் அதிவேகமாய்ப் பிரயாணம் செய்கிறோம், போக்கு வரவு சாதனங்கள் பெருகியிருக்கின்றன. நாம் ஒருவரை யொருவர் அதிகமாய்த் தெரிந்து கொள்கிறோம். ரேடியோ முதலிய பலதிறப்

பட்ட கருவிகளும் நமக்கு இருக்கின்றன. விரிவடைவ தற்கு வேண்டிய இத்தகைய வசதிகளெல்லாம் இருந் தும்கூட, நம் மனங்கள் விசாலமாகாமல் அதிகமாக ஒடுங்கியே யிருக்கின்றன. இந்த ஆச்சரியத்தைத் தான் நான் புரிந்துகொள்ள முடியவில்லை.

—*கொழும்பு, பல்கலைக் கழகத்தில், பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு, **12-1-1950.***

* * *

## பல்கலைக் கழகங்கள்

பல்கலைக் கழகம் இலக்கியக் கல்வி, சகிப்புத் தன்மை, ஆராய்ச்சி அறிவு, முன்னேற்றம், துணிவான கருத்துக்களின் வளர்ச்சி, உண்மையை நாடும் சோதனை ஆகியவற்றிற்காக உள்ளது. மேலும் மேலும் உயர்ந்த இலட்சியங்களை நோக்கி மானிட சமுதாயம் முன்னேறிச் செல்வதற்காக அது அமைந்துள்ளது. பல்கலைக் கழகங்கள் தங்கள் கடமையைப் போதிய அளவு நிறைவேற்றி வந்தால், அந்த நாட்டுக்கும் மக்களுக்குக் அதுவே நலனாகும். ஆனால் கலைக்கோயிலே குறுகிய துவேஷத்திற்கும், அற்பமான நோக்கங்களுக்கும் நிலைக்களனாக விளங்கினால், அந்த நாடு எப்படி மேன்மையடையும், அந்த மக்கள் எப்படி உயர்வடைவர் ?

ஆதலால் நம் பல்கலைக் கழகங்களுக்கும், மற்றக் கல்வி ஸ்தாபனங்களுக்கும், அவைகளை யெல்லாம் நடத்தி வருபவர்களுக்கும் பெரும் பொறுப்பு ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் தங்கள் தீபங்களை நன்றாக எரியும்படி வைத்துக்கொள்ள வேண்டும். பாமர மக்கள் உணர்ச்சி காரணமாகக் கொந்தளித்துத் தவறான வழியிலே இறங்கினாலும், மற்றவர்களுக்கு வழி காட்ட வேண்டியவர்கள் (உணர்ச்சி) வெறியால் கண் பார்

வையை இழந்த போதிலும், அவர்கள் நேர்மையான பாதையை விட்டு விலகவே கூடாது.

—*அலகாபாத் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் சொற்பொழிவு, 13-12-1947.*

* * *

## முதல்தரமான இளைஞர்கள் தேவை

இந்த நாட்டின் எதிர்காலம் முடிவாகக் கல்லூரி களிலும் பல்கலைக் கழகங்களிலும் பயின்று வரும் வாலி பர்கள், இளம் பெண்களைப் பொறுத்துத்தான் இருக் கின்றது. அவர்கள் எத்தகைய பண்புடன் விளங்கு கின்றனர் என்பதைக் கண்டு கொள்ளவே நான் விரும்பு கிறேன். அவர்கள் ஏராளமான எண்ணிக்கையில் இருக் கின்றனர்; ஆனால் நமது தேசம் முன்னேற வேண்டு மானால், (எண்ணிக்கையைப் பார்க்கிலும்) நாம் மக் களின் குணத்தையே கவனிக்க வேண்டும். இந்தியா வின் எதிர்காலம் அதன் ஜனத்தொகையைப் பொறுத்த தன்று. பழமையிலிருந்து நிகழ்காலமும், நிகழ்காலத்தி லிருந்து எதிர்காலமும் தோன்றுகிறது என்ற அள வுக்கு, நாம் பழமையை ஏற்றுக் கொள்ளலாம். நடுத்தர மான மக்களைக் கொண்டுகூட ஒரு நாடு ஓரளவு முன் னேற்றமடைய முடியும். இந்தியாவில் அத்தகைய மக் கள் ஏராளமா யிருக்கின்றனர். ஆனால், அந்த வகை போதாது. பெருமை பெற்ற நாடான் இந்தியா, மேலும் பெருமையுடன் விளங்க வேண்டுமானால், நடுத்தர மானவர்களுக்கு மேற்பட்ட ஆடவர் பெண்டிர்கள் அதற்குத் தேவை. நீங்கள் விளையாடச் செல்லுகை யில், நீங்கள் ஆட்டத்தைநன்ருக ஆடவேண்டு மென்று தான் முயற்சி செய்கிறீர்கள். நீங்கள் நூறு கஜ ஓட் டத்தைப் பத்து விநாடிகளில் முடிப்பதாக வைத்துக் கொள்வோம்; ஆனால் நீங்கள் சரியான மல்லர்களாக

விளங்க வேண்டுமானால், மற்றவர்களுக்கும் முன்னதாக ஓடி அவர்களைப் பின்னடையச் செய்யவேண்டும். நீங்கள் நூறு கஜ ஓட்டத்தைப் பத்து விநாடிகளில் முடிக்கிறீர்களா, பதினொரு விநாடிகளில் முடிக்கிறீர்களா என்பதில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. வித்தியாசம் ஒரு விநாடிதான். ஆனால், அது மிகவும் முக்கியமானது. இதுவே ஒவ்வொரு விஷயத்திற்கும் பொருந்தும்.

ஒரு தேசிய சமுதாயம் தன் முன்னோர்களைப் பார்த்துப் பின்பற்றிக் கொண்டிருந்தால் போதாது; ஒரு சமுதாயத்தை உருவாக்குபவை சிருஷ்டி சக்தியும், பல புதிய பொருள்களைக் கண்டுபிடிக்கும் ஆற்றலும், ஜீவ சக்தி நிறைந்த வேலையுமாம்.

*—ஸாகோர் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய சொற்பொழிவு, **30-10-1952.***

* * *

## ஆதாரக் கல்வி

கல்வியைப் பற்றிய நம் கருத்துக்கள் மெதுவாக நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கின்றன—இன்னும் கொஞ்சம் வேகமாக வந்தால் நலமென்று நான் விரும்புகிறேன். இந்தக் கருத்துக்களெல்லாம் ஆதாரக் கல்வி என்ற ஒன்றைச் சுற்றிவருபவை. ஆதாரக் கல்வியில் அநேக நன்மைகள் இருக்கின்றன; ஆயினும் அதில் முக்கியமான அமிசம், புத்தகத்தை வைத்துக் கொண்டு அதிலிருந்து பாடத்தை வாசித்துக் கொண்டிருப்பதல்ல, செயலில் ஈடுபடுதலாகும். ஆகச் சிறு குழந்தைக்குக்கூட ஏதாவது வேலை கொடுக்கிறோம். இதில் இந்திய முறை என்று விசேடமாகச் சொல்லத் தக்கது ஒன்றுமில்லை. எல்லா இடங்களிலும் தற்காலக் கல்வி

இப்படித்தான் நடந்து வருகின்றது. இந்தியாவில் இதற்கு மகாத்மாஜி ஒரு புதிய போக்கை உண்டாக்கினார். விஷயம் இதுதான்: ஒன்றைப் பற்றிப் பேசிக் கொண்டிராமல், கைகளாலும் கால்களாலும் அந்த வேலையில் ஈடுபடும்படி செய்கிறோம். விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே யிருப்பவர்களிடம் எனக்குச் சலிப்பு ஏற்படுகின்றது. நீங்கள் எவ்வளவு அறிவாளரா யிருந்த போதிலும், ஒரு வேலையைச் செய்யாமல், அதைப்பற்றிப் பேசிக்கொண்டே யிருந்தால். அதன் நுட்பத்தைத் தெரிந்துகொள்ளவே முடியாது.

*—புதுடில்லியில் மத்திய பாசனம், மின்சார போர்டு கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவு, 17-11-1952.*

* * *

## பெண் கல்வி

ஒருவர் எந்த வகுப்பு, எந்த மதத்தைச் சேர்ந்தவரா யிருந்தாலும் சரி, அவருக்குக் கல்வி அவசியம். கல்வி என்றால், நான் கல்வி என்ற பொருளிலேயே கூறுகிறேன், நாகரிகச் சீமாட்டி போல் இருப்பதை மட்டும் கற்றுக் கொள்வதை அல்ல. சீமாட்டி போலிருக்கப் பயிற்சி பெறுவது நல்லதா யிருக்கலாம், ஆனால் அது கல்வியாகாது. கல்விக்கு இரண்டு அமிசங்கள் உண்டு, ஒன்று ஒருவரின் உணர்ச்சிக்குரிய கலாசார அமிசம், மற்றது ஒருவருடைய செயலின் அமிசம். ஒவ்வொருவரும் செயல் மூலம் உற்பத்தி செய்பவராயும், பண்புள்ள நல்ல பிரஜையாகவும் இருக்க வேண்டும். எவரும் ஒருவரையொருவர் அண்டி வாழ்பவராக இருக்கக்கூடாது, கணவர் மனைவியா யிருந்தால்கூடக் கடற்பஞ்சுபோல் ஒட்டி வாழ்தல் கூடாது. இந்த முறையிலே இப்பொழுது நாம் வளர்ச்சியடைந்து வரு

றோம், இதை இன்னும் அறியாம லிருப்பவர்கள் முன்னேறுமல் பின்தங்கி நிற்பார்கள்.

—சென்னையில் மாதர் கல்லூரிக்கு அடிப்படை போடும் பொழுது பேசிய பேச்சு, 22-1-1955.

* * *

## கல்வி நாட்டையே மாற்றிவிடும்

கல்விதான் இந்த (விவசாயம், தொழில் ஆகிய) முன்னேற்றத்திற்கு அடிப்படை, இப்பொழுது ஆதாரக் கல்வியும், தொழிற் கல்வியும் பரவுவதற்கு மிகுந்த கவனம் செலுத்தப் பெறுகின்றது. பத்து லட்சக் கணக்கான பையன்களும் பெண்களும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படித்து வருகிறுர்கள். நூறுயிரக் கணக்கானவர்கள் பல்கலைக் கழகங்களிலும், தொழிற் கல்லூரிகளிலும் பயிற்சி பெற்று வருகிறுர்கள். இந்த எண்ணிக்கை யெல்லாம் இந்தியாவின் ஜனத்தொகையில் ஒரு பகுதிதான், இன்னும் செய்ய வேண்டிய வேலை நிறைய இருக்கின்றது. இருந்தபோதிலும், கல்வி பயிலும் மாணவ மாணவிகளின் தொகை பெரிதுதான், அவர்கள் பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டு வெளியே வருகையில், அவர்கள் தங்கள் வாழ்க்கைகளைப் பற்றிய புதிய கருத்துக்களோடு வருவார்கள். இவ்வாறு நம் சமுதாய முறைகள் மெதுவாகவும் நிச்சயமாகவும் மாறி வருகின்றன. பெண்களின் கல்வியை விரிவாக்கி யிருப்பதுதான், மிகப் பெரியதும், முதன்மையான புரட்சிகரமான மாற்றமும் ஆகும். இந்தப் பெண்களும் இள நங்கையர்களும் இந்திய மக்களின் வாழ்க்கை முழுவதையும் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி யமைத்துவிடுவார்கள். தற்சமயத்திற்கு இம் மாறுதல்கள் நகரங்களிலும் சிறுபட்டணங்களிலும் நடந்து வருகின்றன, இவை நம் கிராமங்களையும்

கவர்ச்சி செய்கின்றன. இன்னும் சில நாடுகளில் ஆதாரக் கல்வி பள்ளி வயதுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கிடைக்கும்.

—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959

*                *                *

# 24

# கலைகளும் கலையுணர்வும்

---

## காட்சிச் சாலைகள்

ஒரு பெரிய நகரிலிருக்கும் கலைக் காட்சிச்சாலைகளும், பொருட்காட்சிச் சாலைகளும், வெளியேயுள்ள வாழ்க்கையின் பரிவான, செழிப்புள்ள, ஆழ்ந்த பொருள்களை எட்டிப் பார்ப்பதற்குரிய சாளரங்களாக விளங்குகின்றன.

—புதுடில்லியில் சொற்பொழிவு, 23-2-1952.

*                *                *

## பாட்டும் கூத்தும்

நகரங்களிலுள்ள நாம், வாழ்க்கையின் அழகுக் கலையில் ஆர்வமேயில்லாமல், அதிலிருந்து வெகுதூரம் தள்ளி வந்துவிட்டோம். நாம் கிராமங்களுக்குச் செல்லும் பொழுது, ஏராளமான நாடோடிப் பாடல்களையும், நடனங்களையும், கேட்கவும் பார்க்கவும் இன்னும் முடிகின்றது, ஏனெனில் தற்கால நாகரிகம் அவைகளைச் சிதைத்து விடாமல் ஒதுங்கியுள்ளது. இந்தியாவின் தற்கால நாகரிக முன்னேற்றத்தில் நல்ல விஷயங்களும் இருக்கின்றன; கெட்ட விஷயங்களும் இருக்கின்றன.

நாம் இழந்தவைகளிலே ஒன்று பாட்டுக்கும் கூத்துக்கும் அடிப்படையாகவுள்ள உற்சாகம், அத்துடன் அவைகளை அநுபவிக்கும் ஆற்றலையும் நாம் இழந்து விட்டோம். எல்லைப்புறங்களில் வசிக்கும் மலைச் சாதியார்களிடத்தில் இவை நிறைய இருக்கின்றன. நாம் சினிமாவிலே அதிகக் கவனம் செலுத்துவதாகத் தோன்றுகிறோம்; அநேக நல்ல விஷயங்களுக்கு அதுவும் ஒரு சிறந்த சாதனம்தான்; ஆனால் அது இதயத்திலே தீவிர எழுச்சியைப் ஏற்படுத்துவதில்லை. மலைச் சாதியார்களைப் பார்த்து நாம் முகங்களைச் சுழித்துக் கொண்டு, நம் (நாகரிகக்) கறுப்பு அங்கிகளை அணிந்து உலவிக்கொண்டிராமல், அவர்களுடைய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஓரளவு பெற வேண்டும்.

—புதுடில்லியில் சொற்பொழிவு, 7-6-1952.

* * *

## கலையுணர்ச்சி வேண்டும்

எதிலும் கலையுணர்வு உண்டாகும்படி செய்வதில் பணச் செலவு இராது, அல்லது சொற்பச் செலவேயாகும். கட்டடம் கட்டுகிற மனிதர்களுடைய உள்ளத்தில் கொஞ்சம் கற்பனா சக்தி வேண்டும். அழகுக் கலையில் கொஞ்சம் ஆர்வம் வேண்டும். மிகச் சாதாரணமான குடிசை, களிமண்ணால் அமைந்திருந்த போதிலும், அதையும் கவர்ச்சியும் அழகும் உள்ளதாகச் செய்ய முடியும், அதேபோல ஒரு பெரிய அரண்மனையைக் கூடப் பயங்கரமாகத் தோன்றும்படியும் செய்துவிடலாம்.

இந்தியாவில் சமீப காலத்தில் கட்டிய கோரமான கட்டடங்களையும், பெரிய கட்டடங்களையும், விலை கூடிய கட்டடங்களையும் நாம் அடிக்கடி காண்கிறோம்,

அவைகள் பார்க்க வேதனையளிக்கின்றன. பணத்தைக் கொண்டு கட்டடத்தை மதிக்க முடியாது, நுணுக்க மான கலை ஆர்வத்தைக் கொண்டுதான் மதிக்கலாம். பெரிய பொதுக் கட்டடங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், அவை பெரியனவா யிருப்பதால், செலவும் அதிகமா கின்றது. அவை நீடித்து நிற்கவேண்டியவை. அத் துடன் அவை குறிப்பிட்ட அடையாளச் சின்னங்களாக வும் விளங்கவேண்டி யிருக்கின்றன.

—பங்களூரில் சொற்பொழிவு, 6-10-1955

* * *

## நம்பிக்கையின் விளைவுகள்

மத்திய காலத்திற்கும், அதற்கு முன்னும் இருந்த கட்டடங்களில், பழம் பெருங் கட்டடங்களும், பழைய அமைப்புக்களும், ஆலயங்களும், மாதா கோயில்களும், மசூதிகளும், மற்றும் அவை போன்ற பலவும் சிதைவுற்றிருப்பதைக் காணலாம். அவை களைக் கட்டியவர்கள் எவர்கள் என்பதை ஒருவரும் அறியார். ஆனால், அவைகளை எவன் பார்த்தாலும், அவைகளை நிறுவியவர்கள், நல்ல கட்டடங்களைக் கட் டியதோடு நில்லாமல், சிறந்த பொறியியல் தெரிந்தவர் களாயும் இருந்தார்கள் என்பதையும், அவர்கள் தாங் கள் மேற்கொண்ட பணியில் நம்பிக்கை வைத்திருந் தனர் என்பதையும் தெரிந்து கொள்வான். நம்பிக்கை யில்லாமல், எவனும் அழகாக ஒன்றைக் கட்டவோ, அமைக்கவோ இயலாது. ஐரோப்பாவிலுள்ள உன்னத மான தேவாலயங்களைப் பாருங்கள். அவைகளைக் கட்டியவர்களை மக்கள் அறியார். ஆயினும், நமக்கு அவர்களைத் தெரியும், ஏனெனில் அவர்களுடைய நம்பிக்கையே இத்தகைய கட்டடங்களாக உருவாகி யிருக்கின்றது. அதே போலத்தான் நம் ஆலயங்களும்,

மசூதிகளும், மற்றைக் கட்டடங்களும். ஆனால், இப்பொழுது நாம் வேறொரு சகாப்தத்தில் வாழ்ந்து வருகிறோம். மசூதிகள், தேவாலயங்கள், கோயில்களில் நாம் அதிக நேரத்தையும் சக்தியையும் செலவழிப்பதில்லை, வேறு வகையான பொதுக் கட்டடங்களில் செலவழிக்கிறோம். அந்தப் பொதுக் கட்டடங்களும் அழகாகவும் நேர்த்தியாகவும் அமையவேண்டும், ஏனெனில் அவைகளிலும் நம்பிக்கை இருக்கிறது. ஆகையால் அந்த நம்பிக்கையுடன் நீங்கள் வேலை செய்யவேண்டுமென்று நான் விரும்புகிறேன், அந்த உணர்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் நீங்கள் வேலை செய்தால், அவையே உங்களுக்கு இன்பமளிப்பவையாக விளங்கும்.

—புதுடில்லியில் மத்தியப் பாசன போர்டுக் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவு, 5-12-1948.

* * *

# 25

## கலாசாரம்

---

### கலைப் பண்பு

கலாசாரம் என்பது உள்ளத்தையும் ஆன்மிக உணர்வையும் விரிவாக்குதல். மனத்தை ஒடுக்கிக் குறுகலாக்குதல் கலாசாரமன்று, மானிடப் பண்பைக் கட்டுப்படுத்துவதும், நாட்டின் பண்பைக் கட்டுப்படுத்துவதும் கலாசாரமாகாது.

—திக்வாடியில் எரிபொருள் ஆராய்ச்சி நிலையத்தில் ஆற்றிய சொற்பொழிவு, 22-4-1950.

* * *

கலாசாரம் என்றால், மனிதனுக்குள்ளே ஏற்படும் ஒரு வளர்ச்சி என்று பொருளாகுமா?

ஆம், அவ்வாறே ஆகவேண்டும்.

அவன் மற்றவர்களிடம் நடந்து கொள்ளும் முறை என்று அது பொருளாகுமா?

நிச்சயமாக அப்படித்தான்.

அடுத்தவரைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் கலாசாரம் என்றாகுமா?

நான் அப்படித்தான் எண்ணுகிறேன்.

அடுத்தவர் நம்மைப் புரிந்து கொள்ளும்படி செய்யும் ஆற்றல் என்று கொள்ளலாமா?

ஆம். இவையெல்லாம் அதன் பொருள்தான்......

கலாசாரத்தில் பண்பட்ட மனம் தன் நிலையிலேயே இருந்த போதிலும், அதன் கதவுகளும் சாளரங்களும் திறந்தே யிருக்க வேண்டும். மற்றவருடைய கருத்தை முற்றிலும் அறிந்து கொள்ளும் ஆற்றல் அதற்கு இருக்க வேண்டும், அந்தக் கருத்தை எப்பொழுதும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்ட பிறகுதான், அதை ஏற்பதா, மறுப்பதா என்ற கேள்வி எழும். இல்லாவிட்டால், கண்ணை மூடிக்கொண்டு எல்லாவற்றையும் மறுப்பதாகிவிடும்.

—புதுடில்லியில் கலாசார உறவுகளின் இந்தியக் கவுன்சிலின் தொடக்க உரை, *9-4-1950.*

* * *

## அறிவுச் சுமையும் கலாசாரமும்

நான் கலாசாரம், ஞானம் என்பவை எவையென்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளும்படி விட்டு

விடுகிறேன். நாம் கல்வி யறிவு பெற்று வளர்கிறோம், விஷயங்களைப் பற்றிய ஞானம் பெறுகிறோம், அநுபவம் பெறுகிறோம். நாளடைவில் அவைகள் பெருங் குவியலாகக் குவிந்து விடுகின்றன. நாம் எந்த நிலையிலிருக்கிறோம் என்பதுகூட விளங்காமற் போய்விடுகின்றது. அவை யெல்லாம் அளவுக்கு மேலாக நம்மை அழுத்திவிடுகின்றன. ஆனால் அதே சமயத்தில், அவைகளை யெல்லாம் ஒன்றாகச் சேர்த்தாலும், மனித சமூகத்தின் ஞானம் கூடியிருப்பதாகச் சொல்ல முடியாது என்ற ஓர் உணர்வு நமக்கு எப்படியோ தோன்றி விடுகின்றது. தற்கால வாழ்க்கையின் வசதிகளும், நவீன விஞ்ஞானமும் அளிக்கும் உதவிகளைப் பெறாமலிருந்த சிலர், நம்மிலே பெரும்பாலோரைவிட, அறிவாளிகளாயிருந்தார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. பிற்காலத்தில் இந்த அறிவு எல்லாவற்றையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மானிட சமூகம் மேம்பாடடையக் கூடிய சாதனங்களையும் ஒன்றாகச் சேர்த்து, நாம் பயனடைய முடியுமா, முடியாதா என்பது எனக்குத் தெரியவில்லை.........

—டி டி

* * *

## கலாசாரம் உரக்கக் கூவாது

எங்கே பார்த்தாலும் கலாசாரம் இருக்கின்றது. சாதாரணமாக நான் காண்பது, எவர்கள் கலாசாரத்தைப் பற்றி அதிக உரக்கப் பேசுகிறார்களோ, அவர்களிடம் கலாசாரம் இல்லை என்பது. முதலாவதாக, கலாசாரம் உரக்கக் கூவுவதன்று, அது அமைதியானது, அடக்கமானது, அது சகிப்புத் தன்மையுடையது. ஒருவருடைய கலாசாரத்தை அவருடைய மௌனத்திலிருந்து கண்டு கொள்ளலாம். ஒரு சாடை காட்டுதல்,

அல்லது ஒரு சொல்லிலிருந்து அறியலாம், அல்லது விசேடமாக அவரது வாழ்க்கையைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். கலாசாரத்தைப் பற்றிப் பரவிவருகிற குறுகலான எண்ணம் ஒருவர் தலையி லணியும் தொப்பியைப் பொறுத்தோ, உண்ணும் உணவு வகையைப் பொறுத்தோ, இவைபோன்ற சாதாரண விஷயங்களைப் பொறுத்தோ இருப்பதாக எண்ணுவது தவறு; இவைகள் ஓரளவு முக்கியம் என் பதை நான் மறுக்கவில்லை, வாழ்க்கை முழுவதையும் கருதிப் பார்க்கையில், இவைகளின் முக்கியத்துவம் அதிகமாயில்லை.

*—கொழும்பு பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய சொற்பொழிவு, **12-1-1950.***

* * *

## ஒளி பரவட்டும்!

*சில* மனிதர்கள் தங்கள் மனங்களையும் இறுக அடைத்துக்கொண்டு, மற்றவர்களும் அவ்வாறே அடைத்துக் கொள்ள வேண்டுமென்று கோரும் அள வுக்குக் குறுகிய வழியைக் கைக்கொள்வது பற்றி எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது. அவர்கள் எந்தப் புதிய விஷயத்தையும் புக விடுவதில்லை. இந்தியக் கலா சாரம் என்பதைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார் கள். எனக்கும் கலாசாரத்தைப் பற்றிக் கொஞ்சம் தெரியும். கதவுகளை அடைத்துக்கொள்ள வேண்டும் என்று பிரசாரம் செய்பவர்களுக்குக் கலாசாரத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. (விலக்க வேண்டும் விலக்க வேண்டும் என்று) ஒதுக்கும் முறை ஒவ்வொன் றும் கலாசாரக் குறைவையே காட்டும்; (சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று) வரவேற்கும் முறை வளர்ச்சியைக் குறிக்கும். விஷயங்களை விலக்கித்

தள்ள விரும்புவோர் உள்ளத்தைக் குறுகலாக்குகின்றனர், நம் சமுதாயமும் வளர்ச்சியற்ற கலாசாரத்தில் தேங்கி நிற்கத் தொடங்குகின்றது.

—ஸாகோர் பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவு,
***30-10-1952.***

* * *

## திறந்த மனதே வளர்ச்சிக்கு அறிகுறி

கலாசாரத்திற்கு ஏதாவது பெருமை இருக்குமென்றால், அது ஆழமுடையதாக இருக்க வேண்டும். அது ஓரளவு ஜீவசக்தியுடன் இயங்கிவர வேண்டும். கலாசாரம் பல திறப்பட்ட அமிசங்களைப் பொறுத்து அமைவதாகும். ஒரு சமூகம் அல்லது மக்களினத்தின் ஆரம்பக் காலக் கலாசாரத்தை அடிப்படை அமைப்பு என்று சொல்லலாம், அதைத் தவிர, பிந்திய வளர்ச்சியெல்லாம், நாட்டின் தட்ப வெப்ப நிலையாலும், வேறு பல விஷயங்களாலும் பாதிக்கப்பெறும். அரபு நாட்டின் கலாசாரம் அதன் தட்ப வெப்ப நிலையுடனும், அரேபியாவின் பாலைவனங்களுடனும் நெருங்கிய தொடர்புள்ளது, ஏனெனில் அது அந்தப் பிரதேசத்திலேயே வளர்ந்தது. அதே போல இந்தியாவின் கலாசாரமும் முற்காலத்தில் இமயமால் வரைகளாலும், [illegible]களாலும், மாபெரும் நதிகளாலும் பாதிக்கப்பட்டு வந்தது. இதைப் பற்றி நாம் நம் இலக்கியங்களிலிருந்தும் தெரிந்து கொள்கிறோம். இந்த மண்ணின் இயல்புக்கு ஏற்றபடி, அது இயற்கையாக வளர்ந்துள்ளது. கலாசாரத்தின் பல பகுதிகளாகிய கட்டடக் கலை, [illegible], இலக்கியம் போன்றவைகளில், எவையாவது [illegible] சேர்ந்து புதிய அழகுள்ள ஒரு கலையாக வளர [illegible]. இப்படிப் பன்முறை நடந்திருக்கின்றது. ஆனால் இயற்கையாக வளராமல், நாமாக ஒன்றைத் திருத்தி

வளரச் செய்ய முயற்சி செய்யும் பொழுதுதான் எதிர்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன் கலாசாரத்திற்கே மாறுபாடான கருத்துக்களும் எழுகின்றன. அதாவது மனத்தை (வெளிக் கலாசாரத் தொடர்பில்லாமல்) ஒதுங்கியிருக்கும்படி செய்து, மற்ற வெளித் தொடர்புகளே யில்லாமல் வேண்டுமென்றே அடைத்து வைத்துக் கொள்ளும் முயற்சி நடைபெறுகின்றது. இந்தியாவின் சரித்திரத்தைப் பற்றிய என் கருத்து இது: வெளி உலகத் தொடர்புகளுக்கு இந்தியா தன் மனத்தைத் திறந்து வைத்துக் கொண்டிருந்த காலங்களில், அது வளர்ச்சியும் முன்னேற்றமும் பெற்றிருந்தது, அது மனத்தை அடைத்துக் கொள்ள முயற்சித்த காலங்களில், அது தளர்ச்சி யடைந்து, கீழ்நோக்கி இறங்கத் தொடங்கிவிட்டது. மனத்தை மூட மூட, அது இயக்கமில்லாமல் தேங்கி நிற்கத் தொடங்கிற்று. தனி நபருடைய வாழ்க்கையைப் போலவே, ஒரு கூட்டம், தேசம், சமுதாயம் ஆகியவற்றின் வாழ்க்கையும் உயிர்த் துடிப்பும், மாறுதலும், வளர்ச்சியும் உள்ளவைகளாம். ஜீவசக்தியோடுள்ள அந்த வளர்ச்சியை எது தடுத்து நிறுத்தினாலும், அது அந்த வாழ்க்கைக்கே தீமை யுண்டாக்கி, அதன் அடிப்படையைச் சிதைத்து விடுகின்றது.

—புதுடில்லியில் இந்தியக் கலாசார உறவுகளின் கவுன்ஸிலின் தொடக்க உரை, 9-4-1950.

* * *

# 26

# விஞ்ஞானமும் கருவிகளும்

## விஞ்ஞானம்

பசி, வறுமை, சுகாதாரக் குறைவு, எழுத்தறி வின்மை, மூட நம்பிக்கை, மூடப் பழக்கங்கள், பரம் பரை வழக்கங்கள் என்ற கனமான சுமைகளை விஞ்ஞானம் ஒன்றுதான் நீக்க முடியும். மூலா தாரமான பொருள்கள் வீணாவதையும், செல்வம் மிகுந்த நாட்டில் வறுமையால் வாடும் மக்கள் வசிப் பதையும் அதுவே தடுக்க வல்லது.*

* * *

## விஞ்ஞானத்தால் புரட்சி, புரட்சியால் முன்னேற்றம்

விஞ்ஞானத்தில் செயற்படும் தத்துவம் புதிய பொருள்களைக் கண்டுபிடித்தல். ஆனால் சமூக அமைப்பில் செயற்பட்டுவரும் தத்துவம் எது? வழக்க மாக அது மாறுதலை எதிர்க்கும் ஒரு தத்துவம்; இருக் கிற நிலையிலேயே நாம் இருக்க வேண்டும், நாம் மாறுதலடைந்து செயற்படக் கூடாது, அவசியமா னால் சிறு சிறு சீர்திருத்தங்கள் மட்டுமே செய்து கொள்ளலாம் என்பவை அதன் கோட்பாடுகள். எவ்வா றாயினும், மாறுதலைவிட இப்போதுள்ள நிலையே மாறா மல் இருக்க வேண்டும் என்பது அத்தத்துவம். ஆகவே சமுதாயத்தில் ஒரே சமயத்தில் இருந்துவரும் இரண்டு முரண்பாடுகளை நாம் காண்கிறோம். ஒரு தத்துவம், மாறுதலில்லாமல், இருப்பது தொடர்ந்து இருக்கட்டும் என்பது; மற்றது புதிய பொருள்களைக் கண்டுபிடித்து, மாற்றத்திற்கு அடிகோலும் விஞ்ஞானத் தத்துவம்.

இது தொடர்சியை எதிர்த்து நிற்பது. எனவே விஞ்ஞான ஊழியனைப் பலர் பாராட்டித் தட்டிக் கொடுத்த போதிலும், அவனை அவர்கள் முற்றிலும் ஏற்றுக் கொள்வதில்லை. ஏனென்ருல் அவன் வந்து இருக்கின்ற நிலைமைகளைக் கவிழ்த்து விடுகிருன். சாதாரணமாகச் சொல்லப் போனுல், விஞ்ஞானத்திற்கு எவ்வளவு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமோ, அவ்வளவும் அமைக்கப்படவில்லை. ஒரு தேசத்திற்கு யுத்தத்தைப் போன்ற ஒரு பெரிய அபாயம் ஏற்படும் பொழுதுதான், விஞ்ஞானம் அதிகமாய்க் கவனிக்கப் பெறுகின்றது. அப்பொழுது மற்றவை யெல்லாம் ஒதுக்கித் தள்ளப் பெற்று, விஞ்ஞானத்திற்கே முதலிடம் ஏற்படுகின்றது, இவ்வளவுக்கும் காரியம் தீமையானது.

தேங்கி நிற்கும் ஒரு சமுதாயத்தில் சாதாரணமாயுள்ள மாறுதல் வேண்டாத தத்துவத்திற்கும், விஞ்ஞானியின் கண்டுபிடிப்புக்களால் ஏற்படும் சாதாரணமான புரட்சிகரமான போக்குக்கும் ஏற்படும் போராட்டம் வியந்து பார்க்கத் தக்கதாகும். புதிய கண்டுபிடிப்புக்கள் சமுதாயத்தின் அடிப்படையையே மாற்றி விடுகின்றன. அவை, வாழும் முறைகளையும், மானிட வாழ்க்கையின் நிலைமைகளையும், மனித சமூகம் தொடர்ந்து வாழக் கூடிய வசதிகளையும் மாற்றி விடுகின்றன.

*—திக்வாடியில் எரிபொருள் ஆராய்ச்சி நிலையத் தொடக்க விழாவில் ஆற்றிய சொற்பொழிவு, 22-4-1950.*

*     *     *

## விஞ்ஞானிகளின் திகைப்பு

விஞ்ஞானத்தில் நாம் மிகவும் அதிகமாக முன்னேறி யுள்ளோம்—நான் விஞ்ஞானத்தில் மிகுந்த நம்

பிக்கை யுள்ளவன்—விஞ்ஞான ரீதியாக எதையும் உற்று நோக்கும் வழக்கம் உலகை முற்றிலும் மாற்றி வைத்து விட்டது. உலகம் தன் பிரசினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமானால், அது விஞ்ஞானத்தின் மூலமே இயலும், விஞ்ஞானத்தை உதறித் தள்ளுவதால் அன்று. ஆனால் விஞ்ஞானத்தின் முன்னேற்றம், பல சமயங்களில், மக்கள் விஞ்ஞானப் போக்குக்கு மாறாகக் கண்ணை மூடிக் கொண்டு நடக்கும்படி செய்து விடுகின்றது. இப்படிச் சொல்வது ஆச்சரியமான விஷயம்தான். என் கருத்து இதுதான்: விஞ்ஞானம் மிக விரிவாகவும், எங்கும் வியாபிப்பதாகவும் வளர்ந்து விட்டது; விஞ்ஞானிகள் விஷயங்களை முழுமையாக உணர்ந்து கொள்ள முடியவில்லை, நாளுக்கு நாள் அவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் மிகச் சுருக்கமான அளவே புரிந்து கொள்ள முடிகின்றது. அவர்கள் சில விஷயங்களில் அபார அறிவு பெற்றிருக்கலாம். ஆயினும், வாழ்க்கை முழுவதிலும் அவர்களுக்கு ஒரு பிடிப்பு இல்லாமலிருக்கிறது.

*—கொழும்பு பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு, 12-1-1950*

* * *

## விஞ்ஞானிகளும் பொறி நுட்பம் தெரிந்தவர்களும் தேவை

பௌதிக சாஸ்திரங்களின் பிரிவுகளான பொறி இயல் நுட்ப அறிவு முதலிய விசேடப் பயிற்சி தேவையுள்ளவைகளால், தொழில் முன்னேற்றமும் நுட்பமான கருவிகளின் முன்னேற்றமும் பெருகியுள்ள நாடுகளில், மனிதர்கள் (எல்லா வகைகளிலும் வளர்ச்சி யடையாமல்) ஒரு பக்கத்தில் மட்டும் விசேட வளர்ச்சி யடைந்துள்ளார்கள் என்று குறை சொல்லப்படலாம். சில

மனிதர்களுடைய கையில் மிக அதிகமான சக்தி ஒப் படைக்கப்படுகின்றது. ஆனால் அதைச் சரியாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான அளவுக்கு ஒழுக்க நெறி அவர்களுக்கு வேண்டும் என்று வற்புறுத்தப்பட வில்லை. இது (இயந்திர யுகத்தின்) ஒரு பிரசினை. மற்றொரு பக்கம் பார்த்தால், இன்று ஒரு நாடு அழிந்து விடாமல் வாழ வேண்டுமானால், அங்கே போதிய அளவில் விஞ்ஞானிகளும், பொறி நுட்பங்கள் தெரிந்தவர்களும் இருக்கவேண்டும். இதுவும் மிக முக்கியமான விஷயமாகும்.

*—புதுடில்லி இந்தியப் பொது ஆட்சிமுறை இன்ஸ்டிடியூட்டில் ஆற்றிய தலைமைச் சொற்பொழிவு, 6-4-1957.*

* * *

## வானத்தில் பறத்தல்

சரித்திரத்தைத் தொலைவில் இருந்து கொண்டு பார்த்தால், ஆகாயத்தில் அடைந்துள்ள இந்த வெற்றி யானது மனித சமூக வரலாற்றையே மாற்றி யமைக்கும் நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்...... பூமியின்மேல் தரை யிலே ஊர்ந்து கொண்டிருக்கும் மனிதன், இரண்டு பக்கங்களில் மட்டும் செல்லக் கூடிய நிலையிலிருந்து, மூன்றாவது பக்கத்திற்கும் திடீரென்று மேலே பாய்ந்து செல்ல முடிகின்றது. அவனுடைய உள்ளமும் அதே போல மேலே பாய்ந்து சென்றதா இல்லையா என்பது எனக்கு உறுதியாய்த் தெரியாது; அப்படிச் சென் றிருந்தால், எல்லாம் நலம்தான். ஆனால், எப்படியோ மனிதர்களின் மனங்கள் செல்வதற்கு முன்பே நிகழ்ச்சி கள் தோன்றி விடுகின்றன. மனங்களே பின்தங்கி நிற்க நேருகின்றது. பல விஷயங்களைச் செய்து முடிக்கத் தேவையான பொருள்கள் யாவும் நமக்குக் கிடைக்கின்றன. பல வகையான பெருஞ் செயல்களை

நாம் செய்து முடிக்கிறோம். எனினும் அவைகளை நல்ல முறையில் செய்து முடிக்க வேண்டிய ஞானம் நமக்கில்லை. செய்யும் பொறி இயல் நுணுக்க அறிவு நமக்கு இருக்கலாம். ஆனால் அறிவாளியின் மெய் யறிவு நமக்கில்லை, அது இருந்தால்தான் அவைகளை நாம் நல்ல முறையில் செய்யவும், மனித சமூகத்திற்கு நன்மையா யிருக்கும்படி செய்யவும் முடியும். இந்த விஷயம் தத்துவ ஞானிகளுக்குரியது. இந்த மகா நாட்டிற்கு அவ்வளவு அவசியமில்லை. எனினும், பொறி இயல் அறிவு எவ்வளவு முக்கியமா யிருந்த போதிலும், அது சரியான நோக்கங்களுக்குப் பயன் பட வேண்டுமானால், வேறொரு மனப் பண்பும் அவசிய மாகின்றது.

*—புதுடில்லியில் சர்வதேச ஸிவில் விமானப் பயிற்சி ஸ்தாபனத்தில் ஆற்றிய சொற்பொழிவு, 23-11-1948.*

* * *

## விஞ்ஞானமும் பொறிகளுமே புரட்சிகரமானவை

மானிட வாழ்க்கையை அதிகமாக மாற்றி அமைப் பது (கம்யூனிஸம், சோஷலிஸம் போன்ற) இலட்சியத் தத்துவங்களல்ல. ஆனால், விஞ்ஞான வளர்ச்சியும், நுணுக்கமான பொறிகளின் வளர்ச்சியுமே யாகும். அவைகளே இடைவிடாமல் சமூகத்தை உருவாக்கியும், பொருளாதார அமைப்புக்களை ஏற்படுத்தியும் வருகின் றன. தொழிலுக்குத் தக்கபடி உருவம் அமைகின்றது. கட்டடக் கலையில் இப்படித்தான் நடக்கும். சமூக அமைப்புக்களிலும் முடிவாக அப்படியே நடக்கின்றது. தொழிலுக்கு ஏற்றபடி அமைப்பும் உண்டாகின்றது. விஞ்ஞானமும், பொறி இயல் நுணுக்க அறிவும் அடிக் கடி தொழில்களை மாற்றி விடுகின்றன. எனவே சமூக

அமைப்பும், புதிய தொழில்களுக்கு ஏற்றபடி மாறித் தீரவேண்டி யிருக்கின்றது.

ஆகவே தற்கால வாழ்க்கையில் புரட்சிகரமான விஷயங்களில் முதன்மையானது தத்துவக் கோட்பாடு அன்று, ஆனல் பொறி இயல் வளர்ச்சியே யாகும். பொறி இயல் மாறுதல் மெதுவாக ஏற்பட்டால், பழைய அமைப்புக்கள் இருந்து வரும். தொழில் வளர்ச்சி யில்லாத பிற்போக்கான சமூகம் பிற்போக்கான சாதனங்களேயும், சமூக அமைப்பையும் கொண்டிருக்கும். அந்தச் சமூகம் தற்கால விஞ்ஞான யுகத்துடன் பொருந்த முடியாதபடி அவை செய்து விடும். ஆயினும் எப்படியும் மாற்றம் வந்தே தீரும். அதனல் ஏற்படும் விளைவுகளேயும் தடுத்து வைக்க இயலாது. இந்த மாறுதல் சில சமயங்களில் திடீரென்று ஏற்பட்டு, எல்லாவற்றையும் தலைகீழாகக் கவிழ்த்து விடுகின்றது, அவ்வாறின்றி -அது மெதுவாகவும் வந்தே தீரும்.

*—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.*

* * *

## உற்பத்திப் பெருக்கம்

விஞ்ஞானமும் நுட்பமான பொறிகளேப் பற்றிய அறிவும் பெற்றுள்ள முன்னேற்றம் உலகத்தின் பெரும்பாலான பொருளாதாரப் பிரசினைகளைத் தீர்த்துவைக்க வழி செய்கின்றது. முக்கியமாக உலகம் முழுவதிலுமுள்ள ஒவ்வொருவருக்கும் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவைகளை அளிக்க அந்த முன்னேற்றத்தால் முடியும். வாழ்க்கைத் தரங்கள் உயரும் என்பதற்கும், கலாசார வளர்ச்சிக்கும் அதன் மூலம் நம்பிக்கை பிறக்கின்றது...

எந்த விதமான உண்மையான மாற்றத்தையும் வெளியிலிருந்து ஒரு சமூகத்தின் மீது திணிக்க முடியாது. அது தானுக வளர வேண்டும்.

—டி டி

* * *

# 27

## பத்திரிகைகள்

### நானும் பத்திரிகை ஆசிரியர்களும்

இந்திய மக்களைப் பற்றி மதிப்பிடுவதில், இந்தியாவிலுள்ள எந்தப் பத்திரிகை ஆசிரியரையும் விட நான் மேலானவன் என்று நான் உரிமை கொண்டாடுகிறேன். அவர்களை எனக்கு அதிகமாய்த் தெரியும் என்று சொல்லுகிறேன்-அப்படிச் சொல்வது உசிதமற்ற முறைதான். ஏனெனில், நான் அவர்களிடம் அளவற்ற அன்பு கொண்டிருக்கிறேன், அன்போடு அவர்களை அணுகியுள்ளேன், அவர்களும் என்னிடத்தில் தாராளமாக அன்பைப் பொழிந்திருக்கிருர்கள், அவர்களைப்பற்றி நான் மிக உயர்ந்த அபிப்பிராயமே கொண்டிருக்கிறேன். அவர்களுக்குக் கவர்ச்சிகரமான, உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய செய்திகளே தேவை என்று எண்ணுவது அவர்களைக் குறைவாக எண்ணுவதாகும். ஆனுல் அவர்கள் தேவர்களும் அல்லர். நம் எல்லோரிடத்திலும் குறைகள் இருக்கின்றன. நம்மிடத்திலும் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. ஆனுல் இந்திய மக்களிடத்தில் நன்மையான அமிசமே மிக அதிகமாக இருக்கிறது. அதை மதித்து, நாம் எதைச் சொன்னுலும் நல்ல பயன் விளையும். நம்முடைய பத்-

திரிகைகள் இதை நினைவில் வைத்துக் கொண்டு, அவர்களுடைய நன்மையான அமிசம் வளரும்படி செய்து வந்தால், இந்தியா மேலும் மேலும் உணர்ச்சி பூர்வமான ஒற்றுமையை அடைய உதவியாயிருக்கும். இவ்வாறு அவைகள் பெருந் தொண்டு செய்ய முடியும். நம் எல்லோருக்கும் பொதுவான பழைய பெருமைகளை எண்ணுவதோடு, இப்பொழுது நாம் கட்டி வரும் இந்தியாவைப் பற்றியும் நினைத்துக் கொள்வோம், இதுவும் நம் எல்லோருக்கும் பொதுவானதுதான். இவ்வாறு மக்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் பத்திரிகை ஆசிரியர்கள் தாங்களும் பயனடைவார்கள்.

—*புதுடில்லியில் அகில இந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள் மகாநாட்டில் பேசியது,* ***13-8-1954.***

* * *

## பத்திரிகைகளும் சிந்தனை சக்தியும்

நாம் வசித்துக்கொண்டிருக்கும் இந்தச் சகாப்தத்திலே, வெளிப்படையாகத் தெரியும் விளைவுகளில் ஒன்று மக்கள் படிப்படியாகச் சிந்திக்கும் கலையையே மறந்து வருவது. அவர்கள் மற்றவர்களுடைய அபிப்பிராயங்களை அப்படியே ஏற்றுக் கொள்ளுகின்றனர். சர்வாதிகார நாடுகளில் மட்டுமின்றி, மற்ற நாடுகளிலும், மக்கள் தாங்கள் வாழ்ந்து வரும் நிலைமைகளால் ஒரே மாதிரியான அபிப்பிராயங்களைக் கொள்ளும்படி பயிற்சியாகி விடுகின்றது. அவர்கள் சிந்திக்கும்படி விடப்பட வில்லை. எவராவது பெரும்பான்மையோருடைய கருத்துக்கு மாறுபட்டால், மிகவும் கஷ்டந்தான். அவருக்கு விரோதமாகச் சட்டம் எதுவுமில்லை, ஆயினும் நடக்கின்ற விஷயங்கள் அவருக்கு எதிராகவே யிருக்கும். இந்த விஷயத்தில் பத்திரிகைகள் மிகவும் பயனுள்ள தொண்டு செய்ய முடியும். ஆனால்

அவைகளும் மக்களைச் சிந்திக்கும்படி செய்வதில்லை, அவர்களுக்கு வேண்டிய விஷயங்களை யெல்லாம் சுருக்கமாக எடுத்துக் கொடுக்கும் தொகுப்புக்களாக அவைகள் விளங்குகின்றன. இந்தக் கஷ்டத்திலிருந்து எப்படி வெளியேறுவது என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் மக்கள் வரவரத் தாமாகச் சிந்திப்பதைக் குறைத்துக் கொண்டு வருதலும், எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ளப் பத்திரிகைகளையும் தொகுப்புக்களையுமே நம்பிக் கொண்டிருத்தலும், நல்ல புத்தகங்களுக்குப் பதிலாக இவைகளே வெள்ளம் போல் பெருக்கெடுத்துப் பரவுதலும் அபாயகரமானவை. பத்திரிகைகள் அவசியம்தான். ஆனால் அவைகள் மக்களைச் சிந்திக்க வைப்பதில்லை.

—ஷே ஷே

* * *

## அரசியல்வாதிகளும் பத்திரிகைக்காரர்களும்

அரசியல் வாதிகளும் பத்திரிகைக்காரர்களும் ஓரளவில் மிகுந்த ஒற்றுமையுடையவர்கள். இருவரும் அதிகமாய்ப் பேச முனைகின்றனர், அதிகமாக எழுத முற்படுகின்றனர், அறிவுரைகள் பேசுகின்றனர்; பொதுவாகச் சொன்னால் இருவருக்கும் படிப்பு முதலியவை பற்றிய தகுதிகள் எவையும் தேவையில்லை.

*—புதுடில்லியில் அகில இந்தியப் பத்திரிகை ஆசிரியர்கள் மகாநாட்டில் பேசியது, 17-9-1952.*

* * *

## பத்திரிகைகளின் சக்தி

வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்து பார்க்கலாம்-அரசியல், பொருளாதாரம் முதலிய வெவ்வேறு முறைகளில் பார்க்க முடியும். இவை யெல்லாம் முக்

கியமானவைதாம். ஆயினும் இவைகளுக்கும் அப்பால், ஏதோ ஒன்று இருக்கின்றது. அது இல்லாவிட்டால், அரசியல் சிந்தனை, பொருளாதாரச் செழிப்பு ஆகியவற்ருல் மட்டும் பயன் இராது. வாழ்க்கையின் எழிலாக விளங்கிய பண்பு குறைந்து கொண்டே வந்து, அதற்குப் பதிலாகக் கொச்சையான முரட்டுச் சுபாவம் வளர்ந்து வருவதைப் பார்க்க வருத்தமாய்த்தா னிருக்கிறது. ஒரு தனி நபர் நல்லவராகவோ கெட்டவராகவோ, முரடராகவோ வேறுவிதமாகவோ இருக்கலாம். ஆனால், ஒரு தேசமே இந்த முறையில் கீழ்நோக்கி இறங்கி விடுதல் அபாயமாகும். இந்த விஷயத்தில் பத்திரிகைகள் முக்கியமான தொண்டு செய்ய முடியும். கொச்சை வழக்குகளை அவை எதிர்த்து ஒழிக்க உதவி செய்ய முடியும். அரசியல் பற்றி ஒரு பத்திரிகையின் அபிப்பிராயங்களை ஏற்றுக் கொள்ளாம லிருப்பது வழக்கம்தான். அரசியல் அபிப்பிராயம் உருவாகி வருவதில் பத்திரிகையின் செல்வாக்கு அதிகமா யிருக்குமா என்பது எனக்கே சந்தேகம்தான். அவைகள் செய்திகளைக் கொடுக்கின்றன; ஆனால் அவைகளின் அரசியல் செல்வாக்கு அதிகம் இராது. மற்ற ஜனநாயக நாடுகளில் நீங்கள் பார்த்திருக்கலாம். பற்பல பத்திரிகைகள் ஒரு கட்சியை ஆதரிக்கின்றன. ஆனால் தேர்தலில் வெற்றி பெறுவது வேறு கட்சி. ஆகவே பத்திரிகைகள் பொதுஜன அபிப்பிராயத்தை உண்டாக்குவதில், மக்கள் நினைப்பதுபோல், அவ்வளவு அதிகமான செல்வாக்கைப் பெற்றிருக்கவில்லை என்று தெரிகிறது. பத்திரிகைகளுக்கு மிகுந்த சக்தியிருக்கிறது என்பது உண்மை; தினசரிச் செய்திகள் மூலமும், அவைகளை வெளியிடும் முறையிலும், அவைகள் உபயோகிக்கும் அடக்கமான அல்லது கட்டுப் பாடற்ற மொழிகளின் மூலமும், கொச்சை மொழிகள் அல்லது நாகரிகமான எழுத்துக்கள் மூலமும் பத்திரிகைகள்

மிகுந்த ஆற்றலுள்ளவை யாகின்றன. நாள்தோறும் இடைவிடாமல் கூறி வரும் விஷயங்கள் வாசகரின் மனத்தைப் பாதிக்காமலிருக்க முடியாது. இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும் என்று அவருக்குச் சொன்னால் அவர் எதிர்த்து நிற்கலாம். ஆனால் தினசரி செய்யும் போதனை நல்லதா யிருந்தால் அவர் மனத்தைப் பண்படுத்தும். தீயதா யிருந்தால் அவர் மனத்தைத் தீயதாக்கும். நாம் எவ்வளவோ உயர்ந்த இலட்சியங்களைப் பெற்றிருந்த போதிலும், (நியாய அநியாயங்களைப் பார்க்கக்கூடிய) சமூக மனச்சாட்சி இந்த நாட்டில் குறைவு. எந்த இடத்திலும், பட்டாளம் அணி வகுத்து நிற்பது போல, மக்களை ஒரே மாதிரியாக உருவாக்குவதை நான் விரும்பவில்லை. அதிலும் இந்தியா போன்ற பெரிய நாட்டில் அது கூடாது. இங்கே வேறு பல வழிகள் இருக்கின்றன. ஆனால் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி மக்கள் தாம் போன போக்கிலேயே தவறாகச் செல்வதையும் நான் எதிர்க்கிறேன்.

*—புதுடில்லியில் அகில இந்தியப் பத்திரிகை ஆசிரியர் மகாநாட்டில் பேசியது, **3-12-1950.***

* * *

# 28

# புது இலக்கியம்

---

## விசால மனமும் விசால நோக்கங்களும்

மக்கள் தங்கள் இராஜ்ய எல்லைகளைப் பற்றியும், மொழிப் போட்டிகளைப் பற்றியும் சிந்தித்துக்கொண்டிராமல் மேலெழுந்து வருவதற்கு, விண்வெளிக் கப்பல்

கள் பாய்ந்து வரும் இந்தச் சகாப்தத்தின் சிந்தனை களைப் பிரதிபலிப்பதாக எழுத்தாளர்கள் எழுதி வர வேண்டும். இந்தியாவில் மொழிகளின் பிரசினை இருக் கின்றது. மொழியைப் பற்றி விவாதம் செய்வதால் நன்மையில்லை. மொழிகள் வேறுபட்டிருக்கலாம். ஆனால், அடிப்படையான சிந்தனை ஒன்றுதான்; அதுவே அதிக முக்கியமான விஷயம். இந்திய மொழி களுக்குள் நேசப்பான்மை இருந்து வரவேண்டியது அவசியம்......

இலக்கிய நூல்கள் இக்கால வாழ்க்கையையும் பிரசினைகளையும் பிரதிபலிக்க வேண்டும். வாழ்க்கை நாளுக்கு நாள் விஞ்ஞான மயமாயும், நுணுக்கமான முறைகளைக் கொண்டதாயும் மாறி வருகின்றது. மொழிகளில் பொறிகளைப் பற்றியும் தொழில்களைப் பற்றியும் கலைச் சொற்கள் மிகுந்து பெருகி வருகின் றன. ஆங்கில மொழியில் ஆண்டு தோறும் 5,000 சொற்கள் புதிதாகச் சேர்க்கப்படுவதாய்ச் சொல்லப் படுகின்றது. கலைச்சொற்கள் சம்பந்தமாகச் சர்வ தேச நடைமுறையிலுள்ளவைகளை ஒட்டியே நாமும் அமைத்துக்கொள்ளலாம் என்று பொதுவான உடன் பாடு ஏற்பட்டிருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடை கிறேன். இந்திய மொழிகள் புதிதாகச் சொற்களை உண்டாக்கிக்கொண்டிராமல், அவைகளைப் பயன் படுத்திக் கொள்ளும் என்பதில் எனக்குச் சந்தேக மில்லை. 'பைசைக்கிள்' என்ற சொல்லுக்குப் புதிதாக ஒரு வார்த்தையைக் கண்டுபிடிக்க என்ன அவசியம் இருக்கிறது? பொதுவான சொற்களையும் சொற் றொடர்களையும் இவ்வாறு நாம் சேர்த்துக் கொண்டு வந்தால், அநேக விவாதங்களுக்கே இடமில் லாமற் போகும்.

ஓர் உலகம் மாறி நாம் அடுத்த விண் உலகுக்குச் செல்வதாகத் தோன்றுகிறது; இனி நாம் பூமியுடன்

பிணைந்திருக்கவில்லை, விண்வெளியில் பிரவேசித்துள்ளோம். விண்வெளிக் கப்பல்கள் முதலியவைகள் வந்துவிட்டன. ஆதலால் இனிமேல் நாம் குறுகிய மனப்பான்மையுடன், இந்தப் பிரதேசம், அந்தப் பிரதேசம் என்று எண்ணிக் கொண்டிருக்கக் கூடாது. புதிதாக அமைந்துள்ள உலகத்தில் பூமியே ஒரு சிறு இடமாகிவிட்டது. இதிலே நாடு, பிரதேசம் என்பவைகளைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது? ஆகவே நாம் விசால மனம் பெறவேண்டும், நமது நோக்கங்களும் விசாலமாக வேண்டும்.

*—புவனேஸ்வரில் 'பேனு' எழுத்தாளர் மகாநாட்டில் தொடக்க உரை, **1-1-1959.***

* * *

# 29

# ஆரோக்கியம்

---

## உடல் வலிமையும் அறிவுப் பெருக்கமும்

எனக்கு நல்ல ஆரோக்கிய மிருக்கிறது, என் வயதுள்ளவர்களுடன் உடல் வலிமையைச் சோதிக்கும் எந்தப் போட்டியிலும் கலந்துகொள்ள நான் தயாராயிருக்கிறேன். அவர்கள் நூறு கஜ தூரம் ஓட விரும்பினுல், நான் அவர்களுடன் ஓடத் தயார். அவர்கள் நீந்த விரும்பினுல், நானும் நீந்துகிறேன்; அவர்கள் குதிரை சவாரி செய்ய விரும்பினுல் நானும் அவர்களுடன் பந்தய சவாரிக்குத் தயாராயிருக்கிறேன். பத்து, இருபது, அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்னுல் நான் கொண்டிருந்த சுறுசுறுப்பும் தீவிர உழைப்பும் இப்பொழுது இருக்கமாட்டா; இருந்த

போதிலும் நான் உடலைப் பற்றி மிகவும் சிரத்தை யோடு எப்பொழுதும் கவனித்து வந்திருக்கிறேன். ஒவ்வொருவரும் வலிமையாகவும் உழைக்கத் தகுதி யுடனும் இருக்க வேண்டியது கடமை. நோயோ பல வீனமோ எனக்கு எக் காலத்திலும் வெறுப்பானவை. யார் நோயுற்ருலும் நான் அநுதாபம் காட்டுவதில்லை. நான் ஏன் இப்படிச் சொல்கிறேன் என்ருல், இங்கே அநேகர் நோயுறுவதும், பலவீனமா யிருப்பதும் செல் வர்க்கு அழகு என்று கருதுகின்றனர்; வாலிபர்களும் வயோதிகர்களும் ஆரோக்கியமாகவும், வலிமையுட னும், சுறுசுறுப்புடனும் இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். மக்கள் முதல் தரமான சமூகமா யிருக்க வேண்டும். உடல் வலுவில்லாத நிலையில், நாம் அறிவில் அதிக முன்னேற்ற மடைய முடியுமென்று நான் நினைக்கவில்லை.

—*ஆவடி காங்கிரஸ் சொற்பொழிவு, 23-1-1955.*

* * *

# 30

# பெண்கள்

---

## இந்தியப் பெண்கள்

**பி**ற நாடுகளின் சமூக உறுப்புக்களைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல எனக்குத் தகுதி கிடையாது. இங்குள்ள பல அங்கத்தினர்களைக் காட்டிலும் நான் வெளியே யாத்திரை செய்ய வசதிகள் இருந்த போதி லும், அபிப்பிராயம் சொல்ல நான் தகுதியற்றவன் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆனால், இந்தியப் பெண்டிரைப் பற்றி நான் பெருமை கொள்வதாக

நிறைந்த நம்பிக்கையோடு நான் சொல்ல முடியும், அவர்களுடைய அழகு, எழில் தோற்றம், வனப்பு, கூச்சம், அடக்கம், அறிவு, அவர்களுடைய தியாக உணர்ச்சி ஆகியவைகளைப் பற்றி நான் பெருமை கொள்கிறேன். இந்தியாவின் ஆன்மிக உணர்வுக்குப் பிரதிநிதியா யிருக்க வேண்டுமானால், ஆடவர்களைக் காட்டிலும், பெண்ணே சிறந்தவள் என்று நான் எண்ணுகிறேன்......

—லோக சபைச் சொற்பொழிவு, 5-5-1955.

# 31

# குழந்தைகள்

---

## குழந்தைகளின் அருமை

குழந்தைகளோடு இருப்பதிலும், அவர்களிடம் பேசுவதிலும், இவைகளைவிட அவர்களுடன் விளையாடுவதிலும் எனக்கு விருப்பமுண்டு. எனக்கு மிகவும் வயதாகிவிட்டது என்பதையும், வெகு காலத்திற்கு முன்புதான் நான் ஒரு குழந்தையா யிருந்தேன் என்பதையும் நான் ஒரு கண நேரம் மறந்துவிடுகிறேன்.*

* * *

## ஒவ்வொரு குழந்தைக்கும் இலவசக் கல்வி

குழந்தைகள் கல்வியில்லாம லிருப்பதையும், சில சமயங்களில் உணவும் உடையும்கூட இல்லாமலிருப்பதையும் பார்ப்பதைப் போல் எனக்கு வருத்தமான விஷயம் வேறில்லை. இன்று நம் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்காம லிருந்தால், நாளை நமது இந்தியா எப்படி யிருக்கும்? நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்

தைக்கும் நல்ல கல்வி யளித்தல் அரசாங்கத்தின் கடன். அந்தக் கல்வியும் இலவசமாக அளிக்கப் பெற வேண்டும். நம்முடைய பாக்கியக் குறைவினால், இந்தக் காரியங்களை நாம் உடனே விரைவாகச் செய்ய முடியவில்லை. ஏனெனில், நம்மிடம் போதிய வசதிக ளில்லை, ஆசிரியர்களும் குறைவு. ஆயினும் நாம் வேலை களை நடத்திக்கொண்டு செல்ல வேண்டும. எதிர் காலத்தில் நாம் எந்த முறையான சமுதாயத்தை அமைத்துக் கொள்வதாயினும், பயிற்சி பெற்ற மனி தர்கள் நமக்குத் தேவை, எழுதப் படிக்கத் தெரிந்தவர் மட்டும் இருந்தால் போதாது. மனிதர்கள் பயிற்சி பெற் றிருப்பதுடன், குணமும் வளர்ந்திருக்க வேண்டும், அவர்கள் மனத்தில் உயர்ந்த ஆசைகள் இருக்க வேண் டும், கலாசாரத்தின் முக்கிய அமிசங்கள் அமைந் திருக்க வேண்டும், அவர்கள் தங்கள் கைகளால் ஏதா வது தொழில் செய்யவும் தெரிந்திருக்க வேண்டும்.

*—ஆவடி காங்கிரஸில் நிகழ்த்திய சொற்பொழிவு.*
***23-1-1955.***

* * *

# 32

## சமயம்

---

### இலட்சியத்தில் நம்பிக்கை

**ம**னித இயற்கைக்கு அவசியமான சில தேவை களை அளிப்பதில் மதம் முக்கியமான ஸ்தானத்தைப் பெற்று வந்துள்ளது. ஆனால், அத்தகைய மதம் தன் பிடிப்பைத் தளரவிட்டுவிட்டது. விஞ்ஞானமும் பகுத் தறிவு வாதமும் அதைத் தாக்குவதை அதனால் சமா

ளித்துக் கொள்ள முடியவில்லை. சமயம் அவசியமோ இல்லையோ, நம் வாழ்வுக்குப் பயன் இருக்கும்படி செய்யவும், நம்மை ஒன்றுசேர்த்து வைக்கவும் ஏற்ற உன்னதமான இலட்சியம் ஒன்றில் ஓரளவு நம்பிக்கை இருக்கவேண்டியது அவசியம்.

—*ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.*

* * *

## புதிய தத்துவ ஞானிகள்

சோஷலிஸமும் கம்யூனிஸமும் வாழ்க்கையின் பலனை வற்புறுத்திக் காட்ட முயல்கின்றன, ஆனால், அவைகளும் சொந்தத்தில் சித்தாந்தங்களை உண்டாக்கிக் கொள்வதில் முனைந்துவிட்டன. இந்தச் சகாப்தத்தில் கம்யூனிஸ்டுகளே தத்துவஞானிகளாக ஆகிவிட்டனர்!

—ஷை ஷை

* * *

# 33

# சத்தியம்

---

## சத்தியமே வெல்லும்

உண்மையைச் சில சமயங்களில் அடக்கி வைக்க முடியும். ஆனால் அதை நசுக்கிவிட முடியாது.

சத்தியமாகிய பாறையின் மீதுதான் நிலையான வெற்றிக்குரிய அடிப்படைகளை அமைக்க முடியும்.

—*அலகாபாத்தில் காந்திஜியின் அஸ்தியைத் திரிவேணியில் கரைக்கும்பொழுது பேசியது, 12-2-1948.*

* * *

## சத்திய வேட்கை

அவர் (காந்திஜி) மனிதனின் மனத்திலும் இதயத்திலும் ஆதிக்கியம் பெற்றிருந்ததற்கு என்ன காரணம்? பின்னால் வரப்போகும் சகாப்தங்களே இதற்கு முடிவு கூற முடியும், அவருடைய ஒப்பற்ற தனிப் பண்பின் பல சாயைகளையும் பற்றி மதிப்பிடுவதற்கு நாம் அவருக்கு மிகவும் சமீபத்தில் இருப்பதால், அது எளிதன்று, ஆனால் நமக்குக்கூட அவருடைய வாழ்க்கையில் முதன்மையாக விளங்கியது சத்திய வேட்கை என்பது தெரியும். அந்த உண்மை, நல்ல இலட்சியங்களைத் தீய வழிகளில் ஒருகாலும் பெற முடியாது என்றும், வழி தவறாயிருந்தால், முடிவும் தவறாகிவிடும் என்றும் அவர் ஓய்வொழிவில்லாமல் சொல்லும்படி செய்து வந்தது. அவர் தாம் செய்ததில் ஏதாவது தவறானது என்று கண்டால், அதை வெளிப்படையாகப் பொதுமக்கள் அறியும்படி ஒப்புக்கொள்ளுமாறு அவருடைய சத்திய வேட்கை செய்து வந்தது. அவர் தமது தவறுகளில் சிலவற்றை இமாலயத் தவறுகள் என்று கூறினார். தீமையையும், அசத்தியத்தையும் எங்கெங்கு கண்டாலும், அவைகளை எதிர்த்து நிற்கவும், அதனால் என்ன விளைவுகள் ஏற்பட்டாலும், அவற்றைப் பொருட்படுத்தாமலிருக்கவும் அந்தச் சத்திய வேட்கை அவரைத் தூண்டிவந்தது. ஏழைகட்கும் ~~தாழ்த்தப்பட்டவர்களுக்கும்~~ ஊழியம் செய்வதையே அவருடைய வாழ்க்கையின் ஆசையாக விளங்கச் செய்ததும் அந்தச் சத்தியம்தான். ஏனெனில், ஏற்றத்தாழ்வும், பாரபட்சமும், அடக்கி வைத்தலும் உள்ள இடத்தில் அநீதியும், தீமையும், அசத்தியமும் இருக்கும். இவ்வாறு சமூக நிலையிலும், அரசியலிலும் உள்ள தீமைகளால் துன்பமடைந்தவர் அனைவருக்கும் அவர் மிகவும் வேண்டியவராகத் திகழ்ந்தார். எதிர்காலத்

தில் மனித சமூகம் எப்படி யிருக்க வேண்டுமோ அதற்கு அவர் சிறந்த பிரதிநிதியாக இருந்தார். இந்த உண்மை அவரிடம் இருந்ததால், அவர் அமர்ந்திருந்த இடமெல்லாம் கோயிலாயிற்று, அவர் பாதம் படிந்த இடமெல்லாம் புனித பூமியாயிற்று.

—புதுடில்லியிலிருந்து ஒலிபெருக்கிய சொற்பொழிவு,
*14-2-64.*

* * *

## புத்தருடைய வாய்மை

விசாரணையாலும் பரிசோதனையாலும் நிரூபிக்கக் கூடியதைத் தவிர வேறு எதையும் எவரும் நம்பக் கூடாது என்று புத்தர் கூறினார். மக்கள் சத்தியத்தை நாடிச் செல்ல வேண்டும் என்றும், வேறு ஒருவர் சொன்னதற்காக ஒன்றை உண்மையென்று ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும், அப்படிச் சொன்னவர் புத்தரேயானாலும் ஏற்கக்கூடாது என்றும் அவர் வேண்டினார். அவர் சகிப்புத் தன்மை, கருணை ஆகியவை பற்றிக் கூறியிருப்பதோடு, இதுதான் அவருடைய உபதேசத்தின் சாரம் என்று எனக்குத் தோன்றுகின்றது. அந்த உபதேசம் இன்றைக்குப் பயனற்றது என்பதில்லை, அது நம்முடைய இந்த உலகத்திற்கு இப்பொழுது விசேட முக்கியத்துவமுள்ளது.

—கல்கத்தாவில் கூடிய விஞ்ஞானக் காங்கிரஸில்
சொற்பொழிவு, *14-1-1957.*

* * *

## உண்மை மிகப் பெரிது !

உண்மை தங்களுக்கு மட்டுமே உரித்தானது என்று விஞ்ஞானிகள் உரிமை கொண்டாட முடியாது என்பதை

அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்; அந்த உரிமை எவருக்குமே இல்லை, எந்தத் தேசத்திற்கும், எந்த மக்களுக்கும், எந்த நூலுக்கும் இல்லை. மனிதர்களின் மனங்களிலோ, புத்தகங்களிலோ, அவை எவ்வளவு புனிதமாயிருந்த போதிலும், அவற்றில் அடங்கிவிட முடியாதபடி உண்மை அவ்வளவு பெரிதாயுள்ளது.

—ஷி ஷி

* * *

# 34

# இலட்சியமும் வழிகளும்

---

## நம் குருநாதரின் தத்துவங்கள்

இந்தச் சபையின் அங்கத்தினர்களில் பெரும்பாலோரும், இந்த நாட்டிலுள்ள எண்ணற்ற மக்களும், ஆட்சிப் பீடத்தை எதிர்த்துப் புரட்சிகரமான வேலையிலேயே நம் வாழ்க்கையைக் கழித்திருக்கிறோம். நாம் புரட்சிப் பரம்பரையில் வளர்ந்தவர்கள். இப்பொழுது ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கிறோம். எனவே சிக்கலான பிரசினைகளைத் தீர்க்க வேண்டிய கடமை ஏற்பட்டிருக்கின்றது. (புரட்சியாளர் ஆட்சியாளராக மாறும்) இந்த மாற்றம் எந்தக் காலத்திலும், யாருக்கும் எளிதான காரியம் என்று சொல்ல முடியாது. ஆனால் நாம் புரட்சிக்காரர்களாயும், கிளர்ச்சிக்காரர்களாயும், பல கொள்கைகளைத் தகர்த்தெறிந்தவர்களாயும் இருந்ததுடன், மகாத்மா காந்தியின் தலைமையில் ஓர் உயர்ந்த பண்பாட்டில் பயிற்சி பெற்றும் வந்திருக்கிறோம். அந்தப் பயிற்சி, நன்னெறி பற்றிய பயிற்சி, ஒழுக்க சம்பந்தமான பயிற்சி, அத்துடன் அந்த நன்

னெறி பற்றிய கொள்கைகளையும், ஒழுக்க சம்பந்த மான கொள்கைகளையும் நடைமுறை அரசியலிலும் பயன்படுத்த நாம் பழகியிருந்தோம். அந்த மகான் நமக்கு உலகிலேயே இணையில்லாத செயல் முறையை வகுத்துக் கொடுத்திருந்தார்; அதில் நன்னெறி பற்றி யும் ஒழுக்கம்பற்றியும் உள்ள சில தத்துவங்களைக் கொண்டு, அரசியல் இயக்கமும், அரசியல் எதிர்ப்பும், சுதந்தரப் போராட்டமும் இணைந்திருந்தன. நாம் அனைவருமோ, நம்மிலே சிலரோ அந்தத் தத்துவங் களின்படி முற்றிலும் நடந்துகொண்டோம் என்று நான் சொல்லத் துணியவில்லை, ஆனால் சுமாராகச் சென்ற முப்பது வருடக் காலத்தில், நமது குருவும் தலைவருமா யிருந்தவருடைய நன்னெறி, ஒழுக்க சம் பந்தமான தத்துவங்கள் நம் எல்லோரையும் உருவாக் கின என்று நான் துணிந்து கூறுவேன்.

*—புதுடில்லியில் அரசியல் நிர்ணயசபைச் சொற்பொழிவு.*
*8-3-1949.*

* * *

## முடிவும் வழிகளும்

நாம் அடைய வேண்டும் என்று விரும்பும் குறிக் கோளுக்கும், அதை அடையக் கைக்கொள்ளும் வழி களுக்கும் எப்பொழுதும் இடைவிடாத நெருங்கிய தொடர்பு இருந்து வருகின்றது என்று நான் கருது கிறேன். குறிக்கோள் நல்லதா யிருந்தபோதிலும், வழி தவறானதா யிருந்தால், அது குறிக்கோளையே பாழாக் கும், அல்லது நம்மைத் தவறான திசையில் செலுத்தி விடும். வழிகளும் இலட்சியமும் இவ்வாறு நெருக்க மாகவும், பிரிக்க முடியாதபடியும், பிணைக்கப்பெற் றிருக்கின்றன. அவைகளை வேறுபடுத்த முடியாது. இதுதான் பழங்காலத்துப் பெரியார் பலர் நமக்குப்

போதித்துள்ள பாடம். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இதை நினைவில் வைத்துக்கொள்வதுதான் அரிதா யிருக்கின்றது.

*—கொலம்பியா பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய உரை*
***17-10-1949.***

*　　*　　*

## பொதுவான உலக அரசாங்கம்

நமது தேசிய உறவுகளிலும் வெளிநாட்டு உறவு களிலும் நாம் ஒழுக்க சம்பந்தமான உயர்வை மதிக்காவிட்டால், நமக்கு நிலையான சமா தானம் ஏற்படாது என்பது எனக்கு நாளுக்கு நாள் அதிக உறுதியாகின்றது. சரியான மார்க்கங் களை நாம் கடைப்பிடிக்காவிட்டால், முடிவும் சரியான தாயிருக்காது. அதிலிருந்து புதிய தீமையே உண் டாகும்; இதுதான் காந்திஜி செய்த உபதேசத்தின் சாரம். மனித குலம் தெளிவான பார்வையைப் பெறு வதற்கும், சரியாக நடப்பதற்கும் இதைப் போற்றிக் கைக்கொள்ள வேண்டியது அவசியம். கண்களில் இரத்தம் செறிந்து சிவந்துவிட்டால், பார்வை குறைந்து போகும். உலகப் பொதுவான அரசாங்கம் வரவேண் டும், வந்தே தீரும் என்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. ஏனெனில் உலகின் நோய்க்கு வேறு மருந்தே யில்லை. இதற்கு வேண்டிய ஓர் அமைப்பை உருவாக்குவது கஷ்டமில்லை. சமஷ்டித் தத்துவத்தை (பல நாடுகளுக்கும் சேர்த்து) விரிவாக்கலாம். அது தான் ஐக்கியநாடுகளுடன் கூட்டுக்குரிய கருத்தாகவும் இருக்கின்றது. ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் பண் பாட்டுக்குத் தக்கபடி தன் தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ளச் சுதந்தரம் அளித்துவிட்டு, உலக அரசாங்கத்

துடன் அது செய்துகொண்ட ஒப்பந்தப்படி எப்பொழுதும் நடந்து வரவேண்டும் என்று விதிக்கலாம்.

*—புதுடில்லியிலிருந்து அமெரிக்க ஐக்கிய மாகாணத்திற்காகச் செய்த ரேடியோ சொற்பொழிவு, 3-4-1948.*

* * *

# 35

# கடமைகளும் உரிமைகளும்

## பழைய தர்மம்

**நாம்** எல்லோரும் இப்பொழுது உரிமைகளையும் சலுகைகளையும் பற்றிப் பேசுவதுடன் அவைகளை வேண்டவும் செய்கிறோம். ஆனால் பழைய **தர்மம்** கடமைகளையும் கடப்பாடுகளையுமே கூறியுள்ளது. கடமைகளை நிறைவேற்றினால் உரிமைகள் தாமாகத் தொடர்ந்து வரும்.

*—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.*

* * *

# 36

# சுயநலமும் ஊழலும்

## புது முறைகள் அவசியம்

**பொ**து ஆட்சி முறையில் நேர்மையற்ற சுயநலக் கும்பல்கள் தோன்றுவதையும், இலஞ்ச ஊழலையும் ஒழிக்க நாம் வழிகளையும் முறைகளையும் வகுக்க

வேண்டும். ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்: கிராமங்களில் பல மக்களுக்கு ஏதோ நஷ்ட ஈடுகள் கொடுக்கப் பெறுகின்றன, அல்லது ஒரு கிராமத்தில் கஷ்ட நிவாரணத்திற்காக ஒரு வேலை தொடங்கப் பெறுகின்றது. நஷ்ட ஈட்டையோ, உதவி நிதி யையோ விநியோகிக்கும் வேலை ஒரு சாதாரண அதி காரியிடம் ஒப்படைக்கப் பெறுகின்றது. இவைகளை விநியோகிப்பதில் எப்பொழுதுமே நீண்ட காலத் தாம தங்கள் ஏற்படுகின்றன, இனியும் ஏற்படும். நிதிகள் எவர்களுக்குப் போய்ச் சேரவேண்டுமோ அவர்களை அடைவதற்குள், பெரும்பாலும் காலியாகி விடும், அல்லது அவர்கள் பெருந் துன்பங்களை யெல்லாம் தாங்கிய பின்பு போய்ச் சேரும். இதைப் பற்றி நாம் என்ன செய்யப் போகிறோம்? ஒவ்வொருவரும் முற்றி லும் கண்யமானவராக மாறி, கால தாமதம் நேராமல் செய்கிறவரை, நாம் காத்திருக்க வேண்டுமா? எல்லோ ரும் திருந்தும்படி நாம் செய்ய வேண்டியதுதான். ஆனால் நாம் காத்திருக்க முடியாது. நிதிகளை விநி யோகம் செய்வதற்கு வேறொரு முறையை நாம் கையாள்வதாக வைத்துக் கொள்வோம். கிராமத்தார் அனைவரையும் ஒரே இடத்தில் கூட்டி வைத்து, நஷ்ட ஈடு சம்பந்தமாக அரசாங்கம் நிர்ணயித்துள்ள விகிதத் தைப் பற்றி அவர்களுக்கு எடுத்துச் சொல்லலாம். இதனால் இலஞ்ச ஊழல் குறையும். ஏனெனில் ஜனங் கள் அனைவருக்கும் உண்மையான தொகையின் அளவு தெரிந்துவிடும். இது எளிதாகச் செய்யக் கூடிய ஒரு காரியம். ஆனால் செய்யப் பெறுவதில்லை. எளிதான முறைகளில் நாம் ஏன் வேலை செய்யக் கூடாது? ஜனங்களை அரசாங்க அலுவலகங்களுக்கு அழைத்து, அவர்களைத் திரும்பத் திரும்ப வரும்படி செய்வதை விட, அதிகாரி கிராமத்திற்குச் சென்று, நஷ்ட ஈடு பற்றிய அரசாங்கத்தின் முடிவை எல்லோருக்கும்

தெரியும்படியாக அறிவித்து, 'இங்கே வாருங்கள், இங்கேயே, இப்பொழுதே தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்!' என்று சொல்ல வேண்டும் என்று நான் யோசனை கூறியுள்ளேன். இப்படிச் செய்யும் இடங்களில் காலதாமதம் ஏற்படக் காரணமே இராது.

இத்தகைய முறைகளை நாம் கண்டுபிடிக்கா விட்டால், இலஞ்ச ஊழல் பெருந் தொல்லையாக வளர்ந்து விடும். புதிய முறைகளை நாம் கையாண்ட போதிலும், ஊழலில் ஒரு பகுதி இருக்கத்தான் செய்யும். அது முற்றிலும் ஒழிய வேண்டுமானால், மக்களிடையிலும் நேர்மை வளர வேண்டும்.*

* * *

தாமதம்தான் இலஞ்ச ஊழலுக்கு மிக முக்கியமான காரணம். ஓர் அதிகாரி (வேலையைத்) தாமதப் படுத்த நீங்கள் இடம் கொடுத்து விட்டால், அவர் ஏதாவது காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமானால், பணம் பறிக்க வசதி யுண்டாகும். ஆதலால், தாமதப்படுத்தவே முடியாதபடி ஒரு முறையை அமைக்க வேண்டும். தாமதமில்லையானால், இலஞ்ச ஊழலுமில்லை. ஆனால் நாம் அறைகளிலே அமர்ந்து கொண்டு, விதிகளையும், முறைகளையும் வகுக்கிறோம். அவைகளினால் தாமதம் ஏற்படுகின்றது.*

* * *

நம் நாட்டில் எத்தனை குறைகளிருந்த போதிலும், இது ஓரளவு சாந்தியும், ஓரளவு முன்னேற்றமும் பெற்று நிலையாக நிற்பது என்று உலகத்திற்குக் காட்டியுள்ளது. இதன் மூலம் ஓரளவு பெருமையும் பெற்றுள்ளது. அடிப்படையான சில பண்பாடுகளைக் கொண்டு இந்தப் புகழ் அமைந்திருக்கின்றது. நமக்கு

இந்த விஷயமோ, அந்த விஷயமோ பிடிக்கவில்லை என்பதற்காக, நாம் பலாத்காரக் கொந்தளிப்புகளில் இறங்கினுல், நாம் நம் புகழை இழப்பதுடன், அதை விட முக்கியமானதையும் இழந்து விடுவோம்.*

* * *

# 37

# நமது பிரசினைகள்

---

## இந்தியாவின் தனியான விசேட நிலைமைகள்

**யு**கோஸ்லாவியா நாட்டில் எத்தனை கஷ்டங்கள் இருந்த போதிலும், வேலையில்லாத் திண்டாட்டம் அங்கில்லை. அங்கே இருக்கிற வேலையைச் செய்து முடிக்கப் போதிய ஆட்களில்லை. சோவியத் யூனியனை எடுத்துக் கொள்ளுங்கள்—அது இந்தியாவை விட நான்கு, ஐந்து மடங்கு அதிகப் பரப்புள்ள மாபெரும் நாடு, இந்தியாவின் ஜனத்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பகுதியே அங்கேயுள்ளது. தேசம் பெரிது, ஜனங்கள் சுருக்கம்—இது அங்கேயுள்ள பிரசினை. நமது பிரசினை வேறு—பெருக்கமான ஜனத் தொகையுடன், தொழிற் பெருக்கமில்லாத பெரிய நாடு நம்முடையது. இதைப் போலவே, அமெரிக்கா, இங்கிலாந்து, மேற்கு ஐரோப்பா நாடுகளின் பிரசினைகளோடு நம் பிரசினைகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது, அவைகள் சென்ற இருநூறு ஆண்டுகளாகத் தொழில் வளர்ச்சி பெற்று வந்தவை. இப்படி ஒப்பிட்டுப் பார்த்தல் சில சமயங்களில் உதவியாயிருந்த போதிலும், அது தவருக முடியும். இந்தியாவிலுள்ள நிலைமையைக்கொண்டு நாம் நம் பிரசினைகளைப் புரிந்துகொள்ள வேண்டும்; அமெ

ரிக்கா, இங்கிலாந்து, யுகோஸ்லாவியா, ரஷ்யா, அல்லது சீனுவில் செய்து முடிக்கப் பெற்றதிலிருந்து நாம் படிப்பினையைப் பெற்றுக் கொள்வதில், அதே சமயம் இந்தியாவிலுள்ள நிலைமைகள் வேருனவை, விசேடமானவை என்பதை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் நமக்குப் பின்னணியாக அமைந்துள்ள நிலைமை பல வழிகளில் தனித்த விசேடமுள்ளது, முக்கியமாகக் காந்தீயப் பின்னணியைக் குறிப்பிடலாம்.

—*ஆவடி காங்கிரஸில் கூறியது, **22-1-1955.***

* * *

## அணு யுகத்தில் தொழிற் புரட்சி

ஐரோப்பாவில் தொழிற் புரட்சி ஏற்பட்ட பிறகு, உலகம் அதற்கு முந்திய பழைய உலகத்திலிருந்து எவ்வளவு அடிப்படையான மாறுதலடைந்திருக்கிறதோ, அதேபோல, முழுதும் நாம் ஒரு புதிய சமுதாய அமைப்புடன் வெளிவரப் போகிறோம் என்று நான் நினைக்கிறேன். அது இன்றுள்ள நிலையிலிருந்து அடிப்படையான மாற்றத்துடன் விளங்கும். இந்தியாவிலுள்ள நாம் தொழிற் புரட்சியின் தொடக்கத்திலிருக்கிறோம். நாம் பல சகாப்தங்களை ஒரே தாண்டுதலாகத் தாவிச் செல்ல வேண்டி யிருக்கிறது. அதாவது, அணுச் சக்திப் புரட்சியின் நடுவே நாம் சென்று கொண்டிருக்கும்பொழுதே, தொழிற் புரட்சியையும் நாம் நடத்தி வைக்க வேண்டியவர்களா யிருக்கிறோம். இது குழப்பமுண்டாக்கக் கூடிய நிலைமைதான். தொழிற் புரட்சியின் ஆரம்பக் காலங்களில் அநுபவிக்க நேர்ந்த கஷ்டங்களை நாம் தவிர்க்க முடிந்தால் நல்லதுதான். இவையெல்லாம், நாம் பழைய மாமூலான வழக்கங்

களில் விழுந்து கிடக்காமல், நம்மை விழிப்புடன் இருக்கச் செய்வதற்கு உதவியானவை.

—புதுடில்லியில் சொற்பொழிவு, *14-4-1956.*

* * *

## புள்ளி விவரங்களும் மனிதர்களுடன் பழக்கமும்

'உங்களுடைய முக்கியமான பிரசினை என்ன? உங்களுக்கு எத்தனை பிரசினைகள் இருக்கின்றன?' என்று என்னிடம் ஒரு முறை கேட்கப்பட்டது. 'இந்தியாவில் எங்களுக்கு 36 கோடிப் பிரசினைகள் இருக்கின்றன' என்று நான் சொன்னேன். அந்தப் பதில் பலருக்கு வேடிக்கையா யிருந்தது. ஆனால் அதில் முக்கியமான ஓர் உண்மை அடங்கி யிருந்தது. 36-கோடி நபர்களைக் கருத்தில் கொண்டே நம்முடைய பிரசினைகள் அனைத்தையும் நாம் கவனிக்க வேண்டிய வர்களா யிருக்கிறோம். நபர்கள் என்றால், கோடிட்ட காகிதங்களில் குறித்துக் காட்டப்பெறும் புள்ளி விவரங்கள் என்று எண்ணிவிடக் கூடாது. புள்ளி விவரங்கள் நமக்குத் தெளிவுண்டாக்க மிகவும் பயனுள்ளவை தாம். ஆனால் நாம் தனி நபர்களையும், அவர்களுடைய இன்பத்தையும், துன்பத்தையுமே கருத்தில் கொண்டு பார்க்க வேண்டும்.

—புதுடில்லியில் சொற்பொழிவு, அக்டோபர் *13, 1954.*

* * *

## வகுப்புவாத விஷம்

வகுப்புவாதம் என்ற விஷம் நமக்குப் பெரு நஷ்டங்களை உண்டாக்கி வந்தது. நாம் முன்னதாக

உரிய நேரத்தில் எச்சரிக்கையுடனிருந்து நடவடிக்கை எடுக்காவிட்டால், அது நம் சுதந்தரத்தையே தீர்த்துக் கட்டிவிடும்.

—அகாபாத்தில் காந்திஜி அஸ்திகளைத் திரிவேணியில் கரைத்த பொழுது பேசியது, 12-2-1948.

* * *

காந்திஜி வாரத்தில் ஒரு நாள் மௌன விரதம் அநுஷ்டித்து வந்தார். அந்தக் குரல் இப்பொழுது நிரந்தரமாக மௌனமாகிவிட்டது, முடிவில்லாத மௌனம் ஏற்பட்டுவிட்டது. எனினும், அந்தக் குரல் நம் செவிகளிலும் உள்ளங்களிலும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. நம் மக்களின் மனங்களிலும் இதயங்களிலும் அது ஒலித்துக் கொண்டிருக்கும். இந்தியாவின் எல்லைகளுக்கு அப்பாலும், இனி வரப் போகும் சகாப்தங்களிலும், அது ஒலித்துக் கொண்டிருக்கும். ஏனெனில், அந்தக் குரல் உண்மையின் குரல், உண்மையைச் சில சமயங்களில் அடக்கி வைக்க முடிந்த போதிலும், அதை அழித்துவிட முடியாது. அவருக்குப் பலாத்காரம் என்பது உண்மையின் எதிரியாக விளங்கிற்று, அதனால்தான் அவர் கையினால் இம்சை செய்வதைக் கண்டித்து நமக்கு உபதேசம் செய்ததுடன், நமது உள்ளத்திலும் இதயத்திலும் அது இருக்கக்கூடாது என்றும் சொன்னார். நமக்குள்ளேயே நிகழ்ந்து வரும் இந்தப் பலாத்காரத்தை நாம் விட்டொழிக்காவிட்டால், மற்றவர்களிடம் அளவற்ற சகிப்புத் தன்மையும் அன்பும் காட்டாவிட்டால், நாம் ஒரு தேசிய சமூகமாக வாழ முடியாது. பலாத்கார வழி அபாயகரமானது, பலாத்காரம் உள்ள இடத்தில் சுதந்தரம் நெடுநாள் தங்கியிராது. உள்நாட்டில் பலாத்காரமும் பூசலும் இருந்து வந்தால், சுயராஜ்யத்தைப் பற்றி

யும், மக்களின் சுதந்தரம் பற்றியும் நாம் பேசும் பேச்சு பொருளற்றதாகி விடும்.

—ஷி ஷி

* * *

## நமது தேசிய இலட்சியம்

நாம் நமது தேசிய இலட்சியத்தில் தெளிவாயிருக்க வேண்டும். வலிமையுள்ள, சுதந்தரமான, ஜனநாயக இந்தியாவை உருவாக்குவதே நம் இலட்சியம். இங்கே ஒவ்வொரு பிரஜைக்கும் சமத்துவமான இடமுண்டு, வளர்ச்சிக்கும் தொழிலுக்கும் பூரணமான வாய்ப்புண்டு. செல்வத்திலும் அந்தஸ்திலும் தற்காலமுள்ள ஏற்றத் தாழ்வுகள் இல்லாது ஒழியும், நம்முடைய ஆற்றல்கள் ஆக்க வேலைகளுக்கும், கூட்டுறவு முயற்சிக்கும் பயன்படுத்தப்பெறும். இத்தகைய இந்தியாவில் வகுப்புவாதம், பிரிவினைவாதம், தனித்திருத்தல், தீண்டாமை, துவேஷம், மனிதனை மனிதன் சுரண்டுதல் ஆகியவை இருக்க மாட்டா, சமயம் சுதந்தரமாயிருக்கும், ஆனால், அது தேசிய வாழ்க்கையின் அரசியல் பொருளாதார அமிசங்களில் தலையிடுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. இந்த நிலையில், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், சீக்கியர் என்ற பேதம் அரசியல் வாழ்வு சம்பந்தப்பட்டமட்டில் தீர்ந்து போக வேண்டும். நாம் ஐக்கியப்பட்ட, ஒன்று சேர்ந்த ஒரு தேசிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அதில் தனி நபர் சுதந்தரமும் தேச சுதந்தரமும் நிலையான காப்புடையனவாக இருக்க வேண்டும்.

*—அலகாபாத் பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய சொற்பொழிவில் 13-12-1947.*

LOCAL LIBRARY AUTHORITY
BRANCH LIBRARY
SANKARANKOVIL.
4652

## மாயப் பிரிவுகள்

பழமை நம்மைச் சேர்த்து வைத்திருக்கிறது; நிகழ் காலமும் எதிர்காலமும் நம்மை ஏன் பிரிக்க வேண்டும்?

*—அலிகார் பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய சொற்பொழிவு, 24-1-1948.*

* * *

## மொழிப் பிரசினை

நாட்டின் எந்தப் பாகத்தையும் பாதிப்பதாகவோ, எதற்கும் தீங்கிழைப்பதாகவோ, உள்ள மொழி சம்பந்தமான நடவடிக்கை எதையும் நாம் எடுக்கக் கூடாது.

* * *

இந்தியாவிலுள்ள 13, அல்லது 14 பெருமைமிக்க மொழிகள் யாவும் நமது அரசியல் சட்டத்தில் தேசிய மொழிகளாகச் செய்யப் பெற்றுள்ளன. அவைகளுள் தமிழும் ஒன்று.

* * *

தமிழ் வேகமாக அபிவிருத்தியடைந்து வருகின்றது. அப்படி முன்னேறுவதே நலம். கல்வித் துறையிலும், அரசாங்க வேலையிலும், இந்த ராஜ்யத்தின் இதர துறைகளில் ஒவ்வொன்றிலும், அது முன்னேறி வருகின்றது. வங்காளி, தெலுங்கு, மலையாளம், ஹிந்தி முதலிய மற்ற மொழிகளும் முன்னேறி வருகின்றன. தமிழ், வங்காளி, மலையாளம் முதலிய இராஜ்ய (பிராந்திய) மொழிகளே ஆங்கில மொழியின் உபயோகத்தைக் குறைத்துக் கொண்டு வருகின்றனவே அன்றி ஹிந்தி மொழியன்று.

* * *

வலிமையுள்ள, செழிப்பான, ஐக்கியப்பட்ட ஓர் இந்தியாவை நிர்மாணிக்கவே நாம் கிளம்பி யிருக்

கிறோம். ஒவ்வொரு விஷயத்தையும் நாம் அந்த நோக்கத்தைக் கொண்டே பரிசீலனை செய்ய வேண்டும். 'இது இந்தியாவின் ஐக்கியத்தையும், வலிமையையும், செழிப்பையும் அதிகப்படுத்துமா?' என்பதுதான் உரைகல். அப்படி உதவியா யில்லாதது தீமையானது, அதைக் கைவிட்டுவிட வேண்டும்.

*—சென்னை, கண்ணப்பர் திடலில் கடைசி முறையாக ஆற்றிய சொற்பொழிவு, 30-11-1963.*

* * *

# உலகப்
# பொது விஷயங்கள்

# 38

# தேசியமும் சர்வ தேசியமும்

## தேசியம் ஒரு மகாசக்தி

தேசியம் ஒரு சமுதாயத்தில் விரும்பத்தகுந்த ஆக்கமளிக்கும் சக்தியாகும். அதை அடக்கி வைக்க முயன்ருல், அது தீவிரமாக எதிர்த்து நிற்கும், ஆனல் அதிக ஆற்றலுடன் அது இணைந்திருந்தால், அது பிறர்மீது பாயத் தொடங்கிவிடும். தற்காலத் தேசியம் அந்நிய ஏகாதிபத்திய எதிர்ப்பினுலும், இனவேற்றுமை எதிர்ப்பினுலும் விளைந்தது.

*—புதுடில்லியில், ஆசிய மகாநாட்டின் தொடக்க உரை,*
*23-3-1947.*

*    *    *

## நமது தேசியம்

நாம் குறுகிய தேசியத்தை நாடவில்லை. ஒவ்வொரு நாட்டிலும் தேசியத்திற்கு ஓர் இடமுண்டு, அதை வளர்க்க வேண்டியதும் அவசியம்; ஆனல் அது வலுவில் தாக்கக்கூடிய முறையிலும், சர்வதேச உறவு வளர்வதற்கு இடையூருகவும் இருக்கும்படி விட்டு விடக் கூடாது.

—ஷை ஷை

*    *    *

## குறுகிய தேசியம்

கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், அல்லது வேறு எந்த விஷயமாயினும் சரி, குறுகிய தேசிய நோக்கத்துடன் அதை அணுகுவதைப் போல் எனக்கு வெறுப்பானது வேறு எதுவுமில்லை; அந்த நோக்கு, நாம் அறிவின் சிகரத்தை அடைந்து விட்டதாகவும், மேற்கொண்டு நாம் எதையும் கற்க வேண்டியதில்லை என்பதாகவும் எண்ணும்படி செய்கின்றது.

*—புதுடில்லி, பாசனம், மின்சார மத்திய போர்டுக் கூட்டத்தில் சொற்பொழிவு **19-11-1952.***

* * *

## சர்வதேச ஒத்துழைப்பு

ஒவ்வொரு துறையிலும் மேலும் மேலும் சர்வதேச ஒத்துழைப்பு பெருகுவதன் மூலமே உண்மையான சமாதானத்தை அடைய முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது.

*—புதுடில்லியில் உலக சுகாதார ஸ்தாபனத்தில் செய்த சொற்பொழிவு, **4-10-1948.***

* * *

## நன்மையும் தீமையும் கலந்தே யிருக்கும்

நீங்கள் மற்ற நாடுகளுக்குப் போனால், ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மக்கள், தங்களுடைய நாடே முதன்மையான நாடென்றும், நாகரிகத்திற்கு வழிகாட்டி யென்றும், முன்னேற்றத்தில் தலைசிறந்த தென்றும், முதன்மையாகவுள்ள புரட்சிகரமான நாடென்றும், பெரும் கட்டடங்களையுடைய தென்றும், மற்ற நாடுகளில் இல்லாத புதுமையுடைய தென்றும், (உலகிற்குப்) போதிக்க வேண்டிய தத்துவங்களை உடைய

தென்றும் எண்ணுவதை நீங்கள் காணலாம். ஒருவர் தம் நாட்டையும், தம் சொந்த மக்களையும் விரும்புவது இயற்கையே யாகும். அப்படிச் செய்யாதிருப்பது தான் இயற்கைக்கு மாறுபாடாகும். ஒருவருடைய தாயகத்தைப் பற்றிக் கொஞ்சம் பெருமைப்பட்டுக் கொள்வது நல்லதுதான். ஆனால் நாமே உலகில் தலை சிறந்தவர்கள், நிகரற்றவர்கள் என்று எண்ணத் தொடங்குவது தவறு. உண்மையென்ன வென்றால். ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு மக்களினமும், போற்றத் தகுந்த குணங்களைப் பெற்றிருப்பதுதான்; அவைகள் வெற்றிகரமான பல காரியங்களைச் சாதித்துள்ளன. ஆனால், அவைகளுடைய வரலாற்றில் ஆகாத காலங்களும் இருந்திருக்கின்றன. இது, நாடுகளுக்கு மட்டுமின்றி, தனி நபர்களுக்கும் பொருந்துவதாகும். எவரும் நிறைவுடையவரில்லை; எவருக்கும் பலவீனங் களும், குறைபாடுகளும் உண்டு. எவரும் முற்றிலும் தீயோராக இருப்பதுமில்லை. நாம் அனைவரும் நன்மை யும் தீமையும் கலந்த கலப்புக்களாகவே இருக்கிறோம். ஆனால் நாம் நம்மிடத்திலும் பிறரிடத்திலும் உள்ள நன்மையை வளர்க்க முயற்சி செய்வோம்.

*—புதுடில்லியில் பல்கலைக்கழகங்களின் இளைஞர் விழாவில் பேசியது, **23-10-1955.***

* * *

## தேசியமும் சீர்திருத்த எதிர்ப்பும்

எனது நண்பர் கனம் தியாகி, இராஷ்டிரபதி சபைக்குள் வருகையில் காட்டப் பெற்ற மரியாதையை (மாற்றி யமைக்கும் நோக்கத்தில்) ஆட்சேபித்தார். அது அதிகமாக ஆங்கிலப் பாணி யைத் தழுவி யிருந்ததாக அவர் எண்ணினார். சங்குகள், அல்லது வேறு பழங் காலத்து வாத்தியங்

கள் எதையாவது இராஷ்டிரபதி வருகையின் போது ஊத வேண்டும் என்று அவர் விரும்பினுர். அவர் தீவிரமாகவே அப்படி எண்ணினுரா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனுல், இந்தச் சபை கவனிக்க வேண்டிய ஒரு விஷயத்தை அது எழுப்பியுள்ளது. இந்தியாவில் நாம் நம்முடைய சொந்தப் பழக்கங்களையும், மரியாதை முறைகளையும் அநுஷ்டிக்க வேண்டுமென்று ஆசை கொண்டிருக்கிறேம். வெளி நாட்டிலுள்ள எந்தப் பழக்கத்தையோ, மரியாதையையோ நாம் ஏற்றுக் கொள்ளும்பொழுது, அதற்கு ஒரு குறித்த பொருள் உண்டு. நமது அரசியல் சட்டத்திலும், நீதி நிர்வாக முறையிலும் நாம் வெளி நாடுகளை அதிகமாகப் பின் பற்றி யிருக்கிறேம். முக்கியமாகப் பிரிட்டிஷ் பார்லிமென்டின் நடைமுறையைப் பின்பற்றி யிருக்கிறேம். குற்றம் சொல்லிய கனம் அங்கத்தினர் மகாபாரதக் காலத்திய படையைப் போன்ற படைகளை இப்பொழுது நாம் வைத்துக்கொள்ள விரும்புவாரா? ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னுல் உபயோகிக்கப் பெற்ற ஆயுதங்களை அப் படைகள் உபயோகிப்பதை விரும்புவாரா? நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்ருல், இந்தத் தேசத்தில் தேசியத்தின் பெயரால் சீர்திருத்த எதிர்ப்பை ஆதரிக்கும் பான்மை இருந்து வருகின்றது.

—*பார்லிமெண்டுச் சொற்பொழிவு, 3-2-1950.*

* * *

## தேசியமும் நாடுகளின் கூட்டுறவும்

ஆசியாவில் தேசியமே இன்னும் முக்கியமான சக்தியாக விளங்குகிறது. இந்தத் தேசியம் ஆசியாவில் வளர்ந்திருப்பதன் காரணம் வெளிப்படையாகத் தெரிந்ததே. ஆனுல் ஐரோப்பாவிலும்கூட இது வர

வர அதிகமாகத் தெரிகின்றது. ஃபாசிஸம், நாஜிஸம் ஆகியவற்றோடு சேர்ந்த தேசியம் பயங்கரமானது. அதை எதிர்த்து அடக்கிய பிறகு, சற்று நிதானமான ஒரு தேசியம் பல நாடுகளின் போக்கில் தென்படுகின்றது. சில இடங்களில் கூடுதலாகவும், சில இடங்களில் குறைவாகவும் உள்ளது. வேறொரு பக்கத்தில் ஐரோப்பாவில் நாடுகள் வர்த்தகம் முதலியவற்றில் ஒன்றாகச் சேர வேண்டும் என்ற போக்கும் இருந்த போதிலும், தேசியமும் அத்துடன் இருந்து வருகின்றது.

கம்யூனிஸ்ட் நாடுகளிலும் தேசியத்தைக் காண்கிறோம். மார்க்சீயத் தத்துவங்களால் மிகவும் உந்தப்பட்ட சோவியத் யூனியனிலும் வலிமையுள்ள தேசிய அமிசம் இருந்து வருகின்றது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் தேசியம் திகழ்ந்து வருவதைக் காணலாம். சீனாவிலேயும் தேசியத்தை அடிப்படையாகக் கொண்டே கம்யூனிஸம் விளங்குகின்றது. நடைமுறையில் கம்யூனிஸம் நிலவும் இடங்களில் எல்லாம் அது தேசியத்தின் சார்புடன் செல்வதால்தான், அது இயங்க முடிகின்றது. இரண்டையும் பிரித்து விட்டால், கம்யூனிஸம் அந்த அளவுக்குப் பலவீனமாகி விடுகிறது. ஆனால் தொழில் வளர்ச்சி யில்லாத நாடுகளிலும், வறுமைப்பட்ட நாடுகளிலும் அது வளர முடிகின்றது.

இன்னும் அந்நிய ஆதிக்கியத்திலுள்ள நாடுகளில் தேசிய உணர்ச்சி சுதந்தரப் போராட்டமாக உருவாகின்றது. வலிமையுள்ள சுதந்தர நாடுகளில், அது நாடு பிடிக்கும் ஆசையாக வெளிக் கிளம்புகின்றது. சில சமயங்களில் அந்த ஆசையை எதிர்த்துப் போட்டி ஏற்படுகின்றது.

—*ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.*

* * *

# 39

# போரும் பலாத்காரமும்

## இந்திய அரசாங்கத்தின் கொள்கை

நமது அரசாங்கம் அஹிம்சையைக் கைக்கொள்ள உறுதி பூண்டுள்ளதா என்று ஆசாரிய கிருபலானி நேரான ஒரு கேள்வியைக் கேட்டுள்ளார். அதற்குப் பதில் 'இல்லை' என்பது, அரசாங்கம் அப்படி உறுதி கொள்ளவில்லை. தற்போதைய சூழ்நிலைகளில் எந்த அரசாங்கமும் அஹிம்சை விரதத்தைக் கடைப்பிடிக்க முடியும் என்று என் அறிவுக்கு எட்டியவரையில் தோன்றவில்லை. நாம் அஹிம்சைக்குக் கட்டுப்பட்டிருந்தால், நாம் எவ்விதமான படையையோ, கடற்படையையோ, விமானப் படையையோ நிச்சயமாக வைத்திருக்க மாட்டோம்—போலீஸ் படை கூடத் தேவை யில்லாமற் போகும். அது எனக்குத் தெரியாது. ஒருவர் ஓர் இலட்சியத்தைக் கொண்டிருக்கலாம். ஒருவர் நடைமுறையில் ஒரு கொள்கைப்படி, ஒரு திசையில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கலாம். எனினும், தற்போதைய சூழ்நிலைகளில், அந்த இலட்சியத்தைச் செயற்படுத்த முடியாம லிருக்கலாம். அதற்கு நாம் சிறிது காலம் காத்திருக்க வேண்டும். ஜெர்மானியப் படைகளை எதிர்த்துப் போலந்து போர் புரிந்ததைக்கூடச் சத்தியாக்கிரகம் என்று சொல்லலாம் என்று மகாத்மா காந்தி கூறியதை எடுத்துக் காட்டி, ஆசாரிய கிருபலானி ஞாபகப்படுத்தினர். கொள்ளைக் கூட்டத்தாரிடமிருந்து காஷ்மீரைக் காப்பாற்ற இந்தியப் படை காஷ்மீருக்குச் சென்றதைக் காந்திஜி ஆதரித்ததுடன் ஊக்கப்படுத்தவும் முன்

வந்தார். அஹிம்சை விரதம் பூண்ட காந்திஜியைப் போன்ற ஒரு மனிதர் அத்தகைய ஆதரவு அளித்தது ஆச்சரியந்தான். ஆகவே, அரசாங்கம் அமைந் துள்ள முறையில், சில சந்தர்ப்பங்களில், தற்காப்புக் காகப் பலாத்காரத்தைக் கையாளும் உரிமையை அவர் கூட ஏற்றுக்கொண்டிருந்தார். இப்போதுள்ள நிலை மைகளில் இந்திய அரசாங்கம் அந்த உரிமையைக் கைவிட முடியாது என்பது வெளிப்படை. இருந்த போதிலும், நாம், தற்காப்புக்காகவே பலாத்காரத்தை உபயோகிப்போம் என்றும், நாம் யுத்தத்திற்குத் தூண்டுகோலா யிருக்க மாட்டோம் என்றும், அல்லது யுத்தத்தைத் தொடங்க மாட்டோம் என்றும், யுத்த சம்பந்தமாக ஆக்கிரமிப்புத் தந்திரங்கள் எதுவும் செய்ய மாட்டோம் என்றும் தெள்ளத் தெளிவாகக் காட்டி யிருக்கிறோம்.

*—லோகசபைச் சொற்பொழிவு*, **26-7-1955.**

* * *

## முன்னேற்பாடு அவசியம், ஆனால் போரில் குதிக்கக் கூடாது

நான் அதிக நாள் வாழ்ந்து, அதிக அநுபவம் பெற்று வருவதிலிருந்து, அந்த அளவுக்கு ஒரு பிர சினையைத் தீர்ப்பதற்குப் போர் எவ்வளவு பயனற்றது, எவ்வளவு தீமை நிறைந்தது என்பதை நிச்சயமாக உணர்கிறேன். நாம் பாதுகாப்புத் தளவாடங்களுக் காகச் செலவு செய்ய வேண்டியிருப்பதும், ஒரு படை யையும், கடற்படையையும், விமானப் படையையும் வைத்திருக்க வேண்டி யிருப்பதும் நம் துரதிருஷ்டம் என்றே கருதுகிறேன். இன்று உலகம் அமைந்திருக் கும் நிலையில் இப்படி முன்னெச்சரிக்கையா யிருத்தல் அவசியமாகின்றது. பொறுப்புள்ள பதவியிலுள்ள

எவரும் இந்த முன்னேற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டி யிருக்கின்றது. அப்படிச் செய்வதில், போதிய அளவிலும், பயன்படும் முறையிலும் அமைத்துக் கொள்வதும் அவசியமாகின்றது. ஆகவே, நாம் திறமையுள்ள ஒரு படையையும், கடற்படையையும், விமானப் படையையும் வைத்துக்கொள்ள வேண்டி யிருக்கின்றது. ஆனால், 1947 அக்டோபரில் ஒரு நாள் மாலையில் ஏற்பட்டது போன்ற அவசியம் தோன்றினலன்றி, நம் போர் வீரர்களைப் போருக்கு அனுப்புவதை நான் விளையாட்டாகக் கருத முடியாது. மிக்க வருத்தத்தோடு சிந்தனை செய்து, பிறரிடம் கலந்து ஆலோசித்த பிறகே, நான் அந்த நடவடிக்கையை மேற்கொண்டேன்.

*—பார்லிமெண்டுச் சொற்பொழிவு, 7-8-1952.*

* * *

## ஆபத்தான வழி

பலாத்கார வழி ஆபத்தானது, பலாத்காரம் உள்ள இடத்தில் சுதந்தரம் நீடித்து நிலைத்திருப்பது அரிது.

*—அலகாபாத், திரிவேணி சங்கமத்தில் காந்திஜி அஸ்தியைக் கரைக்கும்போது கூறியது, 12-2-1948.*

* * *

## சாந்தியான சூழ்நிலை

உலகிலுள்ள அரசாங்கக் கேந்திர ஸ்தானங்களில் இராணுவ மனப்பான்மை புகுந்திருப்பது அபாயகரமான ஒரு வளர்ச்சி யாகும். இதை நாம் எப்படிச் சமாளிப்பது? இந்தியாவில் இருக்கும் நாம் அதிகப்படியாக எதுவும் செய்துவிட முடியாது என்பதை

நான் ஒப்புக்கொள்கிறேன். நாம் உலகத்தை அப்படியே தூக்கி நம் தோள்களிலே வைத்துக் கொண்டு, நம் மன விருப்பம் போல அதை மாற்றியமைக்க முடியாது. ஆனால் ஒரு சமாதானமான சூழ்நிலையை உண்டாக்கும் முயற்சிக்கு நாம் உதவி செய்ய முடியும். அந்தச் சூழ்நிலை நாம் நம் இலட்சியங்களை அடைய மிக அவசியமாகும்.

*—பார்லிமெண்டுச் சொற்பொழிவு, 18-2-1953.*

*　　　*　　　*

## போர்

ஆயுதம் தாங்கிய படை வலிமை உலகப் பிரசினைகளைத் தீர்த்து வைப்பதற்குப் போதியதன்று என்பது இப்போது உணரப்படுவதாகத் தெரிகின்றது.

*—பார்லிமெண்டுச் சொற்பொழி, 12-2-1952.*

*　　　*　　　*

## துவேஷமும் பலாத்காரமும்

இனி நாம் என்ன செய்ய வேண்டும்? எதை நாம் இலட்சியமாகக் கொள்ள வேண்டும்? எந்தப் பாதை வழியாக நாம் செல்ல வேண்டும்? ஒரு நேரத்திலே தோன்றும் உணர்ச்சியிலும், விருப்பு வெறுப்பிலும் நாம் நம்மை இழந்துவிடக் கூடாது. நாம் உயர்ந்த குறிக்கோளைக் கொள்ள வேண்டுமானால், நாம் உயர்ந்த தத்துவங்களைப் பின்பற்ற வேண்டும். புத்தர் காலத்திலிருந்து, நம் காலத்தில் காந்திஜி நாம் சரியாகச் செயல்புரிய வழி காட்டியதுவரை அத் தத்துவங்களே இந்தியச் சிந்தனையின் அடிப்படையாக விளங்கி வந்துள்ளன. தெளிவான பார்வை, ஆன்மிகச் சகிப்

புத் தன்மை, கருணை, துரதிருஷ்டம் அல்லது நல்ல அதிருஷ்டங்களில் கலங்காத நிதானமான மனநிலை ஆகியவற்றிலிருந்தே பெருமை தோன்றுகின்றது. துவேஷம், பலாத்காரம் அல்லது உள்நாட்டில் பிணக்கு ஆகியவற்றின் மூலம் நாம் உண்மையான முன்னேற்றம் அடைவதில்லை. பலாத்காரத் தத்துவம் இனிப் பயனில்லை என்பது இன்றைய உலகத்திற்குப் பொருந்துவது போல, நமது நாட்டிற்கும் பொருந்தும். சமாதான நிலையில் ஒத்துழைப்பு, ஒருவருக்கொருவர் சகிப்புத் தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே நம் முன்னேற்றம் அமைய வேண்டும்.

—*புதுடில்லி அ. இ. ரேடியோவில் பேசியது, 31-12-1952.*

* * *

## போரின் விளைநிலம் மனிதனின் மனம்

போரைப் பற்றி ஆராய்ந்தால், இறுதியாக அதன் வேர்கள் மனிதர்களின் மனங்களிலே ஊன்றியிருப்பதைக் காணலாம். மக்களின் இதயங்களிலும் மனங்களிலும் இல்லாமல் போர் எப்படித் தோன்ற முடியும்? 2,500 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய மகான் ஒருவர் எந்த யுத்தங்களில் ஒவ்வொருவரும் வெற்றி பெறுகின்றனரோ, எவைகளில் எவரும் தோற்பதில்லையோ, அந்த யுத்தங்களே நடக்கலாம் என்று சொல்லி யிருக்கிறார். ஒவ்வொருவரும் வெற்றியாளராக இருக்க வேண்டுமென்றும், எல்லோரும் நன்மையடைய வேண்டு மென்றும் அவர் விரும்பினார். ஆயுதம் தாங்கிய போரினால் இது ஏற்பட முடியாது.

—*புதுடில்லியில் திரு. குருஷ்சேவின் வரவேற்பில் பேசியது, 12-2-1960.*

* * *

## சமாதானம்

தேசங்கள் சுதந்தரமா யிருந்தால்தான் சமாதானம் வரும். அத்துடன் எல்லா இடங்களிலும் மனிதர்கள் சுதந்தரம் பெற்றிருக்க வேண்டும், பாதுகாப்புப் பெற்றிருக்க வேண்டும், வேலை முதலிய வாய்ப்புக்களும் பெற்றிருக்க வேண்டும். ஆகவே சமாதானத்தையும் சுதந்தரத்தையும், அவைகளின் அசியல் பொருளாதார அமிசங்களைக் கொண்டு கவனிக்க வேண்டும். ஆசியாவிலுள்ள நாடுகள் மிகவும் பின்னடைந்துள்ளன என்பதையும், வாழ்க்கைத் தரங்கள் மிகவும் தாழ்ந்துள்ளன என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இல்லாவிடில் நெருக்கடிகளும் அபாயங்களும் நம்மை நசுக்கி விடும்......

*—புதுடில்லியில் ஆசிய மகாநாட்டின் தொடக்க உரை,*
*23-3-1947.*

* * *

## போர்களால் அமைதி உண்டாகாது

துவேஷத்திலிருந்தும் பலாத்காரத்திலிருந்தும் நாம் அமைதியை நிலைநாட்ட முடியாது என்பதே சென்ற யுத்தங்கள் கற்பிக்கும் பாடம். சரித்திரம்—நீண்ட காலச் சரித்திரம்—கற்பிக்கும் பாடம், முக்கியமாக மனித சமூகத்தையே பாழாக்கிய சென்ற இரண்டு மகா யுத்தங்கள் கற்பிக்கும் பாடம், துவேஷத்திலிருந்தும் பலாத்காரத்திலிருந்தும் துவேஷமும் பலாத்காரமுமே விளையும் என்பது. துவேஷமும் பலாத்காரமும் உள்ள ஒரு சக்கர வளையத்தில் நாம் சுற்றிக் கொண்டே வருகிறோம். மிகச் சிறந்த அறிவாளர் கூட நம்மை அதிலிருந்து மீட்க முடியாது. நாம் வேறு வழியில் திரும்ப வேண்டும். வேறு முறைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த மகாசபை போர்களைத்

தவிர்ப்பதற்காகவும், தடுப்பதற்காகவும் ஏற்பட்டது. நாம் மேலும் வளையத்திலேயே சுற்றிக் கொண்டும், மேற்கொண்டு போர்களைத் தடுக்காமலும் இருந்தால், உலகம் முழுதும் எல்லையற்ற அழிவு ஏற்படுவதுடன், எந்தத் தனி வல்லரசோ, வல்லரசுக் கூட்டமோ தன் நோக்கத்தை அடையவும் முடியாது.

—*ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் ஆற்றிய சொற்பொழிவு, 3-11-1948*

*　　*　　*

## இணக்கமான ஒத்துழைப்பே அமைதிக்கு வழி

நமது உலகம் முன்னேற வேண்டுமானால்—அது அழிந்து விடாமல் பிழைத்திருக்க வேண்டுமானால்—சமாதானமே முக்கியமாகத் தேவை. நமது கருத்துப்படி சமாதானம் என்பது யுத்தம் செய்யாமல் விலகியிருத்தல் என்பது மட்டுமன்று, ஆக்க ரீதியாக சர்வதேசப் பிரசினைகளையும் உறவுகளையும் அணுகித் தீவிர நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ள வேண்டும்; முதலில் நேரடியான பேச்சு வார்த்தைகள் மூலம் இப்பொழுதுள்ள நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பின் நாடுகளுக்குள் நெருங்கிய ஒத்துழைப்பை வளரச் செய்ய வேண்டும். இந்த ஒத்துழைப்பு கலாசாரத் தொடர்புகளாலும், விஞ்ஞானத் தொடர்புகளாலும், வாணிப வர்த்தகப் பெருக்கத்தினாலும், கருத்துக்களின் பரிமாற்றத்தினாலும், அநுபவத்தினாலும், விவரமான தகவல்களைத் தெரிந்துகொள்வதாலும் அமையக் கூடியது. சர்வதேச ஒத்துழைப்பில், நம் மனங்களையும் இதயங்களையும் மறைத்து நிற்கும் தடைகளையும் குறுக்குச் சுவர்களையும் நாம் நீக்க வேண்டும். வெவ்வேறு அரசியல், சமூக, பொருளாதார அமைப்புக்களையுடைய நாடுகள் இந்த

முறையில் ஏன் ஒத்துழைக்க முடியாது என்பதற்குக் காரணமேயில்லை. ஆனால் அவை ஒன்றின் விவகாரத்தில் மற்றது தலையிடக் கூடாது, ஒன்றின்மேல் ஒன்று ஆதிக்கியம் செலுத்தவும் கூடாது.

—மாஸ்கோ டைனமோ ஸ்டேடியத்தில் வெளியிட்ட அறிக்கை, 22-6-1955.

* * *

## உலக ஒற்றுமை

பொறி இயல் அறிவு ஒரு புது யுகத்தை உண்டாக்கியிருக்கிறது. இதற்கு அமெரிக்க ஐக்கிய நாடு தலைமை வகிக்கின்றது. உலகம் முழுதுமே நமது பக்கத்து வீடு போல் ஆகிவிட்டது. கண்டங்களாகவும் நாடுகளாகவும் உள்ள பழைய பிரிவுகள் வரவரப் பொருளற்றுப் போகின்றன. சமாதானமும் சுதந்தரமும் உலகம் முழுவதற்குமே பொதுவான தேவைகளாகின்றன. உலகம், ஒரு பகுதி சுதந்தரமாகவும், மறு பகுதி அடிமையாகவும் நெடுங்காலம் இருக்க முடியாது. இந்த அணு யுகத்தில் மனித சமூகம் தப்பி வாழ வேண்டுமானால், சமாதானம் இன்றியமையாதது.

—வாஷிங்டனில் டெலிவிஷன்-ரேடியோ பேச்சு, 18-12-1956.

* * *

நாங்கள் பிறருக்கு உபதேசம் செய்ய முன்வரவில்லை. ஆயினும் இராணுவ ஒப்பந்தங்களாலும், சேர்க்கைகளாலும், ஆயுதங்களைக் குவித்து வைத்துக் கொள்வதாலும் உலக சமாதானமும் பாதுகாப்பும் ஏற்படமாட்டா என்று நாங்கள் உறுதியாக உணர்ந்திருக்கிறோம். இராணுவ முறையில் மனத்தைப் பழக்கிக் கொள்ளாததால், படை வலிமை பற்றிய பேச்சுக்

களும், உலக விஷயங்களை இராணுவ முறையில் பரிசீலிப்பதும் எங்களுக்குப் பிடிக்கவில்லை. பனிப் போரைப் பற்றியும், பகை முகாம்களைப் பற்றியும், கூட்டுக்களைப் பற்றியும், இராணுவச் சேர்க்கைகளைப் பற்றியும் பேசப்படுகின்றது. எல்லாம் சமாதானத்தின் பெயராலேயே நடைபெறுகின்றன. நாங்கள் சமாதானமும் நல்லெண்ணமும் ஏற்பட உழைப்பவர்களுடைய முகாமிலேயே இருக்க விரும்புகிறோம். அந்த முகாமில் எத்தனை நாடுகள் சேர முடியுமோ அத்தனையும் சேர வேண்டும். அவைகள் எந்த நாட்டிற்கும் எதிராக நிற்கக்கூடாது. நல்லெண்ணம், ஒத்துழைப்பு என்ற அடிப்படைமீதே நாங்கள் கூட்டுச் சேர விரும்புகிறோம். சமாதானத்தை நாடுவதென்றால், அதை அமைதியான வழிகளிலேயே நாடவேண்டும். சாந்தியும் நல்லெண்ணமும் உள்ள பேச்சின் மூலமே அதை நாடவேண்டும்.

—திரு. புல்கானினுக்கும், திரு. குருஷ்சேவுக்கும் அளித்த விருந்தில் பேசிய பேச்சு, *20-11-1955.*

* * *

## இராணுவக் கூட்டுச் சேர்தல்

முன்னால் இராணுவக் கூட்டுச் சேர்தலுக்கும், பனிப் போருக்கும் என்ன காரணம் இருந்த போதிலும், இன்று அவை போரைப் பற்றிய அச்சத்திற்கும் அமைதிக் குறைவுக்கும் காரணமா யிருக்கின்றன. நாடுகள் இயற்கையாக வளர்ச்சி பெறுவதை அவை தடுப்பதுடன் உலகச் சூழ்நிலையையும் பாழாக்குகின்றன. பனிப் போர் உள்ளவரை, சகிப்புத் தன்மையும் இராது. தொழில் வளர்ச்சி யில்லாத நாடுகளின் வளர்ச்சிக்கு உதவி செய்து, அவைகளின் வாழ்க்கைத் தரம் உயரும்படி செய்வதை விட்டு, இராணுவக்

காரணங்களை முக்கியமாக மதித்து, மக்களே வெறுக்கும் பிற்போக்கான ஆட்சி முறைகளைத் தூக்கி நிறுத்தி மேலும் மேலும் அபாயம் விளையும்படி செய்யப்படுகின்றது.

—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.

* * *

# 40

# ஐக்கிய நாடுகளின் சபை

---

## உலகப் பொது மன்றம்

**நா**ம் ஐக்கிய நாடுகளின் சபையில் சேர்ந்துள்ளோம். இந்தச் சேர்க்கையால் நம் சுதந்தரம் பறிக்கப்படவில்லை. ஆனால் நம் சுதந்தரம் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப் பெறுகின்றது. சபையில் சேர்ந்துள்ள ஒவ்வொரு நாட்டின் சுதந்தரமும் எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தப் பெறுகின்றதோ, அந்த அளவுக்கே நம் சுதந்தரமும் கட்டுப்பாடுடையதாகும். அத்தகைய (உலக) ஸ்தாபனம் ஒன்றில் சேருவதனால் நம் அதிகாரத்திற்குரிய எல்லை கொஞ்சம் கட்டுப்படுத்தப் பெறுவது இயற்கையேயாகும். (பிரிட்டிஷ்) காமன்வெல்தில் சேர்ந்திருப்பதால் ஏற்படும் கட்டுப்பாட்டைவிட ஐக்கிய நாடுகளின் சபையில் நாம் சேர்ந்திருப்பதில் கட்டுப்பாடு மிக அதிகம் தான். காமன்வெல்த் உறவு பற்றி எந்த விதமான எழுத்தோ, சட்டமோ எதுவுமில்லை. நாம் இருக்க விரும்புகிற வரையில் அதிலே இருக்கலாம்.

மீண்டும் ஐக்கிய நாடுகளின் சபையைக் கவனிப்போம். உலகப் பொதுவில் அப்படி ஒரு ஸ்தாபனம்

மிகவும் அவசியம் என்று நாம் உணர்ந்ததால், நாம் அதில் சேர்ந்து கொண்டோம். (பழைய) சர்வதேச சங்கம் பயனற்றுப் போயிற்று. ஐ. நா. சபை அதைப் போன்ற ஒரு முயற்சியா யிருப்பினும், இதற்கு அதிக மான ஆதரவுகளும், நற்குறிகளும் ஏற்பட்டதால், நாம் அதில் சேர்ந்து கொண்டோம். ஐக்கிய நாடு களின் சபைக்குரிய பிரகடனம் மிக நேர்த்தியான உன்னதமான உரிமைப் பத்திரம் என்று நான் கருது கிறேன்.

—பார்லிமெண்டுச் சொற்பொழிவு, *12-6-1952.*

* * *

## ஐ. நா. சபையும் 'காலனி' ஆதிக்கியமும்

குறைகள் இருந்த போதிலும், ஐக்கிய நாடுகளின் சபை ஒரு முக்கியமான வேலையைச் செய்து வருகின் றது. இன்றைக்கு அது இல்லை யென்றால், அதைப் போன்ற ஒன்றை அமைக்க எல்லா நாடுகளும் சேர்ந்து முன்வரக் கூடும். நான் ஐக்கிய நாடுகளின் சபைக்குத் தலைசிறந்த முக்கியத்துவம் உள்ளதாகக் கருதுகிறேன். ஆனால் அது ஆரம்பத்தில் தான் கொண்டிருந்த அடிப் படைக் கொள்கைகளிலிருந்து விலகி, படிப்படியாக நாடுகளை அடிமைப்படுத்தி வைக்கும் 'காலனி' முறையை மறைமுகமாக ஆதரிக்கும் வகையில் இறங்கியுள்ளது. இது அபாயகரமான மாறுதலாகும். அதைச் சமாதானத்திற்குரிய பெரிய சபையாக மதிப் பதை விட்டு, அதில் உறுப்புக் கொண்ட சில நாடுகள் அந்த ஸ்தாபனத்தின் மூலமே போர் தொடுக்கலாம் என்று நாளடைவில் கருத முன் வந்துள்ளன.

—ஷை. ஷை

* * *

ஐக்கிய நாடுகளின் சபை, அதன் குறைகளும் பல வீனங்களும் ஒருபுறம் இருந்த போதிலும், நல்லதொரு ஸ்தாபனமாகும். ஒவ்வொரு வகையிலும் அதை ஊக்கப்படுத்தி, ஆதரித்து வரவேண்டியது அவசியம். அதுவே ஒரு வகையான உலக அரசாங்கமாகவோ, உலக அமைப்பாகவோ வளர்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

*—அரசியல் நிர்ணய சபைச் சொற்பொழிவு, 8-3-1948.*

*　　*　　*

## பலாத்கார நடவடிக்கைகள் பயனற்றவை

இந்தச் சபை நம் பிரசினைகளைத் தீர்த்து வைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. எதிர்காலத்தைப் பற்றியும் எனக்கு அச்சமில்லை. என் மனத்தில் பயமே யில்லை. இராணுவ முறையில் பார்த்தால், இந்தியா பிரமாதமான வலிமையுள்ளதன்று என்ற நிலையிலும், நான் பயமில்லாமல் இருக்கிறேன். பெரிய வல்லரசு களின் வலிமையின் அளவையும், அவைகளின் படை களையும், போர்க் கப்பல்களையும், அவைகளின் அணுக் குண்டுகளையும் கண்டு நான் அஞ்சவில்லை. இந்தப் பாடம் எனக்கு என் குருநாதர் கற்றுக் கொடுத்தது... எண்ணிக்கையில் இந்திய மக்கள் முப்பத்து மூன்று கோடிப் பேர்கள் இருக்கின்றனர். இதை நினைவில் வைத்துக்கொள்வது நலம். நாங்கள் சுதந்தரம் பெற்று ஓராண்டு ஆகின்றது. இந்த ஓராண்டிலும் கஷ்டங் கள் நிறைந்திருந்தன. அந்தக் கஷ்டங்களில் பல வற்றை நாங்கள் கடந்து விட்டோம். மற்றவைகளை யும் நாங்கள் வென்று விடுவோம். நாங்கள் மிகுந்த வேகத்தில் முன்னேறத் தீர்மானித்திருக்கிறோம். (விரைவிலே) நிர்மாணிக்க வேண்டியவைகளை நிறுவி, கட்ட வேண்டியவைகளைக் கட்டி, உலகின் சமாதானத்

திற்காகவும், நல்வாழ்விற்காகவும் நாங்கள் வல்லமை யோடு இருக்க விரும்புகிறோம். (எங்கள் தேசத்தின் மீது ஏற்படும்) எந்த ஆக்கிரமிப்பையும், அது எங்கி ருந்து வந்த போதிலும், எங்களுக்கு வசதியான எல்லா வழிகளிலும், எதிர்த்து நிற்கத் தயாரா யிருக்கிறோம்.

ஆயினும் உலகப் பிரசினைகளோ, இந்தியாவின் பிரசினைகளோ ஆக்கிரமிப்பினாலோ, போரினாலோ, பலாத்காரத்தினாலோ தீரக்கூடியவை அல்ல......

—*பாரிஸில் கூடிய ஐ. நா. பொதுச் சபையில் நிகழ்த்திய சொற்பொழிவு, 3-11-1948.*

* * *

## ஐக்கிய நாடுகளின் சபை

சமாதானத்திற்காக நிறுவப் பெற்ற இந்தப் பெரிய ஸ்தாபனம், இன்று தானே போரை ஆதரிக்க முற்பட்டிருக்கிறது. நான் யாரையும் குறை சொல்ல வில்லை. ஆனால் பிரத்தியட்சமாக உள்ள நிலையை ஆராய்ந்து சொல்லவே முயற்சிக்கிறேன். சமாதானத் திற்காக ஒரு சர்வ தேச ஸ்தாபனத்தை வைத்துக் கொள்ள முடியாத நிலைக்கு உலகம் வளர்ச்சி பெறாமல் போய்விட்டதா, அல்லது தகுதியற்றுப் போய்விட் டதா? மக்கள் ஐக்கியப்பட்ட உலகத்தைப் பற்றிப் பேசுகின்றனர்; தீர்க்கதரிசனமும், அறிவும், ஆர்வமு முள்ள பல மக்கள் உலக சமஷ்டி இலட்சியத்தைப் பற்றிச் சிபாரிசு செய்கின்றனர். ஆனால், நாம் அதை நிறைவேற்ற முடியாமல், திரும்பத் திரும்பத் தோல்வி யடைகின்றோம். அரசியல், பொருளாதாரம், மற்றும் இதர கொள்கைகளில் முற்றிலும் வேறுபட்டிருக்கும் நாடுகள் ஒத்துழைக்க முடியுமா, அல்லது அவை பிரிந்தே நிற்க வேண்டுமா? பல நூற்றாண்டுகளுக்கு முன்னால், அவை ஒத்துழைத்தாலும் சரி, இல்லா விட்

டாலும் சரி என்ற நிலைமையில் ஒரு காலம் இருந்தது. ஏனெனில், அப்பொழுது ஒன்றுக்கொன்று இயற்கையாகத் தொடர்பு கொண்டிருக்கவில்லை. இன்றோ, தொடர்பு இடைவிடாமல் இருந்து கொண்டே வருகின்றது. அந்தத் தொடர்பு நட்பு முறையிலும் இருக்கலாம், அல்லது பகைமையாகவும் இருக்கலாம். முரண்பட்ட நோக்கங்களைக் கொண்ட நாடுகளை முக்கியமாகக் கொண்ட ஒரு சர்வ தேச ஸ்தாபனம் நிலைத்திருக்க முடியுமா என்று நான் மீண்டும் மீண்டும் ஆச்சரியப்படுவதுண்டு. முடியும் என்று நான் நிச்சயமாக உணர்கிறேன். மேலும் அது ஏன் திறமையாக நடக்க முடியாது என்பதற்குக் காரணமும் தெரியவில்லை. ஐக்கிய நாடுகளின் சபை தொடங்கிய காலத்தில், அமெரிக்க ஐக்கிய நாடுகளும், ஸோவியத் யூனியனும் ஒத்துழைத்து, ஒன்ருகச் சேர்ந்திருந்தன. பின்புதான் பிளவுண்டாயிற்று. நான் சம்பந்தப்பட்டவரை, அவை ஒரே ஸ்தாபனத்தில் சேர்ந்து ஏன் செயற்பட முடியாது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை: அவை ஒன்றின் விஷயத்தில் மற்றது தலையிடக் கூடாது, ஒவ்வொன்றும் தனக்கெனத் திட்டம் வகுத்துக்கொண்டு வேலை செய்யலாம் என்ற முறையில் செயற்பட்டு வரலாம்.

—பார்லிமெண்டுச் சொற்பொழிவு, *18-2-1953.*

*　　　*　　　*

## இந்தியா ஐ. நா. விலிருந்து விலகக்கூடாது

கனம் அங்கத்தினர்கள் சிலர், மனத் தளர்ச்சியில், நாம் ஐக்கிய நாடுகளின் சபையிலிருந்து விலகிவிட வேண்டுமென்று யோசனை கூறியுள்ளனர். நான் மிக்க மரியாதையுடன் தெரிவித்துக்கொள்வது என்னவென்ருல், அது அநுபவக் குறைவின் விளைவு என்பதாகும்.

ஒரு பிரசினையிலிருந்து இப்படி ஒருவர் ஓடிவிட முடியாது. ஐக்கிய நாடுகளின் சபை பல குறைகளையுடையது. எனினும் அது ஒரு பெரிய உலக ஸ்தாபனம். எதிர்காலம் பற்றிய நம்பிக்கைக்கும், சமாதானத்திற்கும் உரிய விதைகள் அதில் அமைந்திருக்கின்றன. ஒரு தேசம் தான் விரும்புவது போல அது முற்றிலும் நடந்து கொள்ளாவிட்டால், அந்த அமைப்பையே அழித்துவிட முயல்வது, வேண்டுமென்றே தவறு செய்வதாகும். எந்த நாடாவது அப்படிச் செய்தால், அந்த ஸ்தாபனத்தைவிட அந்த நாடே அதிகக் கஷ்டமடையும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. வெளித் தொடர்புகளை யெல்லாம் அறுத்துக்கொண்டு, நமது குறுகிய எல்லைகளுக்குள் அடங்கி, நமக்குச் சொந்தமான வாழ்க்கையை நடத்திக்கொண்டு, உலகிலிருந்து நாம் ஒதுங்கியிருக்க முடியாது. இந்தியாவிலுள்ள நம்மிற் பெரும்பாலோர் நம் மனங்களிலும், உண்ணல், பருகுதல், திருமணம் போன்ற நம் சமூகப் பழக்கங்களிலும் இயற்கையாகவே ஒதுங்கி வாழ்பவர்களாயிருக்கிறோம். நாம் சாதிகளாகப் பிரிந்து தனித்து வாழ்கிறோம், இந்தப் பழக்கம் இந்த உலகில் வேறெங்கும் இல்லாத புதுமையாகவே இருக்கிறது. தனித் தனி அறைகளில் நாம் பிரிந்து வசிக்கிறோம், ஆதலால்தான், ஒரு வேளை, நாம் ஒரு நாடாகவும் தனித்திருக்க வேண்டும் என்று எளிதாகச் சிந்தனை செய்யத் தொடங்கிவிடுகிறோம். ஆனால் முற்காலத்தில் இப்படிப் பிரிந்திருந்ததால், நாம் மிகவும் பலவீனம் அடைந்தோம், விஞ்ஞானத்திலும் மற்ற அபிவிருத்திகளிலும் உலகம் முன்னேறிக்கொண்டிருந்த காலத்தில், நாம் இருளில் உழன்று கொண்டிருந்தோம். நாம் தனித்திருக்க முடியாது. உண்மையில் எந்த நாடுமே தனித்திருக்க இயலாது. ஆதலால், ஐக்கிய நாடுகளின் சபையை விட்டு வெளியே வருதல் அல்லது இந்த

(உலக)ப் பிரசினைகளை யெல்லாம் விட்டு விலகி யிருத்தல் பற்றிப் பேசுதல் இப்போதுள்ள பிரத்தியட்ச நிலையைச் சரியாக உணராமையாகும்.

—பார்லிமெண்டுச் சொற்பொழிவு, 17-9-1953.

* * *

# 41

# ஏகாதிபத்தியம்

---

## ஏகாதிபத்திய ஆசை ஒழியவேண்டும்

ஏகாதிபத்தியம் அல்லது குடியேற்ற நாடுகளை ஆட்சி செய்தல், எந்த உருவத்தி லிருந்தாலும், உலகத்தில் இன்று பொருந்தாததாகப் போய்விட்டது. அதுவும் தகராறுக்கு ஒரு விளைநிலமாகும். அது இன்னும் பல இடங்களில் இருந்து வருகின்றது. அதன் மோகமும் பலர் மனத்தில் காணப்படுகின்றது. ஆனால் அது செல்லாக் காசு, எங்கும் அது தன்னைக் காத்துக் கொள்ளவே ஆயத்தமா யிருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இன வேற்றுமையையும் ஏகாதிபத்தியத்தையும் முடிவு கட்ட உலகப் பொதுவான ஒரு கொள்கையை வகுக்க வேண்டியது அவசியம். நாடுகள் யாவும் தங்கள் விதிகளைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும்படி விடப்பட வேண்டும். இதனால் சில நாடுகளில் குழப்பங்கள் நேரலாம். ஆயினும் அவை குறிப்பிட்ட பிரதேசங்களிலேயே அடங்கி நிற்கும். சிறிது காலத்திற்குப் பிறகு சரியாகப் போய்விடும். ஒரு நாடு தன் அபிப்பிராயத்தை மற்றொரு நாட்டின் மீது திணிக்க முயல்வதுதான் இன்று தவறான செய

லாகவும்; பயங்கர விளைவுகளுக்குக் காரணமாகவும் உளது.

—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.

* * *

# 42

# இன வேற்றுமை

---

## நிறத்திமிர்

இன வேற்றுமைக் கொள்கை இன்னும் பல நாடுகளில் பல அளவுகளில் இருந்து வந்த போதிலும், பொதுவாக அதை எல்லோரும் கண்டிக்கின்றனர். தென் ஆப்பிரிக யூனியனில் மட்டுமே அது அரசாங்கக் கொள்கையாக இருந்து வருகின்றது. இது தகராறுக்கு விளைநிலம் என்பது தெளிவு. ஒரு மக்கள் இனத்தின் மீது மற்றோர் இனம் ஆதிக்கியம் செலுத்துவதில் இது மிகவும் கழிவான முறை. இதனால் வெறுப்பும் பலமான எதிர்ப்பும் ஏற்பட்டே தீரும். இந்தப் பூசலைப் பலாத்காரத்தின் மூலமே தீர்க்கும்படி விட்டுவிட்டால், மேலும் பல விபரீத விளைவுகள் உண்டாகும். உலக அபிப்பிராயம் இன வேற்றுமைக் கொள்கைக்கு எதிராகப் பலமான முறையில் ஏற்பட்டால், எந்த நாடும் சமூகமும் அதை ஆதரிக்கவோ, கையாளவோ முடியாமற் போகலாம்.

—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, 1959.

* * *

# 43

# அச்சம்

## அச்சத்திலிருந்து விடுதலை

அச்சமே முதன்மையான தீமையென்று நான் கருதுகிறேன். ஏனெனில் அச்சத்திலிருந்து பூசலும், பலாத்காரமும் தோன்றுகின்றன. பலாத்காரம் பயத்தின் விளைவு, அதுபோலவேதான் பொய்யும். நம்முடைய பழைய நூல்களில் தானங்களிலே சிறந்தது 'அபயதானம்'—பயமின்மையாகிய தானம் — என்று சொல்லப்பெற்றுள்ளது. அச்சத்திலிருந்து விடுபட்ட ஒருவன், எல்லா விஷயங்களையும் தெளிவான காட்சியுடன் பார்த்து, தன் மனத்திலும் செயல்களிலும் ஒருவகை நேர்மையைக் கடைப்பிடிக்க முடியும். இன்று உலகம் முழுவதையும் பயம் சூழ்ந்து நிற்கின்றது. தலைமையான நாடுகளும், முதல்தரமான வல்லமையுள்ள நாடுகளும்கூட அதனால் பாதிக்கப் பெற்றுள்ளன. செல்வமும் வல்லமையும் அந்த அச்சத்தைக் குறைப்பதற்குப் பதிலாகக் கூட்டியிருக்கின்றன.

—ஆஜாத் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, **1959.**

* * *

## அச்சமின்மை

அச்சமின்மை கருணைக்கும் சகிப்புத் தன்மைக்கும் கொண்டு போய்ச் சேர்க்கும். புத்தரைப் பற்றி நாம் எண்ணும் பொழுது, அவருடைய கருணையே நம்மைப் பிரமிக்கச் செய்கின்றது. அசோகரைப்பற்றி நாம் எண்ணும் பொழுது, அவருடைய வியக்கத்தக்க

சகிப்புத் தன்மை நினைவுக்கு வருகின்றது, அது நம்மை நம் குறுகிய கோட்பாடுகளிலிருந்து மேலே தூக்கிவிடுகின்றது.

—ஷி ஷி

* * *

# 44

# ஆசியா

## அணுயுகத்தில் ஆசியாவின் கடமை

உலக வரலாற்றில் நெருக்கடியான இந்தக் காலத்தில், ஆசியா மிக முக்கியமாகப் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். ஆசிய நாடுகள் (முன் போல்) இனிமேல் மற்றவர்கள் உருட்டும் காய்களாக இருக்க முடியாது; உலக விவகாரங்களில் அவை களுக்குச் சொந்தமான தனிக் கொள்கைகள் இருந்து வரும். ஐரோப்பாவும் அமெரிக்காவும் மனித சமூகத் தின் முன்னேற்றத்திற்கு மிக அதிகமாக உதவி செய் துள்ளன, அதற்காக அவைகளுக்கு நாம் கௌரவமும் புகழும் அளிக்கவேண்டியது அவசியம். அவைகள் கற்பிக்கக் கூடிய விஷயங்களை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் மேலை நாடுகள் நம்மைப் பல போர் களிலும் பூசல்களிலும் ஈடுபடும்படியும் செய்தன. பயங் கரமான ஒரு மகா யுத்தம் முடிந்துள்ள இந்த வேளை யிலேகூட, மறு நாளே, இந்த அணு யுகத்தில், மேற் கொண்டும் யுத்தங்களைப் பற்றிய பேச்சு எழுந்துள் ளது. இந்த அணுயுகத்தில் ஆசியா அமைதியைப் பாதுகாக்கப் பயனுள்ள முறையில் வேலை செய்ய வேண்டும். உண்மையில் ஆசியா தன் வேலையைச் செய்யாவிட்டால், சமாதானம் நிலவ முடியாது, இப்

பொழுது பல நாடுகளில் பூசல் இருந்து வருகின்றது. ஆசியாவிலுள்ள நாம் அனைவரும் நம்முடைய கஷ்டங்களைச் சமாளித்துக் கொள்ள வேண்டியிருக்கின்றது. எனினும், ஆசியாவின் உணர்ச்சியும் நோக்கமும் அமைதியை நாடியே நிற்கின்றன. உலக விவகாரங்களில் ஆசியா பங்கு கொள்வதால் உலக சமாதானத்திற்குப் பெரிய உதவியாகும்,

*—புதுடில்லி ஆசிய மகாநாட்டில் தொடக்க உரை,*
***23-3-1947.***

* * *

## ஒரே உலகம்

மானிட சமூகத்தின் வரலாற்றில் ஒரே உலகம் என்ற இலட்சியம் ஏற்படுவதற்கும், ஒரு வகையான உலக சமஷ்டி அமைவதற்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது. நாம் அந்த இலட்சியத்திற்காகவே வேலை செய்ய வேண்டும். அந்தப் பெரிய ஐக்கியத்திற்கு இடையூறாக அமையக்கூடிய வேறு ஒரு சிறு குழுவில் ஈடுபடக் கூடாது. ஆதலால், இப்பொழுது மிகுந்த வேதனைகளுடன் தன் குழந்தைப் பருவத்தைத் தாண்டி மேல் வந்து கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகளின் அமைப்பை நாம் ஆதரிக்கிறோம். ஒரே உலகை அமைப்பதற்காக, ஆசியாவிலுள்ள நாடுகள் அந்த உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்காகத் தாங்கள் ஒற்றுமையுடன் ஒத்துழைக்கும்படி நாம் செய்ய வேண்டும்.

—ஷை. ஷை.

* * *

## ஐரோப்பாவின் பரம்பரைப் பகைமை

ஆசியாவிலுள்ள நாம் ஐரோப்பிய மக்களைக் காட்டிலும் நன்னெறியிலோ, ஒழுக்கத்திலோ எந்த வகை

யிலும் மேலென்று நான் கூறவில்லை. சில விஷயங்களில் நாம் தாழ்ந்த படியில் இருப்பதாகக்கூட எனக்குத் தோன்றுகிறது. ஆனால் ஐரோப்பாவில் பரம்பரையாகப் பகைமை இருந்து வருகின்றது. தற்காலத்திலேனும், ஆசியாவில் அத்தகைய பரம்பரை விரோதமில்லை. அங்குமிங்குமாக ஆசியாவின் நாடுகள் தங்கள் அண்டை அயலார்களுடன் பூசல்களில் ஈடுபட்டிருக்கலாம், ஆனால் ஐரோப்பிய நாடுகளைப் போல் பரம்பரையான பகைமை இங்கில்லை. இது ஆசியாவுக்குப் பெரிய நன்மை. ஆசிய நாடுகளும், இந்தியாவும் ஐரோப்பியச் சண்டைகளில் இழுக்கப்படுவது பெருந் தவறாகும். உலகம் படிப்படியாக அமைதியில் ஒன்று சேர்ந்து விளங்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம், ஆனால் அது போரில் ஒன்று சேர்ந்திருக்கவும் கூடும். பெரிய கொந்தளிப்பு ஏற்படும் பொழுது, எந்தத் தேசமாவது விலகியிருக்க முடியுமா என்பதை எந்த மனிதனும் சொல்ல முடியாது. ஆயினும் அத்தகைய கொந்தளிப்பு ஏற்படாமலிருக்கவும், அதில் சிக்கிக் கொள்ளாமலிருக்கவும் தக்கபடி ஒருவர் கொள்கையை வகுத்துக் கொள்ளலாம்.

—*அரசியல் நிர்ணய சபைச் சொற்பொழிவு,* ***8-3-1949.***

* * *

## ஆசியாவின் மறுமலர்ச்சி

உலக அரங்கிலே முதன்மையான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாறுதல் தோன்றியுள்ளது. அதுதான் ஆசியாவின் மறுமலர்ச்சி. ஆசியா எத்தனையோ மேடு பள்ளங்களைப் பார்த்தாயிற்று. ஒரு வேளை, நம்முடைய இந்தக் காலத்தின் வரலாற்றை எழுதும் பொழுது, இந்தத் தலைமுறையிலும் அடுத்த தலைமுறையிலும், பழம் பெரும் கண்டமாகிய ஆசியா மீண்டும் உலக அர

சியலில் பங்கு கொள்வதுதான் முதன்மையாக விளங்கக்கூடும். இந்த விஷயத்தில் உலகம் முழுவதற்குமே சிரத்தை உண்டு. அதிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகள், உலக விவகாரங்களில் அதன் செல்வாக்கு ஒருபுறமிருக்க, தான் இருக்கக் கூடிய முக்கியமான ஸ்தானத்திலும், தன் பூகோள அமைப்பினுலும் அதிக அக்கறை கொண்டுள்ளது.

உலகத்திலே தீர்க்கப்பெருத பிரசினைகள் நிறைந்துள்ளன; ஒரு வேளை அவைகள் எல்லாமுமே ஒரே பிரசினையின் பல பிரிவுகள் என்று கருதலாம். ஆசியாவின் மறுமலர்ச்சியால் ஏற்படக்கூடிய விளைவு முழுவதையும் மனத்திலே கொள்ளாமல், இந்தப் பிரசினையைத் தீர்க்க முடியாது. ஏனெனில் ஆசியா உலக விவகாரங்களில் நாளுக்கு நாள் அதிகமாகப் பங்கெடுத்துக் கொள்ளும். ஆசியா தன் வளர்ச்சியில் தடைப்பட்டிருந்தது. இந்நிலையில் அது உலகப் பிரசினையின் இரு முக்கியமான அமிசங்களையே கவனிக்கின்றது. அரசியல் பிரசினை, அதாவது அரசியல் சுதந்தரம் அடைதல் முதன்மையான இடம் பெறுகின்றது. ஏனெனில் அது இல்லாமல் உண்மையான முன்னேற்றம் சாத்தியமில்லை. அரசியல் சுதந்தரம் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால், பொருளாதாரப் பிரசினை அதேபோல் முக்கியமானதாகவும், உடனே தீர்க்கப்பட வேண்டியதாகவும் ஆகிவிட்டது. ஆகவே, ஆசியாவில் தேசிய சுதந்தரமே முதல் அவசியமாக உள்ளது. ஆசிய நாடுகளில் பெரும்பாலானவை இதை அடைந்துவிட்ட போதிலும், சில, இன்னும் குடியேற்ற நாட்டு நிலையில், பிறர் ஆதிக்கியத்தில் உள்ளன. ஆதிக்கியத்தின் இந்தச் சின்னங்கள் ஒழிய வேண்டும், தேசிய சுதந்தரம் ஏற்பட வேண்டும்; இப்பொழுது ஆசிய மக்களின் முதன்மையான ஆவலாக அதுதான் உள்ளது. கோடிக் கணக்கான

ஆசிய மக்களின் பொருளாதார மேம்பாடும் முக்கிய மானதுதான். அவர்களுடைய கருத்துப்படியும் அது அவசியம். இதற்கு இந்த நாடுகளை முற்போக்கான தொழில் மயமாகச் செய்ய வேண்டியிருக்கும். இந்த வேலையில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முக்கியமான பங்கெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

*—கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவு, 31-10-1949.*

* * *

## ஆசியாவின் விழிப்பு

ஆசியா முழுவதிலும் நாம் பல கஷ்டங்களையும் சோதனைகளையும் தாண்டி வருகிறோம். இந்தியாவிலும் முரண்பாடுகளையும் கஷ்டங்களையும் நீங்கள் காணலாம். இதனால் நாம் தளர்ச்சியடையக் கூடாது; பெரிய மாறுதல் ஏற்படும் காலத்தில் இதைத் தவிர்க்க முடியாது. ஆசிய மக்கள் அனைவரிடத்திலும் ஒரு புதிய ஜீவ சக்தியும், ஆக்க வேலைகளில் துடிப்பும் ஏற்பட்டிருக்கின்றன. சாதாரண ஜனங்களும் விழிப்படைந்து விட்டனர். பரம்பரையான தங்கள் உரிமைகளை அவர்கள் கேட்கிறார்கள். ஆசியா முழுவதிலும் பலமான காற்றுக்கள் வீசிக் கொண்டிருக்கின்றன. சாதாரண ஜனங்களும் விழிப்படைந்து விட்டனர். அவைகளைக் கண்டு நாம் அஞ்சாதிருப்போமாக. அவைகளை நாம் வரவேற்கவே வேண்டும். ஏனெனில் அவைகளைக் கொண்டுதான் நாம் கனவு கண்டு கொண்டிருக்கும் புதிய ஆசியாவை நிர்மாணிக்க முடியும். இந்த மாபெரும் புதிய சக்திகளில் நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும். அதேபோல இப்பொழுது உருவாகி வரும் கனவையும் நம்புவோமாக. சென்ற பல நூற்றாண்டுகளாக ஆசியா மானிடப் பண்பாட்டை அடிப்

படையாகக்கொண்ட உணர்ச்சியின் உருவாக விளங்கி வந்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நாம் அந்த உணர்ச்சியில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

—ஷை ஷை

* * *

## பாண்டுங் மகாநாடு

பாண்டுங் மகாநாடு சரித்திர முக்கியத்துவமுள்ள ஒரு நிகழ்ச்சி. அந்த மகாநாடு கூடிக் கலைந்ததே ஒரு பெரிய வெற்றிச் சாதனையாகும். ஏனெனில் புதிய ஆசியாவும் ஆப்பிரிகாவும் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு வெளிவந்திருப்பதை அது நிரூபித்திருக்கும். புதிய புதிய நாடுகள் தங்களுடைய பூரண விடுதலைக்காக முன்னேறவும், உலகிலே தங்களுக்குரிய ஸ்தானத்தை வகிக்கவும் முற்படுவதை அம் மகாநாடு தெளிவாகக் காட்டி யிருக்கும். உலக ஜனத் தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் அரசியல் விடுதலை பெற்று உலகப் பொது விஷயங்களில் பங்கு கொள்ள வந்து விட்டார்கள் என்பதைப் பாண்டுங் பிரகடனம் செய்து விட்டது. அது எவருக்கும் விரோதம் காட்டவில்லை; எவருக்கும் சவால் விடவில்லை. ஆனால், (உலகின் நலனில்) புதிதாகப் பங்கெடுத்துக் கொண்டு தங்கள் கடனைச் செலுத்தும் நாடுகள் வந்து சேர்ந்துள்ளன. அதனால் எவ்விதப் பயமுறுத்தலோ, புதிதான வல்லரசுக் கூட்டமோ தோன்றி விடவில்லை. ஆசியா, ஆப்பிரிகா கண்டங்களின் நாடுகள் இலட்சியங்களைச் செயலில் காட்டும் தங்கள் ஆற்றலை அங்கே நிரூபித்துக் காட்டின; எவ்வாறென்றால், நாங்கள் சுருக்கமான நேரத்தில் நடவடிக்கையை முடித்துக் கொண்டோம். சர்வதேச மகாநாடுகளில் இப்படி நடப்பது அரிதாகும். எங்கள் ஒற்றுமை உணர்ச்சியை

யும், வெற்றியையும் கொண்டு, நாங்கள் தனித்து ஒதுங்கி நிற்கவேண்டு மென்ருே, எங்களேயே முக்கிய மாகக் கருதிக்கொள்ள வேண்டுமென்ருே தீர்மானிக்க வில்லே. மகாநாட்டின் ஒவ்வொரு முக்கியமான முடிவும், ஐக்கிய நாடுகளேப் பற்றியும், உலக விஷயங் களேப் பற்றியும், உலக இலட்சியங்களேப் பற்றியும் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. பாண்டுங்கிலிருந்து நமது மாபெரும் ஸ்தாபனமாகிய ஐக்கிய நாடுகளின் சபை புதிதாக வல்லமை பெற்றிருக்கிறது என்றே நாங்கள் நம்புகிருேம். இதனுல் ஆசியாவும் ஆப்பிரி காவும் அந்த உலகப் பொது ஸ்தாபனத்தில் நாளுக்கு நாள் அதிகமாகப் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்படுகின்றது.

—லோகசபைச் சொற்பொழிவு, **30-4-1955.**

* * *

## போர்களே விட்டு ஒதுங்கியிருத்தல்

நான் எவரையும் குறை சொல்லிப் பேச விரும்ப வில்லே. ஆசியாவில், நாம் நாடுகளாயினும் சரி, நபர்களாயினும் சரி, எல்லோரிடத்திலும் பல குறைகள் உள்ளன. நமது பண்டை வரலாற்றிலிருந்து இது தெளிவாகின்றது. இருந்த போதிலும், பழங்காலத் தில் ஐரோப்பா பல போராட்டங்களின் நிலேக்களனுன கண்டமாகவும், இடர்கள் நிறைந்ததாயும், துவேஷம் நிறைந்ததாயும் இருந்து வந்தது என்று நான் கூறு கிறேன். ஐரோப்பாவின் போராட்டங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. அதன் யுத்தங்கள் இன்னும் நடந்து வருகின்றன. நாம் அதன் தேர்ச் சக்கரங் களில் பிணிக்கப்பட்டிருந்ததால், நாமும் இந்த யுத்தங் களில் இழுத்துச் செல்லப்பட்டோம். நாம் இன்னும் ஐரோப்பாவின் கஷ்டங்களுடன் பின்னிக் கிடக்க

வேண்டுமா, ஐரோப்பாவின் துவேஷங்கள், போராட்டங்களில் பங்கு கொள்ள வேண்டுமா?

ஆனால், ஐரோப்பாவும், ஆசியாவும், அமெரிக்காவும் ஒன்றை ஒன்று சார்ந்தே யிருக்கின்றன. தற்கால உலகில் ஒதுங்கி யிருத்தலைப் பற்றி எண்ணுவது சரியில்லை. எனினும் ஐரோப்பாவும், மற்றும் சில பெரிய நாடுகளும், தங்களுடைய அரசியல் முறை எப்படி யிருப்பினும், தங்களுடைய சண்டைகளை உலகத்தின் சண்டைகளாக எண்ணி, உலகம் தங்களுக்குக் கீழ்ப் படிய வேண்டும் என்று எண்ணுவது வழக்கமாகி விட்டது. நான் அந்த முறையில் எண்ணுபவனல்லன். ஆசியாவிலோ, ஐரோப்பாவிலோ, அமெரிக்காவிலோ எவரும் சண்டை செய்வதை நான் விரும்பவில்லை. ஆனால், மற்றவர்கள் சண்டை செய்தால், நான் ஏன் சண்டை செய்யவேண்டும், அவர்களுடைய சண்டைகளிலும் போர்களிலும் என்னை ஏன் இழுக்கவேண்டும்?

—*பாண்டுங் மகாநாட்டில் சொற்பொழிவு, 24-4-1955.*

* * *

# 45

# பாகிஸ்தான்

---

## நாங்கள் ஆக்கிரமிப்புச் செய்யமாட்டோம்

இந்தியா எந்த நாட்டின்மீதும் ஆக்கிரமிக்கும் நோக்கம் அறவே கிடையாது என்பதை நான் பாகிஸ்தான் மக்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன். பாகிஸ்தான் அமைதியோடு வாழ்ந்து முன்னேற்ற மடைந்து, நம்முடன் நெருங்கிய தொடர்புகள் கொள்ள

வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம். எக் காலத்தி லும் நம்முடைய பக்கத்திலிருந்து ஆக்கிரமிப்பு என் பதே இராது.

*—புதுடில்லியிலிருந்து ஒலிபரப்பிய பேச்சு, 2-10-1948.*

*　　　　*　　　　*

## பாகிஸ்தான் இருக்க வேண்டும்

சரித்திரத்தில் வந்த பாதையிலே திரும்புதல் என்பதில்லை. பாகிஸ்தான் நிலையாக நின்று செழிப் பான இராஜ்யமாக விளங்குமானால், நாம் அத்துடன் நெருங்கிய நட்புறவுகளை வளர்த்துக் கொள்ளலாம். அதுவே உண்மையில் இந்தியாவுக்கு நல்லது. இன்று ஏதாவது ஒரு நிலையில் இந்தியாவும் பாகிஸ்தானும் மீண்டும் இணையும்படி ஏற்பட்டால், நான் வேண்டாம் என்று சொல்லுவேன். இதன் காரணங்கள் தெளி வானவை. பாகிஸ்தானின் பாரமான பிரசினைகளை நான் சுமக்க விரும்பவில்லை. எனக்கு இங்கேயுள்ள தொல்லைகளே போதும். இரண்டும் மிக நெருங்கி நட்போடு உழைப்பதற்குப் பாகிஸ்தான் தனி இராஜ்ய மாகவே யிருந்து கொண்டு, பல நாடுகளைக் கொண்ட ஒரு 'யூனிய'னுகச் சேரும்பொழுது அதிக வசதி யாகும்.

*—அலிகார் பல்கலைக் கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய சொற்பொழிவு, 24-1-1948.*

*　　　　*　　　　*

# 46

# அமெரிக்க ஐக்கிய நாடுகள்

## அமெரிக்கரின் அரிய குணங்கள்

**வெ**ளி உலகத்திலிருந்து பார்ப்பவர்களுக்குச் சாதாரண அமெரிக்கர் ஒருவர் மன இளக்கமில்லாதவராயும், காரியத்திலேயே கண்ணுயுள்ள திறமை மிகுந்த வியாபாரியாயும், பணம் தேடுவதே நாட்டமாகி, கிடைத்த பணத்தைக் கொண்டு தம் வலிமையையும் செல்வாக்கையும் பெருக்கிக்கொள்ள விரும்புபவராயும் காட்சி யளிக்கிருர். இதில் ஓரளவு உண்மை இருக்கிறது. மற்றெருரு புறத்தில் வேறெருரு காட்சி தென்படுகின்றது. அன்பு நிறைந்த இதயங்களுடனும், அளவற்ற தாராள மனப்பான்மையுடனும், மற்றவர்களிடம் நல்லெண்ணத்துடனும், இந்தப் பெரும் குடியரசின் அடிப்படைத் தத்துவங்களான சுதந்தரம், சமத்துவம், ஜனநாயகம் ஆகியவற்றில் உறுதியான நம்பிக்கையுடனும் உள்ள மக்களைக் காண்கிறோம். இந்தக் காட்சியை நான் சென்ற இடமெல்லாம் கண்டதில் மகிழ்ச்சி யடைகிறேன். இதிலிருந்து அமெரிக்காவின் உண்மையான ஆற்றல் எதில் அமைந்திருக்கிறது என்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது. எல்லா இடங்களிலும் சுதந்தரத்தில் ஆசையும். சமாதானத்திலும் ஒத்துழைப்பிலும் ஆசையும், மக்களிடையே கபடமில்லாத போக்கும், மனிதப் பண்பாட்டோடு எதையும் நோக்குதலும் அவர்களை அன்போடு தெரிந்து கொள்ள உதவியா யிருக்கின்றன. இத்தகைய போக்கைக்

கண்டுதான் நானும் என் மனத்திலுள்ளதைத் திறந்து பேசத் துணிந்தேன்.

—*கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு, 31-10-1949.*

* * *

## அமெரிக்காவும் இந்தியாவும்

இந்தியாவின் குரலும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் குரலும் வேறுபட்டிருப்பது போலத் தோன்றினும், இரண்டுக்கும் பொதுவான விஷயங்கள் நிறைய இருக்கின்றன. உங்களைப் போலவே நாங்களும் ஒரு புரட்சியின் மூலம் எங்கள் சுதந்தரத்தை அடைந்தோம். ஆனால் எங்கள் வழிகள் மட்டும் வேறாக இருந்தன. உங்களுடைய குடியரசை நிறுவியவர்கள் காட்டிய வழியிலேயே, நாங்களும் சமஷ்டிக் கொள்கையில் ஒரு குடியரசை அமைத்துக் கொள்கிறோம். இராஜ்யங்களுக்கும் மத்திய அரசாங்கத்தின் ஆதிக்கியத்திற்கும் இடையில் சுமுகமான உறவு நிலவுவதற்காக, அவைகளின் அதிகாரங்களை இந்த ஐக்கிய நாட்டுக் குடியரசில் உள்ளது போல நாங்களும் சமநிலைப் படுத்தி வைத்துக் கொள்வது அவசியமாகிறது. ஏனெனில் இந்தியாவும் பெரியதோர் நாடு. எங்களுடைய அரசியல் சட்டத்திலும், சுதந்தரம், சமத்துவம், முன்னேற்றம் ஆகியவற்றில் நாட்டமுள்ள மனிதர்கள் அனைவரும் விரும்பும் அடிப்படையான மானிட உரிமைகளை முன்னணியில் வைத்திருக்கிறோம். அவை தனி மனிதனின் சுதந்தரம், மக்களின் சமத்துவம், சட்ட முறைப்படி ஆட்சி நடத்தல் ஆகியவை. ஆதலால் சுதந்தர நாடுகளோடு நாங்கள் வந்துசேருகையில், எங்கள் ஸ்தாபனங்களில் ஜனநாயகம் வேரூன்றி யிருக்கின்றது. எங்கள் மக்களின் சிந்தனையிலும் அது வளர்ந்து வந்துள்ளது.

—*நியூயார்க் நகரில் 'கிழக்கு மேற்குச் சங்க'த்தில் ஆற்றிய சொற்பொழிவு, 19—10—1949.*

# நேருவின்
# சிறைவாசங்கள்

## 47

# நீதிமன்றங்களில் நேருவின் வாக்குமூலங்கள்

### சிறையே வீடு

**1921**-முதல் 1945-வரையில் 24- ஆண்டுகளில் ஜவாஹர்லால் நேரு ஒன்பது முறை சிறை செல்ல நேர்ந்தது. அவருடைய அருமையான வாழ்க்கையில் மொத்தம் 3,262 நாட்கள் சிறைகளிலேயே கழிந்தன. அவ்வளவு நெடுங்காலம் மாட்சிமை பொருந்திய பிரிட்டிஷ் மன்னர் பிரானின் விருந்தினராயிருந்த நேரு தாம் 1947- முதல் 1964- வரை—தமது இறுதி நாள் வரை—இந்தியாவின் ஒப்பற்ற பிரதம மந்திரியாகவும் பணியாற்றி வந்தார். வட இந்தியாவிலும் வங்காளத்திலும் அவர் பல சிறைகளைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. லட்சுமணபுரி, நாபா, நைனி (அலகாபாத்), பரெய்லி, டேராடூன், கல்கத்தா, அல்மோரா, கோரக்பூர், அகமதுநகர் கோட்டை ஆகிய இடங்களில் அவர் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தின் கைதியாக இருந்தார். 1942-ல் அவர் கடைசி முறையாகச் சிறை புகுந்ததில், 1,040- நாட்கள் தொடர்ச்சியாகச் சிறைவாசம் அநுபவிக்க நேர்ந்தது.

1942-ல் கடைசி முறையாக நேருவைக் கைது செய்யும்பொழுது, அரசாங்கம், காந்தியடிகள் உட்பட காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர் அனைவரையுமே சேர்த்துக் கைது செய்து, சிறையில் வைத்தது.

அப்பொழுது அவர்கள்மீது குற்றங்கள் சாட்டவில்லை, வழக்குகள் தொடரவில்லை, விசாரணையில்லாமலே அடைத்து வைத்தது; ஆனால் அதற்கு முன்பு நேரு கைதான எட்டுச் சந்தர்ப்பங்களிலும், அவர் நீதி மன்றங்களிலே விசாரிக்கப் பெற்றுத் தண்டனையடைந்தார். அந்த விசாரணைகளில் சிலவற்றில் அவர் அளித்த வாக்குமூலங்கள் பொன்னெழுத்துக்களில் பொறித்து வைக்கத் தக்கவை. அவை சுதந்தர வேட்கை கொண்ட சிம்மத்தின் கர்ச்சனைகள். அவைகளிலே பாரத நாட்டின்மீது அவர் கொண்டிருந்த அளவற்ற பற்றையும், இந்நாட்டின் தனிப்பெரும் தலைவரான காந்தியடிகளிடம் அவர் கொண்டிருந்த அன்பும், மதிப்பும், அவருடைய வீரமும், நம்பிக்கையும், காங்கிரஸின் கட்டளையைத் தவிர வேறு எவர் கட்டளையையும் தாம் ஏற்க முடியாது என்று அவர் காட்டிய உறுதியும், சிறை புகுவதிலே அவருக்கு இருந்த ஆர்வமும் ஆத்திரமும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. எந்த விசாரணையிலும் அவர் கலந்து கொள்ளவில்லை, தமக்காக வாதாடவில்லை. ஆங்கில நீதிமன்றங்களை நீதி தங்கியுள்ள தலங்களாகவே அவர் மதிக்க மறுத்துவிட்டார்.

## முதல் விசாரணை

1921- ஆம் வருட இறுதியில் அலகாபாத்தில் அந்நியத் துணிக் கடை மறியல் தீவிரமாக நடந்து வந்தது. ஐக்கிய மாகாணம் முழுதுமே மறியலுக்காக ஏராளமான தொண்டர்கள் காங்கிரஸ் சபையால் சேர்க்கப்பெற்று வந்தனர். அரசாங்கம் தொண்டர் படையே சட்ட விரோதமான ஸ்தாபனம் என்று பிரகடனம் செய்தது. பண்டித ஜவாஹர்லால் நேரு டிசம்பர் மாதம் 6-ந் தேதி கைது செய்யப்பட்டார். சட்ட விரோதமான ஸ்தாபனத்தில் லட்சுமணபுரியில் அவர்

கலந்து கொண்டு, அதற்கு உதவி செய்ததாகக் குற்றம் சாட்டப் பெற்ருர். டிசம்பர் 15-ந் தேதி லட்சு மணபுரியில் விசாரணை நடந்தது.

**மாஜிஸ்திரேட் :** ஐக்கிய மாகாணத்தில் தொண்டர் படைகள் சேர்ப்பதற்காக 1921, நவம்பர் 24-அல்லது 25-ந் தேதியில் நியமிக்கப் பெற்ற மத்தியத் தொண்டர் போர்டில் நீர் ஓர் அங்கத்தினரா ?

**நேரு:** இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தை நான் ஒப்புக்கொள்ளவில்லை. இதையும் நான் ஒரு நீதிமன்றமாக மதிக்கவில்லை. இந்த நடவடிக்கைகள் ஒரு கேலிக் கூத்து, அல்லது நாடகம் என்றே நான் கருதுகிறேன். முன்கூட்டியே தீர்மானிக்கப் பெற்ற விஷயத்தை இந்த நீதி மன்றம் நிறைவேற்றி வைக்கின்றது.

**மாஜி :** லட்சுமணபுரியில் 1921, டிசம்பர், 3-ந் தேதியில் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் ஒன்றில் ஆஜராயிருந்தீரா ?

**நேரு :**—இந்தக் கேள்விக்கோ, அல்லது வேறு எந்தக் கேள்விக்கோ பதில் கூற நான் விரும்ப வில்லை.

1908-ஆம் வருடத்திய கிரிமினல் திருத்தச் சட்டப்படி மாஜிஸ்திரேட், நேருவைக் குற்றவாளி என்று தீர்ப்புச் சொல்லி, ஆறு மாத வெறுங்காவல் தண்டனையும், ரூ. 100 அபராதமும், அபராதம் செலுத்தத் தவறினால், கூடுதலாக ஒரு மாத வெறுங்காவலும் விதித்தார்.

ஆனால் 87-நாட்களுக்குப் பின் நேரு சிறையிலிருந்து திடீரென்று விடுதலை செய்யப் பெற்ருர்.

அவரைத் தண்டித்தது முறையாயில்லை என்பதாகக் காரணம் சொல்லப்பட்டது.

* * *

## இரண்டாவது விசாரணை

*1922,* மே 11-ந் தேதி நேரு இரண்டாவது முறை யாகக் கைது செய்யப் பெற்றார். அலகாபாத் ஜில்லா மாஜிஸ்திரேட்டின் மன்றத்தில் விசாரணை நடந்தது. மே 19-ந் தேதி, அவருக்கு இந்தியன் பீனல் கோடு 506-ஆவது பிரிவுப்படி 18 மாதக் கடுங்காவலும், மேற்படி 117/506 பிரிவுப்படி 18 மாதக் கடுங்காவலும், மேற்படி 116/385 பிரிவுப்படி 6 மாதக் கடுங்காவலும், இத் தண்டனைகளை ஏக காலத்தில் அநுபவிக்கவேண்டு மென்றும் தண்டனை விதிக்கப் பெற்றது. இத்துடன் இந்தியன் பீனல் கோடு 117-ஆவது பிரிவுப்படி ரூ. 100 அபராதம், அல்லது 3 மாதம் கூடுதலாகக் கடுங்காவலும் விதிக்கப் பெற்றது.

அந்த நீதிமன்றத்தில் மே மீ 17-ந் தேதி நேரு அளித்த வாக்குமூலத்தின் முக்கியமான பகுதிகள் வருமாறு :

'என் மீது சாட்டப் பெற்றுள்ள குற்றச்சாட்டுகளி லிருந்து என்னைக் காத்துக் கொள்வதற்காக நான் எதிர் வழக்காட விரும்பவில்லை. ஆனால் என் செயலைப் பற்றி நான் ஏன் அப்படிச் செய்தேன் என்பதன் காரணங்களையும், என் நிலைமையையும் விளக்கவே நான் இந்த வாக்குமூலத்தை அளிக்கிறேன். நான் குற்றவாளியா, இல்லையா என்பதை நான் கூற மறுத்து விட்டேன், சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்தோ, அல்லது வேறு விதமாகவோ, விசாரணை யில் நான் கலந்து கொள்ளவும் மறுத்து விட்டேன்.

ஏன் என்ருல், இந்த நீதிமன்றத்தை நீதியைப் பரிபாலிக்கும் ஒரு நீதித்தலமாக நான் ஏற்றுக் கொள்ளவில்லை, தலைமை தாங்கி நடத்தும் அதிகாரிக்கு நான் அவமரியாதை செய்வதாக எண்ண வேண்டாம். அரசியல் குற்றங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், இந்தியாவிலுள்ள நீதி மன்றங்கள் அரசாங்க நிர்வாகிகளுடைய தீர்ப்புக்களையே நிறைவேற்றிப் பதிவு செய்கின்றன. இந்தியாவை அளவுக்கதிகமான நீண்ட காலம் முறையற்ற நிலையில் ஆட்சி செய்து வந்த ஓர் அரசாங்கத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருப்பதற்காகவே, அவைகள் இன்று முற்காலத்தைவிட அதிகமாகப் பயன்படுகின்றன. அந்த அரசுக்கு இருந்த மரியாதையும் திரும்ப வர முடியாத முறையில் போய் விட்டது.

'கிரிமினல் முறையில் நான் பயமுறுத்தியதாகவும், பணம் பறிப்பதில் ஒத்துழைத்ததாகவும் குற்றம் சாட்டப் பெற்று, நான் இங்கே நிற்கிறேன். எனைக் கைது செய்த வாரண்டில் முன்பு பழக்கமான 124-ஏ பிரிவும் இருக்கிறது. ஆனுல் இன்று நான் அதற்காக விசாரிக்கப் பெறவில்லை. நான் விரிவான முறையிலேயே வாக்கு மூலம் கொடுக்க எண்ணி யிருக்கிறேன். நான் என்னைப் பல அறைகளாகப் பிரித்துக் கொள்ள இயலாது. மறியலுக்காக ஒரு பகுதி, இராஜங்கத் துவேஷத்திற்காக ஒரு பகுதி, தொண்டர் படையில் சேருவதற்காக ஒரு பகுதி என்று என்னைக் கூறுகளாகப் பிரித்துக் கொள்ள முடியாது. என் வேலைகளுக்கெல்லாம் ஒரே குறிக்கோள்தான் உண்டு. அந்தக் குறிக்கோளை அடைவதற்கு என்னுடைய வலிமை முழுவதையும், என் சக்தி முழுவதையும் உபயோகித்து வந்திருக்கிறேன். நீண்ட காலம் இங்கிலாந்தில் தங்கி, வழக்கமான முறையில் பள்ளியில் பயின்று, சர்வகலா

சாலையிலும் பட்டம் பெற்று, நான் திரும்பி வந்து 10-ஆண்டுகள்கூட ஆகவில்லை. ஹாரோ, கேம்-பிரிட்ஜ் நகரங்களில் தங்கியவர்களுக்கு ஏற்படக் கூடிய ஒருதலைப் பட்சமான கருத்துக்கள் பலவும் எனக்கும் ஏற்பட்டன. என்னுடைய விருப்பு, வெறுப்புக்களில் நான் ஓர் இந்தியனாக இருந்ததைவிட, ஆங்கிலேயனாகவே அதிகமாக இருந்தேன். ஆங்கிலேயனுடைய கண்ணோட்டத்திலேயே நான் உலகத்தைக் கவனித்து வந்தேன். எனவே நான் இந்தியாவுக்குத் திரும்பி வருகையில், ஓர் இந்தியனால் எவ்வளவு முடியுமோ, அந்த அளவுக்கு இங்கிலாந்தினிடத்திலும் ஆங்கிலேயரிடத்திலும் அதிக மோகம் கொண்டிருந்தேன்.

'பத்து ஆண்டுகள் கழிந்து, இன்று நான் கைதிக் கூண்டில் நிற்கிறேன். என் மீது இரண்டு குற்றங்கள் சாட்டப் பெற்றிருக்கின்றன. மூன்றாவது குற்றமும் பின்னணியில் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது.—நான் ஒரு பழைய கைதி, ஓர் அரசியல் குற்றத்திற்காக முன்பு ஒரு முறை சிறை சென்ற பழைய கைதி, இந்தியாவில் இப்பொழுதுள்ள அரசாங்கத்தின் எதிரி நான். இத்தனை ஆண்டுகளில் எனக்கு ஏற்பட்டுள்ள மாறுதல் இது. இந்த மாற்றத்திற்குரிய காரணங்களை நான் எடுத்துச் சொல்லவேண்டியது அவசியமில்லை. அவைகளைப் பற்றி ஒவ்வோர் இந்தியனும் அறிவான்; ஒவ்வோர் இந்தியனும் அவைகளை அநுபவத்தில் உணர்ந்திருக்கிறான். அவைகளுக்காக அவமானத்தால் தலை குனிந்திருக்கிறான். இந்தியனுக்குரிய பழைய அனலில் அவனிடம் ஒரு பொறியேனும் எஞ்சியிருந்தால், அடிமை வர்க்கத்தாருக்கு ஏற்படும் துயரங்களையும் அவமானங்களையும் இனி எக்காலத்திலும் தன் நாட்டு மக்கள் அடையாதிருக்கும்படி, இந்தியாவின் சுதந்

தரத்திற்காக இடைவிடாமல் முயற்சி செய்வதாக அவன் உறுதியான சபதம் செய்திருப்பான். இன்று, இப்போது இந்தியாவிலுள்ள அரசாங்கத்திற்கு எதிரான துவேஷம் இந்திய மக்களின் அடிப்படைக் கொள்கை யாகிவிட்டது; இந்த அரசாங்கத்தின் தீமையை எதிர்த்துத் துவேஷிப்பதும், துவேஷத்தைப் பரப்புவதும் அவர்களுடைய முக்கியமான தொழிலாகி விட்டது.

'கிரிமினல் முறையில் நான் பயமுறுத்தியதாகவும், பணம் பறிக்க முயன்றதாகவும் என்மீது குற்றங்கள் சாட்டப் பெற்றிருக்கின்றன. உண்மையாகவே இப்படியும் குற்றங்கள் சாட்டப் பெற்றிருக்குமா என்று நான் ஆச்சரியப்பட்டேன். சர்க்கார் தரப்புச் சாட்சியங்களிலிருந்து கிடைக்கும் தகவல்கள்கூட என்மீது சாட்டப் பெற்றிருக்கும் சட்டத்தின் பிரிவுகளுக்குச் சம்பந்தமில்லாமல் இருக்கின்றன. அலகாபாத்தில் (ஜவுளிக் கடைகளின் மறியல் சம்பந்தமாக) நாங்கள் செய்த முயற்சிகளில் பெரும் வெற்றி கிடைத்ததால், அது மறியல் செய்பவரின்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளைத் தூண்டியிருக்கும் என்று நான் யூகிக்கிறேன். அமைதியான முறையில் நியாயமான ஒரு விஷயத்திற்காக மறியல் செய்வது குற்றம் என்றால், அந்தப்படி செய்யும்படி சொல்லி, உதவியும் புரிந்து வந்துள்ள நான் குற்றவாளிதான். பிரிட்டிஷ் இந்தியச் சட்டங்களின்படிகூட அமைதியான மறியல் ஒரு குற்றமாகும் என்பதை நான் இனித்தான் தெரிந்து கொள்ள வேண்டும். ஜவுளி வியாபாரிகள் முன்பு சேர்ந்து கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றும்படி செய்ய வேண்டும் என்பதுதான் எங்களுடைய மறியலின் இலட்சியம். இத்தகைய வேலையில் கிரிமினல் முறையில் பய

முறுத்தியும், பணம் பறித்தும் வெற்றியடைய முடியும் என்று எவனுவது ஒருவன் நம்ப முடியுமா ? எங்கள் மக்களின் ஆதரவிலும், எங்கள் நாட்டவரின் நல்லெண் ணத்திலுமே எங்களுக்கு வலிமை உண்டாகின்றது என்பதை உலகம் முழுதும் அறியும். பழங் காலத்துப் பலாத்தாரமும் கட்டாயப்படுத்தலும் எங்களுடைய ஆயுதங்களில்லை. எங்கள் பெருந் தலைவர் எங்கள் கரங்களில் அளித்துள்ள ஆயுங்கள் அன்பும் தியாகமு மாம். துன்பத்தை நாங்களே ஏற்றுக் கொண்டு, எங்கள் துயரத்தால் எதிரியின் மனத்தை நாங்கள் மாற்றுகிறேம்.

'கிரிமினல் முறையில் பயமுறுத்துதல் என்ருல், ஒரு நபருக்கோ சொத்துக்கோ சேதமுண்டாக்குவதா கப் பயமுறுத்தலாகும். சேதம் என்பது "சட்ட விரோதமாக"க் கெடுதல் செய்வதாகும். பணம் பறித்தல் என்பது ஒரு நபருக்குச் சேதம் விளைப்பதாக அச்சுறுத்தி, அதன் மூலம் "நேர்மையற்ற" முறையில் அவர் சொத்தைப் பறிப்பதாகும். சர்க்கார் தரப்புச் சாட்சியத்தை நான் கவனமாகக் கேட்டு வந்தேன். இந்த அதிசயமான குற்றச்சாட்டுகள் என்ன ஆதாரத் தின்மேல் சாட்டப் பெற்றுள்ளன என்பதைக் கண்டு பிடிப்பதற்காகவே அவ்வாறு கேட்டு வந்தேன். எந்த நபருக்கு அல்லது சொத்துக்குச் சேதம் விளைப்பதா கப் பயமுறுத்தப்பட்டது? "சட்ட விரோதமாக" என்ன கெடுதல் செய்யப்பட்டது? எங்களில் எவரும் நேர்மையற்ற முறையில் நடந்ததாக எதிலிருந்து தெரிகிறது? நாங்கள் எந்த நபருக்கோ சொத்துக்கோ சேதம் விளைத்ததாக இதுவரை கேட்ட சாட்சியத்தில் எதுவும் கூறப்படவுமில்லை, நிரூபிக்கப்படவுமில்லை; அது போலத்தான் சட்ட விரோதமாகக் கெடுதல் செய்ததாகவும், நேர்மையற்ற முறையில் நடந்ததாக

 4652

வும் குறித்துள்ள குற்றங்களும் பிரஸ்தாபிக்கப்படவே யில்லே. போலீஸ்காரர், இரகசியப் போலீஸ்காரர் உள்ளிட்ட சாட்சிகளில் ஒரு சாட்சிகூட அத்தகைய குற்றம் எதையும் நாங்கள் புரிந்ததாகக் கூறவில்லை. எங்களுடைய மறியலைப் பார்த்திருக்கக்கூடிய அலகாபாத் நகர் முழுவதிலுமுள்ள ஆயிரக்கணக்கான மக்களில், நாங்கள் பலாத்காரமாகப் பயமுறுத்தியதாகவோ, ஒரு தொண்டராவது கடுமையான ஒரு வார்த்தை பேசியதாகவோ கூறக்கூடிய ஒரு நபர்கூட (சாட்சியாக) அகப்படவில்லை. நாங்கள் கேளாமலே போலீஸ்காரரும் இரகசியப் போலீஸ்காரரும் அளித்துள்ள இந்தச் சாட்சியத்தைவிட, நாங்கள் பெற்றுள்ள வெற்றிக்கு வேறு அத்தாட்சி கிடைத்திருக்க முடியாது. எங்களுடைய மறியல் முற்றிலும் அமைதியானது, முற்றிலும் மரியாதையுடன் நடத்தப் பெற்றது, பணிந்து வேண்டிக் கொள்வதும், புத்தி சொல்லுவதும் தவிர, அதில் எவ்விதப் பலாத்காரமோ, பயமுறுத்தலோ கிடையாது. மறியலுக்கு எங்களுடைய மறியல் ஒரு வழிகாட்டியாகும் என்பதை நான் துணிந்து சொல்ல முடியும். எங்களால் பயமுறுத்தப்பட்டதாகச் சொல்லப்பெறும் ஜவுளி வியாபாரிகளே கஷ்ட நஷ்டம் அடைந்தவர்களா யிருக்கவேண்டும். ஆனால் அவர்களில் ஒருவர்கூடப் புகார் செய்யவில்லை...

* * *

'...சட்டபூர்வமான அமைதியான மறியலைத் தடுக்கவே பயமுறுத்தல், பணம் பறித்தல் என்ற குற்றச்சாட்டுகளின் பெயரால் இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. பல மாதங்களாக இந்தியா முழுதும் மறியல் நடந்து வருகின்றது, இந்த மாகாணத்திலும் பல நகரங்களிலும் கடைத் தெருக்களிலும் நடந்திருக்கின்றது. இந்த அலகாபாத் நகரிலேயே

நாங்கள் பல தடவை மறியல் நடத்தி யிருக்கிறோம். அந்த முறையில் அதன்மீது அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இங்கிலாந்தைப் போல், இந்தியாவிலும், அமைதியான மறியல் செய்தல் குற்றமாகாது என்பது அவர்களுக்கு நன்ருகத் தெரியும். அமைதியான மறியலைக்கூடச் சட்ட விரோதம் என்று அவர்கள் பேனுவால் எழுதி (சட்டம் செய்து) விட முடியும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்தாலும் செய்யா விட்டாலும், நாங்கள் அதைக் கைவிடப் போவதில்லை. மற்றவர்கள் ஒரு வழியில் செயல் புரிய வேண்டுமென்றோ, எதையாவது செய்யாமல் தவிர்க்க வேண்டுமென்றோ வேண்டிக்கொள்ளவோ, அறிவுறுத்தவோ, ஆலோசனை கூறவோ எங்களுக்குள்ள உரிமையை நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம். அரசாங்கம் என்ன வேண்டுமாயினும் செய்துகொள்ளலாம். இந்த நாட்டில் எங்களுக்குள்ள உரிமைகள் மிகச் சிலவே, இவைகளையும் பறிக்க வழி செய்யப் பெறுகின்றது. கூட்டம் கூடும் சுதந்தரத்தை நாங்கள் எவ்வளவு மதிக்கிறோம் என்பதை உலகத்திற்கு நிருபித்து விட்டோம். ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்ட பிறகும், அரசாங்க உத்தரவுகள் அனைத்தையும் எதிர்த்தும், நாங்கள் எங்கள் முயற்சிகளைக் கைவிடவில்லை.'

*   *   *

'அச்சுறுத்துவதும், பயங்கரமான அடக்கு முறைகளைக் கையாள்வதும் அரசாங்கத்தின் முக்கியமான கருவிகளாகி விட்டன. இந்த முறைகளைக் கொண்டு அவர்கள் மக்களை அடக்கி வைக்கவும், அவர்களுடைய துவேஷத்தை நசுக்கவும் முயற்சி செய்கின்றனர். இவைகளால் அவர்கள் ஜனங்களுடைய விசுவாசத்தைப் பெற்றுவிடவோ, அவர்களைத் தங்களுடைய

ஏகாதிபத்தியக் கொள்கையின் கருவிகளாகச் செய்து விடவோ முடியுமென்று எதிர்பார்க்கிறுர்களா? அன்பும் விசுவாசமும் இதயத்தில் தோன்றுபவை. அவைகளைக் கடைத் தெருவில் வாங்கவும் முடியாது; துப்பாக்கிச் சனியனை நீட்டி அச்சுறுத்திப் பெறவும் முடியாது. விசுவாசம் என்பது அருமையான ஒரு பொருள். ஆனால் இந்தியாவில் சில வார்த்தைகள் தமக்குரிய பொருளை இழந்து விட்டன. இங்கே இராஜ விசுவாசம் என்பது தாய் நாட்டுக்குத் துரோகம் செய்தல் என்றும், இராஜ விசுவாசி என்பவன் தன் கடவுளுக்கும், தாயகத்திற்கும் விசுவாசமில்லாமல், தன் அந்நிய யசமானர்களுக்கு அடிவருடியா யிருப்பவன் என்றும் பொருள் கொண்டு விட்டன... இங்கிலாந்து படைகளையும் கடற்படைகளையும் கொண்டு வல்லமை பெற்றுள்ள நாடு. ஆனால் இன்று அதை விட வல்லமையுள்ள ஒன்று அதை எதிர்த்து நிற்கின்றது. விடுதலை பெற்றுத் தீரவேண்டும் என்று உறுதி கொண்டுள்ள ஒரு தேசிய சமூகத்தின் துன்பத்தையும் தியாகத்தையும் அதன் படைகளும் கடற்படைகளும் எதிர்த்து நிற்கவேண்டி யிருக்கின்றது. இத்தகைய போராட்டத்தின் முடிவு என்ன என்பதைப் பற்றி எந்த மனிதனும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. நாங்கள் எங்கள் சுதந்தரத்திற்காகவும், எங்கள் நாட்டின் சுதந்தரத்திற்காகவும், எங்கள் மதத்திற்காகவும் போராடிக் கொண்டிருக்கிறோம். எந்தத் தேசத்திற்கோ மக்களுக்கோ தீங்கு செய்ய நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் எவர்கள் மீதும் ஆதிக்கியம் செலுத்த விரும்பவில்லை. ஆனால் எங்கள் சொந்த நாட்டில் நாங்கள் பூரணமான சுதந்தரம் பெற்றிருக்க வேண்டும். சென்று 150 ஆண்டுகளுக்கு மேலாக இங்கிலாந்து எங்களுக்குக் கொடுமையாகத் தீங்கிழைத்து விட்டது. ஆயினும் அதற்காக அது இ

வரை மனம் வருந்தவில்லை; கழுவாய் தேடித் தன் வழிகளை மாற்றிக்கொள்ளவுமில்லை... இந்தியா சுதந்தரம் அடைந்தே தீரும்; அதைப் பற்றிச் சந்தேகமே கிடையாது. ஆனால் இங்கிலாந்து சுதந்தரமான இந்தியாவின் நட்பை விரும்பினால், அது தன் பாவங்களுக்கு வருந்தி, அவைகளை நீக்கிக்கொள்ள வேண்டும். அப்படியானால்தான் அது எதிர்கால உலக அமைப்பில் இடம் பெற்றிருக்க முடியும்.

'... இந்தியா தன்னுடைய தலைசிறந்த மக்களில் இருபத்தையாயிரம் பேர்களைச் சிறைகளுக்கு அனுப்பியிருப்பது போராட்டத்தைக் கைவிடுவதற்காக அன்று. இந்தியாவின் எதிர்காலம் உறுதியாயுள்ளது. எங்களில் நம்பிக்கை அதிகமில்லாத சிலர் சில சமயங்களில் ஐயுறலாம், தயங்கி நிற்கலாம். ஆனால் கற்பனை செய்து பார்க்கக் கூடியவர்களுக்கு இந்தியாவின் எதிர்கால ஜோதி இப்பொழுதே தெரியும்.

'என் அதிருஷ்டத்தைக் கண்டு நானே வியப்படைகிறேன். சுதந்தரப் போராட்டத்தில் இந்தியாவுக்குத் தொண்டு செய்வதே பெரும் கௌரவம். அதிலும் மகாத்மா காந்தியைப் போன்ற ஒரு தலைவரின் கீழே அவளுக்குத் தொண்டு செய்தல் இரட்டிப்பு அதிருஷ்டமாகும். அருமைத் தாயகத்திற்காகத் துயரத்தைத் தாங்குதல்: ஓர் இந்தியனுக்கு இதைவிட வேறு பெரிய பேறு என்ன இருக்கிறது! இதைவிடப் பெரிய பேறு சுதந்தரத்திற்காக உயிர் விடுதல், அல்லது நாங்கள் கனவு காணும் சுதந்தரத்தை அடைதலாகும்."

* * *

## மூன்றாவது விசாரணை

மூன்றாவது முறையாக நேரு கைது செய்யப்பெற்றதும், சிறையில் அடைக்கப்பெற்றதும், விசாரிக்

கப் பெற்றதும், தண்டிக்கப் பெற்றதும், தண்டனை தள்ளுபடி செய்யப் பெற்றதும் எல்லாமுமே விசித்திர மானவை. இவை யெல்லாம் பஞ்சாபிலுள்ள நாபா என்ற சமஸ்தானத்தில் 1923-ல் நிகழ்ந்தவை. அப் பொழுது அங்கே நாபா மகாராஜாவைச் சிம்மாசனத்தி லிருந்து இறக்கிவிட்டு, பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார்.

அந்தக் காலத்தில் காந்திஜியின் தலைமையில் இந்திய தேசிய இயக்கம் தீவிரமாக நடந்து வந்ததால், பஞ்சாபிலிருந்த சீக்கியர்களும் அதில் விசேடப் பங் கெடுத்துக் கொண்டனர். அத்துடன் அவர்கள் தங்கள் சீக்கிய சமயத்தையும் புனருத்தாரணம் செய்து சீரிய நிலையில் அமைக்க முற்பட்டனர். சீக்கிய மடாலயங்களிலும் ஆலயங்களிலும் ஏற்பட்டிருந்த ஊழல்களை நீக்கி, அவைகளில் ஆதிக்கியம் கொண் டிருந்த முறை தவறிய 'மகந்து'களை வெளியேற்றவும் அவர்கள் முற்பட்டனர். இந்தச் சமய ஸ்தாபனங் களுக்குக் குருத்வாரங்கள் என்று பெயர். குருத்வாரங் களைப் புனிதமாக்கும் இயக்கம் வலுக்கவே, அரசாங் கம் சீக்கியர்களை அடக்கி ஒடுக்க முற்பட்டது. அப் பொழுதுதான் நாபாவிலிருந்த சீக்கிய மகாராஜாவும் பட்டத்தை இழந்தார். சீக்கியர்கள் அவருக்கு மறு படி இராஜ்யத்தை அளிக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர்.

சீக்கியர்களில் கூடுதலான விரதங்களை மேற் கொண்டு மகா வீரத்துடன் விளங்கியவர்கள் அகாலி யர். அவர்கள் கூட்டம் கூட்டமாக அரசாங்கத்தை எதிர்த்து, காந்திஜியைப் பின்பற்றி அஹிம்சை முறை யில் சத்தியாக்கிரகம் செய்து வந்தனர். ஒழுங்கீன மான மகந்துகளை அவர்கள் நீக்கவேண்டும் என்று முன் வந்தால், அரசாங்கம் அந்த மகந்துகளை ஆதரிப்

பது வழக்கமா யிருந்தது. வீர அகாலிய சீக்கியர் ஜாதாக்களாக அணிவகுத்துச் சென்று எதிர்த்து வந்த னர். அவர்களைப்போலீஸ்காரர்கள் தடிகளைக்கொண்டு நையப் புடைத்து வந்தார்கள். அடி என்றால் மற்றும் பல இடங்களில் நடந்த தடியடி போன்ற தன்று. பல ருடைய மண்டைகள் உடைக்கப் பெற்றன, அங்கங் கள் சிதைக்கப் பெற்றன. ஒரு ஜாதாவினர் அடி பட்டுச் சாய்ந்தவுடன், அடுத்த ஜாதா வந்துவிடும். இவ் வாறு சீக்கியர், பூரணமான அஹிம்சா விரதத்தை மேற் கொண்டு, பெருந் தியாகம் செய்து, இறுதியில் வெற்றி யும் பெற்றனர். அவர்களில் பலர் முன்பு பிரிட்டிஷா ருக்கு உதவியாகப் போராடிய மாஜி சிப்பாய்களா யிருந்தனர்.

ஜெய்தோ என்ற இடத்தில் சீக்கிய ஜாதாக்கள் சத்தியாக்கிரகம் செய்வதைப் பார்க்க வேண்டுமென்று அச் சமயத்தைச் சேர்ந்த அன்பர் சிலர் நேருவை அழைத்திருந்தனர். அப்பொழுது டில்லியில் காங்கிரஸ் மகாநாட்டுக்காகச் சென்றிருந்த நேரு, அங்கிருந்து அருகிலிருந்த ஜெய்தோவுக்குச் செல்ல முற்பட்டார். அவருடன் திரு. கித்வானி, திரு. கே. சந்தானம் என்ற நண்பர்களும் சென்றனர். ஜெய்தோ நாபா சமஸ் தானத்திலுள்ளது. சீக்கிய ஜாதாக்கள் வரும் சமயம் ஜெய்தோவை அவர்கள் நெருங்கியதும், அவர்கள் சமஸ்தானத்தை விட்டு உடனே வெளியேறிவிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தர விட்டது. அவர் கள் திரும்பிச் செல்லாததால், மூவரும் கைது செய்யப் பெற்றனர்.

அப்பொழுது பண்டித ஜவாஹர்லால் நேருவின் வலது கையையும் சந்தானம் அவர்களின் இடது கையையும் சேர்த்து விலங்கிட்டு, மூன்று கைதிகளை யும் ஜெய்தோ நகரின் வழியாகப் போலீஸார் அழைத்

துச் சென்றனர். பின்னர் அன்றிரவு நாபா சிறையில் அடைத்திருந்தபொழுது, இரவிலும் அந்த விலங்கு அகற்றப்படவில்லை. மறுநாள் முற்பகல் வரை இரண்டு நண்பர்களும், எந்தப் பக்கம் திரும்பினாலும், இருவரும் சேர்ந்தே திரும்ப வேண்டியிருந்தது. சிறையில் எலி, மூஞ்சூறுகளின் தொல்லையாலும் அவர்கள் மிகுந்த அவதிக்குள்ளாயினர்.

நாபாவில் நீதி விசாரணையும் ஒரு கோமாளிக் கூத்தாகவே நடந்தது. முதலில் பல நாட்களாக ஒரு மாஜிஸ்திரேட் முன்பு விசாரணை நடந்தது. அந்த மாஜிஸ்திரேட் படிப்பு வாசனை யில்லாதவர். யார் என்ன சாட்சியம் கூறியபோதிலும், அவர் பேனாவை எடுத்து ஒரு வரிகூட எழுதவில்லை. அங்கு நடந்த விசாரணை கைதிகள் நாபா எல்லையை விட்டு வெளியே போகாமலிருந்ததற்காக. பின்னால் திடீரென்று வேறு ஓர் அறையில், வேறொருவர் முன்பு விசாரணை தொடங்கிற்று. அது சதியாலோசனைக் குற்றத்திற்காக! அங்கே சதி செய்ததாகக் குற்றம் சாட்ட வேண்டுமானால், எதிரிகள் நான்கு பேர்களாவது இருக்க வேண்டும். அதற்காக அரசாங்கம், ஒரு சீக்கியரையும் கைது செய்து கொண்டுவந்து, எதிரிகளோடு நிறுத்தி வைத்தது! முற்றிலும் பொய்யான ஒரு வழக்கும் ஜோடிக்கப்பட்டது.

இரண்டு வாரங்களாக வழக்குகளின் விசாரணை நடந்து முடிந்தது. எதிரிகள் எழுத்து மூலமான வாக்குமூலங்களை அளித்தனரே அன்றி, விசாரணையில் கலந்துகொள்ளவில்லை. இரண்டு வழக்குகளிலும் சேர்த்து எதிரிகளுக்கு இரண்டு அல்லது இரண்டரை வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பெற்றது.

ஆனால் அன்று மாலையிலேயே அந்தத் தண்டனையை நிறுத்தி வைக்கப் பெற்றிருப்பதாகச் சொல்

னிச் சிறை அதிகாரி அவர்களை விடுதலை செய்து விட்டார்.

* * *

## நான்காவது விசாரணை

1930-ல் மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கி நடத்தியது உலகப் பிரசித்தமான வரலாறாகும். ஆமாதாபாத்திலிருந்து, எழுபத்தைந்து தொண்டர்களுடன், 200-மைல் நடந்து, தண்டி கடற்கரைக்குச் சென்று, அங்கே உப்பை அள்ளினார் மகாத்மா. அது முதல் இயக்கம் நாடெங்கும் காட்டுத் தீ போல் பரவி விட்டது. பல்லாயிரக்கணக்கில் தொண்டர்களும் மக்களும் நாட்டில் அரசாங்கத்தின் உப்புச் சட்டத்தை மீறினார்கள்.

நேருவும் அலகாபாத்தில் ஏப்ரல் மாதம் 11-ந் தேதி தொண்டர்களுடன் சேர்ந்து பாறையிலிருந்து உப்புத் தயாரித்தார். இதற்காக அவர் கைது செய்யப் பெற்று, நைனி சிறையில் அடைக்கப்பெற்றார். அங்கேயே விசாரணையும் நடந்தது. உப்புச் சட்டத்தை மீறியதாக அவர்மீது குற்றம் சாட்டப் பெற்றது.

மாஜிஸ்திரேட், 'நீங்கள் குற்றத்தை ஒப்புக் கொள்கிறீர்களா, அல்லது மறுக்கிறீர்களா ?' என்று வினவினார்.

நேரு : இந்த விசாரணையில் எந்தச் சமயத்திலும் நான் கலந்துகொள்ள விரும்பவில்லை. விசாரணை ஒருபுறமிருக்க, நான் பல தடவைகளில் சொல்லியிருப்பதை உங்கள் தகவலுக்காகவும் சொல்லத் தயாரா யிருக்கிறேன்—நான் வேண்டுமென்றே உப்புச் சட்டத்தை மீறியுள்ளேன்.

மாஜிஸ்திரேட் : இந்த வாக்குமூலத்தில் தாங்கள் கையெழுத்திடுவீர்களா ?

நேரு : இயலாது.

இந்த விசாரணையில் நேருவுக்கு ஆறு மாத வெறுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்றது.

* * *

## ஐந்தாவது விசாரணை

நேரு சிறைவாசம் முடிந்து 1930, அக்டோபர் 11-ந் தேதி வெளியே வந்தார். இந்திய தேசியவாதிகளுக்கு விடுதலை என்பது சிறிய சிறையிலிருந்து இந்தியா என்னும் பெரிய சிறைச்சாலைக்கு வருவதாகும். நேரு எட்டு நாட்கள் மட்டும் சுதந்தரமாகச் சுற்றி வந்தார். ஒன்பதாவது நாளில் மீண்டும் கைது செய்யப் பெற்றார். சட்டத்தினால் ஏற்படுத்தப் பெற்ற பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராகத் துவேஷம் ஊட்டியதாக இந்தியப் பீனல் சட்டம் 124-ஏ பிரிவுப்படி அவர்மீது குற்றம் சுமத்தப்பட்டது. அத்துடன் அந்தச் சட்டத்தின் 117-வது பிரிவுப்படியும், 1930-ம் வருடத்திய ஆறாவது அவசரச் சட்டம் 3-வது பிரிவுப்படியும் குற்றங்கள் சாட்டப் பெற்றன.

இவைகளில் 124-ஏ பிரிவு மிகுந்த மகிமை பெற்றதாகும். ஏனெனில் முன்பு லோகமான்ய திலகரும், மகாத்மா காந்தியும் அதன்படி குற்றம் சாட்டப் பெற்று ஒவ்வொருவரும் ஆறு ஆண்டுகள் தண்டனை பெற்றனர். பல்லாயிரம் இந்தியத் தேசபக்தர்களைச் சிறையில் அடைக்கவும், நாடு கடத்தவும் இந்தப் பிரிவே பயன்படுத்தப் பெற்று வந்தது. நேருவை

அதன்படி விசாரணைக்குக் கொண்டு வந்ததில் அந்தச் சட்டம் மேலும் பெருமை பெற்றது.

வழக்கம் போல் நேரு விசாரணையில் கலந்து கொள்ளவில்லை. சர்க்கார் தரப்புச் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவுமில்லை. ஆனால் இறுதியில் எழுத்து மூலமான ஒரு வாக்குமூலத்தை மட்டும் அவர் பதிவு செய்தார். இந்த வழக்கில் 124-ஏ பிரிவுப்படி 18 மாதக் கடுங்காவலும், ரூ. 500 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால், கூடுதலாக மூன்று மாதக் கடுங்காவலும், 117-வது பிரிவுப்படி 6-மாதக் கடுங்காவலும், ரூ. 100 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால், கூடுதலாக ஒரு மாதக் கடுங்காவலும், அவசரச் சட்டப்படி 6-மாதக் கடுங்காவலும், ரூ. 100 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால், கூடுதலாக ஒரு மாதக் கடுங்காவலும் நேருவுக்குத் தண்டனைகளாக விதிக்கப் பெற்றன. இவைகளில் 124-ஏ பிரிவுப்படியுள்ள தண்டனை தனியானது, பிந்திய இரு தண்டனைகளையும் ஏக காலத்தில் அநுபவிக்க வேண்டும் என்றும் விதிக்கப்பட்டது. நேருவும், அவருடைய தந்தையார் மோதிலால் நேருவும் அபராதங்களைச் செலுத்த மறுத்து விட்டதால், அவைகளுக்குரிய காவல் தண்டனைகளை ஒன்றின் பின் ஒன்றாக (ஐந்து மாதங்கள்) அநுபவிக்க வெண்டுமென்றும் முடிவு செய்யப் பெற்றது.

நீதித்தலத்தில் நேரு அளித்த வாக்குமூலத்தின் சிறப்பான பகுதிகள் வருமாறு :

'பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அதிகாரிகளால் நான் ஐந்தாவது முறையாகக் கைது செய்யப் பெற்று, பலவிதக் குற்றங்கள் சாட்டப் பெற்றுள்ளேன். ஐந்தாவது தடவையாக நான் தண்டிக்கப் பெறுவேன் என்பதில்

எனக்குச் சந்தேகமில்லை. இதுவரை இந்த விசாரணை யில் நான் எவ்விதமாகவும் கலந்து கொள்ளவில்லை. இனியும் கலந்து கொள்ளப் போவதில்லை. ஆனால் இன்று என்னை விசாரிப்பவர்களும், அளவுக்கதிகமாக என்னைக் கௌரவித்து வந்துள்ள என் சொந்த மக்களும் என் இதயத்திலுள்ளதை ஓரளவு தெரிந்துகொள்வதற் காக, நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நான் இராஜாங்கத் துவேஷமுண்டாக்கியதாகவும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக வெறுப்பு ஏற் படும்படி செய்ததாகவும் குற்றம் சாட்டப் பெற்றிருக் கிறேன். இதே போல எட்டரை ஆண்டுகளுக்கு முன் பும் நான் குற்றம் சாட்டப் பெற்றேன். அப்பொழுது இந்தியாவில் தற்போதுள்ள அரசாங்கத்திற்கு எதிரா கத் துவேஷத்தைப் பரப்புவது இந்திய மக்களின் கொள்கையாகி விட்டது என்றும், அதன் தீமையை எதிர்த்துத் துவேஷம் காட்டுவது அவர்களுடைய முக் கியமான தொழிலாகி விட்டது என்றும் நான் கூறி னேன். ஏனெனில், இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியை அப்புறப்படுத்தினாலொழியத் தங்களுக்குச் சுதந்தரம் இராது என்பதையும், கோடிக்கணக்கான மக்களின் உயிரை நசுக்கிப் பயங்கரமாகக் கொள்ளை யடிப்பது குறையாது என்பதையும் இந்திய மக்கள் அறிந்துகொண்டு விட்டார்கள். நானும் இந்தக் கோர மான உண்மையைத் தெரிந்து கொண்டதிலிருந்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, அதை இந்தி யாவை விட்டு விரட்டுவதைத் தவிர வேறு நோக்கம் எதுவும் கொள்ளாமல், வேறு தொழில் எதுவும் செய் யாமல், வேறு வேலை பாராமல் இருந்து வருகிறேன்.

'இந்த ஆண்டு முதல் நாளில், இந்திய தேசிய காங் கிரஸ் இந்தியாவின் பூரண சுதந்தரத்தைப் பெற வேண்டும் என்று இறுதியாகத் தீர்மானித்துள்ளது'

ஜனவரி 26-ஆம் தேதியில் இந்திய மக்கள் கோடிக் கணக்காகக் கூடி இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை முடிவு செய்ய உறுதி செய்து கொண்டிருக்கின்றனர். நேர்மையாக ஆளாமல், தங்களை நசுக்கி வந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு மக்களுக்குத் தொன்றுதொட்டே அமைந்துள்ள உரிமையை அவர்கள் பிரகடனம் செய்துள்ளார்கள், ஈவிரக்கமில்லாமல் பிரிட்டிஷ் அரசாங்கம் தங்களைக் கொடுமையாக ஆண்டு நசுக்கிக் கொள்ளை யடித்து வந்ததாயும், தங்களுக்கு அரசியலிலும், பொருளாதாரத்திலும், கலாசாரத்திலும், ஆன்மீகத் துறையிலும் சீர்திருத்த முடியாத அளவில் பெருந் தீங்கு விளைவித்திருப்பதாயும் அவர்கள் அதன்மீது குற்றம் சாட்டியுள்ளார்கள். இத்தகைய உறுதியை மேற்கொண்ட பின்னர், இனி எந்த இந்தியனும் பிரிட்டிஷ் அதிகாரத்திற்குத் தாளுகப் பணிந்து கொடுக்கும் பிரசினையே இருக்க முடியாது, பிரிட்டிஷ் ஆட்சி இருப்பதாகவே அவன் அங்கீகரிக்க முடியாது; எங்களில் சிலர் எதிரியுடன் சேர்ந்தாலும், போராட்டம் நடந்து கொண்டிருக்கையில் எதிரியுடன் பேரம் பேசினாலும், அத்தகைய இழிவான ஆன்மீக நிலைக்கு வரும்படி செய்திருப்பதும் பிரிட்டிஷ் ஆட்சியின் பயங்கரமான தீமைதான்; அது தங்களை அடிக்கிற தடியை முத்தமிடும்படி செய்திருக்கிறது; தங்களைப் பிணித்துள்ள சங்கிலிகளையே சேர்த்து அணைத்துக் கொள்ளவும் செய்திருக்கிறது. இப்படி வழி தவறிச் செல்லும் எங்கள் நாட்டவரில் சிலர், முக்கியமாகத் தேவையுள்ள சந்தர்ப்பத்தில் தாய் நாட்டைக் கைவிட்டு விட்டு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் பேச முற்பட்டிருக்கின்றனர். ஆனால் தேசம் எங்கள் மாபெரும் தலைவரின் ஆலோசனைப்படியும் உத்தரவுப்படியும் வேறு வழியை மேற்கொண்டிருக்கின்றது. வெற்றி கிடைக்கும்வரை

அது அந்த வழியிலேயே சென்று கொண்டிருக்கும். சுதந்திரத்திற்கும் அடிமைத்தனத்திற்கும் இடையிலும், உண்மைக்கும் பொய்மைக்கும் இடையிலும் சமரசம் என்பதே சாத்தியமில்லை. சுதந்தரத்தின் விலை உதிரமும் துயரமும்—எங்கள் சொந்த மக்களின் உதிரமும், எங்கள் நாட்டிலுள்ள தலைசிறந்தவர்களின் துயரமும்—என்பதை நாங்கள் உணர்கிறோம். அந்த விலையை நாங்கள் பூரணமாகச் செலுத்திவிடுவோம்.

'சுதந்தர தேவியின் பலிபீடத்தில் எங்கள் மக்கள் செய்துள்ள தியாகத்திற்கும், அடைந்துள்ள துயரத்திற்கும், இப்பொழுதே உலகம் சாட்சியாக நிற்கின்றது. எங்கள் பெண்களின் வியக்கத் தகுந்த வீரத்திற்கும், எங்கள் வீரக் குடியானவர்களின் அஞ்சா நெஞ்சத்திற்கும் அதுவே சாட்சியாகும். எங்கள் தலைவர் அவர்களுக்கு ஊட்டியுள்ள நம்பிக்கை அசைக்க முடியாதது, அவர்கள் தன்னம்பிக்கையோடு தங்கள் மாபெரும் இயக்கத்திலும் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர், அவர்கள் தாங்களாகவே மனமுவந்து தங்கள் சுக போகங்களையும், சொத்துக்களையும் துறந்து, இந்தியாவின் நீண்ட சரிதையிலே சுடர்விட்டு ஒளிரும் ஓர் அத்தியாயத்தை எழுதியுள்ளார்கள். பயங்கரமான கொடுமைகளாலும், காட்டுமிராண்டித்தனமான முறைகளாலும் எங்களுடைய அமைதியான போராட்டத்தை நசுக்க எவ்வாறு முயற்சி செய்யப் பெறுகின்றது என்பதையும் உலகம் கண்டிருக்கின்றது; இந்த முறைகளால் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் (கொடுமையில்) முற்காலத்திய ஹூணர்களைப் போன்றவர்களே என்று சொல்ல நேர்ந்திருக்கிறது. ஆனால், ஹூணர்களுக்கு மாறாக இவர்கள், புண்ணில் கோல் கொண்டு குத்துவதுபோல்

வேறு ஒரு வேலையும் செய்கிறார்கள். தங்களுடைய பயங்கரச் செயல்களைப் பரிசுத்தமான, புனிதமான ஒரு போர்வையால் மூடி மறைக்கவும் முயலுகின்றனர். வெளியில் தெரிந்து விடுமே என்று அஞ்சி, இவர்கள் உண்மையை அடக்கிவைக்க ஒவ்வொரு வழியிலும் முயற்சி செய்துள்ளனர். தெய்வங்கள் எவர்களை அழிக்க விரும்புகின்றனவோ அவர்களுக்கு முதலில் பயித்தியம் பிடிக்கச் செய்துவிடும். சென்ற ஏழு மாதங்களாக இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கம் செய்துள்ள வெறிபிடித்த செயல்கள் யாவும் ஆட்சி உடைந்து சிதறி விழப் போவதற்குக் கண்முன்பு தெரியும் அறிகுறிகளாகும். இவை உடைந்து விழுந்து கொண்டிருக்கும் ஓர் ஏகாதிபத்தியம் கண் தலை தெரியாமல் கடைசியாகச் செய்யும் தந்திரங்களாகும்.

'...இந்த ஏகாதிபத்தியத்திற்கோ இங்கிலாந்துக்கோ நாங்கள் விசுவாசம் காட்ட முடியாது. இந்தியாவில் இங்கிலாந்தின் கொடி இருப்பதே ஒவ்வோர் இந்தியனுக்கும் அவமானமாகும். இன்றுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் எங்களுக்குப் பகைவர்களின் அரசாங்கமாகும், அதிகாரத்தைக் கபடமாகக் கைப்பற்றிக் கொண்ட அந்நியரின் வல்லரசாகும். இங்கே படை வலிமை ஒன்றைக் கொண்டே அது உயிர் வாழ்கின்றது. எனது விசுவாசம் எல்லாம் இந்திய மக்களிடம் தான், எந்த அரசருக்கோ, அந்நிய அரசாங்கத்திற்கோ அல்ல. நான் இந்திய மக்களின் ஊழியன், நான் எவரையும் யசமானராக ஏற்றுக் கொள்வதில்லை.

'எங்களுடைய போராட்டத்தின் இறுதிக் கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், மற்ற பழைய ஏகாதிபத்தியங்கள் எல்லாம் மாண்டொழிந்தது போலவே, போகப் போகின்றது...

'இந்திய மக்கள் காட்டிய நம்பிக்கைக்கும் அன்புக்கும் நான் அவர்களுக்குப் போதிய அளவில் நன்றி செய்ய இயலாது. இந்த மகோன்னதமான போராட்டத்தில் நான் ஊழியம் செய்யவும், என்னால் இயன்ற உதவியைச் செய்யவும் கிடைத்தது என் வாழ்க்கையில் பேரானந்தமாகும். என் நாட்டு ஆடவர்களும் பெண்டிர்களும், வெற்றி கிட்டும்வரையும், நாம் கனவில் கண்டு கொண்டிருக்கும் இந்தியாவை அடையும் வரையும் போராட்டத்தை இடைவிடாமல் நடத்திவரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

'சுதந்திர இந்தியா நீடுழி வாழ்க!'

* * *

## ஆருவது விசாரணை

1931–ஆம் ஆண்டு, மகாத்மா காந்தி வட்டமேஜை மகாநாட்டுக்காக லண்டனுக்குச் சென்றுவிட்டுத் திரும்பியிருந்த சமயம். ஜவாஹர்லாலின் சொந்த மாகாணமாகிய ஐக்கிய மாகாணத்தில் விவசாயிகள் மிகவும் அல்லற்பட்டு வந்தனர். விளைவு குன்றியிருந்தது, வரிகளைக் குறைக்கும்படி குடியானவர்கள் அரசாங்கத்தை வேண்டிக் கொண்டதில் பயனேற்படவில்லை. பல மாவட்டங்களில் அவர்கள் வரிகொடாமை இயக்கத்தைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ய நேர்ந்தது. நேருவின் அன்பும் ஆதரவும் எவர்கள் பக்கம் இந்தது என்பதைச் சொல்லத் தேவையில்லை. குடியானவர்களின் துயரங்களைக் கண்டு, அவர் மனம் புழுங்கி, அவர்களுடைய மகாநாடுகளுக்கு ஆதரவு காட்டி வந்தார். அங்கிலேயில் அரசாங்கம் வரி கொடாமை இயக்க சம்பந்தமான நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்குவதற்காகப் புதிதாக ஓர் அவ

சட்டத்தைப் பிரகடனம் செய்தனர். அது அந்த ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட பன்னிரண்டாவது அவசரச் சட்டம்!

அந்த அவசரச் சட்டப்படி, நேரு அலகாபாத் நகரைவிட்டு வெளியே செல்லக்கூடாது என்றும், வேலை நிறுத்தம், பொதுக் கூட்டம் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்யக்கூடாது என்றும், மற்றும் சில நிபந்தனைகளுடனும், டிசம்பர் 21-உ அவருக்கு ஓர் உத்தர விடப்பட்டது. அவரோ என்றுமே முடி பணிந்தறியாதவர். மேலும், அவர் பம்பாய்க்குச் சென்று அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் கலந்து கொள்ளவும், அங்கு வந்து இறங்குவதாயிருந்த மகாத்மாவை வரவேற்கவும் அவர் செல்லவேண்டியிருந்தது. எனவே, அவர் உடனே ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்குத் தம் கருத்துக்களை விளக்கி ஒரு கடிதம் எழுதி யனுப்பினார்.

அதிலே கண்ட சில வீர வசனங்கள் வருமாறு :

'...நான் ஓர் உறுப்பினராகச் சேர்ந்துள்ள மாபெரும் ஸ்தாபனத்தின் உத்தரவுகளைத் தவிர, வேறு எந்த உத்தரவையும் நான் ஏற்றுக்கொள்வது வழக்கமில்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய தேசிய காங்கிரஸ் ஒன்று தான் எனக்கு உத்தரவு போட முடியும். நான் வேறு எந்த அதிகார ஸ்தாபனத்தையும் அங்கீகரிப்பதில்லை...

''என் வேலைகளைக் கட்டுப்படுத்தவோ, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் என் வேலைக்கு இடையூறாக எதற்கும் பணிந்து கொடுக்கவோ, அதேபோல நான் அங்கம் வகிக்கும் வேறு கமிட்டிகள், போர்டுகளின் வேலைகளுக்கு இடையூறு தேடிக் கொள்ளவோ நான் ஒப்புக்கொள்ள முடியாது.

'ஆகவே, உங்களிடமோ, போலீஸ் சுப்பிரண்டிடமோ எந்தவிதமான அநுமதியும் பெருமலே வழக்கமான என் வேலைகள் அனைத்தையும் செய்துவர நான் தீர்மானித்திருக்கிறேன் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்...

'வெளியிடங்களில் ஏதாவது வேலையிருந்தால், நான் அலகாபாத்தைவிட்டு வெளியே செல்வேன் என்பதையும் முக்கியமாகத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது...

'என் கருத்துக்களை அவசியம் நேரும் போதெல்லாம் நான் வழக்கம் போல் வெளியே சொல்லியே தீருவேன்...'

டிசம்பர் 26–தேதி நேரு அலகாபாத்திலிருந்து பம்பாய்க்குப் புறப்பட்டுச் செல்லும்பொழுது, ரயிலிலேயே கைது செய்யப்பட்டுச் சிறையில் வைக்கப் பெற்ருர். 1932, ஜனவரி 4–தேதி விசாரணை நடந்தது. அவசரச் சட்டப்படி விடுத்த உத்தரவை மீறியதாக அவர்மீது குற்றம் சாட்டப் பெற்றது.

நீதித் தலத்தில் நேரு எழுந்து நின்று வாக்கு மூலம் கொடுக்க முன்வந்த சமயத்தில், அவருடைய பேச்சை அங்கிருந்தவர் எவரும் கேட்டுவிடக் கூடாது என்று கருதி, மாஜிஸ்திரேட் எல்லோரையும் நீதித் தலத்திற்கு வெளியே யிருக்குமாறு ஏற்பாடு செய்யலாஞர். அப்பொழுது நேரு தாமும் பேச மறுத்து, 'இந்த அரசாங்கம் சாம்பலாக்கப்பட்டு விடும்!' என்று கூறிக்கொண்டே, ஆசனத்தில் அமர்ந்துவிட்டார்.

ஆயினும், வழக்கம்போல், அவர் எழுத்து மூலமான தமது வாக்குமூலத்தை மட்டும் பதிவு செய்தார். அதன் விவரம் கீழேயுள்ளது :

'எனக்கு எதிராக இப்பொழுது நடைபெறும் நடவடிக்கைகளைப் பற்றி நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. புதிதாக நான் தொண்டு செய்வதற்கு வாய்ப்பளித்த இந்த மாகாணங்களிலுள்ள குடியான வர்களுக்கு நான் மனமார்ந்த நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். எனது மாகாணத்தைச் சேர்ந்த, அதிலும் முக்கியமாக எனது அலகாபாத் மாவட்டத் தைச் சேர்ந்த, கிஸான் சகோதரர்களைப் பற்றி நான் எவ்வளவு பெருமிதம் கொள்கிறேன் என்பதைப்பற்றி நான் தெரிவித்துக் கொள்ளவும் விரும்புகிறேன். பிரிட்டிஷ் ஆதிக்கியமும் சுரண்டலும் அவர்களுடைய ஜீவாதாரமான உதிரத்தை உறிஞ்சிவிட்டன, அரசாங்க முறை அவர்களை நசுக்கிப் பிழிந்து, அவர் களுடைய உழைப்பின் பயன்களைப் பறித்து, அவர் களை விலங்குகளுக்கு நிகராகச் செய்துவிட்டது. குடியானவர்கள் (இப்பொழுது) ஒரு நெருப்பைக் கொளுத்தியிருக்கின்றனர். அது அந்த ஆதிக்கியத் தையும் சுரண்டலையும் எரித்துச் சாம்பலாக்கும்வரை எரிந்து கொண்டே யிருக்கும். அந்த அரசாங்க முறையை முடிவாக அழிக்கும் வரையும் எரிந்து கொண்டே யிருக்கும். நெடுங் காலமாக இந்த லட்சி யத்திற்காகவே நான் வேலை செய்து வந்திருக்கிறேன். என் உடலில் கொஞ்சமாவது சக்தியுள்ளவரை, நான் இந்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டே யிருப் பேன். மதில்கள் சூழ்ந்த சிறைக்கோட்டத்தினுள்ளே நான் பல விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்த போதிலும், என் கிஸான் சகோதரர்கள் வசிக்கும் கிராமங்களிலும் வயல்களிலும் என் மனம் அடிக்கடி பதிந்து நிற்கும். அவர்களுடைய தற்போதைய துயரங்களும் வறுமையும் தொலைவதற்கு, அவர் களுடைய போராட்டம் வெற்றியடைய வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்வேன். அத்தகைய

'வெற்றி கிட்டும்வரை, எவ்வித அமைதியோ சமாதானப் பேச்சோ இருக்க முடியாது.'

விசாரணை முடிவில் மாஜிஸ்திரேட்டால் ஜவாஹர்லால் நேருவுக்கு இரண்டு வருடக் கடுங்காவலும்,ரூ.500 அபராதமும் விதிக்கப்பட்டன. அபராதம் செலுத்தத் தவறினால், கூடுதலாக ஆறுமாதக் கடுங்காவலும் விதிக்கப்பட்டது.

* * *

## ஏழாவது விசாரணை

1932-ஆம் வருடத்தில் மட்டுமே 66,946-காங்கிரஸ் தலைவர்களும் ஊழியர்களும் சிறை புகுந்திருந்தனர். அரசாங்க அடக்கு முறைகள் தாண்டவ மாடிக்கொண்டிருந்தன. 1933-ல் கல்கத்தா நகரில் காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடப்பதாக இருந்தது. பண்டித மதன மோகன மாளவியா அதற்குத் தலைமை வகிக்க ஏற்பாடாகியிருந்தது. அந்த மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளி மாகாணங்களிலிருந்து வந்த பல பிரதிநிதிகளை அரசாங்கத்தார் வழிகளிலேயே தடுத்துக் கைது செய்தனர். எனினும், ஏப்ரல் மாதம் 1-தேதி சுமார் 1,500-பிரதிநிதிகள் கல்கத்தாவில்கூடி, திருமதி நெல்லி சென்குப்தா தலைமையில் மகாநாட்டை நடத்தி விட்டனர். அந்தச் சமயத்தில் போலீஸ்காரர்கள் புரிந்த அட்டூழியங்களுக்கு அளவேயில்லை. அவைகளைப் பற்றி மாளவியாவே விரிவான அறிக்கை வெளியிட்டார். பிரதிநிதிகளிலே பலர் தடியடியால் மண்டைகள் உடைந்தும், அங்கங்கள் சிதைந்தும் பெருந் துன்பங்களுக்கு உள்ளாயினர். மேலும், வங்காளத்தில் புரட்சிக்காரர்கள் இடையிடையே பலாத்காரத்தைக் கைக்கொண்டு பயங்கர

செயல்கள் புரிந்து வந்ததால், அரசாங்கம் அவர்களை யும் மக்களையும் சேர்த்துப் பழிவாங்கி வந்தது.

1933, ஆகஸ்ட் 30-தேதி நேரு சிறையிலிருந்து வெளிவந்த சமயம், தேசத்தில் புதிதாகச் சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பமாகி யிருந்தது. காந்திஜியும் அவருடைய ஆசிரமவாசிகள் பலரும் கைது செய்யப் பெற்றுச் சிறைக் கோட்டத்தை அடைந்தனர். அந் நிலையில் 1954–தொடக்கத்தில், நேரு அடக்குமுறை களின் நிலைக்களனாக விளங்கிய கல்கத்தாவுக்குச் சென்றார். அங்கே அவர் நிகழ்த்திய மூன்று சொற் பொழிவுகளுக்காகப் பின்னால் இந்தியப் பீனல் கோடு 124-ஏ பிரிவுப்படி அவர்மீது குற்றம் சாட்டி, கல்கத் தாவிலேயே விசாரணையும் நடந்தது. ஏழாவது முறை யாக, இளஞ் சிங்கம் நேரு இரண்டு வருட வெறுங் காவல் தண்டனை பெற்று, மீண்டும் சிறை புகுந்தார். கல்கத்தாவில் தண்டனை பெற்றதில் நேருவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஏனெனில், தேச விடுதலைக்காக அரும் பெரும் தியாகங்கள் செய்து, சொல்லொணாத துயரங்களுக்கு உள்ளான வங்காளத்தோடு தாமும் தொடர்பு கொண்டிருந்ததைக் காட்டுவதற்கு அது ஒரு வாய்ப்பாக அமைந்தது.

நேரு கல்கத்தாவில் நிகழ்த்திய சொற்பொழிவு களில் சில பகுதிகள் வருமாறு :

‘உலகம் முழுதுமே இன்று கஷ்டமான ஒரு நிலை மையை அடைந்துள்ளது. உலகிலேயே தலைசிறந்த அரசியல் மேதைகள், சதுப்பு நிலத்தில் சிக்கிக் கொண்டு, வெளியேற வழி தெரியாம லிருக்கின்றனர். சென்ற 15-ஆண்டுகளுக்கிடையில் உலக சம்பந்தமான பல பிரசினைகளைத் தீர்ப்பதற்காக உலக மகாநாடுகள்

133 – நடந்திருக்கின்றன. இந்த 133 - மகாநாடுகளில் ஒவ்வொன்றும் முற்றிலும் தோல்வி யடைந்துள்ளது.'

* * *

—'இந்தியாவில் இப்பொழுதுள்ள நிலைமை சர்வ தேச நிலைமையின் ஒரு பகுதியே யாகும் என்பதை நீங்கள் உணர வேண்டும். நமது இயக்கம் ஒரு சுதந்தர இயக்கம். ஆயினும், அது உலகின் பெரிய இயக்கத்தின் ஒரு பகுதி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இதை நீங்கள் போற்றிப் புரிந்துகொள்ளா விட்டால், இந்திய நிலைமையைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியாது.'

* * *

'பயங்கர இயக்கம் முற்றிலும் வீணானது, போதிய பயனை அளிக்காதது, தீமை விளைப்பது. நமது இயக்கத்தின் தற்போதைய நிலையில், அது காலத்திற்கு ஒவ்வாததாகும். பயனுண்டாகும்படி வேலை செய்வதற்குப் பொது மக்களின் இயக்கத்தை மேற்கொள்ளவேண்டும். அந்த இயக்கமும் அஹிம்சை முறையில் செயலாற்ற வேண்டும்."

* * *

'இந்தியா ஒரு விவசாய நாடு என்பதையும், இங்கே எந்த இயக்கமும் வெற்றிபெற வேண்டுமானால், அது விவசாயிகளையும், குடியானவர்களையும் பொறுத்தது என்பதையும் நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.'

* * *

'எத்தனை உத்தரவுகள், அவசரச் சட்டங்கள் பிறப்பித்தாலும், இந்தியாவில் பட்டினியால் வாடும் வயிறு

கள் நிரம்ப முடியாது. மக்களிடையே நிலேத்துள்ள பொருளாதாரத் தூண்டுதல் அவர்களுடைய எழுச்சியை வளர்த்துக்கொண்டே யிருக்கும்.'

* * *

'இந்தியாவிலுள்ள வகுப்புப் பிரசினே என்பது போலியான ஒன்று—இது பிற்போக்கான பிரசினே. அரசியல் பிற்போக்குவாதிகள், தேசத்தின் முன்புள்ள உண்மையான அரசியல் பிரசினேகளேக் காண முடியாமல், குழப்புவதற்காகக் கிளப்பும் பிரசினே இது. இந்தியாவிலுள்ள வகுப்புவாத ஸ்தாபனங்கள், முஸ்லிம் ஸ்தாபனமாயினும், இந்து ஸ்தாபனமாயினும், அவை அரசியல் பிற்போக்கையே ஆதரிப்பவை...'

* * *

## எட்டாவது விசாரணே

இரண்டாவது உலகப் போர் 1939–ல் தொடங்கியதும், இங்கிலாந்து இந்தியாவையும் போரில் ஈடுபடுத்தியது. அப்பொழுது இந்தியாவில் பெரும்பாலான மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் அமைந்து வேலே செய்துகொண்டிருந்தன. போரைப் பற்றி அரசாங்கம் காங்கிரஸ் மகாசபையிடமோ, காங்கிரஸ் மந்திரி சபைகளிடமோ கலந்து கொள்ளவில்லே. காங்கிரஸ் ஹிட்லர், முஸொலீனி முதலியோரின் யதேச்சாதிகாரக் கொள்கைகளேயோ, அவர்கள் புரியத் தொடங்கிய கொடுமைகளேயோ ஒரு நாளும் ஆதரிக்க முடியாது. ஆயினும் பிரிட்டிஷ் அரசாங்கத்தையும், அதற்கு உட்பட்ட இந்திய அரசாங்கத்தையும் அது ஆதரிக்கவும் முடியாத நிலேயிலிருந்தது. முதலில் யுத்தத்தின் இலட்சியங்கள் என்ன என்பதை

இங்கிலாந்து தெளிவுபடுத்த வேண்டும் என்று அது கோரிற்று. உலகில் ஜனநாயகத்தையும், சிறு நாடுகளின் சுதந்தரத்தையும் காப்பது இலட்சியமா யிருந்தால், இந்தியாவில் நிலைமை என்ன ? போர் நின்ற பிறகு, இந்தியாவுக்குப் பூரண விடுதலை கிடைக்குமா? அப்படியானால் இப்பொழுது, யுத்த காலத்திலேயே, இங்கிலாந்து இந்தியாவுக்கு இன்றியமையாத உரிமைகளை வழங்கத் தயாரா யிருக்கிறதா ? இத்தகைய வினாக்களுக்குக் காங்கிரஸ் மகாசபை விடைகளை எதிர்பார்த்தது. மகாத்மா காந்தி, நேரு முதலிய தலைவர்கள், சுதந்திர இந்தியா நேச நாடுகளுக்குப் பெருந்துணையாக நிற்கும் என்றும், அடிமை இந்தியா அவைகளுக்குப் பெரும் பாரமாகும் என்றும் விளக்கமாக எச்சரிக்கை செய்தனர். ஆயினும் பிரிட்டிஷ் அரசாங்கம் அவற்றை யெல்லாம் பொருட்படுத்தவில்லை.

இந்திய அரசாங்கம் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றி, அவசரச் சட்டங்களாலும், அடக்கு முறைகளாலுமே நாட்டை ஆள முற்பட்டது. காங்கிரஸ் மந்திரி சபைகள் இராஜிநாமா செய்தன. காந்திஜி தலைமையில் தனிப்பட்ட நபர்களின் சத்தியாக்கிரகம் ஆரம்பமாயிற்று. 1940, அக்டோபர் 17-ந் தேதி திரு. விநோபா பாவே முதல் சத்தியாக்கிரகியாகச் சிறை புகுந்தார். நேரு இரண்டாவது சத்தியாக்கிரகியாக நவம்பர் 6-ந் தேதி சிறை செல்ல ஏற்பாடாகி யிருந்தது. ஆனால் அதற்கு முன்பாக, அக்டோபர் 31-ந் தேதியே அவர் கைது செய்யப் பெற்றார். ஐக்கிய மாகாணத்தில் லால்டிக்கி* முதலிய மூன்று இடங்களில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளுக்காக, இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி அவர்மீது மூன்று குற்றங்கள் சாட்டப் பெற்றன. குற்றம் ஒன்றுக்கு

---

* கோரக்பூரிலுள்ள ஓரிடம்.

ஒரு வருடம் நான்கு மாதங்கள் வீதம், மூன்று குற்றங்களுக்குமாக நான்கு வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

மாவட்ட மாஜிஸ்திரேட்டின் நீதித் தலத்தில், வழக்கம்போல், நேரு தாம் எழுதி வைத்திருந்த வாக்குமூலத்தைப் படித்தார். அதன் சில பகுதிகள் வருமாறு :

'எந்த நபரோ, அல்லது நபர்களின் கூட்டமோ, இந்திய மக்களிடமிருந்து அதிகாரம் பெறுமலும், எந்த வகையிலும் அவர்களுக்குப் பொறுப்பாளிகளாக இல்லாமலும், தங்கள் எண்ணத்தை அவர்கள் மேல் சுமத்தி, கோடி கோடியான இந்தியர்களை, அவர்களிடமோ, அவர்களுடைய பிரதிநிதிகளிடமோ கலந்து கொள்ளாமலே, ஒரு பெரிய போரில் ஈடுபடுத்தியிருக்கக் கூடாது. இந்தப் போரும் அவர்களாகத் தேடிக் கொண்டதன்று. இத்தனையும் சுதந்தரத்தின் பெயராலும், சுய நிர்ணய உரிமையின் பெயராலும், ஜனநாயகத்தின் பெயராலும் செய்யப்பட்டிருப்பது ஆச்சரியமான விஷயம். இதில் விசேடப் பொருள் அடங்கியிருக்கின்றது. இந்தப் போரே இந்தத் தத்துவங்களுக்காக நடைபெறுவதாகவும் சொல்லப்படுகின்றது. நாங்கள் இறுதியான முடிவுகளுக்கு வருவதில் தாமதம் செய்து பார்த்தோம்; நாங்கள் தயங்கி நின்றோம், பேசிப் பார்த்தோம்; சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சியினருக்கும் கௌரவமான ஒரு வழியைக் காண்பதற்கு நாங்கள் முயற்சி செய்தோம். நாங்கள் தோல்வி யடைந்தோம். அதனுல் தவிர்க்க முடியாத ஒரு முடிவை நாங்கள் தெளிந்துகொள்ள நேர்ந்தது. பிரிட்டிஷ் அரசாங்கமோ, அதன் பிரதிநிதிகளாக இந்தியாவிலுள்ளவர்களோ சம்பந்தப்பட்ட அளவில், மாடுகளைத் தட்டுமுட்டுச் சாமான்களைப் போலவே

எண்ணியுள்ளார்கள், அவர்கள் தங்கள் இஷ்டம் போல் நடப்பார்கள், ஏகாதிபத்திய அமைப்பில் எங்களைக் கொள்ளையடிப்பதும் தொடர்ந்து நடந்துவரும். அத்தகைய நிலையை, விளைவுகள் எவையா யிருப்பினும், நாங்கள் ஒருகாலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது.'

* * *

பாஸிஸத்தையும், நாஜிக் கொள்கையையும் நான் எதிர்த்து வந்த அளவுக்கு, இந்தியாவிலுள்ள இந்தியர்களிலோ, ஆங்கிலேயரிலோ, வேறு எவரும் என்னைப்போல், பல்லாண்டுகளாக, இடைவிடாமல் எதிர்து வந்தவர்கள் மிகச் சிலரே யிருப்பர். அவைகளுக்கு எதிராக என் அந்தக்கரணம் முழுதுமே எழுந்து நின்றது. பல சமயங்களில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஃபாஸிஸ்ட் கொள்கைக்கு அனுதாபம் காட்டி, எதிரிக்கு விட்டுக் கொடுத்துத் திருப்தி செய்ய முயன்றதை யெல்லாம் நான் தீவிரமாகக் கண்டித்து வந்தேன். மஞ்சூரியாமீது படையெடுப்பு நடந்ததிலிருந்து, பின்னல் அபிசீனியா, மத்திய ஐரோப்பா, ஸ்பெயின், சீனு ஆகிய இடங்களிலெல்லாம் இந்தத் திருப்தி செய்யும் கொள்கையின் பெயரால், ஒவ்வொரு தேசமாகத் துரோகம் செய்யப் பெற்று, சுதந்தர தீபங்கள் அணைக்கப்பெற்று வந்ததை நான் மிகுந்த துயரத்துடனும் வேதனையுடனும் பார்த்துக் கொண்டே வந்துள்ளேன். ஏகாதிபத்தியம் இந்த முறையாகத்தான் வாழ முடியும் என்பதை உணர்ந்து கொண்டேன்; அது போட்டிக்கு வரும் மற்ற ஏகாதிபத்தியங்களைத் திருப்தி செய்யத்தான் வேண்டியிருக்கிறது, இல்லாவிட்டால், தன் கொள்கைகளே தளர்ந்து, அது பலவீனமடைந்து விடும். ஒன்று அது இப்படித் திருப்தி செய்து சமாளித்துக்

கொள்ள வேண்டும், அல்லது ஜனநாயக சுதந்தரத்தின் பெயரால் தன்னையே பிரித்துக் கலைத்துக் கொண்டு விட வேண்டும். இரண்டுக்கும் நடுவில் வேறு வழி யில்லை.'

* * *

'திருப்தி செய்கிற விஷயம், மஞ்சூரியா, அபிசீனியா, செக்கோஸ்லோவேகியா, ஸ்பெயின், அல்பேனியா நாடுகளும், பழைய பிரிட்டிஷ் பிரதம மந்திரி கூறியது போல், ''சிலருக்கு மட்டுமே தெரிந்திருந்த தூர தொலைவிலுள்ள நாடுகளும்'' சம்பந்தப்பட்ட மட்டில் அதிகமாய்ப் பொருட்படுத்தப்படவில்லை. அது விசுவாசமாக நிறைவேற்றப்பட்டு வந்தது. ஆனால் போட்டி நெருங்கி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கே ஆபத்தாக வந்துள்ள நிலையில், மோதுதலைத் தவிர்க்க முடியவில்லை, போரும் தொடங்கி விட்டது.'

* * *

'இந்தப் போரில் சம்பந்தப்பட்ட பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முன்பும், மற்ற ஒவ்வோர் அரசாங்கத்தின் முன்பும் இரண்டே வழிகள்தான் இருந்தன: ஒன்று பழைய ஏகாதிபத்திய முறையிலேயே தொடர்ந்து நடந்து செல்வது, மற்றது தாங்கள் சம்பந்தப்பட்டவரை ஏகாதிபத்தியத்தைக் கலைத்து விட்டு, உலகம் முழுதும் சுதந்தரமும் புரட்சிகரமான மாறுதலும் ஏற்படும்படி தூண்டும் தலைவர்களாக முன்வர வேண்டும். அவர்கள் சுதந்தரம், சுயநிர்ணய உரிமை, ஜனநாயகம் என்று வாயால் பேசிக்கொண்டே, முதல் வழியைத்தான் மேற்கொண்டார்கள். ஆனால் அவர்கள் சுதந்தரம் என்று கருதியது ஐரோப்பாவின் சுதந்தரம் மட்டுமே, அத்துடன்

தங்கள் ஏகாதிபத்தியத்தைப் பழைய மாமூல் முறையி லேயே நடத்தி வரவும் சுதந்தரம் உண்டு என்று கருதினார்கள்......'

* * *

'இங்கிலாந்திலுள்ள மக்களில் பெரும்பாலோர் ஏகாதிபத்திய முறையில் அலுத்துப் போயிருக்கின்ற னர் என்றும், உண்மையான புதிய முறை அமைய வேண்டும் என்றும் நான் நம்புகிறேன். ஆனால் நாங் கள் அவர்களுடன் நேரிடையாக எதுவும் செய்து கொள்ள முடியாது, இடையிலுள்ள அவர்களுடைய அரசாங்கத்துடன் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டி யிருக்கிறது, அந்த அரசாங்கத்தின் நோக்கம் என்ன என்பதைப் பற்றியும் எங்கள் மனத்தில் சந்தேகமில்லை. அந்த நோக்கத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை, அதை எங்களால் முடிந்தவரை எதிர்த்தே நிற்போம். ஆதலால் எங்கள்மீது திணிக்கப்பெற்ற இந்தப் போரில் பங்குகொள்ள முடியாது என்றும், அதை உலகுக்கு அறிவித்துவிட வேண்டும் என்றும் நாங்கள் தீர்மானித்துள்ளோம். இந்தப் போரினால் ஏற்கனவே பெரும் சேதம் ஏற்பட்டிருக்கின்றது. இது இன்னும் அதிகப் பயங்கரத்தையும் துயரத்தையும் உண்டாக் கும். போரினால் கஷ்டப்படுவோர்களுக்கு நாங்கள் மனப்பூர்வமாக ஆழ்ந்த அநுதாபம் காட்டுகிறோம். ஆனால் இந்தப் போர், இப்போதுள்ள உலக அமைப்பை மாற்றி, சுதந்தரத்தையும் ஒத்துழைப்பை யும் அடிப்படையாகக் கொண்ட புதிய சமுதாய அமைப்பை ஏற்படுத்தும் புரட்சிகரமான நோக்கத் தைக் கொண்டிரா விட்டால், இதனால் இன்னும் போர்கள் தொடர்ந்து நடந்துகொண்டே யிருக்கும், பலாத்காரம் அதிகரிக்கும், மிகுந்த அளவு நாசமும் ஏற்படும்.

'இதனால்தான் நாங்கள் இந்தப் போரிலிருந்து விலகி நிற்க வேண்டியிருக்கிறது. எங்கள் மக்களையும் விலகியிருக்கும்படியும், பணமோ மனிதர்களோ கொடுத்து எந்த வகையிலும் உதவி செய்யாமலிருக்கும்படியும், அவர்களுக்கு நாங்கள் ஆலோசனை சொல்ல வேண்டியிருக்கிறது. இது எங்களுடைய கண்டிப்பான கடமையாகின்றது...'

*　　　*　　　*

'ஐய, நான் உங்கள் முன்பு அரசாங்கத்திற்கு எதிராகச் சில குற்றங்கள் செய்ததாக விசாரிக்கப் பெறும் ஒரு தனி நபராக இருக்கிறேன். நீங்கள் அந்த அரசாங்கத்தின் சின்னமாக இருக்கின்றீர்கள். நானும் ஒரு தனி நபராக மட்டுமின்றி, இந்தியத் தேசியத்தின் சின்னமாகவும் இருக்கிறேன், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து, இந்தியாவின் சுதந்தரத்தைப் பெறவேண்டுமென்ற உறுதியுடன் நான் நிற்கிறேன். நீங்கள் நீதி விசாரித்துக் குற்றம் சுமத்த முனைவது, என்னையன்று, இந்தியாவின் கோடிக் கணக்கான மக்களையே விசாரணை செய்ய முனைந்துள்ளீர்கள். செருக்கு மிகுந்த ஓர் ஏகாதிபத்தியத்திற்குக் கூட இது அரிய பெரிய காரியமாகும். விசாரணைக்காக நான் உங்கள் முன்பு நின்று கொணடிருந்த போதிலும், ஒருவேளை இது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே உலக நீதிமன்றத்தில் விசாரணைக்காக நின்று கொண்டிருப்பதாகும். சட்டங்களை அமல் செய்யும் நீதி மன்றங்களுக்கு மேலான பெரும் சக்திகள் உலகில் இன்று இயங்கிக் கொண்டிருக்கின்றன; சுதந்தரத்திற்காகவும், உணவுக்காகவும், சேமமான வாழ்வுக்காகவும் பெரும் பெரும் கூட்டமான மக்கள் ஆவேசம் கொண்டு உழைத்து வருகின்றனர். அவர்களே சரித்

திரத்தை உருவாக்கி வருகின்றனர். இந்தச் சரித்திரத்தை எதிர்காலத்தில் எழுதப் போகும் சரித்திராசிரியர், பிரிட்டிஷ் அரசாங்கமும், பிரிட்டிஷ் மக்களும், உலகம் மாறி வருவதற்குத் தக்கபடி, தாங்கள் மாறிக் கொள்ள முடியாமல், முக்கியமான சந்தர்ப்பத்தில் தோற்றுவிட்டனர் என்று குறிப்பிட வேண்டியிருக்கும். அவர், ஏகாதிபத்தியங்கள் இதே பலவீனத்தால் வீழ்ச்சியுற்ற கதியைப்பற்றி எண்ணிப் பார்த்து, இதை விதி என்று சொல்லக்கூடும். சில காரணங்கள் சிறிதும் தவருமல் சில முடிவுகளையே விளைவிக்கும். காரணங்கள் நமக்குத் தெரியும்; முடிவுகள் அவைகளைத் தொடர்ந்து வந்தே தீரும்.'

*   *   *

'இந்த விசாரணையிலோ, இதற்குப் பின்போ, எனக்கு என்ன ஏற்படப் போகிறது என்பது அற்ப விஷயம். தனி நபர்களின் முக்கியத்துவம் அதிகமில்லை; அவர்கள் வருவார்கள், போவார்கள், என் காலம் முடிவடையும்பொழுது நானும் சென்று விடுவேன். இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நான் ஏழு முறை விசாரிக்கப் பெற்றுத் தண்டிக்கப் பெற்றுள்ளேன். என் வாழ்க்கையில் பல்லாண்டுகள் சிறைக்கோட்டங்களின் சுவர்களுக்குப் பின்னுல் புதைக்கப்பட்டுப் போயிருக்கின்றன. எட்டாவது முறையோ, ஒன்பதாவது முறையோ, மேலும் சில ஆண்டுகள் தண்டனையோ அதிக வேற்றுமையை உண்டாக்கிவிடாது. ஆனுல், இந்தியாவுக்கும், அவளுடைய கோடிக்கணக்கான பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் ஏற்படக்கூடிய விஷயம் அற்பமானதன்று. அதுதான் என் முன்புள்ள பிரசினை. ஐய, முடிவாக உங்கள் முன்புள்ள பிரசினையும் அதுதான்...'

## ஒன்பதாவது சிறைவாசம்

1941-ல் சிறையிலிருந்த சத்தியாக்கிரகிகள் பலரை அரசாங்கம் விடுதலை செய்கையில், நேருவும் வெளியே வந்தார்.

ஐரோப்பாவில் போர் நடந்து கொண்டிருந்ததுடன், கீழ்த்திசையில் ஜப்பானும் நேச நாடுகளுக்கு எதிராகப் போர் தொடுக்கலாயிற்று. எந்த நேரமும் ஜப்பான் இந்தியாமீது படையெடுக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டது. அந்த நேரத்திலும்கூட இங்கிலாந்து இந்தியாவுக்கு உரிமை வழங்கி, நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தேசத் தலைவர்களிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டது. நாட்டிற்குச் சுதந்தரம் கிடைத்து, பிரிட்டிஷ் வைசிராய் சுதந்தர இந்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்று காங்கிரஸ் மகாசபை கோரிற்று. அதற்குப் பிரிட்டிஷ் அரசு இணங்காத நிலையில், நாடே கொந்தளித்துக் கொண்டிருந்தது.

காந்திஜி 1942-ல் இந்திய சுதந்தரத்திற்கான இறுதிப் போரைத் தொடங்க ஆயத்தமானார். 1942, ஆகஸ்ட் மாதம் 8-தேதி பம்பாயில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் மகாத்மா தலைமையில் மீண்டும் சத்தியாக்கிரகப் போரைத் தொடங்கத் தீர்மானம் செய்யப் பெற்றது. அந்தக் கூட்டத்தில் மகாத்மா 140-நிமிடங்கள் ஆற்றிய வீரச் சொற்பொழிவு பொன்னெழுத்துக்களில் பொறிக்கத் தக்கவை. வெள்ளையரை உடனே வெளியேற்ற வேண்டுமென்று போர் முரசு கொட்டப் [illegible]ற்றது. 'செய்யுங்கள், அல்லது செத்து மடியுங் [illegible] என்ற வீர முழக்கத்தைக் காந்திஜி எழுப்பிச் [illegible]தம் செய்துவிட்டார்.

## 1965 வானதி புதிய வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| மஞ்சள் ஆறு | (சாண்டில்யன்) | 3 | 00 |
| கன்னிமாடம் | ,, | 10 | 00 |
| பத்தினிக் கோட்டம் I | (ஜெகசிற்பியன்) | 10 | 00 |
| பத்தினிக் கோட்டம் II | ,, | 10 | 00 |
| இன்ப அரும்பு | ,, | 5 | 00 |
| பெண் எனும் பூ | (ஆர்வி) | 7 | 50 |
| வயது பதினேழு | (ரா. கி. ரங்கராஜன்) | 5 | 00 |
| கற்றது காதல் அளவு | (புனிதன்) | 6 | 00 |
| சிரிக்காவிட்டால் விடமாட்டேன் | ,, | 3 | 50 |
| இதய கமலம் | (எல்லார்வி) | 7 | 50 |
| இன்ப வாழ்க்கை | ,, | 5 | 00 |
| மணப்பெண் | ,, | 2 | 50 |
| திருமலைநாயக்கன் இட்ட தீ | (திருவாணன்) | 5 | 00 |
| கண்கொடுத்தவர் | (கண. சிற்சபேசன் M.A.) | 2 | 00 |
| நல்லவர்கள் (நாவல்) | (சார்லஸ்டிக்கன்ஸ்) | 2 | 50 |
| பெண் (நாவல்) | (வாசவன்) | 3 | 00 |
| அமுதகலசம் | ,, | 3 | 50 |
| நீதிபதி (நாவல்) | (டால்ஸ்டாய்) | 2 | 00 |
| காளையார்கோயில் ரதம் | (கோவி மணிசேகரன்) | 3 | 50 |
| ல்வழிச் சிறுகதைகள் | (நா. ரா. நாச்சியப்பன்) | 4 | 50 |
| அ...ரத உபகதைகள் | (வி. எஸ். எஸ். ஆசாரியார்) | 1 | 00 |
| ...ான்சன் (டாக்டர் மு. வ. முன்னுரையுடன்) | (மா. சேசையா M.A.) | 3 | 00 |

மறுநாள் அதிகாலையிலேயே அரசாங்கம் காந்திஜி, நேரு முதலிய காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரையும் கைது செய்து விசாரணை யில்லாமலே, சிறையில் அடைத்துவிட்டது.

இந்தத் தடவை கடைசி முறையாக ஜவாஹர்லால் நேரு 1,040 நாட்கள் சிறையிலிருக்க நேர்ந்தது.

**வாழ்க ஜவாஹரின் வீரமும், தியாகமும், அறிவும், புகழும் !**

★

4652